இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 48

சுடர் 32 | கதிர் 218 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 18 ஞாயிற்றுக்கிழமை 02.07.2017

## சு.கவைச் சேர்ந்த 18 பேர் அரசிலிருந்து விலகுவர்?

கொழும்பு, ஜூலை 2
அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளை வகித்து வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 18 பேர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அரசில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர் எனக் காணி இராஜாங்க அமைச்சர் >> 45

# சிவராம் கொலையாளி வடக்கு மாகாண சபை உறுப்பினரா?

## முதல்வர் எழுதிய கடிதத்தால் தொற்றிக் கொண்டுள்ள பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு ஊடகவியலாளர் சிவராமின் கொலையில் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் அமைச்சுப் பதவிக் கோரிக்கையை நிராகரித்து, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சை வெடித்துள்ளது.

வடக்கு மாகாண சபையில் வெற்றிடமான அமைச்சுப் பதவிகளை நிரப்புவதற்காக, தன்னை ஆதரிக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து சுயவிவரக் கோவையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியிருந்தார். >> 45

## வீதியையும் ராணுவம் விடுவிக்கவேண்டும்

*மயிலிட்டி மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 2
மயிலிட்டித்துறையை விடுவிக்கும் பாதுகாப்புத் தரப்பினர், பருத்தித்துறை -பொன்னாலை வீதியில் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் 3 கிலோ மீற்றரையும் மக்கள் >> 45

## இராணுவத் தளபதி நியமனம் இழுபறி

கொழும்பு, ஜூலை 2
அமைச்சர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்கு >> 45

## மணல் கடத்திய வாகனம் சூடு நடத்தி மடக்கப்பட்டது

யாழ்., ஜூலை 2
சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸார் வாகனத்தைக் கைப்பற்றினர். வாகனத்தில் இருந்தவர்கள் தப்பியோடினர். இந்தச் சம்பவம் நேற்று மணற்காட்டில் நடந்துள்ளது.
மணல் ஏற்றிச் சென்ற ஹன்ரர் ரக வாகனத்தைத் துரத்திச் சென்ற பொலிஸார் வாகனத்தின் ரயருக்குச் சூடு நடத்தி வாகனத்தைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. விரிவு பக்.02

## காணாமற்போனோருக்கு அரசே முழுப் பொறுப்பு

*அதிலிருந்து விலகிவிட முடியாது என்கிறார் மக்ஸ்வெல் பரணகம*

கொழும்பு, ஜூலை 2
காணாமற்போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து கூற வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும். அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது எனக் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை >> 44

## ஹன்ரரில் சென்றோர் வீசிய சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
வாகனத்தில் சென்றவர்கள் வீசிவிட்டுச் சென்ற மனிதச் சடலம் ஒன்றை மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஹன்ரர் வாகனத்தில் சென்ற >> 42

## வடக்கு–கிழக்கு இணைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே வலியுறுத்தியுள்ளது

*இடைக்கால அறிக்கையில் உண்மை வெளிவரும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.*

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடக்கு - கிழக்கு இணைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம்தான் வலியுறுத்தியுள்ளது. மனோ கணேசனோ, டக்ளஸ் தேவானந்தாவோ அதனை வலியுறுத்தவில்லை. இடைக்கால அறிக்கையின் வரைவு வெளியாகும் போது இந்த உண்மை தெரிய வரும். இவ்வாறு தமிழ்த் >> 45

## கூட்டமைப்பினது முதலமைச்சராகவே இருக்கலாம் விக்கி

*வலியுறுத்துகிறார் சுமந்திரன்*

யாழ்ப்பாணம், ஜூலை 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தொடரலாம் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
'13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் இன்று வலியுறுத்துவதால் என்னை ஓரம் கட்டி அரசியலில் >> 45

## தமிழருக்கான தீர்வைக் குழப்பும் செயற்பாடுகள் திரைமறைவில்

*எச்சரிக்கிறார் விக்ரமபாகு கருணாரட்ண*

யாழ்ப்பாணம், ஜூலை 2
தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வைக் குழப்பும் நோக்குடன் திரைமறைவில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டில் சம உடைமையைக் கொண்டு வரப்போகின்றோம் என்று கூறுகின்ற புதிய >> 45



## புலிகள் வழங்கிய பயிற்சி பன்னாட்டு தரத்திலானது

*அமைச்சர் வஜிர புகழாரம்*

முல்லைத்தீவு, ஜூலை 2
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இளைஞர், இளம் பெண்களுக்கு வழங்கிய பயிற்சி பன்னாட்டு ரீதியிலான பயிற்சியாகும். அந்தப் பயிற்சித் திட்டம் சிங்கப்பூர் போன்ற சில நாடுகளில் தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது.
இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் >> 42

## திருமலையில் நாளை அரச எதிர்ப்புப் பேரணி

*மகிந்த ராஜபக்ச தலைமையில்*

கொழும்பு, ஜூலை 2
சீனன்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் திட்டத்துக்கு எதிராக, மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணியினர் நாளை திங்கட் >> 42

## சகலரும் சுயமரியாதையுடன் வாழக் கூடிய தீர்வே தேவை

*கனேடியத் தூதுவர் வலியுறுத்து*



கொழும்பு, ஜூலை 2
அனைத்து இலங்கையர்களும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய >> 45

## இடைக்கால அறிக்கை வந்ததும் சந்தேகங்கள் முற்றாகத் தீர்ந்துவிடும்

*முதலமைச்சரின் குற்றச்சாட்டுக்கு சுமந்திரன் எம்.பி. நேற்றுப் பதிலடி*

யாழ்ப்பாணம், ஜூலை 2
வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இனியும் தாமதமாகாமல் விரைவில் வெளிவரவேண்டும். அப்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும்பாலான சந்தேகங்கள் தீர்க்கப்படும். அந்த அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் அதில் என்ன இருக்கின்றது என்பதைத் தெரியாமல், 13ஆவது திருத்தத்துக்குள்தான் தீர்வு என்று கூறுவதானது, மக்களைப் பயம்காட்டித் திசை திருப்பிக் >> 42



## அரச தலைவரின் செயலராக ஒஸ்ரின்

கொழும்பு, ஜூலை 2
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயலராகத் தற்போது கிழக்கு மாகாண ஆளுநராகக் கடமையாற்றும் ஒஸ்ரின் பெர் >> 45

SDB வங்கியிலிருந்து நிலையான வைப்புக்களுக்கு 16% வரையிலான கவர்ச்சிகரமான வட்டி

011 5 411 411

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ 1.5 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு
[illegible] உரித்தாகும்.

அழையுங்கள்: 0115 411 411

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வால் மட்டக்களப்புக்குப் பெரும் ஆபத்து

மட்டக்களப்பு, ஜூலை 2
மட்டக்களப்புமாவட்டத்தில்சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள்அதிகரித்துள்ளன. எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை இந்த மாவட்டம் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரச அதிகாரிகள், அமைப்புக்கள், உள்ளூராட்சி மன்றங்கள்முன்னெடுக்கின்றன. மக்களும்இது தொடர்பில்பொறுப்புடன்நடக்க வேண்டும்.
இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட செயலகஉதவிமாவட்டச்செயலர் ஆ.நகுலேஸ்வரன்தெரிவித்தார்.
இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நிறுவனத்தின் இணைப்பாளர் பொ.சற்சிவானந்தம் தலைமையில் மட்டக்களப்பு தேவநாயகம் அரங்கில் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர்தெரிவித்ததாவது:
உலகத்தில்இன்றுமுக்கியமானபிரச்சினைகளில் ஒன்றாக சூழல் பிரச்சினை உள்ளது. இலங்கையிலும் அண்மையில் இதன்தாக்கம் அதிகளவில் உணரப்பட்டுள்ளது. இதனால்அதிகஅழிவுகள்ஏற்பட்டது. குப்பைமேடு சரிந்து விழுந்த இடரால்உயிர்ச்சேதங்கள்ஏற்பட்டன. இதுபோன்ற இடர்களில் இருந்து எமது சூழலைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம்ஏற்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் பல அழகான இடங்கள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன. குறிப்பாக சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற நடவடிக்கைகளால் எமது சூழலுக்குஅச்சுறுத்தல்நிலைமைகள் காணப்படுகின்றன.
இவற்றைத் தடுப்பது தொடர்பில் பொதுமக்களும் விழிப்புடன் செயற்படவேண்டும் -என்றார். (ஐ-10,46)

# ஆசிரியர்–பெற்றோர்மோதல் விசாரணைக் குழு நியமனம்

நுவரெலியா, ஜூலை 2
கொட்டகலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையில், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில், விசாரணைகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணையின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் எம். ராமேஸ்வரன் தெரிவித்தார்.
கடந்த 31 ஆம் திகதி பாடசாலையின் காலைக்கூட்டத்துக்கு வராத சில மாணவிகளை ஆசிரியர் ஒருவர் தாக்கியமை தொடர்பில் பெற்றோர்கள் நேற்று முன்தினம் காலை பாடசாலைக்குச் சென்றனர்.
ஆசிரியர் கல்லூரியின் மாணவர்களைத் தூண்டிவிட்டு பெற்றோர்களை தாக்கும்படி மாணவர்களுக்குக் கட்டளையிட்டார் என்று கூறப்பட்டது. ஆசிரியரின் கட்டளைக்கு அமைய மாணவர்கள் குழுவினர்கள்பெற்றோரைத்தாக்கினர். இந்தத் தாக்குதலில் இரு ஆசிரியர்கள் உட்பட பெற்றோர் ஒருவரும் மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர். கல்லூரியின் பாதுகாப்புக் கருதியும் மாணவர்களின் பாதுகாப்பு கருதியும் நேற்று முன்தினம்கல்லூரிக்குப்பொலிஸ் பாதுகாப்புவழுங்கபட்டது.
சம்பவம் தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது,
கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கல்வித்திணைக்கள அதிகாரிகளும் பாடசலைக்கு உடனடியாகச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான தாக்குதல் சம்பவம் சில திணங்களுக்குமுன்னர்நுவரெலியா பிரதேச பாடசாலையில் இடம்பெற்றுள்ளதால்விசாரணைக்குழுவின் அறிக்கையின்பின்னர்சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். -என்றார். (ஐ-10)

# களவு மணல் ஏற்றிய வாகனம் மீது சூடு



பருத்தித்துறை, ஜூலை 2
சட்டவிரோதமாகமணல் ஏற்றிச்சென்றவர்கள் துப்பாக்கிச் சூட்டை அடுத்து மணலுடன்வாகனத்தை விட்டுத் தப்பியோடினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று மணற்காட்டில்இடம்பெற்றது.
சட்டவிரோதமாக மணல் ஏற்றுவது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அந்த இடத்துக்குப் பொலிஸார் விரைந்தனர். அங்குகன்ரர்ரகவாகனம்செல்வதை அவதானித்து, அதனைத் துரத்திச்சென்றனர். வாகனத்தைச் செலுத்தியவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் சென்றனர். வாகனத்பை செலுர்ரியவர்கள் அந்த வாகனத்தை பின்தொடர்ந்த பொலிஸார் மணற்காட்டுப் பகுதியில் வைத்து வாகனம் மீது சூடு நடத்தினர். வாகனத்தில் முன்பக்க ரயர் வெடித்தது. வாகனத்தில் பயணித்தவர்கள் தப்பியோடியுள்ளனர். வாகனத்தில் வந்தவர்கள் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனன என்று பொலிஸார்தெரிவித்தனர்.
அதேவேளை மணல் அகழும் போது பொலிஸார் வருகின்றனரா என அவதானித்து சமிக்ஞை செய்தி கொடுக்கும் இருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10, 26)

# இரு முச்சக்கர வண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்து

ஹற்றன், ஜூலை 2
ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின என்று பொலிஸார்தெரிவித்தனர்.
திம்புள்ள பத்தனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கொட்டகலை தொடருந்துக்கடவைப்பகுதியில், நேற்று மதியம் 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
கொட்டகலைப்பகுதியில் இருந்து வந்தமுச்சக்கரவண்டியும்சீ.எல். எப்பகுதியில்இருந்துவந்தமுச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின.
விபத்தில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை. மோதுண்ட முச்சக்கரவண்டிகள் நீர் வடிகானில் வீழ்த்துள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)



முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபம் நேற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவால் திறக்கப்பட்டது. இந்த நிகழ்வு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 21 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் மாநாட்டு மண்டபவும், மாவட்ட செயலகத்தின் 4 மில்லியன் ரூபாநிதியில் உணவுச்சாலைகட்டடமும்கட்டப்பட்டது. (ற-7)

# மாணவக்குழுக்களிடையே மோதல் மூவர் மருத்துவமனையில் சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 2
மாணவக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக மூவர் படுகாயம் அடைந்தனர் என்று பொலிஸார்தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடந்துள்ளது.
ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மற்றும் மேலும் சில மாணவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. மோதலில் காயமடைந்த 3 மாணவர்கள்களுபோவிலமருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பிரித் நிகழ்வின் இடையே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.
சம்பவத்தின் பின்னர் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் தலையிட்டு நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# வேலூர் சிறையில் மீண்டும் சந்தித்தனர் நளினி, முருகன்



கொழும்பு, ஜூலை 2
வேலூர் சிறைச்சாலையில் 3 மாதங்களுக்குப் பின்னர் நளினி, முருகன் நேற்றுச் சந்தித்துக்கொண்டனர். இவர்கள் காலை 7.50 மணி முதல் சுமார் அரை மணிநேரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.
முன்னாள் இந்திய தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில்தண்டனைபெற்றகைதி முருகன், வேலூர் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதே வழக்கில் முருகனின் மனைவி நளினி, வேலூர் பெண்கள்சிறையில்தடுத்துவைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றஉத்தரவுப்படி, 15 நாள்களுக்கு ஒரு முறை நளினியை முருகன் சந்தித்து அரை மணிநேரம்பேசிவந்தார்.
இந்த நிலையில் முருகன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையில் இருந்து 3 மாதங்களுக்கு முன்பு ஒரு அலைபேசி கைப்பற்றப்பட்டது. அதையடுத்து, மனைவி நளினி உட்பட பார்வையாளர்களைச் சந்திக்க முருகனுக்கு சிறைத்துறை நிர்வாகம் தடை விதித்தது. அலைபேசி பறிமுதல் வழக்கு விசாரணை, வேலூர்நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.
முருகனைச் சந்திக்க அவரது தாயார் சோமணி வெற்றிவேல் பலமுறை முயற்சித்தும் பயனளிக்கவில்லை. சிறைத்துறைவிதித்த 3 மாதத் தடை உத்தரவு நீங்கியது. இதையடுத்து, பெண்கள் சிறையில் உள்ள மனைவி நளினியை 3 மாதங்களுக்குப் பின்னர் முருகன் சந்தித்தார். (ஐ-10)

# கைதடிப்பாலத்தில் நேற்று விபத்து

தென்மராட்சி, ஜூலை 2
வேகத் தடை மேட்டுக்கு அருகில் உள்ளபாதைவழியாகமோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் முன்பாகச்சென்ற சைக்கிளுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டார். தலையில் பலத்த காயமடைந்த அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கைதடிப் பாலத்தில் இடம்பெற்றது.
சாலையில் காயங்களுடன் காணப்பட்ட மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நபரை அந்தவழியேவாகனத்தில் வந்தவர்கள் ஏற்றிச் சென்று சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
[illegible] சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

# டெங்குத் தொற்றால் மொறட்டுவபல்கலை: இரு வாரங்கள் பூட்டு

கொழும்பு, ஜூலை 2
டெங்குத் தொற்றுக் காரணமாக மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்கல்விநடவடிக்கைகள்தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆனந்த ஜயவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல்கலைக்கழகத்தில் நேற்று தொடக்கம் இரண்டு வார காலத்துக்குக் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறாது. பல்கலைக்கழக மாணவர்கள் பெரும்பாலானவர்கள் மத்தியில் பரவிச் செல்லும் டெங்குத் தொற்றுக் காரணமாக நிலமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கான ஏதுநிலைகள் அதிகரித்துள்ளன. ஆயினும் பல்கலைக்கழகத்தின்ஏனையபணிகள் வழமை போன்று இடம்பெறும் - என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் போராட்டத்துக்கு இதுவரை தீர்வில்லை

## கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்



முல்லைத்தீவு, ஜூலை 2
கேப்பாபிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் 123 ஆவது நாளை எட்டியுள்ளது.
"எமது சொந்த நிலத்தில் கால் பதிக்கும் வரை தொடர் போராட்டத்தை நிறுத்த மாட்டோம்" என்று அவர்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.
கடந்த 2008 ஆம் ஆண்டு போர் காரணமாக சொந்த நிலங்களை விட்டு வெளியேறிய மக்களை 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துக்கென அழைத்து வந்தபோதும் அவர்கள் சொந்தநிலங்களில் மீள்குடி யேற்றம் செய்யப்படவில்லை.
நாம் முன்னெடுத்துவரும் தொடர் போராட்டத்துக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. போராட்டத்தில் நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் உரிய தரப்பினரிடம் இன்னமும் எடுத்துக் கூறப்படவில்லை. இந்தத் தகவல் எம்மைக் கவலைகொள்ள வைக்கின்றது என்று கேப்பாபிலவில் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவித்தனர்.
138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி குறித்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமது காணிகளிலுள்ள பொருளாதாரத்தை இராணுவத்தினர் அனுபவித்து வரும் அதேவேளை, தாம்பொருளாதாரத்தைகொண்டு நடத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
இந்த நிலையில் பூர்வீக நிலத்துக்குச் செல்வதற்கான போராட்டத்தை மக்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.
(ஐ-10)

# கிராமியப் பாடசாலைகளை தரமுயர்த்தும் வேலைத்திட்டங்கள் அரசால் முன்னெடுப்பு

## அரச தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 2
கிராமியப் பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக மாற்றி நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுக்க தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பத்தேகம புனித அந்தோனியார் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப பீடம் மற்றும் தொழில்நுட்பக்கூடத்தை மாணவர்களிடம் கையளித்தல் மற்றும் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கல்விக் கண்காட்சியைத் திறந்து வைக்கும் நிகழ்வு என்பன நேற்று இடம்பெற்றன. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
முன்னணிப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக இருந்துவரும் போட்டிக்கு நிலையான தீர்வு கிராமியப் பாடசாலைகளை அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் மேம்படுத்துவதாகும். கிராமப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பல விரிவான நிகழ்ச்சித் திட்டங்களை அரச முன்னெடுத்து வருகின்றது. நகரத்திலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கருத்தின் காரணமாக பெற்றோர்களிடையே இந்தப் போட்டித்தன்மை ஏற்பட்டுள்ளது.
பத்தேகம நகரின் திட்டமிடல் மற்றும் சுற்றாடல் தொடர்பில் இதனை விட திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அவசியமானது. அதற்காக முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் தொடர்பில் பிரதேச அரசியல் தலைமைகளுடன் கலந்துரையாடி தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். என்றார்.
நிகழ்வில் நினைவுப் பலகையைத் திறந்து வைத்து புதிய தொழில்நுட்ப பீடம் மற்றும் தொழில்நுட்பக் கூடம் அமைக்கப்பட்டுள்ள இரண்டுமாடிக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்த அரச தலைவர் கல்லூரியில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு விருதுகளையும் வழங்கி னார்.
இந்த நிகழ்வில் மகா சங்கத்தினர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள், அமைச்சர்களான கயந்த கருணாதிலக, சந்திம வீரக்கொடி, பிரதி அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம, தென் மாகாண ஆளுநர் ஹேமக்குமார நாணயக்கார, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜேலால் த சில்வா, தென் மாகாண கல்வி அமைச்சர் சந்திம ராசபுத்திர ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-10)

# கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 2
கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் முச்சக்கர வண்டியுடன் சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்று மதியம் கைது செய்யப்பட்டார்.
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் முச்சக்கர வண்டியுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற நபரை விசாரணை செய்த பொலிஸார், அவர் 200 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை கண்டுபிடித்தனர். கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபரைக் கைது செய்ததுடன், அவர் வசம் இருந்த முச்சக்கர வண்டியையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ஐ-8)

# தேர்தலை நடத்துவதற்கு போராட வேண்டியுள்ளது

## விமலவீர திசாநாயக்க எம்.பி. கூறுகிறார்

திருமலை, ஜூலை 2
மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தல் ஒன்றை நடத்துவதற்காகக் கூட தற்போதைய அரசின் ஆட்சியில் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல வீர திசாநாயக்க தெரிவித்தார்.
திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
ஒரு தேர்தலை நடத்துவதற்கு கூட இரத்தம் சிந்த வேண்டி ஏற்பட்டுள்ளது. போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. தேசிய சொத்துக்களைப் பாதுகாக்க, ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க மகிந்த ராஜபக்ச தலைமையில் கிழக்கில் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் - என்றார். (ற)

# வடக்கு, கிழக்கில் தீர்வின்றி தொடரும் உறவுகளின் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட மற்றும் போர்க் காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் உரிய தீர்வின்றி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வெயில், மழை எனப் பாராமல் அவர்களின் போராட்டம் பதில் ஏதுமின்றி கண்ணீருடன் தொடர்கின்றது.
ஐந்து இடங்களிலும் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் 100 நாள்களைக் கடந்து தொடர்கின்றன. அவர்கள் தமது உறவுகளின் நிலையை வெளிப்படுத்துமாறு கோரி பல இடங்களில் அறிவித்தும் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை.
கண்டு கொள்ளாமல் இருக்கும் அரசை தமது பக்கம் திசை திருப்புவதற்காக ஒவ்வொரு இடங்களிலும் வித்தியாசமான முறையில் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. அந்தப் போராட்டங்களுக்கும் எந்த விதமான பதிலையும் பெறமுடியவில்லை. தமக்குரிய பதில் வழங்கப்படும் வரை தமது போராட்டம் முன்னெடுக்கப்படும். அரச தலைவர் காலத்தைக் கடத்தாது உடன் பதில் வழங்கவேண்டும் என்று காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வலியுறுத்தியுள்ளன. உரிய பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-10)

# பிரச்சினைகளை தீர்க்க திட்டமிடுதல் அவசியம்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2
நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முறையான திட்டமிடல்கள் அவசியம் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் சரத் பொன்சேகா.
ஹங்குராங்கொத்தவில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
நாட்டில் முறையான திட்டமிடலுடன் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றால் பல பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க முடியும். தற்போது மாணவர்களை வேண்டுமென்றே தேவையற்ற விதங்களில் போராட்டங்களில் ஈடுபடுத்துவதால் அவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. அதற்கு முறையான திட்டமிடலு டன் அவர்களுக்கான அடித்தளம் அமைக்கப்பட வேண்டும் - என்றார். (ற)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2
தெல்லிப்பழை கிழக்கு கோவிற்புலம் அருள்மிகு பேச்சி அம்பாள் ஆலய ஏக குண்ட புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் இன்று ஆரம்பமாகி நாளை திங்கட்கிழமை காலை 9.07 மணியிலிருந்து 10.55 மணிவரை நடைபெறவுள்ளது. பிரதம சிவாச்சாரியார் ஆகம வித்தகர் சிவஸ்ரீ. ஆ.மகேஸ்வரக்குருக்கள் விசேட பூசைகளை மேற்கொள்வார் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.
(ற-12)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மடு அன்னையின் திருவிழா இன்று

மன்னார், ஜூலை 2

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியைக் கூட்டுத் திருப்பலியாக ஒப்பக்கொடுக்கவுள்ளனர்.

மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மடு ஆலயத்தில் மடு ஆலய பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் பாப்பரசரின் கொடியும் மடு அன்னையின் கொடியும் ஏற்றிவைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து கடந்த ஒன்பது தினங்கள் மாலையில் திருச்செப மாலையுடன் நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்பக்கொடுக்கப்படவுள்ளது. மடு திருவிழாவுக்கு நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதாரம், மருத்துவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். எமிலியானுஜ்ஸ் பிள்ளை அடிகளார் தெரிவித்தார். (21-56)

## வடக்கு மாகாணத்தில் வறிய மாணவரே அதிகம்

### அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு



மன்னார், ஜூலை 2

வடக்கு மாகாணத்தில் அனைத்து மாணவர்களும் சகல வசதிகளோடும் பிறக்கவில்லை. மிகவும் வறிய மாணவர்களே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். பல்வேறு சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியிலேயே தமது கல்வியை அவர்கள் பயின்றுவருகின்றனர். அத்தகைய சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக மாற்றுகின்ற மாணவர்களை நாம் உருவாக்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார்பற்றிமாமத்தியமகாவித்தியாலயத்தில் கடந்த வருடம் ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சையில் அதிகூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஜே.ஸ்டானிஸ்லாஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வாழ்க்கைவட்டத்தில் சோதனைகளும் வேதனைகளும் சந்தோசங்களும் மாறிமாறிவருவதுதவிர்க்க முடியாதஒன்று. இவைவாழ்க்கையிலிருந்துபிரிக்கமுடியாதஅம்சங்களாக சோதனைகளும் வேதனைகளும் இல்லாதவாழ்க்கைஎவருக்கும் இல்லை. அவ்வாறுசோதனைகள்வருகின்றபோதுமாணவர்கள் துவண்டுவிடாதுமனஉறுதியோடு செயற்பட்டுசோதனைகளைப்படிக்கட்டுக்களாக மாற்றி அதனூடாக சிகரத்தை அடைந்து சாதனை படைக்கின்ற மாணவர்களாக அனைவரும் மாறவேண்டும்.

ஒருவிடயத்தை மேற்கொள்ளும் முன்னர் அது சரிதானா என்பதனைஒருதடவைக்குஇருதடவை யோசித்ததன் பின்னர் அதனை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படும்போது நிச்சயமாகச் சரியான விடயங்களைச் சரியாகஇனங்கண்டுஅதனூடாக நாம் வெற்றியடைய முடியும் என்பதோடு மட்டுமல்லாது நம்மைச் சூழவுள்ள வர்களுக்கும் அது நன்மையாக அமையும்.

ஒரு பாடசாலையின் அபிவிருத்தி, வளர்ச்சி என்பது வெறுமனே அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கைகளில் மாத்திரம் இல்லை. பாடசாலைசமூகம்பக்கபலமாகஇருந்தால் மட்டுமே பாடசாலையின் வளர்ச்சியோடு கூடிய சந்தோசத்தையும் அனுபவிக்க முடியும். அந்தவகையில்பாடசாலைஅபிவிருத்திக்குழு, பெற்றோர் மற்றும் பழையமாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுக்கு உந்துசக்தியாக செயற்படவேண்டும் - என்றார். (ஐ-10)

## டெங்குஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்துங்கள்

### அரச தலைவர் அறிவுரை

கொழும்பு, ஜூன் 2

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைக் கடந்த காலங்களை விடவும் முன்னுரிமை அளித்து துரிதமான செயற்பாடுகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பாக பொதுமக்களும் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கம்பஹா சிறி போதி கல்லூரியின் விளையாட்டரங்கில் இடம்பெற்ற கம்பஹாமாவட்டசுகாதாரமற்றும் சுற்றாடல் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தப்பிரச்சினைஅரசின்அல்லது அரசியல் கட்சிகளின் பிரச்சினையல்ல. இதனை நாட்டு மக்கள் அனைவருடைய வாழ்க்கைப் பிரச்சினையாகக்கருதிஇதுதொடர்பில் அனைவரும் அதிககவனத்துடன் செயற்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் நிறுவன ரீதியாக உள்ளபிரச்சினைகள் கழிவுமுகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்புதொடர்பில்முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தடையாக இருக்கின்றன.


நிறுவன ரீதியாகச் சரியான ஒருங்கிணைப்புடன்செயற்பட்டுஅரசின் பிரச்சினையாக மட்டுமன்றி முழுநாட்டினதும் பிரச்சினையாகக் கருதி இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தஅனைவரும் ஒன்றுபட வேண்டும். - என்றார்.

மாவட்ட மட்டத்தில் நாடளாவிய ரீதியில்ஒழுங்குசெய்யப்படும்சுகாதார மற்றும் சுற்றாடல் மாநாட்டு தொடரில்இதுஇரண்டாவதுமாநாடாகும். முதலாவது மாநாடு அண்மையில் கொழும்பு மாவட்டத்தை மையப்படுத்தி நடைபெற்றது.

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது அரசதலைவர் விளக்கினார்.

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை முறைப்படுத்தி வினைத்திறன்மிக்க வகையில் அவற்றை முன்னெடுக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்களான அர்ஜூனரணதுங்க, ஜோன் அமரதுங்க, சரத் பொன்சேக்கா, இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, சுதர்ஷனீ பெர்னாண்டோபுள்ளே, மேல்மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன். முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10)



## மன். சௌத்பார் தொடருந்து தரிப்பிடத்தில் ஆசனப் பதிவு வைபவ ரீதியாக ஆரம்பம்

மன்னார், ஜூலை 2

மன்னார் தொடருந்துத் தரிப்பிடத்தில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு மன்னார் சௌத்பார் தொடருந்துத் தரிப்பிடத்தில் ஆசன முற்பதிவுகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் கொழும்பு தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டு சுமார் 2 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தலைமன்னாரில் இருந்து கொழும்புக்கான தொடருந்துச் சேவைகள் 25 வருடங்களின் பின்னர் 2015 ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியால் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. தலைமன்னாரில் இருந்து கொழும்புக்கா ன ஆசன முற்பதி வுகள் தலைமன்னார் தொடருந்து நிலையத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பயணிகள் ஆசன முற்பதிவுகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இது தொடர்பில் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அவர் சௌத்பார் தொடருந்து நிலையத்தில் ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

இந்த நிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், மன்னார் பிரதேசச் செயலாளர் என்.பிரமதாசன், மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் பலிகக்கார, மற்றும் அனுசரணை வழங்கிய மொபிட்டல் நிறுவனத்தின் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற - 56)

## தென்மராட்சியில் ஏழிசை மாலை நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 2

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்துவழங்கியஏழிசை மாலை 20 நிகழ்வு நேற்று முன்தினம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில்தலைமைவிருந்தினராக வடமராட்சிகிழக்கு மருதங்கேணி பிரதேசசெயலர்க.கனகேஸ்வரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான கு.சிவானந்தமும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்திக் கழக இணைப்பாளர் பு.அரசநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லாரி ஓய்வுநிலை பிரதி அதிபர் ம.அருணாசலம் ஆகியோரும், சிறப்புப் பார்வையாளர்களாக தென்மராட்சிவலயப்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர்திருமதிசி.சிவநாதன், ஓய்வுநிலைஅதிபர்க.அருந்தவபாலன், வலயஅழகியற்பாடஉதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆரியரட்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் மங்கல இசையும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி இசை ஆசிரியை திருமதி மதிலோஜினிலோகீசனின் இசைக் கச்சேரியும், உசன் இராமநாதன் மகாவித்தியாலயமாணவர்களின் குழுப்பாடலும்சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மந்துவில் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களின் மெல்லிசைநிகழ்வும்அயல்பாடசாலைகளின் இசை ஆசிரியர்களின் குழுப்பாடல், மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி இசைமாணவர்களின்குழுப்பாடல்ஆகியநிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புகை பொருள் விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூன் 2
புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை தவிர்ப்பு விழிப்புணர்வு நடை பவனியும் கருத்தரங்கும் நேற்று முன்தினம் அனலை தீவில் இடம்பெற்றது. ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள், கிராம மக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (21-9)



*பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த. க.பாடசாலையில் கற்கும் 135 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் ஆசிரியர் மதிதாஸ் என்பவரால் புலம்பெயர் நாடுகளில் உள்ள அவரது நண்பர்களிடம் பெற்ற நிதியில் கொள்வனவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (21-9)*

## குருபூசை தினம்

யாழ்ப்பாணம்.ஜூலை 2
தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய முன்னாள் பெருந்தலைவி அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஒன்பதாவது ஆண்டு குருபூசை தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

### தென்பகுதி சென்று வருவோருக்கே

# தென்மராட்சியில் டெங்குத் தொற்று

## ஜூனில் மட்டும் 27 பேர் பாதிப்பு

தென்மராட்சி, ஜூலை 2
தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்த போதிலும் தென்னிலங்கைக்குச் சென்று வருவோர் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்த மாதம் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 27 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரும் பல்வேறு தேவைகளுக்காக தென் பகுதிக்குச் சென்று காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் என விசாரணைகளில் அறியமுடிந்தது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் எற்பாட்டில் கடந்த மாதங்களில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுடன் பொலிஸார் மேற்கொண்ட தொடர் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பயனாக டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.
கடந்த மாதத்தில் கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு அலகினரின் பணிப்புரைக்கமைய 5 நாட்கள் பிரதேசத்தின் 5 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் உள்ள பத்துக்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டம் நடத்தப்பட்டது.
5 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் தரிசிப்புகள் முன்னெடுக்கப்பட்டன. 500க்கு மேற்பட்ட குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. 27 பேருக்கு எதிராக நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மே மாதத்தில் தென்பகுதியில் பெய்த பெருமழை காரணமாக டெங்கு நோயின் தாக்கத்தைக் குறைக்க ஜூன் மாதத்தில் மூன்று கட்டங்களாக 9 நாட்கள் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு கொழும்பு சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் 5 நாட்களே பரிசோதனைகள் நடத்தப்பட்டன.
கடந்த 5 மாதங்களில் ( ஜனவரி - மே ) பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்டோர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர், என்றுள்ளது. (21-9)

## வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந் திருவிழா

தென்மராட்சி ஜூலை 2
சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந் திரு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.
எதிர்வரும் பத்தாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.
பெருந் திருவிழாக் கிரியைகள் பொன்னுச்சாமிக் குருக்கள் சதாசிவக் குருக்கள் தலைமையில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (21-9 )



# தீயில் எரிந்து கடை நாசம்

முல்லைத்தீவு, ஜூலை 2
ஒட்டுசுட்டானில் இரும்புக் கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக்காரணமாக கடையில் இருந்த பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின என்று பொலிஸார் தெரிவித்தனர். சில மணி நேரத்தில் அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது. கடையின் உரிமையாளர் இரவு 10 மணியளவில் கடையைப் பூட்டிவிட்டு ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரன் ஆலயத்தின் திருவிழாவுக்குச் சென்றுள்ளார்.
இதன் போதே கடையில் தீ ஏற்பட்டுள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் உடனடியாக கடை உரிமையாளருக்கு அறிவித்தனர், கடைக்கு வருகை தந்த உரிமையாளர் கடையைத் திறந்தபோது தீ சுவாலை விட்டு எரிய ஆரம்பித்தது.
உட னடி யாக அனைவரும் விரைந்து செயற்பட்டு அருகில் உள்ள கிணற்றில் இருந்து நீரை எடுத்து வந்து ஊற்றி தீயை அணைத்தனர். விபத்து தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (21-7)

## தனங்களப்பு விவசாயிகளுக்கு

தென்மராட்சி, ஜூலை 2
தென்மராட்சி தெற்கு, தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கை வயல்களை அளவிட்டு, பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாளை முதல் நடைபெறவுள்ளன என்று கமக்கார அமைப்பின் தலைவர் அறிவித்தார்.
கீரைவாய்க்காலுக்கு கிழக்குப் புறமாகவும் நாவற்குளி கேரதீவு சாலையின் தெற்குப் புறமாகவும் பிள்ளையார் கோவிலுக்கு மேற்குப் புறமாகவும் அளவீட்டுப் பணிகள் நாளை இடம்பெறும். இந்தப்பகுதியில் உள்ள நெல்வயல்களின் உரிமையாளர்கள் தமது வயல் காணியின் உறுதி அல்லது குத்தகைப் பத்திரம் போன்றவற்றின் போட்டோப் பிரதியுடன் வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார். (21-9)

## நூற்றாண்டு அகவை நிறைவுவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 2
ஏழாலை இலக்கிய பண்டிதமணி மு.கந்தையாவின் நூற்றாண்டு அகவை நிறைவு விழா இன்று மாலை 3மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினரும் நூல் வெளியீட்டுத் தலைவருமான சிந்தாந்திரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமசாரிய சுவாமிகள், முத்தமிழ்க்குருமணி சகலாகமசங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.
முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேலும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் கலந்துகொள்வர். நிகழ்வில் பண்டிதரின் புத்தகக் கண்காட்சியும், நினைவு மலர்கள் வெளியீடும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (21-2)



கற்பக தருவின் உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு அனலைதீவு கிராம மக்களுக்கான ஒருவாரகால பனையோலை உற்பத்திப் பயிற்சி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வு ஊர்காவற்றுறை பிரதேச செயலக கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் அனலைதீவில் இடம்பெற்றது. (21-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

# திருமஞ்சத் திருவிழா 2017

நிகழும் ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 18 ஆம் நாள் 02.07.2017 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெறும்
மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் விநாயகப்பெருமான்,
முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அன்னை வீரமாகாளி அம்பாள் ஆரோகணித்து இலங்கை,
இந்தியா புகழ் பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் இசைமாரி முழங்க வீதி வலம் வர அம்பாள் அருள்
பாலித்துள்ளாள். அடியவர்கள் அனைவரும் அம்பிகையின் அருளை பெற்றுக்கொள்வோமாக

**பகல் மகேஸ்வரபூஜை (அன்னதானம்) இடம்பெறும்**

**மாலை விஷேட மேளக்கச்சேரி**

- பிச்சையப்பா புதல்வர்கள் றஜீவன் குழுவினர் - ஈழநல்லூர்
- உதயசங்கர் குழுவினர் - நல்லூர்
- K.K.பவப்பிரியன் குழுவினர் - காரைநகர்
- M.S. புதல்வர்கள் தட்சணாமூர்த்தி, துளசிபரன் - தொண்டைமானாறு
- இராமகிஷ்ணன் - தவில் - ஆமூர் - இந்தியா
- பஞ்சமூர்த்தியின் புதல்வர்கள் நாதஸ்வரம் இளவரசன்
- P. குமரன் - நாதஸ்வரம் இணுவில்
- வெங்கட்கனில் - தவில் - இந்தியா
- அஜய்சர்மா - தவில் - இந்தியா

**நவா ஒளி அமைப்பு**
**பண்டத்தரிப்பு**

**தேவன் ஒலி அமைப்பு**
**பண்டத்தரிப்பு**

**"வீரமாகாளியைச் சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம்"**

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமஞ்ச திருவிழா உபயகாரர்
அம்பாள் மரக்காலை.



# அருந்ததி

இணைய திருமண சேவை

**Arunthathee**
Online Matrimony
simplifying your marriage

## மணமகன் விபரம்

**8187 | வே | 1976**
கோப்பாய் | 170 cm | கி.பா: 24
Medical Informatics | அமெரிக்கா
உத்தரம் (சிம்மம்) | இந்து
சூ +செ:04

**8184 | வே | 1978**
கோப்பாய் | 170 cm | செ : 12
Analytical Chemistry | இலண்டன்
பூசம் (கடகம்) | கி.பா: 46

**8129 | வே | 1987**
ஏழாளை | 178 cm | இந்து
Graphic Designer | இலங்கை
புனர்பூசம் (மிதுனம்) | சூ + செ: 05

**8084 | ந | 1991**
உடுவில் | 143 cm | இந்து
Hospital Attendant | இலங்கை
அவிட்டம் (மகரம்) | சூ + செ: 10

**8205 | வே | 1983**
மயிலிட்டி | 170 cm | இந்து
Teacher | இலங்கை
சுவாதி (துலாம்) | சூ +செ: 05

**8102 | வே | 1983**
வேலணை | 178cm | இந்து | கி.பா: 30
Managing Director | ஜேர்மனி
சித்திரை (துலாம்) | சூ +செ: 01

**8051 | வே | 1973**
திருகோணமலை | 167 cm | செ:01
Development Officer | இலங்கை
ரேவதி (மீனம்) | கி.பா:34 | இந்து

**8057 | கு | 1975**
சங்கானை | 173 cm | இந்து
Own Business | செ:02 | கி.பா: 29
இலங்கை | கார்த்திகை (மேடம்)

**8111 | வே | 1986**
கொடிகாமம் | 180 cm | இந்து
Self Business | இலங்கை | செ:01
ஆய்யிலியம் (கடகம்) | கி.பா: 44

**8181 | வே | 1987**
காரைநகர் | 172cm | இந்து
Business | பிரான்ஸ்
திருவோணம் (மகரம்) | செ:08

**8132 | வே | 1987**
கொடிகாமம் | 172 cm | இந்து
Engineer | அவுஸ்திரேலியா
மகம் (சிம்மம்) | கி.பா: 10

**8090 | வே | 1989**
கொக்குவில் | 188 cm | இந்து
Bank Staff Assistant | இலங்கை
உத்தரம் (சிம்மம்) | கி.பா:44 | செ: 12

**8135 | வே+கோ | 1989**
சாங்கானை | 173cm | இந்து
Health Inspector | இலங்கை
உத்திரட்டாதி (மீனம்) | செ: 12

**8078 | வே | 1983**
கொக்குவில் | 165cm | இந்து
Software Engineer | கனடா
மகம் (சிம்மம்) | கி.பா: 21 | சூ + செ: 02

## மணமகள் விபரம்

**8081 | வே | 1973**
கொழும்பு | 173cm | இந்து
Admin Supporter | இலங்கை
பூரம் (சிம்மம்) | செ:08

**8193 | வே | 1977**
நீர்வேலி | 158 cm | இந்து
Bank Officer | இலங்கை | செ:07
அவிட்டம் (மகரம்) | கி.பா: 39

**8021 | வே + கு | 1982**
குருநகர் | 167 cm
Pre.School Teacher | ஓமான்
சித்திரை (துலாம்) | கிறிஸ்தவம்

**8072 | வே | 1980**
காரைநகர் | 167 cm | இந்து
Banking Staff | இலண்டன் | Divorced
அவிட்டம் (மகரம்) | கி.பா: 34 | செ: 02

**8087 | வே | 1983**
நெடுந்தீவு | 167cm | இந்து | சூ +செ:2
Development Officer | இலங்கை
திருவாதிரை (மிதுனம்) | கி.பா: 28

**8151 | வே + கு | 1985**
மட்டக்களப்பு | அவுஸ்திரேலியா
Medical Supervisor Training | 155cm
அனுஷம் (விருச்சிகம்) | இந்து

**8030 | வே | 1991**
வட்டுக்கோட்டை | 164cm | இந்து
BSC Qualified | இலங்கை
அவிட்டம் (மகரம்) | கி.பா: 24

**8196 | வே | 1988**
கொக்குவில் | 161 cm | இந்து
Assistant Accountant | இலங்கை
மகம் (சிம்மம்) | கி.பா: 94 | செ: 08

**8114 | வே | 1988**
கரவெட்டி | 160 cm | இந்து
Staff Assistant (Bank) | இலங்கை
விசாகம் (துலாம்) | கி.பா: 13

**8147 | வே | 1987**
உடுவில் | 169 cm | இந்து
Trancement | இலங்கை
மூலம் (தனுசு) | கி.பா: 12

**8208 | வே | 1990**
இடைக்காடு | 159 cm | இந்து
Doctor | டென்மார்க் | செ: 02
உத்திரட்டாதி (மீனம்)

**8123 | செ | 1991**
வவுனியா | 162 cm
B.Eng.Qualified | இலங்கை
அவிட்டம் (கும்பம்) | இந்து

**8093 | வே | 1992**
பருத்தித்துறை | 170 cm | இந்து
GAQ Qualified | இலங்கை
அவிட்டம் (கும்பம்) | செ: 04

**8199 | வே | 1995**
யாழ்நகர் | 170 cm
Accounts Clerk | இலங்கை
சதயம் (கும்பம்) | இந்து

**ஞாயிறு மாலை 3 மணி வரை யாழ் அலுவலகம் திறந்திருக்கும்.**

480/2C, காலி வீதி, வெள்ளவத்தை
011 40 63 282

20, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 49 27 527

www.arunthathee.com
info@arunthathee.com

0777 16 45 24
Viber, Whatsapp


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பள்ளமடு மகிலங்குளம் முதன்மைச்சாலை திறப்பு



மன்னார், ஜூலை 2

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளமடு மகிலங்குளம் முதன்மைச்சாலையை அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் இணைந்து நேற்று வைபவ ரீதியாகத் திறந்தனர்.

பள்ளமடு மகிலங்குளம் முதன்மைச்சாலை குன்றும் குழியுமாகக் காணப்பட்டமையால் அந்தச்சாலையால் பயணம் செய்யும் சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில் 11.4 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பள்ளமடு மகிலங்குளம் முதன்மைச் சாலையின் சீரமைப்புப் பணிகள் கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

சுமார் 455 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த சாலை அபிவிருத்திப் பணிகள் அரம்பிக்கப்பட்ட நிலையில், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சீரமைப்பு முழுமை பெற்றது.

வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், அமைச்சரின் இணைப்பாளர்கள், கிராம மக்கள் என பலர் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஐ-10, 56)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சி அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

*அசாத் சாலி விசனம்*

கொழும்பு, ஜூலை 2
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை வீழ்த்தி அரியணையில் அமர்ந்த நல்லாட்சி அரசின் மீதான நம்பிக்கையை மக்கள் முற்றாக இழந்துள்ளனர் என மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத குருமார்கள் தவறிழைக்கலாம் என்பதில்லை. சட்டத்தின் முன் அனைவரும் ஒன்றே. நாம் சட்டத்துக்கு அடிமைகளாக இருக்க வேண்டும். எனவே யாராக இருப்பினும் சட்டத்தை செயற்படுத்துங்கள் என்றே நாம் கோருகின்றோம். பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை அரச தலைவர் மைத்திரிபால அவரது இல்லத்துக்கு அழைத்து மூன்று முறை சந்தித்திருந்தமை சிறுபான்மையினர் என்ற வகையில் எம்மை வருத்தமடையச் செய்துள்ளது. இந்தத் தேசிய அரசு திருடர்களைப் பாதுகாக்கும் அரசாகவே தொடர்ந்து செயற்பட்டு வருகிறது-என்றார். (த)

# சைட்டத்துக்கு மகிந்த அனுமதியளிக்கவில்லை

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூலை 2
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அனுமதி வழங்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சைட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து அதற்கு எதிரான நிலைப்பாட்டையே நான் கொண்டிருந்தேன். பழைய ஊடகத் தகவல்களை தேடிப்பார்த்தால் இதனை அறிந்து கொள்ள முடியும். மகிந்த ராஜபக்ச அரசு சைட்டம் நிறுவனத்துக்கு எப்போதும் அனுமதி வழங்கியதில்லை. எவ்வித சட்டவிதிகளும் இன்றிச் சைட்டம் நிறுவனம் திருட்டுக் கடையாக ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் சைட்டம் நிறுவனத்துக்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத காரணத்தால், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. மகிந்த ராஜபக்ச சைட்டம் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கினார் என எவராவது கூறினால் அது பச்சைப் பொய். அனுமதி வழங்க நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அந்த நிபந்தனைகளைச் சைட்டம் நிறுவனத்தினால் நிறைவேற்ற முடியாமல் போனது-என்றார்.
எது எப்படி இருந்தபோதிலும் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சைட்டம் நிறுவனத்துக்கு மகிந்த ராஜபக்சவின் அரசு 600 மில்லியன் ரூபா வங்கிக் கடனை வழங்கியது. அத்துடன் மகிந்த ராஜபக்ச, 100க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அந்த மருத்துவக் கல்லூரியில் பயிலப் புலமைப் பரிசில்களை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## வெளிநாடு அனுப்புவதாக போலியான விளம்பரங்கள்

*பொலிஸார் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 2
இணையத்தளம் மற்றும் பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களை நம்பி வெளிநாடுகளுக்குச் செல்வோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.
கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குறுகிய நாள்களுக்குள் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும், நுழைவிசைவு பெற்றுத் தருவதாகவும் பல்வேறு நிறுவனங்கள் விளம்பரங்களைச் செய்கின்றன.
எனினும் இவ்வாறான விளம்பரங்களின் ஊடாகப் போலியான நிறுவனங்கள் ஆட்கடத்தல்களில் ஈடுபடுகின்றன.
எனவே இவ்வாறான விளம்பரங்களை நம்பி வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றவர்கள், முதலில் குறித்த விளம்பரங்கள் மற்றும் நிறுவனங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் -என்றார். (த)

## ஆசியாவில் உயரமான கட்டடம் இலங்கையில்

கொழும்பு, ஜூலை 2
ஆசியாவில் மிகவும் உயரமான கட்டடத்தை இலங்கையில் நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
இலங்கை முதலீட்டுச் சபையுடன் இணைந்து வேர்ல் கெப்பிடல் சென்றர் என்ற நிறுவனம் இந்த கட்டடத்தை நிர்மாணிக்க உள்ளது.
இரண்டு கோபுரங்களை கொண்ட இந்த கட்டடம் உலகில் உயரமான கட்டடங்களில் 9 ஆவது கட்டடமாகும்.
625 மீற்றர் உயரத்தில் 117 மாடிகளை கொண்டதாக இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட உள்ளது.
எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (த)



## பொத்துவில், புத்தளத்தில் ராடார் ஜப்பான் 3,422 மில். ரூபா உதவி

கொழும்பு, ஜூலை 2
இலங்கையின் காலநிலை பற்றிய தகவல்களை தரக்கூடிய ராடர் வலையமைப்பை நிறுவுவதற்கு, ஜப்பான் 3.422 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளது. இதற்கான உடன்பாடு நேற்று முன் தினம் கொழும்பில் கையெழுத்திடப்பட்டது.
நிதியமைச்சில் நேற்று முன் தினம் நடந்த நிகழ்வில், ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகநுமாவும், நிதியமைச்சின் செயலரும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.
இந்த உதவியின் கீழ் பொத்துவிலிலும், புத்தளத்திலும் இரண்டு ராடர் நிலையங்கள் அமைக்கப்படும். இங்கு டொப்ளர் ராடர்கள் பொருத்தப்பட்டு துல்லியமான காலநிலைத் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (த)

## அமைச்சுகளுக்கு தீவிர பாதுகாப்பு

கொழும்பிலுள்ள அமைச்சுக்களுக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.
அரசுக்கு எதிர்ப்பு வெளியிடும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் பாதிப்பு ஏற்படக்கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள அமைச்சுகளுக்கு இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சுக்குள் புகுந்து சொத்துக்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினர்.
இந்த விடயம் மற்றும் புனாய்வுப் பிரிவு வழங்கியுள்ள அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய சுகாதார அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு உட்பட சில அமைச்சுக்களுக்குக் கடும் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
அரச தலைவர் செயலகத்துக்குச் சிறப்புப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கப் பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (த)

## இளம் பெண் வழக்கறிஞரை படமெடுத்தவருக்குச் சிறை

கொழும்பு, ஜூலை 2
இளம் பெண் வழக்கறிஞர் ஒருவரைப் ஒளிப்படம் எடுத்த நபருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
ரயிலில் பயணித்த இளம் பெண் வழக்கறிஞரை, தனது கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்த வருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட நபர் ஒருவர் திறந்த நீதிமன்றில் குறித்த வழக்கறிஞரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.
குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட 55 வயதுடைய திருமணம் செய்த நபருக்கு ஒரு வருடச் சிறைத்தண்டனை விதித்துக் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.
அத்துடன் குறித்த சந்தேகநபருக்கு 1500 ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், ஒளிப்படம் எடுத்த தொலைபேசியைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.
கோட்டை சிறுவர்கள் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## அமெ. அறிக்கை ஓட்டோக்களை முடக்கும் செயல்

*சாரதிகள் கடும் கண்டனம்*

கொழும்பில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் குறித்து அமெரிக்கத் தூதரகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் தேசிய கூட்டு முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் கைத்தொழிலாளர்களின் சங்கம் என்பன எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.
கொழும்பில் உள்ள முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் தமது வண்டிகளில் பயணிக்கும் வெளிநாட்டுப் பெண்களை தேவையில்லாமல் தொடுவதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருந்தது.
கொழும்பு நகரில் முச்சக்கர வண்டிகளில் தனியாகப் பயணிக்க வேண்டாம் என இலங்கைக்கு வரும் அமெரிக்கப் பெண்களுக்கு அமெரிக்கத் தூதரகம் ஆலோசனை வழங்கியிருந்தது.
அமெரிக்காவின் இந்த அறிக்கையானது முச்சக்கர வண்டித் தொழிலை முடக்குவதற்கான அறிக்கை எனத் தேசிய கூட்டு முச்சக்கரவண்டிச் சாரதிகளின் சங்கத்தின்செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்தார்.
எவ்வாறாயினும் இலங்கையில் முச்சக்கரவண்டித்தொழிலை கட்டுப்படுத்த வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லை எனவும் இதன் காரணமாகச் சில சம்பவங்கள் நடக்கலாம் எனவும் அவர் கூறினார். (த)

## 30,000 கோடி ரூபா வரி அறவிடப்படவில்லை

கொழும்பு, ஜூலை 2
தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் கடந்த வருடத்தில் அறவிட வேண்டிய சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா வரியை அறவிடவில்லை எனத் தெரியவந்துள்ளது.
நிதியமைச்சு வழங்கிய அறிக்கையில் கணக்காய்வாளர் பெற்றுக்கொடுத்துள்ள தகவல்கள் மூலம் இது தெரியவந்துள்ளது.
கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை தேசிய இறைவரித் திணைக்களம் 18 ஆயிரத்து 208 கோடி ரூபா வரியை அறவிடவில்லை. மதுவரித் திணைக்களம் அறவிடவேண்டிய 11 ஆயிரத்து 322 கோடி ரூபா அபராதத்தை அறவிடவில்லை எனத் தெரியவந்துள்ளது.
மேலும் வரி செலுத்த வேண்டியவர்கள் 254 கோடி ரூபா வரியைச் செலுத்தவில்லை எனவும் கூறப்படுகின்றது. (த)

# பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி மிக அவசியம்

## அரச கணக்கீட்டு தெரிவுக்குழு ஆலோசனை

தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கும்போது பாடசாலைப் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி சம்பந்தமாக சிறப்புக் கவனத்தைச் செலுத்துமாறு அரச கணக்கீட்டு தெரிவுக்குழு தேசியகல்விஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.
பாடசாலைப்பிள்ளைகளுக்குப் பாடசாலை மற்றும் பாடசாலைக்கு வெளியில் நடக்கும் பாலியல் துர்நடத்தைகளைத் தடுக்கும் அவசியம் குறித்து தெரிவுக்குழு கவனம் செலுத்தி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது.
பாடசாலை மாணவர்களுக்குப் பாலியல் சம்பந்தமான விடயங்களை விளக்கும் மாற்றுவழிகள் மாத்திரமல்லாது, பாடத்திட்டத்திலும் அதனை உள்ளடக்கவேண்டும். இது குறித்து அரசகணக்கீட்டுத் தெரிவுக்குழு, தேசியக் கல்வி ஆணைக்குழுவுடன் பலமுறை பேச்சுக்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
பாலியல் விடயங்கள் சம்பந்தமாக தெளிவான அறிவு இல்லாத காரணத்தினால், மாணவர்கள் மற்றும் மாணவிகள் பாலியல் துர்நடத்தைகளுக்கு உள்ளாகி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைட்டம் குறித்து அமைச்சர் சம்பிக்க இரட்டைவேடம்

## வாசுதேவ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 3

சைட்டம் பிரச்சினையில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இரண்டு கொள்கைகளைக் கடைபிடிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் நிறுவனத்தைப் பொதுச் சொத்தாக மாற்றத் தலையிடுவதாக சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார். எனினும் தற்போது வேறு ஒன்றை கூறுகின்றார்.

சைட்டம் பொதுச் சொத்தாக மாற்றப்படாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். இதற்குச் சம்பிக்க ரணவக்க என்ன கூறபோகிறார்?

அதேபோல் அண்மைக் காலமாக நடைபெற்ற சைட்டம் எதிர்ப்பு மற்றும் அவற்றில் கலந்து கொண்டவர்ளுக்கு அரசு பதில் வழங்கிய விதம் சரியானதல்ல.

சிவில் சட்டத்தின் கீழ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை தாக்க முடியாது. குற்றவியல் சட்டத்தின் கீழ் மாத்திரமே தாக்க முடியும்.

மேலும் சைட்டம் பிரச்சினை சம்பந்தமாக எதிர்ப்பில் ஈடுபடும் மருத்துவர்கள் மீது தாக்கல் நடத்தத் தனியான குழு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினைக்கு மருத்துவபீட மாணவர்களோ, பல்கலைக்கழக மாணவர்களோ பொறுப்புக்கூறவேண்டியதில்லை நெவில் பெர்ணாண்டோ போன்றவர்களே இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (த)

# வாசுதேவவின் மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 3

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் அதன் அருகில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சீன முதலீட்டாளர்களுக்கு வழங்க அரசு எடுத்துள்ள தீர்மானத்தை இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

புவனேக அலுவிகார, சிசிர ஆப்ரூ, அனில் குணரத்ன ஆகிய மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் அதன் அருகில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சீன முதலீட்டாளர்களுக்கு வழங்குவது என அரசு எடுத்துள்ள தீர்மானம் சட்டவிரோதமானது என வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்தார்.

அத்துடன் அதற்காக நாடாளுமன்றத்தின் அனுமதியையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அது அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்றும் அவர் மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனுவுக்கு எதிராக அடிப்படை எதிர்ப்புகளை முன்வைத்த சட்டமா அதிபர், மனுதாரர் உண்மையான விடயங்களை மறைத்து, மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகக் கூறினார்.

இந்தத் திட்டமானது கடந்த 2012ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமையவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறிய சட்டமா அதிபர், அந்தத் திட்டம் தற்போதைய அரசின் திட்டம் எனக் காட்டுவதற்கு மனுதாரர் முயற்சித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மனுவில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் இருப்பதால், அதனை விசாரணைக்கு எடுக்காது தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் கோரினார். முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த நீதியரசர்கள், மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளனர். (த)



ஸ்ரீ காளியம்மன் துணை
பண்டித் - குமார் சாஸ்த்திரி
ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்
தொடர்புகளுக்கு
077 251 8305 / 077 467 0325

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magic) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)

மஹா சக்தியுள்ள
வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா ?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா ?
- பெற்றோர் விருப்பமின்மையா ?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா ?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா ?
- காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா ?

இரகசியம் பேணப்படும்.
நம்பிக்கை - உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
உங்களின் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து உதவிகள் செய்வேன்.

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்த
சீதா குணவதீ குரு மேனியோ
மெனிக்ஹின்ன - திகன 0766 282 874, 077 392 9989
என்னைத் தொடர்பு கொண்டவர்களுக்கு ஒரு நாளும் தோல்வியில்லை.
வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு : 0094 766 282 874

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

விலை 3500
5500

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[illegible]

உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பதிவு இல : [illegible]
077 2106 154
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
Next exam date in Jaffna. 29 July 2017
idp www.idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி - Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி - Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி - French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் புகையிரத நிலைய வீதியில் 4பரப்புக் காணியில் ஆறு அறைகள் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

சதா - 00447956288671, மூர்த்தி - 077 467 2408,
உமாசங்கர் - 077 770 9249
Email: lathas77@aim.com

முன்பள்ளி கல்வி நிலைய வேலைவாய்ப்பு

9 கிளைகளைக் கொண்டு இயங்கிவரும் கல்வி நிறுவனத்துக்குப் பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் கோரப்படுகின்றனர்.

☑ முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்
☑ முன்பள்ளி தமிழ் ஆசிரியர்
☑ கணினி நிலைய போதனாசிரியர்
☑ சிங்கள ஆசிரியர்
☑ தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள்


மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குப் புத்தூர், இணுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றது.

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி :- 03.07.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்குரிய இடம் :- Little Masters'Montesoori, Institute of Computer Studies
கே.கே.எஸ்.றோட், மல்லாகம் தெற்கு, மல்லாகம். (காங்கேயன் பேக்கரிக்கு முன்பாக)
நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்போது தவறாது சுயவிவரக் கோவையும் கல்வித் தகைமை சான்றிதழ்களும் கொண்டு வருதல் வேண்டும். தொடர்புகளுக்கு :- 077 747 4741

ஐம்பதாவது ஆண்டு திருமணவாழ்த்து


Golden Jubilee



ஐம்பதாவது திருமணநாள்
நிறைவை காணும்
திரு.திருமதி கந்தசாமி
பாலசரஸ்வதி
தம்பதிகள்
இன்று போல்
என்றும் இன்புற்று
வாழ்கவென
வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.
தகவல் : மகன் - க. கிருஷ்ணலிங்கம்
(முன்னாள் உபதபாலதிபர் (பிரான்பற்று - ஆஸ்திரேலியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### விற்பனைக்கு

பாவித்த Pulsar NS 150 ரக மோட்டார் சைக்கிள் Samsung TABE, Win Pad விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு

**077 764 3322** (CS 5298) (14)

### விற்பனைக்கு

Pleasure (பிளசர்). Scooty, Water pum, Motor, Solar panel (வாட்டர்பம், மோட்டர், சோலார்) அலுமாரி, முதிரைக்கட்டில் விற்பனைக்குண்டு.

**071 531 5500** (C 30348) (14)

### வீடு /காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 2 ஏக்கர் மேட்டுக்காணியும் 3 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. மாறாத விலை 83 இலட்சம்.

**076 660 4584** (C 30349) (14)

### விற்பனைக்கு

Original German Sheperd பெட்டைக் குட்டிகள் உண்டு. ஊசி போடப்பட்டது 60Days.

புறோயிலர் குஞ்சுகள் - 100/=

ஊர்க்குஞ்சு - 75/=

கழுத்துவெட்டி குஞ்சுகள் - 85/=

மானிப்பாய்.

**077 408 1155/ 077 807 2064**

### வீடு விற்பனைக்கு

நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் சட்டநாதர் வீதியில் அமைதியான சூழலில் இரண்டு அறைகள் மற்றும் 1 ¾ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

**075 258 3407**

### காணி விற்பனைக்கு

கணேஸ்வரம். அளவெட்டியில் 4பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளவும்.

**076 603 6528**

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தடியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீட்டுத் திட்டம் பெறக்கூடியது.

**077 913 1128**

### வீடு விற்பனை

கோண்டாவில் கிழக்கில் சகல வசதிகளையும் கொண்ட 5¾ பரப்புடன் வீடு வளவு விற்பனைக்குண்டு. தோட்டம் செய்யக்கூடிய உகந்த நிலம் பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் விரும்பப்படமாட்டாது.

**076 930 1805**

### பன்னங்கண்டி மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

பரந்தன். பூங்காவனம் சந்தியிலிருந்து கென்னடிறோட் மூன்றாம் வாய்க்கால் பன்னாங்கண்டி கிராம உத்தியோகத்தர் அலுவலகம் எதிரே தண்ணிவாய்க்கால் ஓரமாக அரை (½) ஏக்கர் மேட்டுக் குடியிருப்பு நிலம் விற்பனைக்குண்டு.

**077 935 2274 / 077 512 4361**



## தேவை



### வாடகைத்தாய் தேவை

நல்ல உள்ளம் கொண்ட 31 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் IVF மூலம் செய்தற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் உண்டு. இரகசியம் பேணப்படும்.

**077 637 3804** (C 30346) (14)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ் மாநகர சபை அல்லது கொக்குவில் பகுதிக்குள் வீடு வாடகைக்கு தேவை.

**077 300 1763** (CS 5302) (14)

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. தனியானவர். பொறுப்புக்கள் இல்லாதவர் விரும்பத்தக்கது.

**077 929 8034**

### வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு முன்னனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

**077 729 0300**

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 ஆம் ஆண்டு பிறந்த கேட்டை நட்சத்திரமும் செவ்வாய் குற்றமற்ற இளமைத் தோற்றமுடைய பட்டப்படிப்பை முடித்து பிரபல வங்கியில் உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகனை தேடுகின்றனர். ஐரோப்பிய வெளிநாடுகளில் வசிப்பவர்கள்.

**077 6648 757/ 077 531 4245**

### தேவை

யாழ்ப்பாணத்தில் விளம்பரப்படுத்தல் அதிகாரிகள் (Marketing Executive) வேலையாள் (ஆண்/பெண்) தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

**077 764 3322** (CS 5297) (14)

### சாரதி தேவை

கனரக வாகன சாரதி தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் தொடர்பு கொள்ளவும்.

**077 300 1763** (CS 5302) (14)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த கிரகபாவம் 42, விசாக நட்சத்திரம். விவாகரத்தானவருக்கு தாரமிழந்த அல்லது விவாகரத்தான மணமகள் தேவை.

**076 381 3269**

### பணியாளர் தேவை

கோதுமை மாவினைப் பொதி செய்வதற்குப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு:- இல.153, பலாலி றோட், கந்தர்மடம்.

தொ.பே.இல. 077 362 8944

### தேவை

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் புத்தகக் கடை மற்றும் பண்ணைக்கான வேலையாள்கள் (ஆண் / பெண் ) உடன் தேவை.

**077 074 0351**

## ஏனையவை

### வாடகைத்தாய் தேவை

29 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்குத் தேவை. சன்மானம் வழங்கப்படும். கண்டிப்பாக இரகசியம் பேணப்படும்.

**077 906 1406** (C 30347) (14)

### வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு

பிரபல நிறுவனம் ஒன்றின் பயன்பாட்டிலிருந்த வீடு வாகனங்களும் நிறுத்தக்கூடிய வசதியுடன் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்திக்கும் C.T.B டிப்போவுக்கும் இடையில் வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.

**076 621 9369**

### அறை வாடகைக்குத் தேவை

மருத்துவத்துறையில் பணியாற்றும் பெண் ஒருவருக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் இணைந்த குளியலறையுடன் வசதியான அறை வாடகைக்குத் தேவை.

**077 012 4415**
medconjeeva@gmail.com

### வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடன் தளபாடங்கள், குளிரூட்டியுடன் கூடிய 5 அறைகள் மற்றும் சாதாரண 4 அறைகளுடைய விடுதியாகப் பயன்படுத்தக் கூடிய வீடு இல.30/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது.

**077 413 3497**
(காலை 9am - 3pm வார நாள்கள் மட்டும்)
(சனி. ஞாயிறு 9am - 12pm)

### உதவியாளர் தேவை

கந்தர் மடத்தில் இயங்கும் பற் சிகிச்சை நிலையத்திற்கு O/Level வரை படித்த பெண் உதவியாளர் தேவை. சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம் தபால் மூலம் அனுப்பவும்.

198, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

1992இல் பிறந்த 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது.

**076 671 0542**

### வாகனம் வாடகைக்கு

ISUZU Freeser truch 10½ அடி மாதாந்த வாடகைக்கு உண்டு. Freeser இல்லாமலும் எந்த தேவைக்கும் பயன்படுத்தக் கூடியது.

**077 471 7118**

### SUPER LUXURY BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi

581, K.K.S ROAD, JAFFNA.

### குருக்கள் உதவி குருக்கள் பரிசாரகர் தேவை

கொழும்பு-13. ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு குருக்கள், உதவி குருக்கள், பரிசாரகர் (மடப்பள்ளி ஐயர்) தேவை. வீடு வசதி செய்து தரப்படும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.

98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.

Tel : 2433881 / 2431406 / 0777 261771

Fax : 2336033

Email : muguganginthupitiya@gmail.com

### அறை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

**077 931 0510** (CS 5302) (14)

### வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவில் வீடு வாடகைக்கு உண்டு.

**075 070 0185**

### உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள பிரபல்யமான தமிழ் மொழி கார் சேர்விஸ் நிறுவனத்தில்

✓வாகனம் கழுவுவதற்கு ✓சேர்விஸ் செய்வதற்கு

இவற்றுக்கான வேலையாள்கள் உடனடியாகத் தேவை.

முன்னனுபவம் எதிர்பார்க்கப்படவில்லை.

**077 721 9229, 077 735 2332**
Email- info.vtamarketing@gmail.com

### வாடகைக்கு

கன்னாதிட்டி சந்திக்கருகாமையில் அலுவலகத்துக்கு உகந்த இரு மேல்மாடிகள் வாடகைக்குண்டு.

**071 898 0422**

### ENGLISH CLASS

அனைவருக்குமான ஆங்கில வகுப்புக்கள் உங்கள் இடங்களில் வந்து இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

**077 563 3289**

### பணியாளர் தேவை

பதவி - விற்பனை மேம்படுத்துநர் மற்றும் கள உத்தியோகத்தர்

வயது - 18 - 26

ஆண்கள் விரும்பத்தக்கது

தகைமை - க.பொ.த.சாதாரண தரம்

விண்ணப்ப முடிவு திகதி - 10.07.2017

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி-
அபான்ஸ் பிஎல்.சி.
இல.136, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:- ab_tnv@abansgroup.com

### வேலைவாய்ப்பு

தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, நுகேகொட, கிருலப்பனை, ரத்மலான மேலும் பல இடங்களில் உள்ள எமது தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். வயது 60 இற்கு உட்பட்டவர்கள். உணவு, தங்குமிடம் செய்து தரப்படும். முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சி அளிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு உடன் அழைக்கவும்.

**072 536 8359/072 720 0005/ 011 721 4444, 292**
B2/1, Havelock Road, Colombo - 05

### MAJESTIC CINEPLEX Jaffna

A CEYLON THEATRES CINEMA

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712

MajesticCineplexSL

www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசியலில் நேர்மை!

அரசியலில் பாவ புண்ணியங்கள் கிடையாது. நிலமைக்கேற்ப தம்மைத் தக்கவைத்துக் கொள்வதே முக்கியம். காலம் காலமாக இதுவே நடந்து வருகிறது. இதனையே மோசமான அரசியல் என்று கண்டிக்கிறோம். இதிலிருந்து மக்களையும் அரசியலையும் காக்கவே நேர்மையானவர்கள், நல்லவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம். ஆனால், அப்படியானவர்கள்கூட அரசியலுக்கு வந்த பின்னர் அந்தச் சுழலுக்குள் சிக்கி அதுபோலவே ஆகிவிடுகிறார்கள் என்பதுதான் கவலை.

புதிய அரசமைப்பு வரைவில் என்ன உள்ளது என்கிற சர்ச்சை மீண்டும் வெடித்திருக்கிறது. வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஆற்றிய உரையின் பின்னர் இந்த விடயம் மீண்டும் பேசுபொருளாகியிருக்கிறது.

புதிய அரசமைப்பின் கீழ் அல்லது இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியாக, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே எதிர்காலத்தில் நடக்கப்போகிறது என்ற சாரப்பட முதலமைச்சர் அந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

''நாங்கள் கேட்பதில் எதையுமே தராத ஒரு தீர்வைப் பெற எத்தனிப்பதே எமது கொழும்புப்பார்வை. எமது இனப்பிரச்சினையைத் தீர்க்க கொழும்பின் பார்வை ஒருபோதும் உதவாது. அரசியல் பிரச்சினையானது எங்களுக்கு ஏற்பட்ட ஒன்று. நாங்கள்தான் பாதிக்கப்பட்டவர்கள். எமது நிலையில் இருந்துதான் பிரச்சினையை அணுகவேண்டுமே தவிர, கொழும்பின் பார்வையில் இருந்தல்ல. ஒற்றையாட்சியில் 13ஆவது திருத்தச்சட்டத் தீர்வானது என்றென்றைக்குமே தமிழ் மக்களைத் தமது அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடும்'' என்று தெரிவித்தார் முதலமைச்சர்.

அவர் சொல்வது முற்றிலும் உண்மை. அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாகமாட்டாது. இதனைக் கூட்டமைப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது. தீர்வுக்கான அடிப்படையாகக்கூட 13ஆவது திருத்தம் இருக்க முடியாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும்கூட அடிக்கடி வலியுறுத்தியிருக்கிறார். எனவே ஒற்றையாட்சி மற்றும் 13ஆவது திருத்தம் தொடர்பான முதலமைச்சரின் கருத்தோடு தமிழர்கள் எவரும் முரண்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால், புதிய அரசமைப்பின் ஊடாக அல்லது இனப் பிரச்சினைக்கான தீர்வாக, 13ஆவது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலை சம்பந்தரும் அவர் தலைமையிலான கூட்டமைப்பினரும் (குறிப்பாகத் தமிழ் அரசுக் கட்சியினர்) ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதைப் போன்று - மறைமுகமாக - தனது வார்த்தை விளையாட்டுக்களுக்கு ஊடாக முதலமைச்சர் சொல்ல முயன்றிருப்பதுதான் சர்ச்சைக்குரியது.

புதிய அரசமைப்பின் வரைவில் என்ன இருக்கிறது என்பது அதன் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதும் தெரியவந்துவிடும். அந்த அதிகாரப்பகிர்வு யோசனைகள் 13ஆவது திருத்தம்தானா, அதைவிட அதிகமானவையா, இல்லை அதைவிடக் குறைவானவையா என்பவை போன்ற விடயங்கள் அனைத்தும் மக்களுக்குப் பகிரங்கமாகும்.

அதன் பின்னர் தமிழ் மக்கள் அது தொடர்பில் தமது கருத்தை, அரசியல் வெளிப்பாட்டைக் காட்ட முடியும். அந்த யோசனை ஏற்புடையது அல்ல என்றால் வீதியில் இறங்கிப் போராட முடியும், யோசனைகளைக் கிழித்தெறிய முடியும். ஏன் முதலமைச்சர் தலைமையிலேயே கிளர்ச்சியிலும் ஈடுபட முடியும் (அதற்கு அவர் தயாராக இருந்தால்).

அதற்கான வாய்ப்பு இருக்கும்போது, புதிய அரசமைப்பு வரைவில் என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே புரளிகளின் அடிப்படையில் கருத்துக்களைப் பரப்புவதன் நோக்கம் என்ன? நியாயம் என்ன?

மக்களின் ஆணையை, கருத்தை அறிந்த பின்னர்தான் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் சம்பந்தர் விடாப்பிடியாக நிற்கிறார். சிங்களக் கட்சிகளே அது வேண்டாம் என்கிறபோதும் அது கட்டாயம் என்கிறார் அவர்.

புதிய வரைவு தமிழர்களுக்குப் பாதகமானதாகவோ ஏற்புடையதாக இல்லாமலோ இருந்தால், கருத்தறியும் வாக்கெடுப்பின்போது அதை நிராகரிக்கும் வாய்ப்பும் தமிழர்களுக்குத் தெளிவாக இருக்கிறது. அத்தகைய வாய்ப்புகள் எல்லாம் இருக்கும்போது அவசரப்பட்டு, தேவையற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு மக்களைக் குழப்புவது எதற்காக.

உலகெங்கும் அரசியல்வாதிகள் இதைத்தான் செய்கிறார்கள். அதனால்தான் அரசியலைச் சாக்கடை என்றும் வைகிறோம். அப்படி நடந்துகொள்ளாதவர்களையே நேர்மையான மனிதர்கள் என்கிறோம்.

# கூட்டமைப்பு எதிலும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் நிலவும் சிக்கல்கள் தொடர்பாகவும், கொழும்பு அரசின் செயற்பாடுகள் குறித்துக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சிங்களத் தொலைக்காட்சி யொன்றுக்கு வழங்கிய செவ்வியின் தொகுப்பு.

எம்.ஐ.முபாறக்



**கேள்வி:** வட மாகாண சபையில் ஊழல், மோசடி பிரச்சினை எவ்வாறு ஆரம்பமாகியது?

**பதில்:** மாகாண முதலமைச்சரிடம் தற்போது சர்ச்சையில் சிக்கி இருக்கும் வட மாகாண அமைச்சர்களுக்கு எதிராக, ஓரிரு வருடங்களுக்கு முன்னர் மாகாண சபை உறுப்பினர்களால் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒரு அமைச்சர் முதலமைச்சருடன் அதிகம் நெருக்கம் கொண்டவராக இருந்ததால், முதலமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்கவில்லை. இதனால் தெரிவுக் குழுவொன்றை அமைத்து இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என மற்றொரு பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டது.

அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதும், இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு வேறு அமைச்சர்களும் உள்ளாகி இருக்கின்றார்களா என்று தேடிப் பார்ப்பதற்காகவும், குற்றஞ்சாட்டப்பட்ட முதலமைச்சருக்கு நெருக்கமான அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிப்பதற்காகவும் முதலமைச்சர் விசாரணைக் குழுவை நியமித்தார். அதன் பின்னர் ஊடகங்களில் விளம்பரப்படுத்தி அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் திரட்டப்பட்டன. அந்த விசாரணைக் குழு, மே மாதம் அதனது விசாரணை அறிக்கையை முதலமைச்சரிடம் ஒப்படைத்தது. அறிக்கை கையளிக்கப்பட்டு இரண்டு வாரங்களாக அந்த அறிக்கை வெளிப்படுத்தப்படாது கிடப்பில் போடப்பட்டிருந்தது.

> எல்லா இனங்களிலும் இனவாத, அடிப்படைவாத கடும்போக்குவாதக் குழுக்கள் உள்ளன. 2015 தேர்தலில் அந்த குழுதான் போட்டியிட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத்தான் ஆதரவு வழங்கினார். மக்கள் நிராகரித்துவிட்டனர்.

பின்னர் வடக்கில் உள்ள இரண்டு பத்திரிகைகள் அந்த அறிக்கையைப் பிரசுரித்தன. அதன் பின்புதான் வேறு வழியின்றி முதலமைச்சர் அந்த அறிக்கையை மாகாண சபையில் சமர்ப்பித்தார். முதன் முதலில் குற்றஞ் சாட்டப்பட்ட அமைச்சர் அந்த அறிக்கையில் குற்றவாளியாகக் காட்டப்பட்டிருந்தார்.

நான்கு பேருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. முதலாமவருக்கு எதிரான குற்றாச்சாட்டின் வீரியத்தைக் குறைக்கும் வகையில்தான் இந்த எண்ணிக்கை நான்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் வேறு வழியின்றியே இந்த விசாரணைக் குழுவை நியமித்தார். இந்த நால்வருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்றும் அவர் அறிவித்தார்.

**கே:** இது தொடர்பில் உங்கள் தரப்பின் நடவடிக்கை எவ்வாறாக இருக்கப் போகின்றது?

**ப:** இவ்வளவு காலமும் முதலமைச்சர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பாதுகாத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்திருக்கின்றார் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மாகாணசபைஉறுப்பினர்களின்கோரிக்கையாகும்.

கே: குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு முதலமைச்சர் ஏன் முயற்சி செய்கிறார்?

ப: காரணம் தெரியவில்லை. ஓர் அமைச்சர் முதலமைச்சருடன் அதிகம் நெருக்கமானவர். அவரும் கடும்போக்குவாதக் கொள்கையுடன் மக்களின் உணர்வுகளைத் தூண்டி அரசியல்செய்யும் ஒருவர்.

கே: குற்றஞ்சாட்டுக்கு உட்பட்டவர்களைப் பாதுகாத்த விக்னேஸ்வரனை நல்லவர் வல்லவர் என்று கூறி முதலமைச்சராக ஆக்கியமை தவறான செயற்பாடு என்று நீங்கள் இப்போது உணருகிறீர்களா?

ப: இப்போது அல்ல; இரண்டு வருடங்களுக்கு முன்பே நாம் உணர்ந்திருந்தோம்.

கே: ஆனால் அவருக்கு எதிராக கொழும்பில் இருந்து சதி செய்யப்படுவதாக அவர் கூறியுள்ளாரே?

ப: அதை ஏற்க முடியாது. அப்படி எவரும் அவருக்கு எதிராகச் சதி செய்யவில்லை. அவர்தான் உண்மையான குற்றவாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் வீரியத்தைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தார். இதைத்தான் சதி என்று சொல்ல வேண்டும். அது மட்டுமன்றி ஐந்து அமைச்சுக்களைத் தானே வைத்திருக்கப் போகிறேன் எனக் கூறினார். அப்படிச்செய்ய முடியாது.

**முதலமைச்சர் தனித்துப் பயணிக்க முயல்கிறார் என 2015ஆம் ஆண்டிலேயே நாம் உணர்ந்திருந்தோம்**

கே: ஐந்து அமைச்சுக்களைத் தாமே வைத்துக்கொள்கிறேன் என்று அவர் கூறியதை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது முதலமைச்சர் தனித்துப் பயணிக்கின்றார் என உணருகிறீர்களா?

ப: 2015, அரச தலைவர் பதவிக்கான தேர்தலின்போதே அது எமக்குத் தெரிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக அவர் செயற்படவில்லை. எமக்கு எதிராகச் செயற்பட்ட தரப்பினர்க்குத்தான் அவர் ஆதரவு தெரிவித்தார். அப்போது இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நான் கட்சியிடம் கேட்டுக்கொண்டேன். அதை அப்போது எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.
அதன்பின்னர், 2016 இல் கட்சிக்கே தெரியாமல் தமிழ் மக்கள் பேரவை என்றோர் அமைப்பை உருவாக்கி யாழிலும், மட்டக்களப்பிலும் எழுக தமிழ் நிகழ்வை நடத்தி, தானே தமிழர்களின் தலைவர் என்று கூறினார். அவர் என்ன திட்டத்தோடு இருக்கின்றார் என்பதை அவரது இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாகப் புரிந்துகொண்டோம்.

கே: இந்தச் செயற்பாட்டின் ஊடாக அவர் தமிழர்களின் உணர்வைத் தூண்டி, இனவாதத்தைத் தூண்டி அவரது தனிப்பயணத் திட்டத்தைப் பூரணப்படுத்தியுள்ளார் அல்லவா?

ப: எல்லா இனங்களிலும் இனவாத, அடிப்படைவாத கடும்போக்குவாதக் குழுக்கள் உள்ளன. 2015 தேர்தலில் அந்தக் குழுதான் போட்டியிட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத்தான் ஆதரவு வழங்கினார். மக்கள் நிராகரித்துவிட்டனர்.
இடம்பெறும் முழுக் கடையடைப்புக்கள், ஆர்ப்பாட்டங்களை வைத்து தமிழர்கள் எந்தப் பக்கம் உள்ளார்கள் என்று தீர்மானிக்க முடியாது. பல்வேறு காரணங்களால் அவை இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளையே இனவாதிகள் அதிகம் விரும்புகின்றனர்.



கே: விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் தொடர்பில் கூட்டமைப்புக்குள் பேசப்பட்டதா?

ப: ஆம். கூட்டமைப்புக்குள் பொதுவான தீர்மானங்களை எடுக்கும் கட்சித் தலைவர்களின் ஒருங்கிணைப்புக் குழுவில் ஓகஸ்ட் மாதம் இது பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.

கே: விக்னேஸ்வரன் இவ்வாறு இனவாதத்தோடு செயற்படும்போது, நீங்கள் அவர்களை இனவாதிகள் என்று காட்டி சிங்கள மக்கள் மத்தியில் நல்ல பெயரை எடுப்பதற்கு முயற்சி செய்கிறீர்களா?

ப: அவர்கள் இனவாதத்தோடு செயற்படுகின்றார்கள் என்று நான் மட்டும் சொல்லவில்லையே. அவர்களின் செயற்பாடுகளைப் பார்க்கும் அனைவரும்தான் சொல்கிறார்கள்.

> "எல்லா இனங்களிலும், இனவாத, அடிப்படைவாத, கடும்போக்குவாதக் குழுக்கள் உள்ளன. 2015 தேர்தலில் அந்தக் குழுதான் போட்டியிட்டது. முதலமைச்சர் அவர்களுக்குத்தான் ஆதரவு வழங்கினார். மக்கள் நிராகரித்துவிட்டனர்."

**முதலமைச்சரைக் கட்சியில் இருந்து நீக்கிவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்**

கே: கூட்டமைப்பு இப்போது இவ்வாறு இரண்டாகப் பிளவுபட்டு நிற்பதற்கு காரணம் என்ன?

ப: கூட்டமைப்பு இரண்டாக உடையவில்லை. ஒன்றாகவே இருக்கின்றது. விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு சிலர் செயற்படுகின்றனர். விக்னேஸ்வரனைக் கட்சியில் இருந்து நீக்கிவிட்டால் எல்லாம் முடிந்துவிடும். கூட்டமைப்பு ஒன்றுபட்டு நிற்கும். கூட்டமைப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் விக்னேஸ்வரன் பிழையான நிலைப்பாட்டில் உள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதை அடிப்படையாக வைத்து அவரைக் கட்சியைவிட்டு நீக்குவது தவறு என்ற நிலைப்பாட்டிலும் அந்தத் தலைவர்கள் உள்ளனர்.

கே: தெற்கில் இருந்து பார்க்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையான கட்சியாகவும், ஊழல் மோசடியற்ற கட்சியாகவும் இதுவரை தெரிந்தது. ஆனால், இப்போது அந்தக் கட்சியும் தெற்கில் உள்ள கட்சிகள்போல் பிளவையும் ஊழல் மோசடியையும் கொண்டுள்ளதே. இதற்குக் காரணம் என்ன?

ப: அதிகாரம் கிடைத்தவுடன் வந்து ஒட்டுகின்ற விடயம்தான் இந்தப் பிளவும், ஊழல் மோசடியும். அது வருவதை நிறுத்த முடியாது. வந்தால் அதற்குச் சரியாக முகம் கொடுக்க வேண்டும்; வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அதன்படியே செயற்படுகின்றோம்.

கே: வட மாகாண சபையின் தற்போதைய பிரச்சினையைக் காரணமாக வைத்து, தாம் முதலமைச்சராக வேண்டும் என்ற கனவில் அவைத் தலைவர் எள் சிவஞானம் உள்ளாரா?

ப: அதை என்னால் சொல்ல முடியாது. பலபேருக்கு அந்தப் பதவிமீது விருப்பம் இருக்கக் கூடும். அது தவறல்ல. ஆனால் அதை அடைவதற்காக அவர்கள் தவறான வழிகளைக் கையாண்டால்தான் பிரச்சினை வரும்.

கே: இந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகின்றபோதிலும், நீறு பூத்த நெருப்பாகவே அது இருப்பதாகத் தெரிகின்றது. மீண்டும் பிரச்சினை ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டு அல்லவா?

ப: நிச்சயமாகப் பிரச்சினை ஏற்படும். ஊழல் மோசடி விசாரணை என்பது சட்டரீதியான ஒன்றாக இருக்க வேண்டும். அதை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். முதலமைச்சருக்கு எதிராகவும் 41 குற்றச்சாட்டுக்கள் உள்ளன. குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்களைக் கட்டாய விடுமுறையில் அனுப்புவதற்கு முயற்சி செய்தமை மற்றும் ஐந்து அமைச்சுக்களைத்தான் பொறுப்பேற்கப் போவதாகக் கூறியமை ஆகிய இரண்டையும் சேர்த்தால் குற்றச்சாட்டுக்கள் 43ஆக அதிகரிக்கும்.

கே: வடக்குக்கும் தெற்கிற்கும் இடையில் உறவுப் பாலமொன்றை அமைப்பதற்கு நீங்களும் சம்பந்தனும் எடுத்த நடவடிக்கைகளுக்கு விக்கி தடையாக இருந்தார் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?


ப: ஆம். ஏற்றுக்கொள்கிறேன்.

**தமக்கெதிராகக் கொழும்பில் சதி என்ற முதலமைச்சரின் குற்றச்சாட்டின் அடிப்படை**

கே: கொழும்பில் இருந்து தனக்கு எதிராக சதி செய்யப்படுகின்றது என்று விக்கி கூறியதன் காரணம் என்ன?

ப: விக்கியின் முதலமைச்சர் பதவி இன்னம் ஒருசில நாட்களுக்குத்தான் இருக்கும் என்று யாழ்ப்பாணத்துக்குச் சென்ற சரத் பொன்சேகா கூறினாராம். விக்கி குறிப்பிட்டது அரசு பக்கம் இருந்து சதி செய்யப்படுகின்றது என்றுதான். அது எப்படிச் சாத்தியம் என்ற சந்தேகம் எனக்குண்டு. சிறிலங்கா சுதந்திர கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அங்கஜன், ஐ.தே.க பக்கத்தில் மனோகணேசன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் ஆதரவு முதலமைச்சருக்கு உண்டு. அப்படி இருக்கும்போது எப்படி கொழும்பில் இருந்து சதி செய்யப்படுகின்றது என்று ஏன் சொல்கிறாரோ தெரியவில்லை.

*(நாளை தொடரும்)*



## ஆசிரியருக்கான கடிதம்

### காலனை வரவழைக்கும் கடவைகள் கவனம்

ஒரு நோயாளர் காவு வண்டி, ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர், ஒரு குழந்தையின் அவலம், ஒரு தீயணைப்புக்கான அவசர அழைப்பு, கள்வனைப் பிடித்தல் என்பவை போன்ற ஒரு அவசிய அவசர வேலையின் நிமித்தம், புகையிரதக் கடவையை அண்மித்து புகையிரதம் வரும் நிலையிலும், தடுப்புக்கடவையைக் கடந்து விட வேண்டும் என்று அவசரப்படுவதில் ஓரளவு நீதி நியாயம் இருக்கக் கூடும். ஆயினும் புகைவண்டிக்கு இதயமோ இரக்கமோ இல்லையென்று எல்லோருக்கும் தெரிந்தும் கடவைக்கு அண்மித்து புகையிரதம் வர முன்பும், வந்து கொண்டு இருக்கும் போதும் முண்டியடித்துக் கொண்டு போக அந்தரப்படுவதும், அவசரப்படுவதும், மோதுப் படுவதும், முட்டுப்படுவதும் முனைப்புக் காட்டுவதும் ஏற்கத் தகுந்த செயல்கள் அல்ல.

சரியாக மாலை 6.30 மணிக்குத் தபால் புகையிரதம் கடக்கும் புகையிரதக் கடவையொன்றில் மூன்று நாள்கள் இந்த அவலத்தை அவதானிப்பதற்காக தூரவாக நின்று சங்கடப்பட்டேன். மோட்டார் சைக்கிள்கள், சாதாரண சைக்கிள்கள், கார்கள், ஆட்டோக்கள், பாதசாரிகள், குஞ்சுகள், குமருகள், முதியவர்கள், சோடிகள் எனக் கடவையைக் கடப்பதற்காகத் தங்களை விண் கூவும் வகையில் பாய்ந்து செல்ல எத்தனித்த வண்ணம் அந்தப் படலைகளோடு முத்தமிட்ட வண்ணம் முனைப்பட்டு நின்றனர்.

நானோ பின் வாங்கிய வண்ணம் ஐம்பது மீற்றருக்கு அப்பால் நின்று கொண்டு என் வாய்க்குள் முணுமுணுத்தேன். என்னை ஒரு பைத்தியக்காரர் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். அறுபதுகளுக்கு இனி மதிப்பில்லைதான். என்னதான் இவர்களுக்கு அப்படி அவசரம்? கொஞ்சம் ஆற அமர இரண்டு மூன்று நிமிசங்கள் நின்று நிதானித்துப் போகக் கூடாதா? எங்கேயோ நிற்கின்ற காலனை வலிந்து கூப்பிட்டுக் கடவையில் விருந்துக்கு அழைப்பது ஒரு போதும் ஆகாதப்பா.

– கருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'சாறு' சமூக அரசியல் பேசும் திரைப்படம்

சி.ப.வேந்தன்

"சினிமாஎன்கிறகலையை அதன்பல்வேறுஅம்சங்களோடு ரசிக்கும் நடைமுறைகூட இன்னும்பரவலாகவில்லை. நட்சத்திரங்களின் தனித்தன்மையை, நடிப்பை, புதிதுபுதிதாய் அவர்கள் அறிமுகப்படுத்துகின்றபாணிகளைவியந்து. விதந்து திரிபவர்களாகவே எமது விடலைகள் இப்போதும் இருக்கிறார்கள். ஒரு திரைப்படம் தருகின்ற முழுமொத்த அனுபவம்பற்றிப்பேசுகிறவர்கள்(தமிழில்) மிகக் குறைவு. அப்படியான திரைப்படங்களும் அபூர்வமாகவே வருவதால் தமிழ் ரசிகர்களை மட்டும் ஏகமாகக் குற்றம் சொல்லிவிட முடியாதுதான்" - நேசன் (நமது திரைப்படரசனை அன்றுமுதல் இன்றுவரை - வெளிச்சம், பங்குனி 24)

மேலே குறிப்பிட்டது போன்றுதான் அபூர்வமாகச்சிலதிரைப்படங்கள்வந்து விடுவதுண்டு. ஈழத்தமிழ்சினிமாஎழுவதும் விழுவதுமாக மாறிமாறி வளர்நிலையை அடைந்துகொண்டிருப்பதுவழமை. ஆனாலும்அதுதனக்குக்கிடைக்கும்சந்தர்ப்பங்களில்பலவகையிலும் பரீட்சார்த்தங்களை நிகழ்த்தி விடத் தவறுவதில்லை. அவற்றுள்சில விவாதங்களை உண்டாக்கிவிடும் தன்மையையும் கொண்டமைந்துவிடுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் 'சாறு' குறுந்திரைப்படம்.

குழந்தைச்சினிமா வரிசையில் அவர்கள் மனவியல்பைப்பேசும்திரைப்படமாகஇது உருவாக்கப்பட்டாலும், அதிலிருந்துவேறுபட்டு நோக்கத்தக்க நிலையிலேயே இது காணப்படுகிறது. ஜெலாகன், நிசானுஜா,





செல்லர் கணேசு, பி.மணிமேகலை, ல. சபிக்மன், ஐ.சானுகா, ஜெ.வினுசா, சி.டிலக்சன், சி.றொசின்ரன், இ.அடெம்ஸ் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இசையமைத்திருக்கிறார்பி.பிரசாத். கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு, இயக்கம்ரி. மயூரன்.

**கதையின் சாறு**

தாய் ஏதோ ஒரு காரணத்தால் (அநேகமாகப் போர்) இறந்துவிட வாய்பேசமுடியாத தந்தையுடன்;ஒருவாடகைவீட்டில்வசித்து வருகிறாள் கதை நாயகியான சிறுமி. (08 தொடக்கம் பத்துவயது இருக்கலாம்). ஒரு நாள்வீட்டின்மேற்பார்வையாளர்திடீரென வந்து வீட்டை விட்டுச்செல்லும்படி தகராறு செய்து அவர்களது பொருட்களை எல்லாம் தூக்கி வெளியில் எறிந்துவிட, செய்வதறியாது அவர்கள் தமது சொந்த வீட்டுக்குச் செல்கிறார்கள். இன்னும் முறையான பாதுகாப்புக்கு உட்படுத்தாத(கண்ணிவெடிப்பிரதேசம்) பிரதேசத்திலிருக்கும் அந்த வீட்டில்இருவரும்குடியேறுகிறார்கள்.

ஒருநாள் சிறுமி வீட்டின் வாசலருகே அமர்ந்திருக்க அவர்களது வீட்டைக்கடந்து செல்லும் நான்கைந்து சிறுவர்கள் இவளைப்பார்த்துக் கொண்டே பாடசாலைக்குச்செல்கின்றனர். பாடசாலைவிட்டு வரும்போது எல்லோரும் பொதிசெய்யப்பட்ட பழச்சாற்றினைக்(யூஸ்)குடித்தவாறு இவளின்முன்வந்துநிற்கிறார்கள். அதனைப் பார்த்த அவளுக்கு வாயூறுகிறது. தானும்பழச்சாறு குடிக்கஆசைப்படுகிறாள். சிறுவர்கள் சென்றபின்னர் அவர்கள் வீசிவிட்டு சென்ற வெற்றுப்பைக் கற்றை எடுத்து அதனுள் தண்ணீரைவிட்டுப் பழச்சாறு குடிப்பதைப்போல குடிக்கிறாள்.

மறுநாளும் வழக்கம் போல அவ்வழியே செல்லும் சிறுவர்கள் அவளை வெறுப்பேற்ற அவளின்முன் நின்று பழச்சாற்றுப் பைக்கற்றை உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிறார்கள். சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்த சிறுமி தானும் தன்னிடமுள்ளதண்ணீர்நிரப்பியசாற்றுப் பைக்கற்றைஅவர்கள்போலவேகுடித்துக் காட்டுகிறாள். இதனைப்பார்த்தசிறுவர்கள் வேதனையுடன் தங்களது செயலுக்கு வருந்தியவாறு தம்மிடமுள்ள ஒரு பழச்சாற்றை அவளிடம் கொடுக்கிறார்கள்.

மற்றொருநாள் அவர்கள் வரும்போது தானும் சீருடையை உடுத்திக் கொண்டு அவர்களுடன் பாடசாலைக்குச் செல்கிறாள் சிறுமி. சைக்கிள் திருத்தும் வேலைசெய்யும்தகப்பன்வேலைமுடிந்து வீடு திரும்பிவந்து வீட்டில் மகளைக் காணாது தேடித்தேடி களைத்துப்போய் அழுதுகொண்டிருக்கும்போதுபாடசாலை விட்டுவீடுதிரும்பியமகளைக்கண்டவுடன் சந்தோசப்படுகிறான். "இந்தப் பிஞ்சு இதயங்களில் துளிர்க்கின்ற ஈரத்தில் கொதிக்கின்ற குருதி ஆறி தொடரப்போகும் பயணங்கள் புதிய விடியலை நோக்கி" எனும் வாசகத்தோடு படம் நிறைவடைகிறது.

**வாழ்க்கைமுறையும் வர்க்க அரசியலும்**

இயலாமையும் இல்லாமையும் எப்படி மனித வாழ்க்கையைச் சீரழித்துப்போடுகின்றனஎன்பதைப்பேசுகிறதுபடம். வெறுமனே குழந்தைகளின் உணர்வுகளைப் பேசுகின்ற ஒரு சினிமாவாக இதனை அணுக முடியாது. சமூக ஏற்றத் தாழ்வுகளோடானஅரசியலைமுன்வைக்கும்ஒரு சினிமாவாகஇதைநோக்கவேண்டியிருக்கிறது. போர் என்பதன் நேரடித்தாக்கத்திலிருந்துவிடுபட்ட எம்மால்அதன் பின்னரும் போரின் பெயராலும் சமூக வாழ்வியல் மாற்றுமுறைமைகளாலும்சுற்றிக்கொண்டிருக்கும்தாக்கத்திலருந்து விடுபட முடியாத துள்ளதை அப்படியே அப்பட்டமாகக் காட்டுகிறது. சாறு.

அதுமட்டுமன்றிமாறிப்போனஎமதுவாழ்க்கைமுறையைப்பெரியவர்கள்மூலமாகச் சாடும் அதேவேளை எதிர்காலத்தில் மாறப்போகின்ற வாழ்வுமுறையைச் சிறுவர்கள் மூலம் காட்டி நம்பிக்கையளிக்கிறது. ஒருவருக்கொருவர்விட்டுக்கொடுத்து உதவிபுரிந்து வந்தஎமது இனம்சுயநலங்களால் சூழப்பட்டு 'நான்' என்றும் எனக்கென்றும் வாழும் போக்குக்கு மாறிவிட்டிருக்கின்றது.

பொய்யாக வீட்டைவிட்டு எழும்பச்சொல்லும்வீட்டின்பாதுகாவலர்கள்அடுத்தநொடியேஅதனைவாடகைக்குவிடமுயற்சிக்கும் காட்சி வர்க்க வேறுபாட்டையும் சுயநலப் போக்கையும் முன்வைக்கும் காட்சி எனலாம். எனவேதான் இதை சமூக, வர்க்க, அரசியல் சினிமாவாக அணுக முடிகிறது. வீட்டின்பொருட்களை வெளியில் தூக்கிப்போட்டுக் கலைக்கும் அளவுக்கு மனித மனங்களில்குரோதமும்சுயநலமும் வளர்ந்துவிட்டிருப்பது காலக் கொடுமையின் உச்சம். இருப்பவர்கள்,இல்லாதவர்கள்எனும்வர்க்கவேறுபாட்டைக் காட்டுவதற்கு, காற்றடித்து விட்டுக்காசைஎறிந்துவிட்டுப்போகும் மனிதர்களின் அதியுச்ச அநாகரிகத்தின் செயலைக் குறியீடாக்கிப் படமாக்கியிருக்கிறார் இயக்குநர்.

**குறியீடுகள் காட்டும் உண்மைகள்**

இவைமாத்திரமன்றிஇவர்களின்பயணத்தின் வழியே பட்டமரம், முள்ளுமரம், உடைந்த கற்கள் என்பவற்றைக் காட்டுவது, சிறுமியின் மனவிருப்பைக் காட்டுவதற்குப்புத்தகத்தில்இருக்கும்மாணவியின் ஓவியத்தைத் தடவுவது, வாழ்க்கை ஒரு ஊனப்பணயம் என்பதைச் சொல்ல வழியில்கையில்காயத்துடன்நடந்துசெல்லும் மனிதன், சிறுமியன்தனிமையைக்காட்ட கொக்கான் வெட்டும் விளையாட்டைத் தேரந்தெடுத்தமை, பன்னாடுகளின் கையாலாகாத்தன்மையைக்குறிக்கஅடிக்கடி யுனிசெப் நிறுவனத்தின் நிவாரணப் பொருட்களூடே அவர்களது அடையாளத்தைக்காட்டுதல்எனப்படம்முழுதும்குறியீடுகள் பேசுகின்றன.

இனவிடுதலை இறந்துவிட்டது என்பதை இறந்துபோனமனைவியின்புகைப்படத்திலும், தமிழினம் மௌனித்துவிட்டது என்பதை ஊமைப்பாத்திரத்தின் மூலமும், வன்முறைகளுக்குள் வாழப்பழகிவிட்டதை வாடகைவீட்டுப் பிரச்சினை மூலமும், இனிவரும்எதிர்காலம்அடுத்ததலைமுறையினரிடம் உள்ளது என்பதைப் பழச்சாற்றுப் பகிர்வின் மூலமும் மிக அழகாக இன்றைய சமூக வாழ்நிலை அரசியலை முன்வைக்கிறது 'சாறு'. குறைந்தளவு உரையாடல், பாத்திர வார்ப்பு, ஒப்பனை, ஒளிப்பதிவுபோன்றனதிருப்திஅளிக்கின்றன. இசைக்கான இடைவெளி நிறையவே இருக்கிறது. வலிந்து செருகப்பட்ட பாடல் துருத்திக்கொண்டிருக்கிறது. பெரியவர்களின் நடிப்பைவிடச் சிறுவர்களின் யதார்த்தம் இரசிக்க வைக்கின்றது. நாயகியின் முகத்தில் இருக்கும் சோகமும் சாந்தமும் அவளது பாத்திரத்தை உயிர்ப்பூட்டி கதையோடு நகர்வது அழகு. முடிந்துபோன போர்முடிந்துபோகாதபலவற்றைக்குறித்த ஒரு இனத்தின்மீது சுமத்திவிட்டுப்போயிருக்கிறது. ஆனாலும் இவைபற்றி யாரும் சிந்திக்கவோ அதற்கான மாற்றுக்களை நோக்கிநகரவோஎந்தவிதமானஏற்பாடுகளையும் செய்யாது கடந்துபோய்கொண்டிருக்கிறோம். அங்கொன்றும்இங்கொன்றுமாகத் தமக்குக் கிடைத்த எல்லைவரைப் பயணித்துப் பிரச்சினைகளையும் அவற்றுக்கானதீர்வுமுன்மாதிரிகளையும்படைப்பாளிகள் தமது வடிவங்களூடே பேசிக் கொண்டிருக்கிறார்கள். 'சாறு' படத்தில் காட்டியிருப்பதுபோல பழச்சாற்றுப்பையினுள் வெறும்பச்சைத்தண்ணீரைவிட்டுத் தான் பலர் குடித்துக்கொண்டிருக்கிறோம். சிலர் தெரிந்தும் சிலர் தெரியாமலும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகளாக அப்பாவி நோயாளர்

## மருத்துவர்களின் செயலை சாடுகிறார் அமைச்சர் துமிந்த



கொழும்பு, ஜூலை 3
அப்பாவி நோயார்களைப் பணயக் கைதிகளைப் போன்று பயன்படுத்தியே அரச மருத்துவ அதிகாரிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர் என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசால் முன்மொழியப்படும் யோசனையை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு மாற்றுவழி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்குக் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.
நல்ல விடயங்களைச் சிறந்த முறையில் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார்.
இவ்வாறான ஓர் அணுகுமுறை வெறுக்கத்தக்கது. பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காண்பதற்கு அரசு கதவுகளைத் திறந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

## பெரும் பணிப்புறக்கணிப்புக்கு தயாராகிறது மருத்துவர் சங்கம்

### அரச மற்றும் அரசசார்பற்ற தொழிற்சங்களுடன் தீவிர பேச்சு

கொழும்பு, ஜூலை 2
சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை பொதுவுடமையாக்குமாறு கோரி அடுத்த வாரம் பல்வேறு தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்துக் கொண்டு பெரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது.
இதற்காக அரச சார்ப்புடைய மற்றும் அரச சார்பற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை பொதுவுடமையாக்குமாறு கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல மாதங்களாகத் தொடச்சியாகப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.
இதன் ஒரு கட்டமாக அண்மையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சை முற்றுகையிட முனைந்தபோது பொலிஸார் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.
இதனையடுத்து சைட்டம் விவகாரம் பூதாகரமாக வெடித்தது. மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு உரித்தான நெவில் பெர்ணாண்டோ வைத்தியசாலை அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன், சைட்டத்தின் நிர்வாகத்தை விரிவாக்குவது தொடர்பில் அரசு கலந்துரையாடிய வருகின்றது.
மேற்படி கலந்துரையாடல்களின் பின்னர் அரச தலைவர் தலைமையில் கூடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு கூடி நாட்டில் பெரும் போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது.
இந்நிலையில், அடுத்தவாரம் அரச மற்றும் அரச சார்பற்ற பல்வேறு தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்துப் பெரும் போராட்டத்தை முன்னெடுக்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.
கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின்போது தனியார் மற்று ரயில் தொழிற்சங்கங்கள் உட்பட நாட்டின் பிரதான 30 இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் கைகோர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## உதயங்க வீரதுங்கவின் கடவுச்சீட்டுக்குத் தடை

கொழும்பு, ஜூலை 3
இலங்கை அரசால் தேடப்பட்டுவரும் முன்னாள் அரச தலைவரின் உறவினரும், ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர மற்றும் சாதாரண கடவுச்சீட்டுகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள உதயங்க பன்னாட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வருகின்ற நிலையிலேயே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மிக் விமான கொடுக்கல் வாங்கல் உள்ளிட்ட பெரும் நிதிமோசடி தொடர்பாக நிதிக் குற்றப் பிரிவினால் தேடப்பட்டுவரும் உதயங்க வீரதுங்க, விசாரணைகளுக்குச் சமுகமளிக்காமல் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாக நிதிக் குற்றப் புலனாய்வுப்பிரிவு அறிவித்துள்ளது.
அவர் பதுங்கி இருக்கக்கூடுமெனச் சந்தேகிக்கும் இடங்களைப் பல தடவைகள் பன்னாட்டுப் பொலிஸார் சோதனையிட்டபோதும் அவர் அந்த இடங்களைவிட்டுத் தப்பியோடி நாட்டுக்கு நாடு மறைந்து திரிவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. (த)

## மின்சார கட்டணத்தை உயர்த்தாது அரசு

### தொழிற்சங்கங்களுக்கு அமைச்சர் உறுதிமொழி

கொழும்பு, ஜூலை 3
எவ்வித பிரச்சினைகள் வந்தாலும் பொதுமக்களின் மீது மேலதிக சுமைகளை ஏற்றும் விதத்தில் தற்போதுள்ள மின்கட்டணத்தை உயர்த்துவதற்கான நோக்கம் அரசுக்குக் கிடையாதென மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
மின்கட்டணத்தை உயர்த்தும் நோக்கம் இருக்குமானால் அதைப் பகிரங்கமாக அறிவிக்குமாறு இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் அமைச்சருக்கு அனுப்பியிருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ருவன்வெல்ல ரணசிங்க வித்தியாலயத்தில் நடந்த வைபவமொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் சியம்பலாப்பிட்டிய, நாட்டின் ஒருபகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ள போது மற்றொரு பகுதி கடுமையான வறட்சியில் அல்லல்படுவதாகவும், நீர்மின்சாரத்துக்கான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் திருப்தியாக இல்லாததால் மின்னுற்பத்திக்குப் பெருமளவு எரிபொருள் செலவு செய்யப்படுவதாகவும், எவ்வாறாயினும் தற்போதைக்கு மின் கட்டணங்களை உயர்த்தும் நோக்கம் அரசுக்குக் கிடையாதெனவும் தெரிவித்தார். (த)

## அமெரிக்க டொலர்களை அச்சிடும் இடம் சிக்கியது

### சந்தேகத்தில் மூவர் கைது

பதுளை, தியத்தலாவைப் பிரதேசத்தில் இயங்கி வந்த போலியான அமெரிக்க டொலர்களை அச்சிடும் இடம் ஒன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், நேற்று முன் தினம் காலை இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றிவளைப்பின்போது அங்கிருந்த மூன்று சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கறுப்பு நிறக் கடதாசியில் அச்சிட்டப் பின்னர், இரசாயனம் ஒன்றைச் சேர்த்தும் அது டொலராக மாறும் எனச் சந்தேக நபர்கள் கூறியுள்ளனர். போலி டொலர்களை அச்சிடும் இடத்தில் இருந்து 5 ஆயிரத்து 200 காகிதங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (த)

## இஸ்ரேல் செல்லும் இலங்கையர் பொறுப்புடன் நடக்கவேண்டும்

### வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் அறிவுரை

கொழும்பு, ஜூலை 3
இஸ்ரேலில் தொழில் வாய்ப்பு பெற்றுச்செல்லும் இலங்கையர்கள் மிகவும் பொறுப்புடனும், நம்பிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் திருமதி தலதா அத்துகோரள அறிவுரை வழங்கியுள்ளார்.
இஸ்ரேலில் தொழில் வாய்ப்பு பெற்றுச்செல்லும் 38 இலங்கையர்களுக்கு விமான பயணச் சீட்டுக்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இந்த அறிவுரையை வழங்கினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இஸ்ரேலின் விவசாயத் துறையில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. 2015இல் 85ஆக இருந்த வேலை வாய்ப்புகள் 2016 இல் 369ஆகவும், 2017 இன் ஆறு மாத காலப்பகுதியில் 4,239 ஆகவும் அதிகரித்துள்ளன.
இந்தச் சந்தர்ப்பம் தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால் அங்கு தொழிலுக்குச் செல்பவர்கள் பொறுப்புடனும், நம்பிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் நாடு திரும்பவேண்டும். அவ்வாறு செய்தால் மீண்டும் அங்கு செல்ல வாய்ப்புகள் கிடைக்கும் - என்றார். (த)

## நல்லிணக்கப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 2
ஆசிரியர்களையும், மாணவர்களையும் சமாதானத் தூதுவர்களாகவும் அறிவுரை வழங்குவோர்களாகவும் மாற்றுவதன் ஊடாக நல்லிணக்கத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கும் நோக்குடன், நல்லிணக்க நட்புத் தன்மை கொண்ட பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வு தொடர்பில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அனுப்பிவைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் 700 இற்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.
இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் கட்சிசன் கலந்து கொண்டார். ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்குமான இராஜாங்க அமைச்சர் பௌசி, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, ஐக்கிய நாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி டிம் சுட்டான், ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, இந்துக் கல்லூரி அதிபர் பரமேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.
ஆற்றுப்படுத்தல், இழப்பீடு, நிலைமாற்றல் நீதி, மீண்டும் நடைபெறாமல் தடுப்பதற்கான ஒழுங்குகள் ஆகியவை நல்லிணக்கச் செயற்பாடுகளின் முக்கிய அம்சங்களாகும் என்று மாணவர்களினாலும் பங்குபற்றியவர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது. மதவாதம், இனவாதம், பிரதேசவாதம், நிறவாதம் மற்றும் பொருளாதார சமமின்மை என்பன தேசிய ஒருமைப்பாடு, சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நம்பிக்கையின்மை, புரிந்துணர்வின்மை, வெறுப்புணர்வுகள் சமூகங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுததுவ்தற்குக் காரணமாக அமைந்துள்ளன. குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் இலாபம் தேடுபவர்கள் வெறுப்பான பேச்சுகள் மூலம் இன, மத நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவித்துள்ளனர்.
நல்லிணக்க நட்புத்தன்மை கொண்ட பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மாணவர்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி நம்பிக்கையைக்கட்டியெழுப்பி, புரிந்துணர்வை ஏற்படுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே இவ்விழிப்புணர்வின் நோக்கமாகும் என்று தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். பாடசாலை ஒன்றுகூடல் நிகழ்வுகளில் நல்லிணக்கப் பிரகடனம் உள்வாங்கப்படுவதுடன் இந்த நிகழ்வுகளைப் பாடசாலைகளில் நிறுவனமயமாக்குவதற்குப் பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் முன்மொழிந்தனர். ஆஸ்திரேலியத் தூதுவர் ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களின் நல்லிணக்கச் செய்முறையின் கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பான வெற்றிகளை வெளிப்படுத்தினார் என்று அந்தப் பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காக்கும் குருதிக் கொடை



குருதி வகைகள் தொடர்பான கருத்தியலை வரலாற்றில் முதன் முதலில் பதிவு செய்த விஞ்ஞானி கார்ல் லான்ஸ்ரைனர் ஆவார். உலக சுகாதார நிறுவனம் இவருடைய பிறந்த தினத்தை அதாவது, ஆனிமாதம் பதினான்காம் திகதியை உலக குருதிக் கொடையாளர் தினமாக அறிவித்துள்ளதுடன் வருடம் தோறும் அத்தினத்தை உலக குருதிக் கொடையாளர் தினமாகக் கடைப்பிடித்தும் வருகின்றது.

அந்த வகையிலே நடப்பாண்டுக்கான குருதிக் கொடையாளர் தினம் குருதிக் கொடையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும்,குருதிக் கொடைசார் விழிப்புணர்வை மக்களிடையே வலியுறுத்தும் பொருட்டும் "குருதித்தானம் இன்றும் என்றும்" என்னும் தொனிப்பொருளின் கீழாக கடைப்பிடிக்கப்பட்டது.இந்த சந்தர்ப்பத்திலே குருதிக் கொடை பற்றி சிந்தித்தல் சாலப் பொருத்தமானதாகும்.

குருதி மாற்றீடு என்பது பல்வேறு நோய் நிலைகளிலிருந்து ஓர் நோயாளியைப் பாதுகாப்பதற்கான சிகிச்சை முறையாகக் காணப்படுகின்றது. வீதி விபத்துக்கள் மற்றும் சத்திர சிகிச்சையின் போது குருதியிழப்பு ஏற்பட்டவர்கள் தீவிர குருதிச் சோகைக்கு உள்ளாகின்றனர்.அதன்போது குருதியின் தேவைப்பாடு அவசியமாகிறது. தவிர,மகப்பேற்றின் போதான குருதியிழப்பு,டெங்குக் குருதிப் பெருக்குக்கு எனப் பலவிதமான நோய் நிலைகளின் போதான சிகிச்சைகளுக்கும் இவை ஆதாரமாக அமைந்துள்ளன.குருதியும், குருதி உற்பத்திகளும் உயிர்காக்கும் மூலங்களாகவே உள்ளன. எனவே சிறந்ததொரு குருதிக் கொடையாளர் குழாமை எமது பிராந்திய குருதி வங்கி கொண்டிருத்தல் என்பது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது

> குருதி மாற்றீடு என்பது பல்வேறு நோய் நிலை களிலிருந்து ஓர் நோயாளியைப் பாது காப்பதற்கான . சிகிச்சை முறையாகக் காணப்படுகின்றது. வீதி விபத்துக்கள் மற்றும் சத்திர சிகிச்சையின் போது குருதியிழப்பு ஏற்பட்ட வர்கள் தீவிர குருதிச் சோகைக்கு உள்ளா கின்றனர்.அதன்போது குருதியின் தேவைப்பாடு அவசியமாகிறது.

### குருதிக் கொடை வழங்குதல்

குருதிக் கொடை செய்வோரினதும்,குருதி உள்ளீட்டுச் செயன்முறைக்கு உட்படு வோரினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு குருதிக் கொடை வழங்கும் நபர் பூர்த்தி செய்ய வேண்டியதான சில நிபந்தனைகள் பின்வருமாறு.

1. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும் அறுபது வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே குருதிக் கொடை வழங்கியவராயின் இறுதியாக குருதிக் கொடை வழங்கிய நாளிலிருந்து நான்கு மாத காலங்களை கடந்திருத்தல் வேண்டும்.
3. ஈமோக்குளோபின் அளவு (Haemoglobin)12g/dl இலும் அதிகமாக இருத்தல் வேண்டும்.
4. தீவிர நோய் நிலைகள் மற்றும் கர்ப்ப காலம் அல்லாதிருத்தல்.
5. தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தகுதி வாய்ந்த சான்றுப் பத்திரத்தை வைத்திருத்தல்.
6. குருதியால் பரவக்கூடியதான நோய்களை கொண்டிருப்பதற்கான அபாய நிலை அறிகுறிகளை கொண்டிராது இருத்தல்.

### குருதிக் கொடை செயன்முறைகள்

குருதிக் கொடை செய்ய விரும்புவோர் முதலில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பின்பு குருதிக் கொடை தொடர்பிலான அறிவூட்டல் செயற்பாடுகளுக்கு உள்ளாக வேண்டும். இதன் போது குருதிக் கொடை செய்யும் பொறிமுறை மற்றும் குருதி வழங்கலுக்கு முன்னதான வினாக்கொத்துக்களை முழுமைப்படுத்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து குருதிக் கொடையாளி குருதி வழங்கல் செயன்முறைக்குத் தகுதியானவரா என்பது உறுதி செய்யப்படும்.தகுதி வாய்ந்தவர் எனில் அவர் குருதி வழங்கல் செயன்முறைக்கு உட்படுத்தப்படுவார்.

குருதி வழங்க விருப்புடையவர்களுக்குப் பல்வேறு சந்தேகங்கள் உண்டாகலாம். குறிப்பாக எவ்வளவு குருதி அவர்களது உடலில் இருந்து எடுக்கப்படும் என்ற கேள்விகள் எழலாம்.உண்மையில் 450 மில்லி லீற்றர் (ml) அளவுடைய குருதியே உடலில் இருந்து வெளியே எடுக்கப்படுகின்றது. இது உடலில் உள்ள மொத்தக் குருதிக் கனவளவின் 10 வீதமானதாக காணப்படும். அத்துடன் இழக்கப்பட்ட குருதியானது 24 மணத்தியாலங்களினுள் உடலில் மீண்டும் பிரதியீடு செய்யப்பட்டு விடுகின்றன. எனவே குருதி இழப்பினால் பாதிப்புகள் ஏற்படும் என்ற அச்சம் தேவையற்றது.

ஆக,ஒருவர் வழங்கும் குருதியானது மூன்று உயிர்களைக் காக்கப் பயன்படுகின்றது. இலங்கையில் உள்ள பெரும்பாலான குருதிக் கொடையாளர்கள் தன்னார்வத் தொண்டர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வகையான குருதி வழங்குநர்களின் குருதி ஒப்பீட்டளவில் ஆரோக்கியமானதாகவும், பாதுகாப்பானதாகவும் கருதப்படுகின்றது.குருதிக் கொடை செய்வோம்.உயிர்களைக் காப்போம்.




# நீரிழிவு நோயாளர்களும் பாதப் பராமரிப்பும்



### 1. நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட பாத பராமரிப்பின் தேவைப்பாடு

- நீரிழிவு நோயாளர்களின் பாதங்களுக்கான குருதியோட்டம் குறைவாக இடம்பெறுவதால் சிறுகாயம் ஏற்பட்டாலும் கூட அவை மாறாத நிலமை ஏற்படலாம்.
- நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதால் பாதங்கள் மரத்துப் போகின்றன. பாதங்களில் ஏற்படும் காயங்கள் தொடர்பில் உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

### 2. பாதங்களின் உணர்திறன் குறைவதால் ஏற்படுகின்ற பாதிப்புகள்

- காலில் வெட்டுக் காயங்களும் கீறல் காயங்களும் ஏற்படுதல்
- கொப்புளம்
- சேற்றுப்புண்
- எரிகாயம், பாதங்களின் தேவையற்றதான இடங்களிலும் காயங்கள் ஏற்படுதல்
- நகம் வெட்டும் போது தோலில் வெட்டுக்காயம், கீறல் ஏற்படுதல்

### 3. நீரிழிவு நோயாளர் ஒருவரின் பாதங்களில் காயம் ஏற்படுத்தும் பாதக நிலமைகள்

- காயம் ஏற்பட்ட பகுதிக்கான குருதி விநியோகம் முற்றாக இடம்பெறாமையினால் காயம் ஏற்பட்டுள்ள பகுதியில் திசுக்கள் உயிரிழக்க ஆரம்பிக்கும்.



- உயிரிழந்த திசுக்களை மீளச் செயற்பட வைக்க முடியாது என்பதால் அவை சீரடையக் கால தாமதமாகும்.
- உயிரிழந்த திசுக்கள் காணப்படும் பகுதியை வெட்டி நீக்க வேண்டிய தேவை ஏற்படலாம்

### 4. நீரிழிவு நோயாளர்களின் பாதங்களைப் பாதுகாத்தல்

- இரு பாதங்களையும் தினமும் பரிசோதிக்கவும். விரல் இடைவெளிகள், பாதங்களின் அடிப்பகுதி ஆகியவற்றைப் பரிசோதிக்கவும். அவை தென்படாவிட்டால் கண்ணாடி முன்பாக வைத்து அல்லது மற்றுமொரு வரின் உதவியுடன் பரிசோதிக்கவும்.
- சருமத்தில் நிறமாற்றம், வீக்கம், பாதங்களில் ஆணி உண்டாதல், கொப்புளம், தழும்பு, காயம் அல்லது காயம் ஏற்படும் அறிகுறி ( சிவந்து காணப்படுதல்) காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும்.
- சிறு காயமாயினும் நன்றாகக் கழுவித் துப்புரவு செய்து வைத்தியரிடம் காட்டும் வரை சுத்தமான கோஸ் துணியால் அல்லது துணியால் மூடி விடவும். ஒரு போதும் இறுக்கமாகத் துணியை சுற்றவோ அல்லது பண்டேஜ் செய்யவோ கூடாது. அத்துடன் இறுக்கமாக பிளாஸ்டர் ஒட்டுவதையும் தவிர்க்கவும்.
- பாதங்களைத் துப்புரவான இளஞ் சுடுநீரில் அன்றாடம் கழுவவும். அதன் பின்னர் உலர விடவும். விரல் இடைவெளிகளில் நீர் தங்கியிருக்க இடமளிக்காதீர்கள்.
- பாதங்கள் காய்ந்து விடுவதை தடுப்பதற்காக தடவும் ஈரப்பதத்திலான தைலங்களை விரல் இடைவெளிகளில் தடவக்கூடாது. வெளிப்புறமாக மாத்திரம் பூசிக் கொள்ளலாம்.
- நகங்களை நீளமாக வளர விடக் கூடாது. நகங்களை குறுக்காக விரல்களுக்கு பாதுகாப்பாக வெட்டி நீக்கவும். நகங்களின் இரு முனைகளிலும் சதை உட்புறமாக அழுத்தப்படும் வகையில் நகம் வெட்டாதீர்கள்.
- காலணிகள் அல்லது செருப்பு இன்றி திறந்த வெளியில் நடப்பதைத் தவிர்க்கவும்.
- நீங்கள் காலுறை அணிகின்றவர் எனில் துப்புரவான பருத்தியினாலான காலுறைகள் அணிவதை பழக்கமாகக் கொள்ளவும்.
- நீங்கள் அன்றாடம் காலணி, காலுறை அணிகின்றவராக இருப்பின் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையேனும் அவற்றைக் கழற்றி பாதங்களை வெறுமனே வைத்திருப்பதற்கும் பழகிக் கொள்ளுங்கள்.
- அதிக சூடான மற்றும் அதிக குளிரான திறந்த வெளிகளில் காலணிகளின்றி நடப்பதை தவிர்க்கவும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் உங்களின் பாதங்கள் இரண்டையும் முகத்தைப் போன்று பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
02.07.2017



# முதலில் மனித உயிர்களைப் பாதுகாக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

## மாட்டைப் பிறகு பார்க்கலாம்!

தனஞ்செயன்

மதங்கள் தமக்கு ஒவ்வொன்றாகக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் போதிக்கின்றன. அவை அனைத்துமே ஒருபோதுமே ஒன்றுடன் ஒன்று இசைந்து செல்லும் தன்மையற்றன. அநேகமானவை நம்பிக்கைகளால் கட்டமைக்கபட்டவை. அவற்றின் தீவிரத் தன்மை மிகைப்படும்பட்சத்தில்கூட அவை நன்மை தருதலுக்கு அப்பால் சென்று மூடநம்பிக்கை என்னுமளவுக்கு விகாரமடைந்து நிற்கின்றன. இவற்றுக்கெல்லாம் அப்பால் சென்று மனிதனால் உருவாக்கப்பட்டதுதான் கடவுள். இதை அந்த மனிதர்களுக்குப் புரியவைப்பது என்பது சாத்தியமற்றஒன்று. மனிதர்களால் உருவாக்கப்பட்ட இந்த மதங்கள் அனைத்துமே அடிப்படையாக அன்பைப் போதிப்பனவாகவே துளிர்விட்டிருந்தன. ஆனால் இப்போதோ நிலைமை வேறாகி விட்டிருக்கிறது.



தற்கொலை செய்ய ஆசையா?



பக். 23

கள்ளும் கருவாடும்

பக். 23



இப்படியான போக்குடன் நீளும் இந்தப் படத்தின் கதையை விமர்சனத்துக்கு எடுப்பது என்பதே அந்தப் படத்துக்குக் கிடைத்த பாக்கியம்தான்.

???

பக். 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாருடைய உணவை யார் தீர்மானிப்பது? ஒரு தனிமனிதன் விரும்பி உண்ணும் உணவு அவனுடைய விருப்பு வெறுப்புக்களின்பாலும், அவனதுவருமானம், சூழல்போன்றவற்றாலும் தீர்மானிக்கப்படுகின்றன. தவிர இன்னொருவருடைய செல்வாக்கு அதில் எப்படித் திணிக்கப்படலாம்? அதுவும் மாட்டைக் கொல்லக்கூடாது என்று போதிப்பவர்கள் எப்படி மனிதரைக் கொல்ல முடியும்.

பின்னாள்களில் அவை அகங்காரங்களை வரித்துக்கொண்டு ஆளுக்கொரு கோணத்தில் கங்கணம் கட்டும் மனிதர்கள் போலாகிவிட்டன. ஆனாலும் அன்பு என்பதை ஒரே ஒரு கடவுளாகக் கொள்ளுமிடத்தாவது இந்த மதங்களை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம். எனினும் அதற்கு முற்றிலும் மாறாக மேற்கண்ட மனிதர்களிடம் ஏற்பட்டிருக்கும் இந்த 'மதப் பிடிப்பை' எப்படித்தான் நோக்குவது...?

**இந்தியாவில் நடந்த இஸ்லாமியரின் கொலை!**

இந்துக்களைப் பொறுத்தமட்டில் 'அன்பே சிவம்' என்பது வாக்கியம் மட்டிலாகவும் வாய்பேசமுடியாத உயிர்களைப் பலிகொடுப்பதென்பது செயல்முறை வடிவாகவும் தொடர்கின்றது. ஆனாலும் மறுபுறம் பசுவதை தடுப்போம் என்பதான குரல்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்துக்களுக்குப் பசு தெய்வம். அதற்கு ஒப்பானது என்றோ அதைவிட மேலானது என்றோ கொள்வோம். அதைக் கடைப்பிடிக்க வேண்டியது அவர்களின் கைகளில். அது அடுத்தவரின் வேலையல்ல. அடுத்தவர்கள் தமது மதம், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கைப் பண்பு, தமக்குரிய இன்னும் சகலதுக்கும் ஏற்றால்போல் நடந்துகொள்வார்களேயன்றி தமக்கு அப்பாற்பட்ட, வேறொரு மதத்தின் கொள்கையை, கடப்பாட்டைக் கருதிச் செயற்பட மாட்டார். அது அவரவர் உரிமை. அடுத்தவர்கள் மீது அவற்றைத் திணிப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. அத்தகைய கடும்போக்கு என்று கருதக்கூடிய மதம் பிடித்த செயல் ஒன்று அண்மையில் இந்தியாவில் நடைபெற்று முடிந்திருக்கின்றது.



© Shaikh Azizur Rahman

இந்தியாவின் டெல்லியில் மதுரா பயணிகள் தொடரூந்தில் சில நாள்களுக்கு முன்னர் இஸ்லாமிய மதத்தவர்கள் நால்வர் மீது ஒரு கும்பலால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அதில் இஸ்லாமியச் சிறுவன் ஜூனைத் கொல்லப்பட்டிருக்கின்றான். பட்டப்பகலில் பயணித்துக்கொண்டிருந்த தொடரூந்தில் நடந்திருக்கின்றது தாக்குதல். இஸ்லாமியர்களான அவர்கள் தம்முடைய றமழான் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக டெல்லி சென்று ஆடைகள், பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் நிகழ்ந்திருக்கின்றது. கூடவே பயணித்த இஸ்லாமியர்களும் பலத்த காயம் அடைந்திருந்தார்கள். தொடரூந்து பயணித்துக் கொண்டிருக்கையில் இடையே இருக்கின்ற தொடரூந்து நிறுத்தம் ஒன்றில் ஏறிய ஒரு கும்பல் குறித்த முஸ்லிம்கள் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்தி, தொடரூந்திலிருந்து சிறுவனைத் தூக்கி வீசியிருக்கிறது. இந்தக் கொலை தொடர்பாகக் கிடைக்கின்ற தகவல்களின் படி "இந்த மூவரும் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள்" என்பதாலேயே அவர்களைத் தாக்கியதாகக் கொலையாளிகள் கூறிக் கொள்கின்றார்களாம்! அத்துடன் அவர்கள் தாம் "பசுவதைக்கு எதிரானவர்கள்" என்றும் தமது பாதகச் செயலுக்கு ஒப்புக் கூறிக் கொள்கின்றார்களாம்.

**மனித உரிமைகளை மதவாதிகளுக்கும் போதிக்கவேண்டும்**

யாருடைய உணவை யார் தீர்மானிப்பது? ஒரு தனி மனிதன் விரும்பி உண்ணும் உணவு அவனுடைய விருப்பு வெறுப்புக்களின்பாலும், அவனது வருமானம், சூழல் போன்றவற்றாலுமே தீர்மானிக்கப்படுகின்றன. தவிர இன்னொருவருடைய செல்வாக்கு அதில் எப்படித் திணிக்கப்படலாம்? அதுவும் மாட்டைக் கொல்லக்கூடாது என்று போதிப்பவர்கள் எப்படி மனிதரைக் கொல்ல முடியும்? பசு வதை கூடாது என்பதை வாய் பேச முடியாத அந்த உயிர்கள் மீது கொண்ட ஜீவ காருண்யத்தால் போதிக்கின்றார்கள் என்று கூறுவது சரியா? அல்லது தமது கொள்கை, கோட்பாடே முன்னிலையானது, உயர்ந்தது என்பதன் நிமித்தம் செயற்படுகின்றார்கள் என்பது உண்மையா? உயிர்கள் மீது இவர்கள் அன்பு செலுத்துபவர்களாயின் அந்தச் சிறுவனை அடித்தே கொல்லத் துணிவார்களா...?



**பசுவதையுடன் எழுந்தனர் கடுமைவாதிகள்**

இந்தியா முழுவதுமாகக் கடந்தகாலத்தில் எழுந்த பசுவதை தடைசெய்யப்படும் சட்டம் நடைமுறைக்கிடப்படும் என்பதான அரச அறிவிப்புக்களின் நிமித்தத்தின் பொருட்டே இவ்வாறாக இந்து மேலாதிக்கவாதிகளும் உசுப்பேற்றப்பட்டுப்போய் நிற்கின்றனர். அதைச் சாட்டாகக் கொண்டு பல்வேறான கடும்போக்குக்களை ஏற்படுத்தவும் அவர்கள் விளைகின்றனர். ஏன் சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மக்களை அணுக வேண்டிய நமது உள்ளூர்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர்கூடத் தான் வரிந்து வைத்திருக்கும் இந்துக்கடும்போக்குடன் அதை அணுகி நாட்டில் இந்துக்களைத் தவிர வேறு மதத்தவர்கள் இல்லை என்னும் எண்ணத்திலும், தனது ஆசிரியர் தலையங்கத்தை வரைந்து அதைப் படித்த தனது கொள்கையின் வழி ஒழுகுபவர்கள் தவிர்ந்த பலரிடமும் பெரும் விசனப்பட்டிருந்தார். தனது அறிவளவில் இவர் ஆற்றிய காரியத்தை ஒத்ததே பின்னர், இப்படியாக இந்தியாவிலும் அரங்கேறியுள்ளது. இந்துக்களைப் பொறுத்தவரையில் பசு ஒரு விலங்கு மட்டும் அல்ல. அதற்கும் மேலான ஒரு இடத்தை அவர்களுடைய நம்பிக்கையில் பெற்றிருக்கிறது. ஆனால், நாடு என்பது பல மதங்களும் மனிதர்களும் கூடி வாழுவது. அதில் ஒருவர் நம்பிக்கைகளை ஏனையோர் மீது, திணிப்பது எப்படி நியாயம் ஆகும்? என்பது கவனிக்க வேண்டியது. அதைப் போன்றே ஒரு நாட்டின் கொள்கைகள், சட்டங்கள் அனைத்தும் அனைத்து மனிதர்களையும் கருத்தில் கொண்டு வரையப்படவேண்டும் என்பதும் முக்கியமானது. பசுவைக் கொல்லக்கூடாது என்று உரைக்கும் கருணையாளர்களால் மனிதர்களைக் கொல்ல எப்படி முடிந்தது? இதற்கு உரமிட்டிருப்பது மதமே. அதன் வழியில் இந்தியாவில் நிகழ்ந்த இது ஒரு வன்முறை.

எந்த வடிவில், எந்தக் கொள்கையின்பால் வந்தாலும் வன்முறை என்பது நியாயமற்றதே! ஒவ்வொரு மனிதனின் சுதந்திரமான, அமைதியான வாழ்வுக்கும் பொறுப்புடையதாகவே சட்டங்களும் கோட்பாடுகளும் கூடக் கொண்டுவரப்பட வேண்டும். தனது தேசத்தின் பிதா என்ற புகழுக்குரிய காந்தியையே கொல்லத்துணிந்த கடும்போக்குடையோர் நிறைந்த தேசத்தில் இத்தகைய கடும்போக்குகள் துளிர்ப்பது ஒன்றும் புதுமையல்ல. ஆனால், அயல்நாடான நமது தேசத்துக்குள்ளும் அந்த முளைகள் எப்போதும் முளைதிறனுடன்தான் இருக்கின்றன. அவற்றை நாம் முளைக்க விடலாமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரகாஸ்



# லிபியா
## அகதிகளின் தாயகம்

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஆயுதக் கலாசாரம், ஈராக், சிரியா ஆகியவற்றில் கடும் உக்கிரமாக நடைபெறும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்டேட்) அமைப்புக்கு எதிரான போர், ஆபிரிக்க நாடுகளில் நிலவும் வறுமை நிலை, சில ஆசிய நாடுகளில் உள்ள ஆயுதக் குழுக்கள் இவை அனைத்தின் காரணமாகவும் இந்த உலகம் அகதிகளை உற்பத்தி செய்யும் மிகப்பெரும் நிறுவனமாக மாறியுள்ளது. அதன் இயந்திரமாக உள்ளது லிபியாவே. லிபியாவைப் பொறுத்தவரை அது அகதிகளின் தாயமாக விளங்குகிறது.

**லிபியாவின் புவியியல் அமைப்பு**

அகதிகளாக ஐரோப்பாவுக்குச் செல்லும் மக்கள் கட்டாயமாகச் சந்தித்துச் செல்லும் நாடாக லிபியா உள்ளது. இதற்குக் காரணம் லிபியாவின் புவியியல் அமைவிடமே. ஐரோப்பாக் கண்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் இத்தாலி அமைந் துள்ளது. அதேநேரம் மத்திய கிழக்கு நாடுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கு அதாவது இத்தாலிக்கு மிக நெருக்கமான நாடாக லிபியாவே உள்ளது. இதனால் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குள் செல்ல விரும்பும் மக்கள் லிபியாவுக்கு வந்து அங்கிருந்தே பெரும் சவாலான மத்திய தரைக்கடலைத் தாண்டி ஐரோப்பாவுக்குள் நுழைகின்றனர்.

**லிபியாவில் இருந்து 25 லட்சம் அகதிகள்!**

அகதிகள் பிரச்சினை என்பது நூற்றாண்டு காலமாக இருந்து வந்தாலும், தற்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் அகதிகளின் அல்லல் பாடுகளுக்கு, அதாவது ஒரு வரையறுக்கப்பட்ட நிலத்தின் குடிகள் தாம் சார்ந்த இடத்தை விட்டு அகதிகளாக இன்னொரு நாட்டுக்குத் தஞ்சமடைவதற்குச் சில காரணங்களை முதன்மைப்படுத்திக் கொள்ளலாம். அவற்றில் முக்கியமானது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஈராக்கின் முக்கிய நகரான மோசூல், சிரியாவின் முக்கிய நகரான ரக்கா ஆகிவற்றையும் அது சார்ந்த வேறு சில நகர்களையும் கைப்பற்றி அந்த நிலங்களைத் தமது தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் அட்டூளியங்கள் சொல்லில் அடங்காதவை. அதேநேரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை உலக நாடுகள் கடும் முனைப்புடன் முன்னெடுக்கின்றன. ஐ.எஸ்ஸின் உருவாக்கம் அகதிகள் உருவாக்கத்துக்கும் வித்திட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை விடவும் இன்னும் பலகிளர்ச்சிக்குழுக்களுடனாகச் சிரியாவில் கடந்த ஆறு வருடங்களாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதைவிட ஏமனில் ஹௌதி ஆயுதக் குழுவும், அதை அண்மித்த சில நாடுகளில் அல் கொய்தா, அல் சபாப் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களும் செயற்பட்டு வருகின்றன. இவற்றை எல்லாம் பொதுமைப்படுத்தி ஆராய்ந்தால் ஆயுத கலாசாரம் அகதிகளின் தோற்றத்துக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது என்பது வெளிப்படும்.

ஆயுத கலாசாரத்துக்கு அடுத்தபடியாக வறட்சியும் அது சார்ந்து எழுந்திருக்கும் பிரச்சினைகளான பஞ்சம், உணவுத்தட்டுப்பாடு, பணவீக்கம், பொருளாதாரப் பின்னடைவு ஆகியனவும் அகதிகள் உருவாக்கத்தை அதிகப்படுத்தியுள்ளன. இவற்றுக்கு ஆபிரிக்கா நாடுகளை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த அடிப்படையிலேதான் லிபியாவில் இருந்து இதுவரை 25 இலட்சம் வரையான அகதிகள் இத்தாலியைச் சென்றடைந்துள்ளனர்.

**உயிரிழப்புக்கள் ஏராளம்**

ஆக்ரோசம் நிறைந்த மத்திய தரைக் கடலைக் கடந்து செல்லுதல் என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அதிலும் சாதாரண பிளாஸ்ரிக் படகுகளில் அரசுகளின் கண்ணில் படாமல் கடல் எல்லைகளைக் கடந்து செல்லுதல் என்பது உயிரைத் துச்சமாக எண்ணிச் செய்யும் செயல். மேற்குறிப்பிட்ட நெருக்குதல்களின் உச்சத்தால் தமது சொந்த நிலங்களில் இருந்தவாறு அன்றாடப் பொழுதைச் செலவிடுவதைப் பார்க்கிலும், வாழ்வா? சாவா? எனும் மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவுக்குள் புகுந்துவிடும் கடினமான சவாலைச் சந்திக்க மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகளின் மக்கள் பலரும் துணிகின்றனர். கடந்த 6வருடங்களில் மாத்திரம் சுமார் பத்தாயிரம் வரையான மக்கள் மத்தியதரைக்கடலின் இத்தகைய ஆபத்தான கடற்பயணங்களின் மூலம் உயிரிழந்திருக்கலாம் என்று அண்மைக்காலத் தகவல்கள் பலவும் சுட்டுகின்றன. ஆனாலும் அவர்களின் பயணங்கள் ஓய்ந்தபாடில்லை.

**ஒரே நாளில் 5,000 அகதிகள்**

நடப்பு வருடத்தில் பல்லாயிரக் கணக்கான அகதிகள் மத்திய தரைக் கடலில் மீட்கப்பட்டிருந்தாலும் கடந்த 27ஆம் திகதி ஒரே நாளில் 5 ஆயிரம் அகதிகள் இத்தாலி கடலோரக் காவல் படையினரால் மீட்கப்பட்டமையானது உலகையே அதிரவைக்கும் விடயமாகப் பதிவானது. ஆயுத கலாசாரம், வறட்சி என்பன மட்டும் அகதிகளின் தோற்றத்துக்குக் காரணங்களல்ல. ஆட்கடத்தல் காரர்களின் பொய்யான வாக்குறுதிகள், ஐரோப்பிய நாட்டுக்கு எப்பாடு பட்டாவது சென்றுவிடவேண்டும் எனும் அவா ஆகியவற்றையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

**இன்னும் அதிகரிக்கலாம்!**

அகதிகள் விவகாரம் இந்த வாரமோ அல்லது அடுத்த வாரமோ முடிவுக்கு வரப்போகும் ஒன்றல்ல. இன்னும் சொல்லப்போனால், எதிர்வரும் காலங்களில்தான் அகதிகளின் பெருக்கம் மிகையாக இருக்கப்போகிறது என்று எண்ணப்படுகின்றது. ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் மிகவும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இதுவரைக்கும் இரண்டு இலட்சம் மக்கள் சிக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவின் ரக்கா நகரிலும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் கடும் தாக்குதலை முன்னெடுக்கின்றன. இந்தப் போர்கள் முடிவுற்றால் அல்லது தொடர்ந்தால் அகதிகளின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரிக்கும். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. அது, இத்தாலி அகதிகளால் நிரம்பி வழியப்போகிறது என்பதே.

"சிரியாவின் ரக்கா நகரிலும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் கடும் தாக்குதலை முன்னெடுக்கின்றன. இந்தப் போர்கள் முடிவுற்றால் அல்லது தொடர்ந்தால் அகதிகளின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரிக்கும். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. அது, இத்தாலி அகதிகளால் நிரம்பி வழியப்போகிறது என்பதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடலின் அலைகள் வீசத் தொடங்கின...

இராம. இராகவா

02





## பண்டாரவன்னியன்

குளம்படியோசை
இன்னும்
சிறுநேரத்தில் என்
இறுமாப்பழகனை
அருகில் கொண்டுவந்துவிடும்

நினைப்புத்தான்
நிலவாய்க் கிடக்குது நெஞ்சில்
ஆங்காங்கு
கலைந்து போய்க் கிடந்த
முடிகளைச்
சீர்படுத்தினாள் நங்கை
நாச்சியின் பரி
தன்னினத்தைக் கண்ட மிதப்பில்...

பூமியில் புழுதி பறக்கச்
சடாரெனக் குதித்தான்
புரவியிலிருந்த வன்னியன்.
பட்டென்று விலகிப் போயிற்று
நாச்சியைச் சுற்றிய இருள்.
“என்ன குருவி...!
கோபமா...?”
கணீரென்ற குரலில்
காதல் கலந்து
காற்றில் கரைந்தது
பண்டாரவன்னியன் குரல்.
“குருவி...!
நாட்டு நிலையில் நலமில்லை.
என்னைக் கொல்ல
ஈட்டிகள் முளைத்துக் கொண்டன.
என் சொந்த ஈட்டிகள்”
இறுதி வார்த்தைகளில்
கவலை படர்ந்து கிடந்தது.
வன்னியனுக்கு..!

நாச்சியின் விழிகள்
மெல்ல உயர்ந்து
அவன் கண்களைக்
கௌவிக் கொண்டன.
“இந்தச் சந்திப்பும்
அரசியல்தானா...?”
கண்கள் காதலை அள்ளிக்
கோபத்தோடு வீசின.

கனவுகள் படகேறும்
காதலின் கடலில்
ஊடலின் அலைகள்
வீசத் தொடங்கின
குருவியிடம்.

“சிணுங்காதே குருவி...!
காதல்
கடமைக்குக் குறுக்கே
வருதல் எனக்குப்
பிடிப்பதேயில்லை”

“அப்படி எனில்
எதற்கு இச்சந்திப்பு...?”

“நாட்டின் நிலை பற்றி...?”
குரல் கேட்ட
நொடிப் பொழுதில்
மயங்கிப் போனாள்
அந்த வீரமங்கை.

“இல்லை ஐயனே...!”
அவள் குரல்
வெளிப்பட்டுத் தேங்கியது.

மெல்ல அருகில் வந்து
மெல்லியதோள் பற்றி
அணைத்துக்கொண்டான்
வன்னியன்.

அணைப்புச் சுகத்தில்
அரனைக் கண்ட
நினைப்புப்போலும்
கண்கள் மயங்கக்
கண்மூடினாள்
நாச்சி.

வன்னியன் குரலில்
கம்பீரம் குடிகொள்ளத்
தொடங்கியது.

“நாட்டுக்கு என்ன கேடு...?”
நாச்சி குரலில்
கோபம் காட்டினாள்.

“குருவி...!”
கொஞ்சும் குரலில்
அழைத்தான் வன்னியன்.
“என்ன இது?
பனிமலை ஏன்
எரிமலையாகத்
தொடங்கியது?
என்னவனை வலைவீசி
எனக்கெதிராய்த்
திருப்பிவிட்டு...
கொக்கரிக்கிறான்
வெள்ளையன்.
விழவிழ எழுமிந்த
வேங்கைப் படையின்
வேகம் தெரியாத
சிறுகுரங்கு
மீண்டும் வருவான்டா..
வன்னியன்..”

நிலம் அறைந்து
சபதமேற்றான்
பண்டாரவன்னியன்.

காதலாய் அழைத்து
கடமையை உரைத்து
கடலாய் ஆர்ப்பரிக்கும்
வன்னியன் குரலில்
கலங்கிப் போனாள்
நாச்சியார்.

“படையைத் திரட்டலும்
பகையை விரட்டலும்
தங்கள்
கை வந்த கலை அன்றோ
ஏனிந்த வீண்கோபம்?”
மெல்ல நெருப்பினைத்
தணிக்க முயன்றன
குருவியின் வார்த்தைகள்.

“ம்.....
தெரியாதா குருவி..
சுற்றிவர
எதிரி சூழ்ந்து விட்டான்.
என்படைகள்
சொற்பந்தான்
மீந்திருக்கு.
தீயாக்கும்
விந்தை வஸ்து
அல்லவா...”
கர்ஜனை செய்யத்
தொடங்கியது
வன்னியின் யாளி...

(தொடரும்)

ஜெ.காயா

# கள்ளும் கருவாடும்



கடலும் அதன் கரை சார்ந்து கிடைக்கும் வளங்களும் அந்நிலம்சார் மக்களின் வாழ்வியலுடன் பிணைந்தே இருக்கின்றன. எமது ஐயாவும் அதற்கு விதிவிலக்கல்ல. ஐயாவும் அவர் வயதினரும் கூடிக்கொள்ளும் இடமாக நாம் வாழ்ந்த குடிசைக்கு மேற்கிருந்த அந்தப் பனங்கூடலின் பகுதியே திகழ்ந்திருந்தது. அது ஒரு பெரு நிழல் குடை! குளிர்மையும் இதமான காற்றும் ஆட்சி நடாத்தும் தனித் தேசம்! குருவிகளும் அணில் பிள்ளைகளும் ஏகதாராளமாகத் தமது இன சனத்தோடு அதற்குள்ளே காலம் காலமாகச் சீவியம் நடத்தும் போக்கும் நீண்டிருந்தது.

• • •

அந்தக் காலத்து ஓய்வு தினங்களிலும் தொழிலற்ற வேளைகளிலும் ஐயாக்கள் அதற்குள் ஒன்றுகூடிப் பொழுதுபோக்கிக் கொள்வர். அந்த ஓய்வான வேளைகளின்போதான சுகமான உறக்கத்தை அந்தக்கூடலும் அவர்களுக்கு இனாமாக அளித்துக் கொள்ளும். உழைப்பின் கடினத்தால் திரண்டு முறுக்கெறியிருக்கும் அவர்தம் தேகத்துக்கு உரமூட்டும், தாகம் தீர்க்கும் அந்தப் பனங்கள்ளை அருந்துவதும் அதற்குச் சுவைசேர்க்க அவர்கள் கருவாடு சுட்டுக் கொள்வதும் அன்றைய பனங்கூடல் பழமைகளே...!

• • •

ஐயாவும் அவர் வயதையொத்த அயல்வீட்டு நண்பர்களும் தொழிலில் இணையும் சாகக்களும் என அன்றைக்கும் நிறைந்தது அந்தப் பனங்கூடல். அவர்கள் தம் தொழிலுக்கும் அன்றைக்கு ஓய்வாயிற்று. ஐயாவின் சக தொழிலாளி நல்லையா கள்ளுக் கொண்டுவரவும் மார்க்கண்டர் கருவாடு கொண்டு வரவும் புறப்பட்டனர்.

கூடலுக்குள் ஐயாவும் இன்னும் சிலருமாய் அது சார்ந்த ஒப்பேறல்களில் விரைந்து வேகங்காட்டினர். வடலி ஓலைகளை வெட்டிச் சரித்தார் வைரவி. அதை வார்ந்து பிளவாக்கினார் நமது ஐயா. கூடியிருந்து கள் அருந்தும் இடத்தைக் காய்ந்த ஓலைகள் கொண்டு மணல்மூடினார் முத்தையா. இவை முற்றாவதற்கும் கள்ளும் கருவாடும் வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது காலம்.

புகையிலையைச் சுருட்டிப் புகையிழுக்கும் குணத்தாரிடமிருந்து தீப்பெட்டி கோரப்பட்டு நெருப்பும் மூட்டப்பட்டது. மார்க்கண்டர் கருவாடு கொண்டு வந்தாலும் அதைப் பதமாகச் சுட்டுக் கொள்ளும் பக்குவம் வைரவிக்கே கைவந்ததாகையால் வைரவியே கருவாடுகளையும் சுட்டுக் கொடுத்தார். கூடியிருந்து பிளாக்களுக்குள் கள்வார்த்தாயிற்று. அதனுடன் சுவைக்கும் கருவாடும் அவரவர் கைகளில்... நேரம் ஆழமாகிக் கொண்டிருக்கவிருக்க ஆரம்பமாயிற்று அவர்களின் சமா...!

• • •

இப்போது அந்தப் பழமை மனதினில் மாத்திரமே ஞாபகங்களாக... ஐயாக்களின் காலம் கரைந்துபோய்விட்டது.

அந்த வடலிகள் வளர்ந்து பனைகள் ஆனாது போலவே ஐயாக்களின் வம்சமும் வளர்ந்து திசைக்கொன்றாகப் போய்விட்டன. பின்வந்தவர்களுக்கோ அந்தப் பனைகளும் வாழ்க்கைப்பட்டுவிட் டன.

முன்பு வடலிப்பகுதியில் வீசிய மென்காற்று இப்போது வெந்தரையில் வீசுகின்றது கடற்காற்றாக... என்றாலும் வறட்சி இன்னமும் இனிப்புத்தரக் காத்திருக்கின்றது.

இவை எல்லாவற்றையும் தாண்டி அன்று இவ்விடத்தில் நிலவிய அந்த இனிமையை இப்போது யாரறிவர்? இயற்கையுடன் இசைந்திருந்த அவர்தம் படிப்பினைகள் இனியாவது இளசுகளுக்குப் புரிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காலங்கள் மாறினாலும் உறையாத உணர்வுகள்

மலரன்னை

காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றுகள் இருட்போர்வைக்குள் மூழ்கியிருந்த பூமித்தாயின் மேனியில் படர்ந்ததும் இருள் அகன்று பொழுது புலரத் தொடங்கியது. நெடிதுயர்ந்து, அகலக்கிளை பரப்பி வளர்ந்திருந்த வேப்பமரங்களின் நடுவே அமைந்திருந்த அந்த முதியோர் இல்லத்திலும் அமைதி கலைந்து முதியவர்களின் நடமாட்டம் ஆங்காங்கே தெரிந்தது.

அங்குள்ளவர்களால் 'மங்கை அக்கா' என அன்பாக அழைக்கப்படும் மங்கையர்க்கரசி வேப்பமரங்களின் கீழ் பரவியிருந்த சருகுகளைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். 'சில்'லென வீசிய குளிர்காற்று அவள் மேனியைத் தழுவிச் சென்றது. மேனியை ஒரு தரம் சிலிர்த்துக் கொண்டவள் எதையும் பொருட்படுத்தாது தன் பணியில் சிரத்தையாயிருந்தாள்.

"அம்மா...! வயதுபோன நேரத்தில உங்களுக்கேன் இந்த வேலை. நாங்கள் ஏன் இருக்கிறம்" அந்த இல்லத்தில் பணிபுரியும் ஒருவரின் கேள்வி இது. மங்கையர்க்கரசி சிரித்தவாறு மனம் திறந்தாள்.

"ஆர் சொன்னது எனக்கு வயது போட்டுதெண்டு. உடல் வலிமை குறைஞ்சுபோனது என்னவோ உண்மைதான். ஆனால், மனசளவில் நான் இன்னும் இளமையாய்த்தான் இருக்கிறன்" அவளின் பதிலைக்கேட்ட சங்கரன் மனதுக்குள் வியந்து கொண்டான். இருந்தாலும் இந்த மனிசி ஒரு வித்தியாசமான பிறவிதான்.

"அம்மா! இஞ்சை விடுங்கோ நான் கூட்டுறன்" வலிந்து அவளது கையிலிருந்த விளக்குமாற்றைப் பிடுங்கிக் கொண்டான்.

"இஞ்சார் சங்கரன்! வயது போயிட்டுதெண்டு முடங்கிக் கிடக்கக்கூடாது. ஏதோ செய்யக்கூடிய சின்ன வேலையளைச் செய்ய வேணும்"

"அம்மா! உங்க கொஞ்சப்பேர் காலமையில இல்லத்தைச் சுத்தி நடக்கினம். டொக்டர் சொன்னவராம் நடக்கிறது உடல் நலத்துக்கு நல்லதென்று. நீங்களும் அவையோட சேர்ந்து கதைச்சுக் கொண்டே நடக்கலாம்தானே"

மங்கையர்க்கரசி வாய்விட்டுச் சிரித்தாள்.

"வேலை செய்யிறதில இருக்கிற திருப்தி அதில வருமே. நீ விளங்காமல் கதைக்கிறாய்" சொல்லிக்கொண்டே தனது இருப்பிடமான அந்த மண்டபத்தை நோக்கி நடந்தாள். அந்த அறைக்குள் ஆறு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. அதில் ஒருத்தியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் துயிலெழுந்து வெளியில் போய்விட்டிருந்தனர். இன்னமும் விழிக்காமல் படுத்திருந்த மங்களத்தின் அருகில் சென்ற மங்கை அவளது தோளைத் தொட்டுத் தடவிவிட்டாள்.

"இஞ்சருங்கோ மங்களம்மா! நல்லா விடிஞ்சு போச்சுது. எழும்புங்கோ. எழும்பிக் குளிச்சிட்டு வாங்கோவன். நாங்கள் கோயிலுக்குப் போவம்"

அந்த வளாகத்தினுள்ளேயே ஒரு பிள்ளையார் கோயில் அமைந்திருந்தது. காலை, மாலை வேளைகளில் அங்கு பூசை நடைபெறுவது வழக்கம்.

கண்களைக் கசக்கியவாறே விழித்தெழுந்த மங்களம்

"அக்கா! இரவு முழுவதும் நித்திரையே வரயில்லை. விடியப்புறமாய்த்தான் சற்றுக் கண்ணயர்ந்து போயிட்டன்"

"ஏன் மங்களம்மா கண்ட கண்ட நினைவுகளையெல்லாம் மனசிலபோட்டுக் குழப்புறீங்கள். எல்லாத்தையும் மறந்திட்டுச் சிவனே என்று நினைத்துக்கொண்டு கிடந்தால், தூக்கம் தன்னால வரும்" அங்குள்ள எல்லா மாதர்களையும் 'அம்மா' போட்டு மரியாதையாக அழைப்பது மங்கையின் வழக்கம்.

"என்னத்தை மறக்கிறது. மறக்க நினைக்கிறதுதான் முன்னுக்கு வந்து மனிசரின்ரை நிம்மதியைக் கெடுக்குது" அலுத்துக்கொண்டே கட்டிலை விட்டு இறங்கினாள் மங்களம். சில நாள்களுக்கு முன்னர்தான் மங்களம் அந்த இல்லத்துக்கு வந்திருந்தாள். அவளுடைய மனக்குறையைக் கேட்டு அறிந்து அவளுக்கு ஆறுதலளிக்க வேண்டுமென மங்கை கங்கணம் கட்டிக் கொண்டாள்.

அன்று மாலையே அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மாலை கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை முடித்துவிட்ட அநேகமானோர் வெளியேறி விட்டனர். சிலர் தத்தமது இருப்பிடமான மண்டபங்களை நோக்கி நடந்தனர். வேறு சிலர் வேப்பமரங்களின் கீழ் அமைந்துள்ள சிமெந்து இருக்கைகளில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். மங்களம் மட்டும் கோயில் முன்றிலில் இருந்த படியில் அமர்ந்து ஏதோ சிந்தனையில் மூழ்கிவிட்டிருந்தாள். இதை அவதானித்த மங்கையர்க்கரசி அவளை அணுகி அருகில் அமர்ந்து கொண்டாள். "மங்களம்மா! ஏதோ பலத்த யோசினையில இருக்கிறியள்போல கிடக்கு" பீடிகையுடன் பேச்சைத் தொடங்கினாள்.

"இல்லையக்கா என்ர வாழ்க்கையில நான்பட்ட துன்பங்களை நினைக்கிறன். கடைசியில நான் அநாதையாகிப் போனன்" அவளது கண்கள் சரமாரியாக நீரைச் சொரிந்தன. மங்கையர்க்கரசி அவளைத் தேற்றும் நோக்கத்தோடு "மங்களம்மா! இங்கை இருக்கிற எவருமே அநாதைகளில்லை. நாங்கள் எல்லோருமே ஒரு குடும்பம் என்ற நினைப்போடுதான் வாழுறம். இங்கை சாதி, மத வேறுபாடு கிடையாது. சமத்துவமானது எங்களுடைய வாழ்க்கை. ஏனோ தெரியவில்லை. எனக்கு என்னுடைய வாழ்க்கையைப் பற்றி உங்களோட பகிர்ந்து கொள்ள வேணும்போல இருக்கு!"

சிறிது தெளிவு பெற்றவளாய் மங்களம், மங்கையக்காவின் கதையைக் கேட்க ஆர்வம் காட்டினாள்.

"நான் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை. என்ர மனுசன் ஒரு 'மெக்கானிக்'. பெரிய 'கராஜ்' ஒன்றுக்குச் சொந்தக்காரனான அவர் வேலையில் திறமைசாலி. எனவே அவரது அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது. கை நிறைய உழைத்தார். அழகான பெரிய வீடொன்றைக் கட்டினார். வசதியான வாழ்க்கை வாழ்ந்தபோதும் என்ர மனுசனிட்ட ஒரு குறை இருந்தது. அது அவரது புகைப்பழக்கம். ஒன்றன் பின் ஒன்றாக அவர் சிகரெட்டுக்களை ஊதித் தள்ளுவார். நான் அன்பாகவும் அதட்டியும் அந்தப் பழக்கத்தைக் கைவிடுமாறு கெஞ்சியும் அவரோ மிஞ்சி நின்றார். விளைவு... அவருக்குத் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டு அது நுரையீரலுக்குப் பரவிவிட்டது. நான் அவற்ற உயிரைக் காப்பாற்ற எவ்வளவோ பிரயத்தனம் செய்தன். வீடு வளவையும் விற்று செலவழிச்சன். பலன் கிடைக்கவில்லை. இறுதியில் விதவையாகும் நிலைதான். என்ர ஒரேயொரு மகனோட வாடகை வீட்டுக்குள் குடி புகுந்தன். என்னுடைய சொந்த உழைப்பு மட்டுமே மிஞ்சி விட்ட நிலையில் மகனை மிகுந்த சிரத்தையுடன் படிக்க வைச்சன். அவனும் பெற்றவளின் நிலையை நன்குணர்ந்து படித்து மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகினான்.

33

> "இருந்தாப்போல எனக்கு ஒரு காய்ச்சல் வந்து என்னைப் படுக்கையில போட்டிட்டுது. என்னால ஒரு வேலையும் செய்ய முடியாமல்போச்சு. அப்பதான் என்ரை மகளின்ரை சுயரூபத்தை நான் கண்டன். அவள் குழந்தையாய் இருக்கேக்க தன்ரை பிஞ்சுக்காலால என்ரை நெஞ்சில உதைக்கிறவள். அப்பெல்லாம் நான் சந்தோசத்தில பூரிச்சுப்போவன். ஆனால்... இப்ப அவளின்ரை சுடுசொற்களை என்னால தாங்க முடியாமலிருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறைக்குள் பிறந்தது ஞானம்!

மூன்று மாதங்கள் வரையில் சிறையில் இருந்த விமல் வீரவன்ச, சிறைக்குள் தனது கை, காலை வைத்துக்கொண்டு சும்மா இருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? சிறைக்குள் ஓய்வாகப் படுத்தே கிடப்பதற்கு அதிக நேரம் அவருக்குக் கிடைத்தது. ஆனாலும் அந்த நேரத்தைப் பயன்படுத்திப் பிரயோசனமான ஒன்றையாவது செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்கு ஏற்ப அவர் இரண்டு வேலைகளைத் தெரிவு செய்தார். அதில் ஒன்று ஓவியம் வரைதல். மற்றையது புத்தகம் எழுதுதல்.

இந்தத் தடைவ சிறைக்குச் சென்றதன் விளைவாக ''நாட்டுக்குத் தேவை இடதுசாரி" என்ற தலைப்பில் 227பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை அந்த மூன்று மாதங்களுக்குள் அவர் எழுதி முடித்தாராம்! பின்னர் பிணையில் வெளியில் வந்து அதை வெளியிட்டார். அத்தோடு முடிந்துவிடவில்லை அவருடைய வேலை. அதன் இரண்டாம் பாகத்தையும் எழுதப் போகிறாராம்! அதை செப்டம்பர் மாதமளவில் வெளிவிடவும் போகின்றாராம். என்னடா மனுசன் மறுபடியும் சிறைக்குள் போகவேண்டியிருக்கிறதே என்று யோசிக்கின்றீர்களா...? என்ன செய்வது சிலருக்குச் சிறைக்குள் சென்றால்தானே பிறக்கின்றது ஞானம்! ஆனால் விமலோ "நான் சிறைக்குள் சும்மா படுத்துக் கிடக்கவில்லை" என்றுதனக்குச்சிறைக்குள் பிறந்த ஞானம் பற்றிப் பெருமையாகவே சொல்லித்திரிகிறாராம்.

# அடி வாங்கி, அனுபவப்பட்டவர் சொல்கிறார்...!



பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள், புறக்கணிப்புக்கள், அரசியல் ஊர்வலங்கள் எனப் பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டுத் திரிவ தால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுவதும் பட்டம் பெறும் காலம் நீடிப்பதுவும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இருந்தாலும், மாணவர்களின் அந்தச் செயற்பாடுகள் தொடரவே செய்கின்றன. இப்போது அவர்கள் அதிகம் ஈடுபட்டிருப்பது 'சைட்டம்' மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டத்தில்தான். அதன் விளைவாக ஒரு மாதத்தில் பல ஆர்ப்பாட்டங்களை யும் புறக்கணிப்புக்களையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். இதனால் பாதிக்கப்படும் அவர்கள் மீதான கவலை அதில் கரிசனையுள்ள சிலரிடம் உண்டு. ஆனால் சில அரசியல்வாதிகளும் இதில் அக்கறையெடுத்து ஆதங்கப்பட்டுக் கொள்கின்றனர்...! தற்போது அரசியலில் இருக்கும் இவர்கள் பல்கலை மாணவர்களாக இருந்தவேளையில் தாமும் இவ்வாறான சிக்கலுக்குள் சிக்கியவர்கள் தானாம்! அதனால்தான் இவர்களுக்கு இந்தக் கரிசனை! ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பகா மாவட்ட அமைச்சர் அஜித் மானபெரும 1984 இல் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தாராம். 1989இல் பட்டம் பெற்று வெளியேற வேண்டிய அவருக்கு 1991இல்தான் பட்டம் கிடைத்ததாம்! இரண்டு வருடங்கள் அவரது கல்வி நீண்டமைக்குக் காரணம் இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள், வகுப்புப் புறக்கணிப்புக்கள், அரசியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டுத் திரிந்தமைதானாம். அதனால், தான் அடைந்த பாதிப்புக்கள் ஏராளமாம்! அந்த வயதில் இதெல்லாம் அவருக்கு விளங்கவில்லையாம். இந்த விசயத்தில் நன்கு அடிவாங்கி,

*"அனுபவப்பட்டிருப்பவர் சொல்கிறார் கொஞ்சம் கேட்டுத்தான் பார்ப்போமே...!"*

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!



எம்.ஐ.முபாறக்

## சந்திரிகா 'கப் சிப்'



அன்றைக்கு மகிந்தவின் ஆட்சியைக் கலைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு நிச்சயம் தேவை என்பதை உணர்ந்து கொண்ட அதன் ஆதரவைப் பெறுவதற்காக சந்திரிகா, ரணில் மற்றும் மைத்திரி ஆகியோர் சம்பந்தன் தலைமையிலான குழுவோடு பேசத் தொடங்கினர்.

கூட்டமைப்பின் கோரிக்கைகளைத் தமது அரசு நிறைவேற்றும் என்பதை நம்ப வைப்பதற்காகப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்வோம் என்று சந்திரிகா கூறியதும் அது தெற்கில், மைத்திரிக்குச் சிக்கலை ஏற்படுத்திவிடும் எனக் கூறிய சம்பந்தன் சந்திரிகாவின் அந்த யோசனையை நிராகரித்தாராம். 60வருடங்களாகச் சிங்களத் தலைவர்கள் உங்களை ஏமாற்றி வருகின்றனர். அப்பிடியிருந்தும் ஒப்பந்தமே இல்லாமல் இன்னும் எங்களை நம்புகிறீர்களா? என்று சந்திரிகா, சம்பந்தனைப் பார்த்துக் கேட்டாராம். ஒப்பந்தம் செய்தும்கூட எங்களை ஏமாற்றிய வர் உங்கள் தந்தை. அப்படிப்பட்ட உங்களிடம் ஒப்பந்தம் செய்தென்ன செய்யாமலேன்ன? என்று சம்பந்தன் ஒரு போடு போட்டாராம். வாயடைத்துப் போனாராம் சந்திரிகா.

*"இந்த அசிங்கம் தேவைதானா"*

# மகிந்தவுக்குக் குருதியால் காதல் கடிதம்

அரசியலில் எவரையும் நம்ப முடியாது. எவர் எப்போது எந்தப் பக்கம் தாவுவார் என்றும் சொல்ல முடியாது. ஊகிக்கவே முடியாத அளவுக்குத் தனது தலைவர்மீது பற்றாக இருக்கும் ஒருவர் மறுநாள் எதிர்ப்பக்கம் பல்டியடித்துவிடுவார். நீண்டகாலமாக எதிரியாக இருக்கும் ஒருவர் மறுநொடியிலேயே நண்பராக மாறிவிடுவார். நண்பராக இருக்கும் ஒருவர் எதிரியாக மாறிவிடுவார். இது தான் அரசியல். அதில் தாவுதல்கள் மிகச் சிம்பிளாகவே நடக்கும்.

47வருடங்களாக அந்தக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரி எந்தவித சத்தமின்றி மறுநாளே பல்டியடித்தார். வட மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராகப் போராடிய மகிந்த அணியினர் மறுநாளே முதலமைச்சர் பக்கம் பல்டியடித்து அமைச்சுப் பதவிகளை பெற்றனர். மைத்திரி அணி வெற்றி பெற்றதும் தன்னுடன் இருக்கும் உறுப்பினர்கள் எவரும் மைத்திரியுடன் போய் இணைந்துகொள்வார்களோ என்ற அச்சம் மகிந்தவுக்கு ஏற்பட்டது. இதுபற்றி அவர்களிடம் மகிந்த அளவளாவியபோது அவர்கள் தாம், மைத்திரியுடன் இணையமாட்டோம் என்று மகிந்தவுக்கு வாக்குறுதி அளித்தார்களாம். சில உறுப்பினர்கள் இதற்கு மேலே சென்று தமது குருதியால் கையெழுத்திட்ட வாக்குறுதிக் கடிதங்களை மகிந்தவிடம் ஒப்படைத்தார்களாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், முந்திச் சென்று மைத்திரியுடன் இணைந்தவர்கள் இந்தக் குருதி விசுவாசிகள் தானம்! அவர்களின் அந்தக் கடிதங்களை இப்போதும் மகிந்த பத்திரப்படுத்தி வைத்துள்ளாராம். சில நாட்களுக்கு முன்னர் குருநாகலில் நடந்த நிகழ்வு ஒன்றில் தான் அந்தக் கடிதங்களை இன்னும் பத்திரமாக வைத்திருப்பதாக மகிந்த கூறியுமிருக்கிறார்.

*"முன்னாள் காதலிகளின் காதல் கடிதங்களைப் பத்திரமாக வைத்திருக்கிறார் போலும் துரை!"*

# இளமை இதோ...இதோ... அமைச்சரின் விருப்பு!



'சண்டி ஐயா' என்று மக்களால் செல்லமாக அழைக்கப்படுபவர்தான் பதில் அமைச்சர் பாலித தேவரப்பெரும. காரணம் அவரது சண்டித்தனம் ஒருபோதும் மக்களுக்கு எதிரானதாக இருந்ததில்லை. மக்களுக்காகவே அவர் சண்டியனாக மாறினார். மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் இன, மத பேதங்கள் பார்க்காமல் களத்தில் குதித்துவிடுவார். அதைத் தீர்ப்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்வார். மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு மறுப்புத் தெரிவித்த பாடசாலைக்குள் நுழைந்த அவர் தான் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டினார். அந்தப் பாடசாலையின் மின்விசிறியில் தூக்குப் போட்டுத் தொங்குவதற்கும் முயற்சித்தார். அதை அடுத்து அந்தப் பாடசாலையில் மாணவர்களுக்கு அனுமதி கிடைத்தது.

அழுத்தகமை கலவரத்தின்போது முஸ்லிம்களுக்காகப் போராடினார். கோவில் திருவிழாவைத் தடுப்பதற்குப் பொதுபலசேனா முற்பட்டபோது அதற்கு எதிராகப் போராடி அந்தத் திருவிழாவை முன்னின்று நடத்தினார். அவை மாத்திரமா, அரச அபிவிருத்திகள் தரமானவையா என்று பார்ப்பதற்காகக் கழுகுபோல் தேடித் திரிவார். இத்தனையையும் இவரால் செய்ய முடியுமாக இருப்பதற்குக் காரணம் இவரது இளமைதானம். இவரைவிட வயது குறைந்தவர்களை விடவும் இவர் அதிக உடல் பலம் கொண்டவராம். தானே அதிசயப்படும் வகையில் அபார இளமை தன்னுடன் உண்டு என்று பாலித பெருமைப்படவும் கூறியிருக்கின்றாராம்! பாலித விகாரைகளுக்குச் சென்று வழிபடும்போதெல்லாம் ஒரேயொரு விடயத்தைத்தான் இறைவனிடம் கேட்பாராம். அதுதான் இளமை. முதுமையிலும் தனது உடல் அபார இளமையுடன் இருக்க வேண்டும். அதைக்கொண்டு மக்களுக்கு எப்போதுமே சேவை செய்ய வேண்டும் என்று இறைவனிடம் கேட்பாராம்.

*"இது உண்மையென்றால் இவருடைய மக்கள் சேவைக்கு என்றென்றும் இறைவன் துணை நிற்பான்தானே...?"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்துடைப்பாகிவிட்ட காணாமல்போனோர் அலுவலகம்

சந்திரசேகர ஆசாத்

கடந்த 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்றதான போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகத் திட்டவட்டமானதும் தீர்க்கமானதுமான நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் அதை இலங்கையும் ஏற்றுக் கொண்டு ஆதரவு வழங்கியிருந்தது.

அதன் பிறகு, ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் அது தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் அவகாசம் கோரப்பட்டது. அதுவும் மனித உரிமைகள் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்படியான ஒரு பின்புலத்தில் நாடாளுமன்றத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் கொண்டுவரப்பட்டு அதன் தலைவராக முன்னாள் அரசதலைவர் சந்திரிகாவும் நியமிக்கப்பட்டார். ஆனால் ஜே.வி.பியினரால் குறித்த சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டதையடுத்து அது கிடப்பில் போடப்பட்டது. அவர்களின் அந்தத் திருத்தம் மேற்படி விசாரணைகளில் வெளிநாட்டவர்களின் தலையீடு இருக்கக் கூடாது என்பதாகும்.

## குற்றவாளிகளைத் தண்டிக்காத விசாரணை எதற்கு?

நீண்டகால இழுபறிகளுக்குப் பிறகு இந்தச் சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு முன்வைக்கப்பட்டது. இதைச் சமர்ப்பித்து உரையாற்றிய தலைமை அமைச்சர் இந்த அலுவலகம் மேற்கொள்ளும் விசாரணைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாது எனவும் இந்த விசாரணை தொடர்பான விடயங்கள் தகவல் அறியும் சட்டத்துக்கு உட்படாதெனவும் தெரிவித்திருந்தார்.

அந்த அறிவித்தல் மூலம் காணமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகமும் நல்லிணக்க ஆணைக்குழுவை, பரணகம ஆணைக்குழுவைப்போலவே மீண்டும் ஒருமுறை தம் உறவு களுக்காகப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒப்பாரி வைக்கும் மேடையாக அமைகின்ற ஒன்று என்றே கருதத் தோன்றுகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? இருந்தால், அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? அப்படித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? அவர்கள் உயிரு டன் இல்லையெனில், எப்படி உயிரிழந்தார்கள்? அவர்களின் உயிரிழப்புக்குக் காரணமானவர்கள் மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் போன்ற கேள்விகளுக்கு விடை கிடைக்காவிடில் இந்தக் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தாலும் அதன் விசாரணைகளாலும் என்ன பயன் இருக்க முடியும்?

காணாமல் ஆக்கப்பட்டவர்களை 'காணாமல் போய்;விட்டார்கள்' என்று சான்றிதழ் வழங்குவதாயின் விசாரணைகள், கால விரயம், நிதிச் செலவினம் என்பனவெல்லாம் தேவைதானா?

## இராணுவத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்!

காணாமல்போனோர் அலுவலகம் தொடர்பான தீர்மானத்தில் இவ்வாறான கேள்விகள் எவற்றுக்குமே விடைகாணக்கூடிய வழிவகைகள் முன்வைக்கப்படவில்லை. எனவே தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் தமிழ் மக்களையும் ஒரு நேரத்தில் ஏமாற்றுவதற்கும் மேலும் மேலும் காலத்தை இழுத்தடித்து பிரச்சினையை நீர்த்துப் போக வைப்பதற்கும் மேற்கொள்ளப்படும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே இந்தப் பிந்திய செயலும் என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிகிறது.

இந்தப் பிரேரணை தொடர்பாகத் தலைமை அமைச்சர் உரையாற்றிய போது இந்த அலுவலகத்தின் விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பாக எந்தச் சட்ட நடவடிக்கைககளும் எடுக்க முடியாது எனத் தெரிவித்தமைக்கு வலிமையான ஒரு அடித்தளம் உண்டு.

அதாவது அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மீண்டும் மீண்டும் நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாத்த இராணுவத்தினரைத் தாம் காட்டிக் கொடுக்கமாட்டோமெனக் கூறி வருகின்றனர்.

அரசதலைவரோ, படையினரையும், பொலிசாரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் போவதில்லையென உறுதிபடத் தெரிவித்துள்ளார். அதாவது காணாமற் போனவர்கள் சம்பந்தமாகக் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது மட்டுமின்றி அவர்கள் குற்றமிழைத்தவர்களா? இல்லையா? என்பதற்கான விசாரணையைக் கூட நடத்த முடியாத என்பதை அவர்கள் இருவருமே தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

## தென்னாபிரிக்கா எங்கே? இலங்கை எங்கே?

இதை மேலும் வலுப்படுத்தும் வகையில் தலைமை அமைச்சர் தென்னாபிரிக்காவில் நல்லிணக்க ஆணைக்குழு மூலம் அங்கு நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள் மறக்கப்பட்டு சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படுத்தப்பட்டதெனவும் அவ்வாறான ஒரு நிலை இங்கும் ஏற்படுத்தப்பட வேண்டுமென வும் தெரிவித்திருந்தார். இது முழங்காலுக்கம் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடும் ஒரு கருத்தாகும்.

தென்னாபிரிக்காவில் தமது உரிமைகளுக்காகப் போராடிய மக்கள் வெற்றிபெற்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு அவர்களே அதாவது கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களே நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து விசாரணை நடத்தினார்கள்.

குற்றமிழைத்தவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டனர். சிலர் தங்கள் இழி செயல்களுக்காகக் கண்ணீர் விட்டு அழுதனர். குற்றவாளிகள் தங்கள் குற்றங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டபோது மன்னிக்கப்பட்டனர். நல்லிணக்கத்துக்கான கதவுகள் திறக்கப்பட்டன.

## இங்கு நிலைமை தலைகீழானது

உரிமைகளுக்காகப் போராடிய மக்கள் ஆட்சிப்பீடத்தால் தோற்கடிக்கப்பட்டுத் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கோரி நிற்கின்றனர். இங்கு விசாரணைகளை மேற்கொள்பவர்கள் வெற்றி பெற்ற தரப்பினர்.

இங்கு குற்றமிழைத்ததாகக் கருதப்படுபவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொள்ளவோ, அதற்காக மனம் வருந்தவோ, தயாராக இல்லை. குறைந்த பட்சம் தாம் குற்றமிழைத்தார்களா? இல்லையா? என்பதைக் கண்டறிவதற்கான விசாரணையைக் கூட ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. காணாமல்போகச் செய்யப்பட்டவர்கள் எப்படிக் காணாமல் போனார்கள்? என்பதையோ? தற்போதைய அவர்களின் நிலை என்ன என்பது பற்றியோ உண்மைகளை வெளிப்ப டுத்தத் தயாரில்லை.

இங்கு குற்றவாளி கள் யாரென்று தெரியாத நிலையில், குற்றவாளிகள் குற்றங்களை ஒப்புக்கொண்டு மனம் வருந்தாத வரை யாரை மன்னிப்பது? எப்படி மன்னிப் பது? எனவே தென்னாபிரிக்காவை இந்த விவகாரத்தில் உதாரணங்காட்டு வது எமது மக்களை ஏமாற்றித் தொடர்ச்சியாக அவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்தை மழுங்கடிக்கவும் போராடும் மக்கள் மத்தியில் குழப்பங்களை மேற்கொள்ளவும் துர்நோக்குடன் மேற்கொள்ளப்படும் சதியென்றே நம்பவேண்டியுள்ளது.



## உண்மைக்கு இருக்கும் இலகுவழி

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகளை நீதியான முறையில் கண்டறிய விரும்பியிருந்தால், சுலபமான நம்பிக்கையூட்டக் கூடிய வழியொன்றுண்டு. நல்லிணக்க ஆணைக்குழு பரணகம ஆணைக்குழு என்பவற்றின் பயனை விடக் காத்திரமான விளைவை அந்த வழிமுறை மூலம் பெற்றிருக்க முடியும். அது ஒரு ஆரோக்கியமான ஆரம்பமாகவும் இருந்திருக்கும். போர் முடிவற்ற நிலையில் ஏராளமான போராளிகள் மதகுரு ஒருவர் தலைமையில் வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது விசாரணைக்குழுக்களில் பலத்த குறுக்கு விசாரணைகள் மத்தியில் போராளிகளின் உறவினர்களால் சந்தேகத்துக்கு இடமின்றி முன்வைக்கப்பட்டது. அப்போது வட்டுவாகலில் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த இராணு அதிகாரி, அந்தப் போராளிகளை யாருடைய பொறுப்பில் ஒப்படைத்தார். அவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர் என்பதை அறியாமல் இருக்க முடியாது. பின்பு அவர்கள் கொண்டு செல்லப்பட்;ட இடத்துக்குப் பொறுப்பாயிருந்த அதிகாரிக்கு அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு என்ன நடந்தது? என்பது தெரியாமலிருக்க முடியாது. இப்படித் தொடர்ச்சியான விசாரணை மூலம் அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையோ அல்லது கொல்லப்பட்டால், எங்கு வைத்து யாரால் சாகடிக்கப்பட்டார்கள் ஏ்ன்பதெல்லாமே தெரியவந்திருக்கும். கோத்தபாய ராஜபக்சவின் கட்டளைக்கமைய மேஜர் ஜெனரல்க ளான சவேந்திர சில்வாவும் கமல் குணரத்தினவும் ஒப்படைக்கப் பட்ட போராளிகளைச் சித்திரவதை செய்து கொன்று விட்டதாக நிலவும் உண்மை, பொய் பற்றியும் தீர்க்கமாகிவிடும். 'சனல்4' காட்சிப்படுத்திய இராணுவத்தினரை விசாரணைக்கு உட்படுத்தினால், மேலும் பல உண்மைகள் வெளிவரக் கூடும். ஆனால் அரசோ அது சாத்தியமற்றதெனக் கூறி உண்மைகளை மறைக்கவே முயல்கின்றனது.

இத்தகைய சுலபமான நேர்மையான வழிமுறைகள் இருந்தும்கூட ஆணைக்குழுக்கள், அலுவலகங்கள் அமைக்கப்படுவது போன்ற காலம் கடத்தும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றமிழைத்தவர்களைக் கண்டுபிடிக்கவோ, அவர்கள் தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ளவோ, ஒரு சூழலை ஏற்படுத்தாமல் தென்னாபிரிக்கா போன்று சமரசம் எதிர்பார்க்கப்படுகிறது. குற்றங்களை ஏற்று, அதற்காக மனம் வருந்தி, மன்னிப்புக்கோரிய தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட நல்லிணக்கமும் ஒப்பிடப்படுகிறது.

## குற்றவாளிகளைக் காப்பாற்றும் உத்தி

காணாமல்போனோர் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியாதெனில் அது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியைத் தேடும் அலுவலகமா? அல்லது குற்றமிழைத்தவர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பு வழங்கும் அலுவலகமா? என்ற கேள்வி எழுகிறது. அதன் காரணமாகவே கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றுகூடலின்போது குறித்த அலுவலகத்தின் விசாரணை நடவடிக்கைகளைப் புறக்கணிப்பது எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மேற்படி முன்மொழிவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக் கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு என அனைத்துத் தரப்பினரும் பல விடயங்களில் ஒருவருடன் ஒருவர் முரண்பட்டபோதிலும் படையினரைக் குற்றக்கூண்டில் ஏற்றக் கூடாது என்பதில் ஒன்றிணைந்தே நிற்கின்றனர். எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அரச தரப்பினரின் கண்துடைப்பு நடவடிக் கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய தேவை உள்ளதை எவரும் மறுத்துவிடக்கூடாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழிவற்ற அற்புதப் பிறவி! நீர்க்கரடி

ஜோதா நகுலதாஸ்

நம்மால் 150டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் உயிர் வாழ முடியுமா? முடியவே முடியாது. கோடை காலத்தில் 40டிகிரி செல்சியஸ் வெப்பத்தையே நம்மால் தாங்க முடிவதில்லை. ஆனால், ஒரு உயிரி 150டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் மிகச் சாதாரணமாக வாழ்கிறது.

நம்மால் பூச்சியம் டிகிரி செல்சியசுக்குக் கீழ் உள்ள குளிரைத் தாக்கு பிடிக்க முடியுமா? முடியவே முடியாது. உறைந்து போய் விடுவோம். ஆனால், இதே உயிரி மைனஸ் 200டிகிரி செல்சியசில் குத்துக்கரணம் அடித்து விளையாடுகிறது.

அணு உலைக் கசிவு விபத்து ஏற்பட்டால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? 10யுனிற் கதிரியக்கம் உடலில் பட்டாலே சாவுதான். ஆனால், இதே உயிரி 5,000 யுனிற் கதிரியக்கத்தைக்கூட அசால்ட்டாகக் கடந்து செல்கிறது.

வான் வெளியில் காற்றே இல்லாத இடத்தில் நம்மைக் கொண்டு போய் விட்டால் என்ன ஆகும்? நினைத்துப் பார்க்கவே முடியாமலிருக்கிறதா? ஆனால் இந்த உயிரியோ காற்றில்லாத வெளியிலும் பத்து நாட்கள் பயணம் செய்துவிட்டுப் பத்திரமாகத் திரும்பி வந்து விட்டது. அட

அப்படி என்னதான் உயிரி அது?

இது எல்லாமே ஒரே உயிரிதான். அதன் பெயர் நீர்க்கரடி.

செல்லமாக 'பாசி பன்றிக்குட்டி' என்று சொல்வார்கள். உடனே அந்த உயிரியைப் பார்க்க வேண்டும் என்று ஆசையா? அப்படியெல்லாம் உடனே பார்க்க முடியாது. ஏனென்றால் அது ஒரு நுண்ணுயிரி.

### கண்ணுக்குத் தெரியாத சாங்கதி இது!

இதைப் படத்தில் பார்த்துவிட்டுப் பயந்து விடாதீர்கள். வெற்றுக்கண்களுக்குப் புலப்படாத உயிரி இது. நுண்நோக்கியின் உதவியுடன்தான் இதைப் பார்க்க முடியும். அரை மில்லி மீற்றர் அளவுவரைதான் இதன் அதிக நீளம் இருக்கும். விதி விலக்காகச் சில நீர்க்கரடிகள் ஒன்றரை மில்லி மீற்றர் வரை வளரும். இதைக் கண்டுபிடித்ததே 1773ஆம் ஆண்டுதான். ஆனாலும் இதன் ஆச்சரியத்தையும் புதுமையையும் நீங்கள் ஒரு போதுமே அறிந்திருக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

இவற்றுக்கு 8 கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கால்களிலும் நான்கு முதல் எட்டு நகங்கள் வரை இருக்கும். இந்தக் கால்களைக் கொண்டு இது நடந்து வரும் காட்சி கரடி நடப்பது போலவே இருக்கும். பாசிகள் மீதும், சிறு சிறு நுண்ணுயிரிகள் மீதும் தன் உடம்பில் இருந்து சுரக்கும் திரவத்தைப் பரப்பி அதனை உணவாக்கிக் கொள்கின்றன இவை. உணவும் தண்ணீரும் இல்லாமல் 30ஆண்டுகள் வரை இவற்றால் உயிர்வாழ முடியும். நீர்ச்சத்து ஒரு சதவீதத்துக்கும் கீழாகக் குறையும்போதுதான் இவை சாவடைகின்றன என்றால் பாருங்களேன்.

### எதையும் தாங்கும் இதயம் இவற்றுக்கு!

இவை வெயில், மழை, பனி, புயல், தகிக்கும் எரிமலைகள், பனிபடர்ந்த மலைகள், ஆழ்கடல்கள், காற்றே இல்லா வான்வெளி என எல்லா இடங்களிலும் வாழும் தகவமைப்பைப் பெற்று, உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றன. இமயமலையில் 6,000 மீற்றர் உயரத்தில் பனி உறைந்த பிரதேசத்திலும், ஆழ்க்கடலில் 4,000 மீற்றர் ஆழத்திலும்கூட இவை சாதாரணமாக வாழ்கின்றன. ஆராய்ச்சிக்காகச் சில நீர்க்கரடிகளை வான் வெளிக்குக் கொண்டு சென்று வைத்துவிட்டுப் பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் பூமிக்கு எடுத்து வந்தபோது அதில் ஒன்றுகூடச் சாகவில்லை. இதனால் இதற்கு 'வான் கரடி' என்ற பெயரும் வந்தது.

1773ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு விலங்கியல் அறிஞர் ஜோகன் ஆகஸ்ட் என்பவர்தான் இந்த உயிரியைக் கண்டுபிடித்தார். 3ஆண்டு கழித்து இத்தாலிய நாட்டைச் சேர்ந்த விலங்கியல் அறிஞர் 'லாசரே ஸ்பால்லன்ஸானி' இது நடந்து வருகிற அழகைப் பார்த்துவிட்டு இதற்கு 'டார்டி கிரேட்' என்று பெயர் சூட்டினார். டார்டி கிரேட் என்றால் 'மெல்ல நடப்பவர்' என்று அர்த்தம். அந்தக் காட்சி கரடி நடப்பது போலவே இருக்கும். அதனால்தான் இதன் பெயருடன் கரடியையும் ஒட்ட வைத்துவிட்டார்கள்.

### புதுமையிலும் புதுமை

இதன் சுவாசத்துக்கெனத் தனி உறுப்புகள் எதுவும் இல்லை. தன் உடல் அமைப்பு முறையையே இது சுவா சத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. இதன் உடலின் சில பகுதிகளில் உள்ள குருதிக் குழிகளைப் பயன்படுத்திச் சுவாசம் எடுத்துக்கொள்கிறது. தன் உடம்பில் உள்ள நீரைப் பயன்படுத்தித் தன் உடலை விரிவடையவும் சுருங்கவும் செய்கிறது. எல்லாம் சரி, அது எப்படி எரிமலை, பனி பிரதேசங்கள் என எல்லா இடங்களிலும் வாழ முடிகிறது? உண்மையில் அறிவியல் அதிசயம்தான் இது.

அதிக வெப்பமான காலங்களில் இதன் உடலில் நீர்ச்சத்து 3 சதவீதத்துக்குக் கீழ் குறைந்துவிடும். அப்போதுகூட சுற்றுப் புறத்தில் இருந்து ஈரப்பதத்தை உறிஞ்சுக்கொள்ளும் அளவுக்கு இதன் உயிரணுக்கள் சக்தி பெற்றிருக்கின்றன. இந்த நீர்ச்சத்தைக் கொண்டே நீர்க்கரடிகள் உயிர் தப்பிப் பிழைக்கின்றன. கடும் வறட்சி, கடும் குளிர் என இரண்டு நிலைகளிலும் இது உயிர் வாழ மிக முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன.


நீர்க்கரடிகள் உட்கொள்ளும் பூஞ்சைகளில் இருந்து இரட்டைச் சர்க்கரை கிடைக்கிறது. இந்த இரட்டைச் சர்க்கரை நீர்க்கரடிகளின் சவ்வுகளைப் பத்திரமாகப் பாதுகாக்கின்றது.

இந்த இரட்டைச் சர்க்கரை என்பது உயிரினங்களில் மிக அரிதான விடயம். நீர்க்கரடிகளில் மட்டுமே இதைப் பார்க்க முடியும்.

கதிரியக்கத்திலிருந்து நீர்க்கரடிகளைக் காப்பாற்றுவது அதன் மரபணு. நீர்க்கரடியின் மரபணுவில் மட்டும் டிசப் என்ற விசேட புரோட்டின் உள்ளது. இந்தப் புரோட்டின்தான் கதிரியக்கத்திலிருந்து கரடியைக் காப்பாற்றும் கடவுள்.







> வெயில், மழை, பனி, புயல், தகிக்கும் எரிமலைகள், பனிபடர்ந்த மலைகள், ஆழ்கடல்கள், காற்றே இல்லா வான்வெளி என எல்லா இடங்களிலும் வாழும் தகவமைப்பைப் பெற்று, உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றன. இமயமலையில் 6,000 மீற்றர் உயரத்தில் பனி உறைந்த பிரதேசத்தி லும், ஆழ்கடலில் 4,000 மீற்றர் ஆழத்தி லும்கூட இவை சாதாரணமாக வாழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை செய்ய ஆசையா? 'செல்பீ' எருங்கள்!



ஏ.ஜே.ஞானேந்திரன்

பறவையைக் கண்ட மனிதன் விமானம் படைத்தான். அது மகிழ்வான, பயனான விடயம். இன்று அத்தகைய விமானங்களின் மூலம் நாட்டுக்கு நாடு விரைந்து பயணங்களை மேற்கொள்கின்றோம். அவற்றினால் உலகம் சுருங்கி விட்டது போன்றும் எண்ணங் கொள்கின்றோம். இன்றைய அவசர உலகில் இதனால் பல மணி நேரங்கள் மிச்சமாகின்றன. "விமான விபத்துக்கள் வருகின்றனவே...?" என்று சொல்ல வர வேண்டாம். கத்தரிக்காய் நறுக்கும் கத்தி கழுத்தை அறுக்கவும் உபயோகிக்கப்படுகின்றது என்பதற்காகக் கத்தி கூடாது என்று நீங்கள் கத்துவதில் என்ன பயன்...? மனிதன் பறவையைப்போலவே ஏதோவொரு மூலத்தை வைத்துச் 'செல்போன்' ஐயும் கண்டுபிடித்தான். மீண்டும் ஒரு மகிழ்ச்சி, அவனே அதில் 'செல்பி' யையும் கண்டான். ஆனால், இது மகிழ்ச்சியைத் தரவில்லை. ஏன் தெரியுமா? இன்று பலர் அநியாயமாக உயிர் இழப்பதற்கு இந்தச் 'செல்பி'தான் காரணமாகவுள்ளது. அதாவது இந்தச் 'செல்பி' பலரையும் சாகடிப்பதிலேயே முன்னிற்கின்றது.

### அலைபேசிகளுக்குள் புகுந்துவிட்ட அரக்கன்

ஒரு நற்காரியம் நிகழ்ந்தேறிய பின்னர் அதன் நினைவுகளை இரைமீட்பதற்காக உருவாக்கப்பட்டவை ஒளிப்படக் கருவிகள். அவை நாம் கடந்து வந்த இறந்த காலங்களைப் பதிவுகளாக்கிப் பார்த்து மகிழ வைத்தன. ஒளிப்படம் எனும் அவற்றின் ஜலவித்தை என்றைக்குமே திகைப்புத்தருவதே. கறுப்பு–வெள்ளை என்று தொடங்கி, அதுவே பின்னர் வர்ணமயமாகி எம்மைக் குஷிப்படுத்திக் கொண்டு இருக்கின்றது. அதன் மூலம் அதிகமாக மகிழ்ச்சி மட்டுமே சாத்தியப்படுகின்றது. கறுப்பு – வெள்ளை ஒளிப்படங்களையோ, கடந்த கால கலர்ப்படங்களையோ பின்னாட்களில் பார்க்கும்போது மட்டற்ற மகிழ்ச்சி மாத்திரமே மனங்களில் நிறைகின்றது. பின்னாட்களில் 'செல்போன்'கள் அறிமுகமாகின. ஒளிப்படக் கருவியைச் சிறுப்பித்து அதற்குள் அடக்கினர். பின்புறத்திலிருந்த அதைப் பின்னாட்களில் முகம் பார்த்துக் கதைக்கவென முன்புறத்திலும் புகுத்தினர். அப்போது தான் வந்து சேர்ந்தது அநியாயம் பல செய்யும் அந்தச் 'செல்பி'. ஆரம்பகாலங்களில் அது அதிகளவில் அறியப்படாமலும் பயன்படுத்தப்படாமலும் இருந்தது. பின்னர், இப்போது அதுவே பலருக்கும் எமனாகி விட்டுள்ளது. இதை ஒரு கலாசாரமாகவும் மனிதர்கள் கொண்டாடப் பழகி விட்டார்கள். ஆகையால் இது தரும் இழப்புக்கள் தொடரப் போகின்றன என்பது வெளிச்சம்படத் தெரிகின்றது.

### 'செல்பி' என்பது ஒரு வகை வருத்தம்!

30அடிக்கும் மேலான உயரத்திலிருந்து குதிக்க நிர்ப்பந்திக்கப்படுவதிலிருந்து தொடரூந்தால் தாக்கப்பட்டு உயிர் துறப்பது என 'செல்பி'க்குப் போஸ் கொடுப்பதால் நிகழும் பரிதாபச் சாவுகள் நீளத்தான் செய்கின்றன. அது ஒரு வியாதி, வருத்தம் என்பதாகவே மாறியிருக்கின்றது. இது அண்மையில் ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் நடந்தது. சமூக வலைத்தளமான முகப்புத்தகப் பதிவென்றில் அதிக விருப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு நபர் தனது குழந்தையை உயரமான கட்டடத்திலிருந்து யன்னலின் ஊடாக வெளியே நீட்டிப் பிடித்தவராய் "1000 விருப்புகள் வேண்டும் இல்லையேனில் குழந்தையை வெளியே வீசி விடுவேன்" என்று பதிவிட்டிருக்கின்றார். இதுவும் கிட்டத்தட்ட இந்தச் 'செல்பி' வகை நோய்த்தாக்கமே. மழைக்கால ஒய்வுடன் பரவிக் கொள்ளும் 'நுளம்பு நோய்கள்' போலில்லாமல் வருடம் முழுவதுமே இந்தச் செல்பி நோயின் தாக்கம் இருக்கத்தான் செய்கின்றது. இதனால் ஏற்படும் சாவுகளின் தொகை அதிகரித்து வருவது மனவேதனை அளிப்பதாகவே இருக்கின்றது .

'செல்பி' என்பது ஒரு வகை வருத்தம்!

### தடைகளும் தண்டனைகளும்

இந்தியாவிலிருந்து கிடைத்த தகவல்களின்படி, 'செல்பி'யால் அங்கு அதிக சாவுகள் நிகழ்வதை உணரமுடிகின்றது. அதுவும் இந்தச் சாவுகளில் அநேகமானவை தண்ணீருக்குள் மூழ்கி உயிர் துறந்தவையாகவே இருக்கின்றன. ரஷ்யாவும் அமெரிக்காவும் இந்தியாவைத் தொடரும் நாடுகளாக இருக்கின்றன. இந்த நிலையில் தான் இந்தச் 'செல்பி' விவகாரம் உலகெங்கும் விசனத்தை ஏற்படுத்தி இருப்பதோடு, பல நாடுகளில் 'செல்பி' எடுப்பதற்குத் தடை என்ற அளவுக்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தென்கொரியாவில் 'செல்பி' எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் 'செல்பி ஸ்ரிக்' இன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. தடை நடைமுறைப்படுத்தப்பட்டாலும், அந்தத் தடையை மீறுபவர்களைத் தண்டிக்கும் அளவுக்குத் தென்கொரியா இந்த விடயத்தில் இன்னமும் தீவிரம் காட்டவில்லை. தொடரூந்துடன் தம்மைச் சித்திரிக்கும் வகையில் 'செல்பி' எடுப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று நமது நாடுகூட இந்தச் 'செல்பி' விடயத்தில் கொஞ்சம் கடுமை காட்டத் தான் விழைகின்றது.



உலகெங்கும் செல்பி தடை செய்யப்படுமா? என்று கேட்டால், இந்த வேகத்தில் 'செல்பி' யால் ஏற்படும் சாவுகள் தொடர்ந்தால், ஒரு வேளை இது சாத்தியப்படலாம் என்றே கூறத்தோன்றுகின்றது. சமீப காலங்களில் இந்தச் 'செல்பி'க் காய்ச்சல் இலங்கையிலும் அதிகரித்திருக்கின்றது. தொடரூந்துகளைச் சார்ந்தே இங்கு 'செல்பி'ச் சாவுகள் சம்பவித்து வருகின்றன. தண்டவாளங்களில் தலை வைத்து வைகுண்டம் போய்ச்சேர்ந்த காலம்போய், முகம் வைத்து உயிரை விடும் அவலம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

### பலியாகும் பருவத்தினர்!

தம்படம் எடுப்பதில் தம்முயிரை மாய்த்தவர்களின் ஒட்டுமொத்தப் புள்ளி விபரங்களைப் பார்த்தால், 14 – 32வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள்தான் இந்தச் 'செல்பி' எடுப்பில் உயிரிழப்பவர்களுக்கு இருக்கின்றார்கள். வாழ்வின் வசந்த காலம் இந்தப் பருவம். அநியாயமாக இந்தப் பருவத்தில் இவர்கள் உயிரை விடுவது அநியாயத்திலும் அநியாயமே! இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர்களில் ஒருவரான அமரசேகர, "இன்றைய இளம் சமுதாயம் தனது அதிகமான நேரத்தினை சமூக ஊடகங்களோடும், கைபேசி, மடிக்கணணி, கணனி போன்றவற்றோடும் தான் செலவிடுகின்றது. காலம் செய்த கோலம் இது! ஆனால், அந்தக் காலங்களில் அலைபேசி என்பதைத் தொடர்புகளுக்காகவும், குறும் செய்திப்பரிமாற்றம் போன்ற வற்றுக்காகவுமே உபயோகித்தார்கள்.

இன்றோ அதே அலைபேசி பல பணிகளைச் செய்யக்கூடிய கருவியாக மாறி உள்ளது. அப்படியான ஒன்றுதான் இந்தப் பொல்லாத 'செல்பி' எடுப்பு. அது கடலாக இருந்தாலென்ன, ஓடும் ரயிலாக இருந்தால் என்ன அவர்களின் முழுக் கவனமும் எதிர்வரும் ஆபத்தைக் கவனிக்காமல் தாம் திரையில் அழகாகத் தென்படுகின்றார்களா என்பதில் மாத்திரம் தான் இருக்கின்றது" என்கிறார் இந்தச் 'செல்பி' எடுப்பைப் பற்றி.

### இன்றிலிருந்தே விழித்துக் கொள்வோம்

இன்று ஒரு ஒளிப்படப் பெட்டகமாக, படம் பார்க்கும் திரையாக, உலகின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் முகம் பார்த்து, வீட்டுப் புதினங்களை நேரில் காண்பித்து உரையாடும் ஒரு தளமாக, நினைத்த பாடலைக் கேட்டு இரசிக்கும் இசைக் களஞ்சியமாக, ஆவணங்கள் சேமிக்கப்படும் ஒரு கோப்பாக, தருணங்களைப் படமாக்கிக் கொள்ளக்கூடிய சாதனமாக அலைபேசி என்பது இன்றைக்கு ஒரு பெரும் சகலகலாவல்லனாகவே செயல்படுகின்றது. அறிவியல் தானும் வளர்ந்து எம்மையும் வளர்த்து வருவது உண்மைதான். ஆனால் அந்த வளர்ப்பிலுள்ள இப்படியான அசம்பாவிதங்களை எம்மால் ஒருபோதுமே தடுக்க முடிவதில்லை. காலத்துக்குக் காலம் நெல் மணிகளிடையே முளைக்கும் களைகள் போன்ற இவை பிடுங்கப்பட்டே தீரவேண்டும். ஆனால், அதுவே குறுகிய காலத்துக்குள் சம்பவிக்கப் போவதில்லை. அதுவரைக்கும் இழப்புக்கள் இருக்கத்தான் போகின்றன. இன்றைய சாவுகள் நாளைய இளசுகளை இப்போதிலிருந்தே விழித்தெழச் செய்யட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் தோல்வியைக் கசக்கி எறிவோம்...

சவிதா சங்கரப்பிள்ளை



'காதலில் செதப்புவது எப்படி' என்பதாகச் சினிமாவே வந்துவிட்டது. 'காதலில் விழுவது எப்படி?' அது ஒரு இயல்பான விடயமாக அமைந்துவிடுவதால் அதிகமாக யாருமே அலட்டிக் கொண்டிருப்பதில்லை. ஆனால் இதில் இந்தக் காதல் வியாதி ஆட்கொண்டுவிட்டால் அதற்குட்பட்ட இரண்டு தரப்பினரின் அலட்டலோ தாங்கொணாக் கொடுமையாகவிருக்கும். அதில் காதல் முகிழ்த்து உச்சத்தில் இருப்பவர்கள் ஒருதரப்பு, காதலில் தோற்ற பரிதாபத்துடன் இருப்பவர்கள் மறுதரப்பு. காதலும் பிரிவும் அப்படியொரு விசேசமான விடயமாகவே இருக்கின்றன. இந்த இரண்டிலுமே நாம் மகிழ்ச்சியில் திளைக்கும் தரப்பை விடுத்துக் கவலையில் கண்ணீர் விடும் தரப்புக்குத் தோள் கொடுப்போம்.

இன்றைய தலைமுறை இந்தக் காதல் பிரிவை, அதாவது காதல் தோல்வியைக் கையாளுவதற்குப் பலவிதமான முயற்சிகளை எடுக்கிறது. காதலிப்பது என்பது எப்படியாக ஒரு இனிமையான அனுபவமாக இருக்கிறதோ, அதேமாதிரி சில நேரங்களில் விட்டு விடுதலையாகி விலகி நிற்பதும் இனிமையானதுதான். அந்த இனிமையின் சுகத்தைக் கண்டறிந்தாலே இந்தக் காதல் தோல்விக்கு உங்களால் கண்ணீர் வடிக்கவேண்டிய தேவையிருக்காது. அதாவது இளையராஜாவின் சோககீதத்தில் உள்ள சோகத்தின் இனிமையை உணர்வதைப் போன்றதே இதுவும். காதலில் இருவரும் பரஸ்பரம் பிரிந்துவிடலாம் என்ற முடிவை எடுத்தே, அல்லது கட்டாயமாக, வலிந்து பிரிக்கப்பட்டோ விட்டால் அந்தப் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொள்வதற்கு ஏற்ப மனதைத் திடமாக்கிக் கொள்ள வேண்டும். காலங்கள் பல கடந்த பின்னர் அதுவே நல்லது என்று எதிர்காலமும் உங்களுக்கு உணர்த்தி நிற்கும். பிரிவைச் சந்தித்தபின், அதிலிருந்து வெளியே வருவது இங்கு எழுத்துக்களில் கூறுவதுபோல அவ்வளவு இலகுவான விடயமாக இருக்காது என்பதுவும் எமக்குப் புரிந்ததே. ஆனால் அந்த வலியைக் கையாள்வதற்கான சில ஆலோசனைகளாக ஆவது இதனைக் கொள்ளலாம்.

**காதலின் அடிச்சுவடே தேவையில்லை.**

பிரிதல் என்பது உறுதியானபின்பு உங்களுடைய முன்னாள் காதலனைக், காதலியைப் பின்தொடர்வதைத் தவிருங்கள். அது நேருக்கு நேராக மாத்திரமின்றி, சமூக வலைத்தளங்களில் கூடப் பின்தொடர்வதை நிறுத்தி விடுங்கள். அப்படிச் செய்யாமல், அவர்களுடைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து அவர்களிடும் பதிவுகள் மூலம் பின்தொடர்வது உங்களுடைய பிரிவுத் துயரை மேலும் அதிகரிக்கும். என்னதான் வலிந்து நீங்கள் மறக்க முற்பட்டாலும் உங்களுடைய பழைய காதல் வாழ்க்கையின் நினைவுகள் அதன் வாயிலாக உங்களைத் துரத்திக் கொண்டேயிருக்கும். அதனால், பிரிவுக்குப் பிறகான சில மாதங்களுக்குச் சமூக வலைத்தளங்களில் உங்கள் முன்னாள் காதலரின் பதிவுகளைப் பார்ப்பதைத் தடை செய்துவிடுவது நல்லது. ஏனென்றால், இன்றைய யுகத்தில் இத்தகைய சமூக வலைத்தளங்களின் தாக்கங்களே காதலிலும், காதல்பிரிவி லும் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வாறு தடை செய்யாவிடில் அவை நாள்தோறும் உங்களுடைய வலியை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

> பிரிதல் என்பது உறுதியானபின்பு உங்களுடைய முன்னாள் காதலனைக், காதலியைப் பின் தொடர்வதைத் தவிருங்கள்.

**சமூக வலைத்தளங்களில் புலம்புதலும் வேண்டாம்**

பிரிவு என்று ஆன பிறகு, நீங்கள் எவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள் என்பதைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துகொள்வதை முழுமையாகத் தவிர்த்துவிடுங்கள். ஏனென்றால், உங்களுடைய சோகத்தைச் அவற்றில் புலம்பி வெளிக்காட்டிக் கொள்வதால் எந்தப் பயனும் இருக்காது. இப்படிப்பட்ட செயல்கள் நட்புவட்டத்தில் உங்களுடைய தனிப்பட்ட ஆளுமையைக்குறைக்கவும் உங்களைப் பற்றிய சுய மதிப்பைத் தாழ்த்தவுமே செய்கின்றன.

**அவசரம் வேண்டாம்...**

உங்களுடைய முன்னாள் காதலரை அவசரமாக மறக்கவேண்டி அவசர அவசரமாக இன்னொரு புதிய உறவைத் தேடுவதில் மும்முரம் காட்டாதீர்கள். பிரிவுத் துயரிலிருந்து முழுமையாக வெளியே வருவதற்குமுன், புதிய காதல் வாழ்க்கையை ஆரம்பிக்க அவசரப்பட்டால், அந்த உறவு வெற்றிபெறுவதற்கும் வாய்ப்புக்கள் குறைவாயிருக்கும். பிரிவின் வலியிலிருந்து வெளியே வருவதற்கு உங்களுக்கும் போதிய அவகாசம் கொடுங்கள். குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்குப் பிற்பாடுதான் புதிய உறவு நிலை பற்றி நீங்கள் யோசிக்கவே தொடங்க வேண்டும். உங்களுடைய முன்னாள் காதலர், தான் புதிய உறவுக்குத் தயாராகிவிட்டார் என்று ஏட்டிக்குப் போட்டியாகவும் இந்த அவசரத் தேடுதலில் நீங்கள் ஈடுபட வேண்டாம். அதைவிட அவசரமாகப் புதிய உறவில் நுழைய வேண்டிய அவசியமும் ஏலவே பிரிவைச் சந்தித்த உங்களுக்கு இருக்கப் போவதில்லை

**நினைவுகளை அசைபோட வேண்டாம்**

நீங்கள் காதலித்த காலத்தில் காதலருடன் கூடச்சென்ற இடங்களுக்குத் திரும்பவும் நீங்கள் செல்வதைக் கொஞ்ச காலத்துக்குத் தவிர்த்துவிடுங்கள். நீங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொண்ட இடங்களுக்குச் சென்று பழைய நினைவுகளை அசைபோடுவதைத் தவிர்க்கலாம். இப்படிச் செய்வது உங்களுடைய வலியை ஆரம்பத்தில் குறைப்பதுபோல் தோன்றினாலும், பிறகு அந்த நினைவுகளே கூடுதல் வலியை உருவாக்கும். இதனால் பிரிவுத் துயரத்தில் இருந்து நீங்கள் வெளியே வருவது தாமதமாகலாம்.

இந்தக் காலகட்டத்தில் நீங்கள் எவரையாவது சந்திக்க வேண்டுமென்றால் புதிய இடங்களில் சந்திக்கலாம். பிரிவுத் துயரத்திலிருந்து முழுமையாக வெளியே வந்துவிட்டீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு வந்த பிறகு, எங்கு வேண்டுமானாலும் நீங்கள் செல்லலாம்.

**நண்பர்களின் ஆலோசனை வேண்டாம்**

பிரிவிலிருந்து வெளியே வருவதற்கு உங்களுடைய நண்பர்கள் என்னதான் நியாயமான ஆலோசனைகள் சொன்னாலும் அது உங்களுக்குப் பொருந்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அத்துடன், அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் நீங்கள் புலம்பினாலும் ஒரு கட்டத்தில் உங்களை நண்பர்கள் தவிர்க்க ஆரம்பித்துவிடுவார்கள். அதனால் அந்த வலியில் இருந்து வெளியே வருவதற்கு நீங்கள் தனியாக முயற்சி செய்வதுதான் நல்லது. உங்களுக்குப் பிடித்த புத்தகங்களை வாசிப்பது, திரைப்படங்களைப் பார்ப்பது என உங்களைப் 'பிசி'யாக வைத்திருப்பது இந்த நேரத்தில் சிறந்தது.

**ஞாபகப் பொருட்களும் வேண்டாம்**

காதலிக்கும்போது அவர்கள் உங்களுக்கு அளித்த பொருட்களையோ, அந்த நேரத்தில் நீங்கள் பேசிக்கொண்ட வசனங்களையோ சேகரித்து வைத்திருப்பது பிற்காலத்துக்குக்கூட நல்லதல்ல.

உடற்பயிற்சி, யோகா வகுப்புகளுக்குச் செல்வது, குடும்பத்துடன் நேரம் செலவழிப்பது, உங்களை நீங்களே நேசிப்பது போன்ற விடயங்கள் என்றைக்குமே அதி சிறந்தவை. அவை உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்தும் நல்ல பசளைகளும்கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோடி - ட்ரம்ப் சந்திப்பு - ஒரு அலசல்

கடந்த மாதத்தின் இறுதியளவில் அமெரிக்காவின் தலைநகர் வொசிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்குச் சென்று அந்த நாட்டு அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப்பைச் சந்திந்துத் திரும்பியிருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

அமெரிக்க அரச தலைவராக ட்ரம்ப் பொறுப்பேற்றதற்குப் பிறகு முதன்முறையாக இந்தியத் தலைமை அமைச்சர் அந்த நாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த இரு தலைவர்களும் வெள்ளை மாளிகையில் நீண்ட நேரம் சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்பு உலக நாடுகளிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. மோடி – ட்ரம்ப் சந்திப்பு அந்த இரண்டு நாடுகளுடன் நின்றுவிடாது அப்பாற்பட்ட உலக நாடுகளிலும் செல்வாக்குச் செலுத்தும் என்பது பலரதும் எதிர்பார்ப்பாக இருந்தது.

உலக வல்லரசாகவும் ஆசியாவின் முதன்மைப் புள்ளியாகவும் திகழும் அந்த இரு நாடுகளின் உயர் தலைமைகளும் கடந்த ஒரு வாரமாக இந்தச் சந்திப்புக்காக அதிக நேரத்தையும் செலவிட்டுள்ளன. இது குறித்து இந்திய அயலுறவுத் துறைச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் கூறும்போது, "இதற்கு முன்பு இந்தியத் தலைமை அமைச்சர்கள் மேற்கொண்ட அமெரிக்கப் பயணத்தைக் காட்டிலும் தலைமை அமைச்சர் மோடியின் இந்தப் பயணம் மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்தது' என்றிருக்கிறார். முன்னாள் இணைச் செயலாளர் (அமெரிக்கா) மற்றும் அமெரிக்காவுக் கான இந்தியத் தூதராகப் பணியாற்றிய ஜெய்சங்கர், முன்னாள் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங், அமெரிக்க முன்னாள் அரச தலைவர் ஜோர்ச் புஷ், சிங் – ஒபாமா மற்றும் மோடி– ஒபாமா ஆகியோருக்கிடையிலான உறவை, சந்திப்புக்களைக் கண்காணித்து வந்தவர் என்ற முறையில் அவர் கூறியிருக்கும் கருத்துக்களுக்குப் பெறுமதியிருப்பது தவிர்க்க முடியாததுவே.

இதன்போது அமெரிக்கா – இந்தியா இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒப்பந்தங்களின் முழு விவரம் அடுத்த சில நாட்களிலோ, வாரங்களிலோ தெரியவரும். ஆனாலும், இப்போது வெளியான கூட்டறிக்கையையும் ஒரு ஆண்டுக்கு முன்பு (2016 ஜூன்) மோடி– ஒபாமா சந்திப்புக்குப் பிறகு வெளியான கூட்டறிக்கை யையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சில முக்கியமான குறிப்புகள் தென்படுகின்றன.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், பொருளாதார மற்றும் வர்த்தக உறவை வலுப்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டின் அறிக்கையில் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. வர்த்தகப் பற்றாக்குறையைச் சரி செய்வது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்குச் சாதகமானதாகவும் ட்ரம்ப் நிர்வாகத்துக்குச் சற்றுப் பின்னடைவாகவும் கருதப்படுகிறது.

இராணுவம், கடல்சார் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பானவை இந்த அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, இந்தியாவுக்கு 22'பிரடேட்டர் கார்டியன்' ஆளில்லாத விமானங்களை விற்க முன்வந்து, அதற்கு அமெரிக்க அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் வழங்கியது. அமெரிக்காவிடமிருந்து இந்தியா, பாதுகாப்புத் தளவாடங்களை வாங்குவது மகிழ்ச்சி என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால், ஆளில்லா விமானங்களை வாங்குவது பற்றி இந்தியா இன்னும் உத்தரவாதம் தரவில்லை.

## தீவிரவாதமும் பாகிஸ்தானும்

இந்த ஆண்டின் கூட்டறிக்கையில் தீவிரவாத அமைப்புகள் மீது குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து செயல்படும் குழுக்கள் மீது ஆவேசம் காட்டப்பட்டுள்ளது. ட்ரம்ப் மோடி சந்திப்புக்குச் சில மணி நேரம் முன்பாக, ஹிஸ்புல் முஜாஹிதீன் தீவிரவாத அமைப்பின் தலைவர் சையது சலா ஹதீனை பன்னாட்டுத் தீவிரவாதியாக அமெரிக்க அயலுறவுத் துறை அறிவித்தது. இதை இந்தியா வரவேற்றுள்ளது. கடந்த ஆண்டு வெளியான கூட்டறிக்கையிலும் இதுபோன்ற வாசகங்களே இடம்பெற்றன.

"அல்கொய்தா, ஐ.எஸ், ஜெய்ஷ், முகமது, லஷ்கர்,தொய்பா, தாவூத் கெம்பெனி உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு ஒத்துழைப்புப் பலப்படுத்தப்படும். இது விடயத்தில் ஐ.நாவுடன் இணைந்து செயல் படவும் முடிவு செய்யப்பட்டுள்ளது" என அதில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் ஐ.நாவைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

"உலக நாடுகளுக்கு எதிரான தீவிரவாதத் தாக்குதலுக்குப் பாகிஸ்தான் ஏவுதளமாக இருக்கக் கூடாது என்பதை அந்த நாடு உறுதி செய்ய வேண்டும்" என அந்த நாட்டுத் தலைவர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் மும்பை (26-11) தாக்குல், மற்றும் எல்லைகள் தாண்டிய தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாகிஸ்தானுக்கு நேரடியாகவே கூட்டறிக்கை எச்சசரிக்கிறது. ஐ.நா பாதுகாப்புச் சபை மற்றும் அணுசக்தி தொழில்நுட்ப விநியோக நாடுகள் குழுவில் இந்தியா உறுப்பினராக இடம்பெற்றிட அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என இப்போதைய அறிக்கையிலும் முன்பு போலவே கூறப்பட்டுள்ளது.

## சீனா மீது மென் போக்கு

கடந்த 2015ஆம் ஆண்டு 'இந்தியா – அமெரிக்கா இடையே ஆசிய பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடல் பிராந்தியத்துக்கான கூட்டு தொலைநோக்கு வியூகம்' என்ற ஒப்பந்தம் கையெ முத்தானது. சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் ஓங்குவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, வளம், உறுதித்தன்மையை நிலைநாட்டவும் உதவிட இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.



மிக முக்கிய ஒப்பந்தங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த ஒப்பந்தம் பற்றி இப்போதைய கூட்டறிக்கை கண்டுகொள்ளவே இல்லை. இதன்மூலம் தென்சீனகக் கடல் பகுதி மீதான சீனாவின் ஆதிக்கப்போக்கு விவகாரத்தில் தனது கடுமையை அமெரிக்கா தளர்த்திக் கொண்டுள்ளதாகவே பார்க்கப்படுகிறது.

உதாரணமாக, இந்திய பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற கடல்வழி போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை இரண்டு நாடுகளும் உறுதி செய்ய வேண்டும் என கடந்த ஆண்டு கூறப்பட்டி ருந்தது. இந்த ஆண்டின் அறிக்கையோ, இந்திய பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற சுதந்திர கடல்வழி போக்குவரத்து, விமான போக்குவரத்து மற்றும் வர்த்தகத்துக்கு மரியாதை தருவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சீனாவுடன் ட்ரம்ப் நிர்வாகத்தின் உறவு மேம்பட்டிருப்பதைப் பிரதிபலிப்பதாகவே இது அமைந்துள்ளது.

## வடகொரியா மீது வன் போக்கு

இந்தியா – அமெரிக்கா கூட்டறிக்கையில் வடகொரியா புதிய வரவாக இடம்பெற்றுள்ளது. அதன் தலைவர் கிம் ஜோங் உன் தலைமையிலான வடகொரியாவின் அணுகுண்டு மற்றும் ஏவுகணைச் சோதனைகளுக்குக் கடிவாளம் போட்டு அதன் போர்க்குணத்துக்கு முடிவு காண்பது என்கிற அமெரிக்காவின் நோக்கமே இதற்குக் காரணம்.

'வடகொரியாவின் தொடர் அணுகுண்டு மற்றும் ஏவுகணைச் சோதனைக்கு இரண்டு தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். வடகொரியாவின் செயல் பிராந்திய பாதுகாப்பு மற்றும் உலக அமைதிக்குப் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. எனவே, இதுதொடர்பான ஐ.நா. விதிகளை வடகொரியா கடைப்பிடிக்க வேண்டும். இதைத் தடுத்து நிறுத்த இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்படும்' என கூட்ட றிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது இந்தியாவின் கடுமை மிக்க அறிக்கையாகக் கருதப்படுகிறது.

## ஆப்கானிஸ்தான்

மோடியின் அமெரிக்க பயணத்தின்போது, ஆப்கானிஸ்தானில் தலிபன் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வரும் அமெரிக்க இராணுவத் துக்கு உதவ 15 ஆயிரம் இந்திய இராணுவச் சிப்பாய்களை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை வைக்க ட்ரம்ப் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் வெளியானது. இதை உறுதிப்படுத்தும் வகையில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மெக்மாஸ்டர் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். எனினும், ஆப்கானிஸ்தானுக்கான இந்தியச் சிப்பாய்களின் எண்ணிக்கை குறித்து கூட்டறிக்கையில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை. அதேநேரம், ஆப்கனில், ஜனநாயகம், உறுதித்தன்மை, பாதுகாப்பு, வளம் ஆகியவற்றை நிலைநாட்ட இந்தியா கூடுதல் பங்களிப்பை வழங்க வேண்டும் என்று ட்ரம்ப் வலியுறுத்தினார் எனக் கூறப்பட்டுள்ளது.

> அமெரிக்கா இந்தியா இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒப்பந்தங்களின் முழு விவரம் அடுத்த சில நாட்களிலோ, வாரங்களிலோ தெரியவரும்.

## அனுசக்தி ஒப்பந்தம்

இந்திய அமெரிக்க அணுசக்தி (ஆக்கப்பூர்வ) ஒத்துழைப்பு உடன்படிக்கையின்படி, இந்திய அணுசக்தி கழகம், அமெரிக்காவின் நிறுவனங்களுக்கிடையே 6அணு உலைகளை இந்த மாதம் (ஜூன் 2017) அமைக்க ஒப்பந்தம் செய்தது. ஆனால் அது தாமதமாகும் எனத் தெரிகிறது. இதுகுறித்து ஜெய்சங்கர் கூறும்போது, 'வெஸ்டிங்ஹவுஸ் நிறுவனத்தின் நிதிநிலை இந்த ஆண்டு இறுதியில்தான் சரியாகும் எனத் தெரிகிறது. இதனால், அணு உலைகள் அமைப்பது தாமதமாகும்' என்றிருக்கிறார்.

இந்த ஆண்டின் அறிக்கையில், 'எரிசக்தி வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கான தடைகளை அகற்ற அமெரிக்கா தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்மூலம் இயற்கை எரிவாயு, நிலக்கரி, மரபுசாரா எரிசக்தி மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை ஊக்குவிக்கப்படும். இதனால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்' என்றும் கூறப்பட்டுள்ளது.

நன்... த ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையில் இருந்து...

அனார்கலி

## வருவார்... ஆனால், வர மாட்டார்...!

முஸ்லிம் காங்கிரசின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, அட்டாளைச் சேனைக்கு வழங்கப்படுமென்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வாக்குறுதி நீண்ட காலமாகவே கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்த விடயம் சார்ந்த பரபரப்பான சம்பவம் ஒன்று அண்மையில் மீண்டும் இடம்பெற்றது.

முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நசீர் நோன்பு திறக்கும் 'இப்தார்' நிகழ்வு ஒன்றை அட்டாளைச் சேனையில் ஏற்பாடு செய்தார்.

இதில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வாரென்ற காட்சிப்படுத்தல்களும் களை கட்டின. பல இடங்களில் தொங்க விடப்பட்டு சூழலையும் நகைத்தன. அவ்வளவுதான் பலர் தமது முகநூல் பக்கங்களிலும், ஏனைய சில சமூக வலைத்தளங்களிலும் அட்டாளைச் சேனைக்கான தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

இப்தார் நிகழ்வின்போது அமைச்சர் ஹக்கீம் நியமன விடயத்தை முழுமை செய்வாரென்ற வதந்திகள் கூடப் பரவத் தொடங்கின. நிகழ்வில் வைத்து ஹக்கீமிடம் நேரில் கேள்விகளைத் தொடுக்கவும் சிலர் தயார் நிலையிலிருந்தனர்.

இத்தனை எதிர்பார்ப்புக்கள் நிறைந்திருந்த நிலையில் அமைச்சர் ஹக்கீமோ இந்த இப்தார் நிகழ்வுக்கு வருகை தரவில்லை. அவருக்கு அன்றைய தினம் அரசதலைவருடன் அவசர சந்திப்பு இருந்ததாகக் கதைகள் பலவும் பின்னர் அவிழ்த்து விடப்பட்டன. தொங்கவிடப்பட்ட காட்சிகளே இறுதிவரை பல்லிளித்தன.



## பலாப்பழத்தில் கொள்ளை இலாபம்!

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளிலும், முக்கிய பொதுச் சந்தைகளிலும் வாகனங்களில் வைத்துப் பலாப்பழங்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் அதிகரித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பலாப்பழங்களை வாங்கிவரும் இந்த வியாபாரிகள் அவற்றைத் துண்டுதுண்டாக வெட்டி விற்பனை செய்வதில் கொள்ளை லாபம் ஈட்டி வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கொடிகாமம், சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் 200ரூபாவுக்கு வாங்கக்கூடிய ஒரு பழத்தை நான்கு துண்டுகளாக்கி, அதில் ஒரு ஒரு துண்டை 200ரூபா விலையில் விற்றுப் பெரும் லாபத்தை ஈட்டுகின்றனர் இந்தப் பணம் பறிப்போர். இந்த வியாபாரிகளால் விற்பனை செய்யப்படும் பலாக்காய்கள் இயற்கையாகப் பழுப்பதற்கு முன்னரே செயற்கையாக அதிகளவு மருந்தூட்டப்பட்டுப் பழுக்க வைக்கப்படுகின்றன.

இதனால் அவை சுவை குன்றியவையாகவும் கூட இருக்கின்றன. குறிப்பாகக் காரைதீவுப் பிரதான வீதியில் பலாப்பழ வியாபாரம் செய்வோர் இத்தகைய மோசடிகளில் அளவுக்கதிகமாக ஈடுபடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கவனம் கொள்வார்களா என்பதைச் சற்றே கவனித்துத்தான் பார்ப்போம்.







## முடிவுக்கு வந்தது தபால்துறைப் பிரச்சினை

முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தபால் திணைக்களத்தைப் பாதுகாக்கும் நோக்குடனேயே முன்னெடுக்கப்பட்டதாக, கிழக்கில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் யூ.எல்.எம். பைஸர் தெரிவித்தார். ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் சங்கம் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் தொடர்பில் அரசு நியாயமான தீர்வுகளை எழுத்தில் வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ஆக இவை காற்றில் அல்லது கோப்பாகத் தொடர்ந்தும் வார்த்தை நயப்பில் களிப்புறுபவையா என்பது தெளியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.




## கோலாகலம் பூண்டது நமழான்!

புனித நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்கள் தென்கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் சிறப்புற இடம்பெற்றன. இனவாதிகளின் அச்சுறுத்தல்கள், செயற்பாடுகள், அடாவடித்தனங்களுக்கு மத்தியிலும் நோன்புக் காலத்தை மேன்மையுற, இறை வணக்கம் பிரார்த்தனைகளுடன் கழித்த முஸ்லிம்கள், நோன்புப் பெருநாள் தொழுகைகளில் ஆயிரக்கணக்கில் திரண்டு கலந்து கொண்டமை சிறப்பு அம்சமாகும். இதேவேளை முஸ்லிம் பிரதேசங்களில், நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை மக்களுக்குத் தெரிவிக்கும் அரசியல்வாதிகளின் வாழ்த்துப் பதாகைகளும் இந்தமுறை பரவலாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



## கதிர்காமப் பாதயாத்திரை

தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்துக்கெனப் பாதயாத்திரையாகப் புறப்பட்ட பக்தர்கள் குழு எதிர்வரும் 5ஆம் திகதியளவில் அம்பாறை மாவட்டத்தை வந்தடையவுள்ளது.

வேல்சாமி மகேஸ்வரன் தலைமையிலான 102பக்தர்களைக் கொண்ட இந்தப் பாதையாத்திரைக் குழுவினர் ஜுலை 13ஆம் திகதியளவில் பாண்டியிருப்பு, கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று தம்பிலுவில், திருக்கோவில் வழியாக உகந்தை முருகன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து ஜுலை 15ஆம் திகதி காட்டுப்பாதை திறந்ததும் அதனூடாகக் கதிர்காமம் நோக்கிப் பயணமாவர். கந்தனருள் அவர்களைக் காத்தருளட்டும். அருளின் வடிவாய் அவர்களுக்குத் தீர்வினைக் கொடுத்து காட்சி தரட்டும். முருகா...!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்... 8

பயஸின் ஓடும் வேகத்தை அந்தச் சிராய்ப்புக் காயங்கள் குறைக்கின்றன. பக்கத்தில் ஓடிவந்த யாரோ ஒரு அம்மா, தான் அணிந்திருந்த சேலையின் முகத்தலைப்பைக் கிழித்து, பயஸின் காலில் ஏற்பட்ட காயத்தின்வழியே வழிந்த குருதியைத் துடைத்துவிட்டு, மீதித் துண்டால் கட்டுப்போட்டுத் தனது கைகளை இறுகப்பற்றிக் கண்ணீர் விட்டார். அந்த அம்மாவையும் அழைத்துக்கொண்டு நாம் சற்றும் தாமதிக்காது ஓடுகின்றோம்.

**வழி மாறிய தனித்த பயணம்**

வீதி எங்கணும் சடலங்கள், மாடுகள், நாய்கள், கைவிட்டுச் சென்ற வாகனங்கள், பெறுமதியான பொருள்கள் எல்லாமே சிதறிக்கிடக்கின்றன. அந்த உடல்கள் அழுகிக் காற்றோடும் கந்தகப் புகையோடும் சேர்ந்து மூக்குக்குள் நுழைகின்றன. மின்னலாக அந்த இடத்தைத் தாண்டுகின்றோம். புதுக்குடியிருப்புச் சந்தியைக் கடக்கப் போகின்றோம். அங்கே ஆள் நடமாட்டமே இல்லை! ஏதோ அசட்டுத்தனத்துடன் சூனியமான அந்தப் பகுதிக்குள் விஷயம் விளங்காமல் வந்துவிட்டோம் என்பதைப் புரிந்து கொண்டோம். மக்கள் அனைவரும் தேவிபுரத்துக்குப் பின் பக்கமாக நகர நாம் முன்பக்கமாக நகர்ந்ததாலேயே இந்தப் பிறழ்வு. இதன்வழி தனித்த நாங்கள் இன்னமும் உயிருடன் உலாவுவது சற்றே கலக்கத்தை விதைத்தது.

பிணங்களைத் தாண்டிச் சிவகரன் இருக்கும் இடத்துக்குப் போய்விட்டோம். அவருடைய வீட்டிலும் காணியிலும் மக்கள் இறுகிப்போய் இருந்தனர். அந்தத் தென்னஞ்சோலையின் ஒருபகுதியில் இடத்தைச் சுட்டி "வா பயஸ்...! இதிலை ஒரு பங்கரை வெட்டு. இவடத்திலையே தறப்பாளையும் கட்டு." என்று இடம் காட்டியதுடன் சிவகரன் எல்லோருக்கும் தேநீர் தந்தார்.

நீண்ட நாட்களின் பின் தேநீர்! அது அமிர்தம்! சுவைத்ததுக் குடித்து முடிப்பதற்குள் எங்கோ இருந்து வந்த செல் அருகில் விழுகின்றது. அது இரணைப்பாலைப் பகுதி. இரண்டு, மூன்று நாள்கள் அங்கே இருந்திருப்போம். சிவகரன் குடும்பம் ஒரு கூட்டுக்குடும்பம். தங்கள் எல்லோருக்கும் போதுமான பெரிய, பாதுகாப்பான பதுங்கு குழியை அவர்கள் அமைத்திருந்தனர். அங்கே நிற்கின்ற தென்னைகளைத் தறித்துப் பதுங்கு குழி அமைக்க எங்களுக்கும் அனுமதி தந்தனர்.



**பொக்கணை நோக்கிய நகர்வு**

நாம் தேவிபுரத்தின் முன் பக்கத்தாலும், அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி எல்லோரும் பின்பக்கத்தாலும் நகர்ந்ததில் அவர்களும் நாங்களும் பிரிந்தே பயணித்தோம். நாம் சிவகரன் வீட்டை அடைந்துவிட்ட அடுத்த நாளே அவர்கள் ஒரு பெரும் பாலைமரத்தின் கீழ் தஞ்சமடைந்திருந்ததைக் கண்டுபிடித்த பயஸ் எம்மிடத்துக்கும் அவர்களை அழைத்துவந்திருந்தார். முள்ளிவாய்க்கால் வரைக்கும் நாம் இப்படியாக ஒருவரை ஒருவர் பிரிந்து, தப்பி ஓடுவதும் பின்னர் எங்கோ ஒரு இடத்தில் சந்திப்பதுமாகவே இருந்தோம். இந்தப் பகுதிக்குள்ளும் செல் மழை அகோரமாயிற்று. மக்கள் அனைவருடைய அடுத்த இலக்கும் கடலை அண்மித்திருக்கும் பொக்கணைப் பகுதிதான். நாமும் அதை நோக்கி நகரலாம் என்று முடிவெடுத்தோம்.

**குடும்பத்தோடு கொல்லப்பட்டார் சிவகரன்!**

சிவகரன் குடும்பமும் பொக்கணைப் பகுதிக்குப் போவதற்காகத் தயாராகியது. அன்று காலையிலேயே அவ்விடத்திலிருந்தும் அவர்களிடமிருந்தும் புறப்பட்டு பொக்கணைக்கு ஓடத்தொடங்கினோம்நாங்கள். சிவகரன் குடும்பம் இருந்த பதுங்கு குழிக்குமேல் செல் விழுந்து குடும்பமே இல்லாமல் போய்விட்டது என்ற செய்தி அன்று மாலை எங்கள் காதுகளுக்கு எட்டிற்று. பதைபதைத்துப் போனோம். சிவகரன், மனைவி, குழந்தைகள் குடும்பமாகக் கொலை செய்யப்பட்டுவிட்டனர். அழுகையும் ஆற்றாமையும் வலிகளைச் சுமக்க முடியாத தன்மையும் உணவு இல்லாததால் உணர்வை வெளிப்படுத்த முடியாமலும் உடல் வதங்கி நகர்கின்றோம். நகர்ந்து கொண்டிருக்கும் இடங்களெங்கும் பரவலாக விழுந்து சிதறுகின்ற கொத்துக் குண்டுகள் அகப்படுபவர்களின் உயிர்களைப் பறித்து மறைகின்றன. பார்த்துக்கொள்ள மட்டும் முடிந்த வலியுடன் எமது மனம் துடிக்கின்றது.

**அவரவரால் முடிந்த உதவிகள்**

வயதுமுதிர்ந்த ஐயா ஒருவருக்குச் சன்னம் கணுக்காலில் பட்டுவிட்டது. காயங்களை ஆற்றும் மருந்துகள் கண்ணுக்கெட்டிய தொலைவிலும் இல்லை. அவரைத் தாங்கிப் பிடித்த இரண்டு இளைஞர்கள் தமக்குக் கிடைத்த சவரம் செய்யும் பிளேற் கொண்டு வெட்டியதில் உட்புகுந்த குண்டுச் சிதறலை வெளியே எடுத்தனர். அதன்பின்னர் ஐயா காலை நிலத்தில் ஊன்றி நடக்கத் தொடங்கினார் அந்தப் பொழுதில் எது அவசியமோ? எது அவரவர் மூளைக்குச் சரியென்று படுகின்றதோ? அதை அனைவரும் ஆமோதித்தனர், அதையே செய்தனர். ஒருவாறாக உயிரைக் கைப்பிடித்துப் பொக்கணை வந்துவிட்டோம். கடற்கரை மணல்வெளியில் எண்ணுக்கணக்கற்ற கூடாரங்கள் குவிந்து கிடந்தன. மக்கள் ஒரு ஓரமாக ஒதுக்கப்பட்டுவிட்டனர். எந்த வசதி வாய்ப்புக்களும் இருக்கவில்லை. மலசலகூடம் இல்லை, தண்ணீர் வசதி இல்லை. வெயிலும் மழையும் உச்சமாகக் கிடைக்கும் மணல்வெளிக்குள் நாம் குடியிருக்கத் துணிகின்றோம்...

(தொடரும்)

நீண்ட நாள்களின் பின் தேநீர்! அது அமிர்தம்! சுவைத்ததுக் குடித்து முடிப்பதற்குள் எங்கோ இருந்து வந்த செல் அருகில் விழுகின்றது. அது இரணைப் பாலைப் பகுதி. இரண்டு, மூன்று நாள்கள் அங்கே இருந்திருப்போம். சிவகரன் குடும்பம் ஒரு கூட்டுக்குடும்பம். தங்கள் எல்லோருக்கும் போதுமான பெரிய, பாதுகாப்பான பதுங்குக் குழியை அவர்கள் அமைத்திருந்தனர். அங்கே நிற்கின்ற தென்னைகளைத் தறித்துப் பதுங்கு குழி அமைக்க எங்களுக்கும் அனுமதி தந்தனர்.

# தேவையின் வினா

வானவன்



இன்னும்
மீதமாயிருக்கிறது காலம்.
காலம் விரைந்துகொண்டே
போகிறது
எல்லாவற்றையும்
எடுத்தபடி.
எடுத்த யாவிலும்
சிரிப்பு, அழுகை, கோபம்,
விரக்தி என எல்லாமும்
நிறையவே இருந்தன.

இருந்தவை
இல்லாமலும் ஆகலாம்
கூடவாகவும் ஆகலாம்
அது அதனதன்
இயல்பையும்
தேவையையும் பொறுத்தது.

தேவைகள்தான்
எப்போதும் கூடவே
இருக்குமென
நீர் கூறினீர்.
நீர் ஒவ்வொன்றையும்
கூறினீர்.
ஆசை கூடாது என்றீர்.
தேவை இருந்துகொண்டே
இருக்க
ஆசை இருக்குமல்லவா?
இருக்க ஒரு மரநிழல்
தேவையா?
ஆசையா??

ஆசைப்படுவது
ஆடம்பரம் நோக்கியா?
ஆன்மீகம் நோக்கியா??
ஆன்மீகத்துக்கு
ஆடம்பரம்
விரோதியெனில்
நீர் கொண்ட நிலை என்ன?

வேம்பையோ புளியையோ
அடியோடு வீழ்த்திக்
கோபுரம்
எழுப்புவது
எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெற்றி பெற சுலபமான வழிகள்

- ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்வதை நிறுத்துங்கள்.
- முக்கியத்துவம் வாய்ந்த செயல்களைத் தேர்வு செய்துகொள்ளுங்கள்.
- உடற்பயிற்சி செய்யுங்கள்.
- தேவையில்லாதபோது இணையம்/ கைபேசியை துண்டித்து விடுங்கள்.
- முடியாது என்பதைக் கனிவாகச் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்.
- அதிகாலையில் 15 நிமிடங்கள் முன்பாக தூக்கத்தில் இருந்து எழ முயற்சி செய்யுங்கள்.
- போதுமான அளவு ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்
- எதிர்பார்ப்புகளை மேலாண்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்.
- செயற்பட அதிக நேரம் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்.
- தினமும் தியானப் பயிற்சியில் ஈடுபடுங்கள்.

## கவலை வேண்டாம் வெற்றி அருகே




பூக்கள் உதிர்ந்து விழும்
என்பதற்காக மரங்கள்
வருத்தப்படுவதில்லை

தென்றல் அசைவற்றிருக்கும்
என்பதற்காக மலர்கள்
வருத்தப்படுவதில்லை


நிலவு தேய்ந்து விடும்
என்பதற்காக வானம்
வருத்தப்படுவதில்லை

பின்பு எதற்காக
நீ மட்டும் தோல்வி கண்டு
துவண்டு போகிறாய்?

காலம் இருக்கு அது கனிவது
நிச்சயம்
நேரம் இருக்கு அதுவும் நடப்பது நிச்சயம்
உழைப்பு உன்னிடம் சிறக்கையிலே வெற்றி நிச்சயம்!



பா.ஆதிகேசன்,
தரம் - 1 பி,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



ஷா.தேவந்திஹா,
கார்மேல் முன்பள்ளி,
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



எந்த ஒரு உயிருக்கும் இடையூறு செய்யாத வாழ்க்கையே, உண்மையான வாழ்க்கை!

## சிரி... சிரி...



ஆசிரியர்: என்னடா கொப்பியில் பால் 15 ரூபா, அரிசி 40 ரூபா என்று எழுதி வைத்திருக்கிறாய்?

மாணவன் : நீங்கதானே சேர் சொன்னீங்கள், நாளைக்கு வரும் போது வீட்டுக் கணக்கை மறக்காமல்எழுதிக்கொண்டு வர வேணும் எண்டு...!

ஆசிரியர் : ?

## அறிவோம் அறிவை

1. கீரை வகைகளில் அதிக புரதமும், கலோரியும் உடையது முருங்கைக் கீரை.
2. லிபியாவின் தேசியக்கொடி பச்சை நிறத் துணி.
3. யப்பான் நாட்டு மயில்கள் சிவப்பாக முட்டையிடும்.
4. கிளிகளுக்குப் பேசும் சக்தி அதிகம் உண்டு.
5. ஒட்டகம் 300 கிலோ நிறையை சுமந்து செல்லும்.
6. நாய்களுக்கு வியர்ப்பது கிடையாது.
7. நத்தைகளில் 80 ஆயிரம் வகைகள் உள்ளன.
8. தன் காதை நாவால் சுத்தம் செய்யும் விலங்கு ஒட்டகமாகும்.
9. பென்குயினால் பறக்க முடியாது. ஆனாலும், 6 அடி உயரம் வரை தாவும்.
10. வெளவால்கள் பறக்கும் முலையூட்டி கள்

# பிராயச்சித்தம்

பாபு எட்டாம் வகுப்பு மாணவன். அன்று காலை வழக்கத்தை விட அதிக நேரம் தூங்கிவிட்டதால், அவசர அவசரமாகப் பாடசாலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அறை அலுமாரியிலிருந்த சட்டையை அவன் எடுத்தபோது, மேலிருந்து "கீச் கீச்" என்று சத்தம் கேட்டது. "அது என்னவாக இருக்கும்?" என்று யோசித்த போது, அடுப்பங்கரையிலிருந்து அவனது அம்மாவின் குரல் கேட்டது.

"டேய்... பாபு! இரும்பு அலுமாரியை மெதுவாகத் திறந்து மூடு. மேலே சிட்டுக்குருவி கூடு கட்டி குஞ்சு பொரிச்சிருக்கு. கீழே விழுந்துடப் போகுது" என்றாள்.

"ஐ... அப்படியா, நான் மேலே ஏறிக் குருவிக் குஞ்சைப் பார்க்கப் போறேம்மா" என்றான் பாபு. "அதெல்லாம் செய்யக்கூடாது பாபு. ஏற்கனவே நேரமாகி விட்டது. சீக்கிரம் பாடசாலைக்குப் போற வழியைப் பாரு" என்றாள் அம்மா.

வகுப்பில் உயிரியல் பாடம் நடந்துகொண்டு இருந்தது. ஆனால், பாபுவின் கவனம் முழுக்க அந்தக் குருவிக் குஞ்சுகள் மேலேயே இருந்தது.

பாடம் நடத்திக்கொண்டிருந்த ஆசிரியர், "ஆண்டுதோறும் மார்ச் மாதம் 20ஆம் திகதி என்ன தினம் என்று யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார்.

யாருக்கும் அதற்கான பதில் தெரியாததால், எல்லோரும் அமைதியாக இருந்தனர். வகுப்புத் தொடங்கியது முதலே பாபுவின் கவனம் பாடத்தில் இல்லாததைக் கவனித்திருந்த ஆசிரியர், "பாபு, எழுந்திரு. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு பார்ப்போம்" என்றார். திடீரென்று ஆசிரியர் தன் பெயரைச் சொல்லிக் கேள்வி கேட்டவுடன், எழுந்து நின்று அலங்க மலங்க விழித்தான் பாபு. அவனையும் அறியாமல் அவன் வாய் சிட்டுக்குருவி என்று முணுமுணுத்தது.



ஆசிரியர் கேள்விக்குத் துளிகூட சம்பந்தமே இல்லாமல் அவன் இப்படிச் சொன்னதும், மாணவர்கள் அனைவரும் உரக்கச் சிரித்தனர். அப்போதுதான் தன் தவறை உணர்ந்து கொண்ட பாபு வெட்கத்தில் தலை கவிழ்ந்தான் பாபு. ஆனால் சிறிதும் எதிர்பாராதவிதமாய் ஆசிரியரோ, "ஏன் எல்லோரும் சிரிக்கிறீர்கள்? அவன் சரியான பதிலைத்தான் சொல்லியிருக்கிறான்" என்றார். எல்லோருக்கும் ஆச்சரியம். "அழிவடைந்துவரும் சிட்டுக்குருவி இனத்தைக் காப்பாற்ற உலகம் முழுவதும் மார்ச் மாதம் 20ஆம் திகதி சிட்டுக்குருவி தினம் கொண்டாடப்படுகிறது. ஆங்கிலத்தில் இதை "House sparrow day" என்று சொல்வார்கள். சரியான பதிலைச் சொன்ன பாபுவை நான் பாராட்டுகிறேன்" என்றார் ஆசிரியர். "மனிதர்கள் காடுகளை அழித்தமையால், தற்போது இவ் வகையான பறவைகள் இனப்பெருக்கம் செய்ய முடியாமல் எண்ணிக்கையிலே குறைவடைந்து வருகிறன. ஆதலால், உங்களால் முடிந்த அளவுக்கு நீங்கள் ஒவ்வொரு வரும் மரநடுகை செய்ய வேண்டும். அப்பதான் இந்தப் பறவை இனத்தை எங்களாலை காப்பாற்ற முடியும்" என்றார் ஆசிரியர்.

எப்போது மணி அடிக்கும் என்று ஆவலுடன் காத்திருந்தான் பாபு. வீட்டுக்கு வந்த போது, அவன் அம்மா வெளியே சென்றிருந்தார். அம்மா வந்துவிட்டால் குருவிக் குஞ்சைப் பார்க்க அனுமதிக்கமாட்டார் என்று அவனுக்குத் தெரியும். எனவே, அம்மா வருவதற்குள் ஏறிப் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையில் ஒரு முக்காலியைப் போட்டு அதில் ஏறினான்.

அப்போது குஞ்சுகளுக்கு இரை ஊட்டிக்கொண்டிருந்த தாய்ப்பறவை, பாபுவைக் கண்டதும் மிரண்டு போய் "கீச்கீச்" என்று கத்திக்கொண்டே ஜன்னல் கம்பி மீது அமர்ந்து கொண்டது. முக்காலியில் ஏறியும் அவனால் சரியாகப் பார்க்க முடியவில்லை என்பதால், குருவிக் கூட்டை அவன் பக்கம் நோக்கி இழுத்தான். அப்போது அதிலிருந்த ஒரு குஞ்சு தத்தித் தத்திப் பறந்து அலுமாரியின் ஓரத்துக்கு வந்ததால், மேலேயிருந்து பொத்தென்று தரையில் விழுந்து ஒரு சில நிமிடங்கள் துடிதுடித்துப் பின் இறந்து போய்விட்டது. "என்னடா...செய்கிறாய்?" என்று பாபுவின் அம்மா அடித்துப் பிடித்துக்கொண்டு அங்கு ஓடி வருவதற்கும், குருவிக் குஞ்சு கீழே விழுந்து இறப்பதற்கும் சரியாக இருந்தது.

"அடப்பாவி! காலையிலதான் சொன்னேன். அந்தத் தாய்க் குருவி எப்படி கத்துது பாரு? அநியாயமாய் ஒரு குஞ்சை சாகடிச்சிட்டியே" என்று திட்டினாள் அம்மா.

குஞ்சு கீழே விழுந்து துடிதுடித்து இறந்த காட்சி, பாபுவை நிலைகுலையச் செய்தது. இரவுப் பொழுதில் நீண்டநேரம் வரை அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அந்தத் தாய்க் குருவியின் கதறல் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்து வெளியில் சென்ற பாபு, தான் சேர்த்து வைத்திருந்த பணத்தில் செடிகளையும், மரக்கன்றுகளையும் வாங்கி வந்து வீட்டின் பின்புறமிருந்த தோட்டத்தில் நட்டான். "அம்மா! என் பிறந்தநாளுக்கு உடை வாங்க வேண்டாம். அதுக்குப் பதிலா காசை என்னட்டைக் கொடுங்கோ. அந்தப் பணத்தைக் கொண்டு குருவிக் கூடுகளை வாங்கி வீட்டுப் 'போர்டிகோ'வில் தொங்கவிடப் போகிறேன். தினம் தினம் எனக்குக் கொடுக்கிற சாப்பாட்டு அரிசியிலிருந்து ஒரு பிடியை என்னிடம் கொடுங்க. அதை மாடியில ஒரு ஓரமாகத் தூவி வைக்கப்போறேன். குருவிகளுக்கு அது உணவாகப் பயன்படும்" என்று சொன்னான், சொன்னபடியே அனைத்தையும் தினமும் செய்து வரலானான்.

**நீதி : உயிர்களிடத்தில் அன்பாய் இருப்போம்.**

# பழங்களின் நிறங்களும் குணங்களும்...

## மஞ்சள் நிறப் பழங்கள்

எலுமிச்சை, பப்பாளி, வாழைப்பழம், அன்னாசிப்பழம் போன்றவை மஞ்சள் நிறப் பழங்களுள் அடங்கும். மஞ்சள் நிறப் பழங்களில் கல்சியம், உயிர்ச்சத்து 'சி', உயிர்ச்சத்துஏ, போலிக் அமிலம் போன்றவை நிறைந்துள்ளன. இதனால் எலும்புகள் பலப்படும். சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும். குருதி சுத்தமடையும். பொதுவாக மஞ்சள் நிறப் பழங்களை எல்லோரும் சாப்பிடலாம்.

இது நரம்புத் தளர்வைப் போக்கும். மயக்கமுள்ளவர்களுக்கு உடனே உணர்வை உண்டாக்கும். மன அழுத்தத்தைப் போக்கும். சமிபாட்டைக் கூட்டும். மலச்சிக்கலைப் போக்கும். குடற்புண்களை ஆற்றும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். கண் பார்வையைத் தெளிவுபடுத்தும். வாழைப்பழம் பொதுவாக கை கால் நடுக்கம், உதறல் போன்றவற்றைத் தடுக்கும் தன்மை



கொண்டது. குடற்புண், வாய் நாற்றத்தை நீக்கும். சமிபாட்டுத் தன்மையைக் கூட்டும். கண் பார்வையைத் தெளிவாக்கும். ஞாபகசக்தியை அதிகரிக்கும். முகப்பொலிவு கொடுக்கும். பெண்களுக்கு கழுத்துப்பகுதி, முகம், கை கால் முட்டிகளில் ஏற்படும் கரும்படலத்தைப் போக்கும். குருதிச் சுற்றோட்டத்தைச் சீர்ப்படுத்தும். மலச் சிக்கலைத் தவிர்க்கும். உடலுக்குக் குளிர்ச்சி கொடுக்கும். சிறுநீரகத்தைச் சுத்தப்படுத்தும். இது ஒரு கிருமி நாசினி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பானவன் அசராதவன் அடங்காதவன் ???

நரைத்த தாத்தாவாகிச் சென்னைக்கு வந்து... ஒரு இளம்பெண்ணைக் காதலித்து... அந்தக் காதலிலும் தோல்வி அடைந்து... பழிவாங்கத் துடிக்கும் சைக்கோ ஆகி... இப்படியான போக்குடன் நீளும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தின் கதையை விமர்சனத்துக்கு எடுப்பது என்பதே அந்தப் படத்துக்குக் கிடைத்த பாக்கியம்தான்.



மதுரையைச் சேர்ந்த ஒரு ரவுடி காதலில்தோல்வி அடைந்து... டுபாய்க்குச் சென்று பெரிய தாதாவாகி... பின்னர் நரைத்த தாத்தாவாகிச் சென்னைக்கு வந்து... ஒரு இளம்பெண்ணைக் காதலித்து... அந்தக் காதலிலும் தோல்வி அடைந்து... பழி வாங்கத் துடிக்கும் சைக்கோ ஆகி... இப்படியான போக்குடன் நீளும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தின் கதையை விமர்சனத்துக்கு எடுப்பது என்பதே அந்தப் படத்துக்குக் கிடைத்த பாக்கியம்தான்.

கூலிப்படையைச் சேர்ந்த ரவுடியான சிம்பு, காரணமே இல்லாமல் ஸ்ரேயாவின் காதலுக்காகத் தான்கொண்ட ரவுடித்தனத்தை விட்டுவிட நினைக்கிறார். இந்த நேரத்தில் பொலிஸ் அவரைக் கைது செய்கிறது. ஸ்ரேயாவுக்குத் திருமணம் நெருங்கும்போது சிறையிலுள்ள கைதிகள் சேர்ந்து சிறைச்சாலையை உடைத்துச் சிம்புவைத் தப்ப வைக்கின்றார் கள். ஆனால், அவர், ஸ்ரேயாவுக்காகத் தன் காதலை விட்டுக்கொடுக்கிறார். தமன்னாவிடம் தாத்தா சிம்பு தன் காதலைச் சொல்ல நினைக்கும்போது, அவர் இளைஞர் சிம்புவைக் காதலிப்பதாகச் சொல்கிறார். இதனால் ஆத்திரம் அடையும் தாத்தா, தமன்னாவைப் பழிவாங்கத் திட்டம் போடுகிறார். அந்தத் திட்டம் நிறைவேறியதா...? என்று தெரிந்துகொள்ள 2ஆம் பாகம் வரைக் காத்திருக்கச் சொல்கிறார்கள். அதுவும் இத்தனையும் பார்த்த பின்பும்கூட.

இப்படியாக 'அன்பானவன் அடங்காதவன் அசராதவன்' படத்தின் கதைச் சுருக்கத்தை எழுதினால்கூடப் படத்தில் ஏதோ கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் ஒரு கட்டுக்குள் இருப்பதாகப் படிக்கிறவர்கள் நம்பிவிடும் அபாயம் உள்ளது. அப்படியில்லைப் படம். வன்முறை, பாலியல் வக்கிரம், பெண்களை இழிவுபடுத்துவது இவை மூன்றின் மீது மட்டுமே சவாரி செய்திருக்கிறார்கள் சிம்புவும், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனும்.



இரண்டு கதாபாத்திரங்கள், மூன்று விதமான தோற்றங்கள் எனச் சிம்பு கலக்க வேண்டிய படம்தான். ஆனால், அப்படியெல்லாம் எதுவும் இல்லை. காதல் என்ற பெயரில் சிம்பு பேசும் வசனங்களைச் சகித்துக்கொள்ளவே முடியவில்லை.

கோவைசரளா, கஸ்தூரி, ஸ்ரேயா, தமன்னா என்று பேர் வாங்கிய நடிகைகள் எல்லாம் இதில் பேருக்குத்தான் இருக்கிறார்கள். படத்தில் ஒரே ஒரு ஆறுதல் 'குடிப் பழக்கம் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும்' என மொட்டை ராஜேந்திரன் குரலில் (கட்டாயத்துக்காகப்) போடுகின்ற எச்சரிக்கைச் சுலோகம்.

கிருஷ்ணன் வசந்த் ஒளிப்பதிவில் எந்தக் குறையும் இல்லை. யுவன் ஷங்கர் ராஜா அளவுக்கு அதிகமாகவே வாசித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை கதை எந்தவொரு இலக்குமில்லாமல் தறிக்கெட்டுப் பயணிக்கிறது. சிம்பு எதற்காகக் கொலை செய்கிறார்? நாட்டு நடைமுறைகள் எதுவும் இல்லாமல் எப்படித் துபாய் போகிறார்? அங்கு எவ்வாறு பெரிய தாதா ஆகிறார்? கஸ்தூரி தலைமையிலான பொலிசார் உலகம் முழுவதும் சல்லடை வீசித் தேடும்போது, எப்படி அசால்ட்டாகத் தமன்னாவை காதலித்துக்கொண்டிருக்கிறார்? இன்னும் ஏராளம் உல்டாக்கள் உண்டு.

60வயதான தாத்தாவுக்கு 20வயதுப் பெண் மீது ஏற்படும் உணர்வுக்குப் பெயர் காதலா? 'இன்னைக்கு நைட்டுக்கு மட்டும்?' என ஒலிக்கும் பாடல் தேவையா? எந்தப் பழி பாவமும் அறியாமல் இருக்கும் ஒருபெண் தன்னைக் காதலிக்கவில்லை என்பதற்காக அவள் மீது வஞ்சம் வைப்பது, பழிவாங்கத் துடிப்பது எத்தகைய வக்கிரம்? வன்முறை? நியாய தர்மங்கள் பற்றியோ, நாட்டு நடப்பு பற்றியோ படக்குழு கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

'த்ரிஷா இல்லன்னா நயன்தாரா' படத்தின் இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனின் இரண்டாவது படம் இது. சமூகப் பொறுப்பில்லாத வேலையை... அதையும் உருப்படியாகச் செய்யாமல்... இதையெல்லாம் என்னவென்றுதான் சொல்வது...?

**இரண்டு படத்தையும் பார்ப்பது நேர விரயம்**

# வனமகன்

Son Of Nature

## பழங்குடிகள் பற்றிய பார்வை



### கதைப்பார்வை

தனது தந்தையின் நண்பர் பிரகாஷ்ராஜின் உதவியுடன் பன்னாட்டளவில் தொழில் நிறுவனங்களை நடத்துகிறார் சாயிஷா சைகல். புதுவருடக் கொண்டாட்டத்துக்காக அவர் தன் நண்பர்கள் சகிதம் அந்த வனத்துக்குச் செல்கிறார். காட்டுப்பகுதியில் சென்று கொண்டிருக்கும் அவர்களுடைய கார் எதிர்பாராத விதமாக வனவாசியான ஜெயம்ரவி மீது மோதி விடுகின்றது. படுகாயமடைந்த ஜெயம்ரவியைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற சூழ்நிலையில் சாயிஷா குழுவினர் அவரைச் சென் னைக்குக் கொண்டு வந்து வைத்தியசாலையில் சேர்க்கின்றனர். காட்டில் வாழும் காட்டுவாசி பணத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் மனிதர்களைச் சந்தித்தால் எப்படியிருக்கும்? ஜெயம் ரவிக்கும் சாயிஷாவுக்கும், எப்படிக் காதல் மலர்கின்றது என்பதாக நகர்கிறது கதை.

### பாதிப்புக்களும் பலவீனங்களும்

காலமாற்றம், நகர வளர்ச்சி, நவீன தொழில்நுட்பம் எதைப் பற்றியும் தெரிந்துகொள்ளும் அவசியமே இல்லாமல் வனத்தில் மகிழ்ச்சியாகச் சுற்றித் தெரியும் வனவாசிகளின் வாழ்வியலைக் காட்சிப்படுத்தி, நவீன கலாசாரத்தால் சீரழியும் இயற்கை, மறைந்து கொண்டிருக்கும் மனிதாபிமானம் என்று இயக்குநர் விஜய் எடுத்துக் கொண்ட களம் சுவையானதே ஆனால், சில வெற்றுமொழிப் படங்களின் பாதிப்புக்கள் நிறையவே இருக்கின்றன. நகர்ப்புறச் சுவடே தெரியாத கானகன் ஒருவன் நகர வாழ்க்கைக்கு வந்தால், நிலைமை எப்படி இருக்கும் என்பதை ஜெயம் ரவியின் உடல் மொழிகளும், பார்வையும் நகைச்சுவையாக முன்னிறுத்துகின்றன.

சுவற்றை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் செல்வது, மரத்தில் ஏறித் தூங்குவது, துணிக் கடையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள பொம்மை மீது அம்பு எய்யப் பாய்வது, ரீ.வியில் வரும் சிங்கம், புலியை வேட்டையாடுவது, அலைபேசித் திரையில் ஒருவரை ஒருவர் முகம் பார்த்து உரையாடுவகை; கண்டு பிரமிப்பது என முதல்பாதியில் ஜெயம் ரவியின் நடிப்பால் திரையரங்கில் அதிக சிரிப்புகள். வசனமே பேசாமல், உடல் மொழியின் மூலம் நடிப்பில் கவர்கிறார். ஆனாலும் இந்த காட்சியமைப்புகள் பழங்குடியினத்தின் சமகாலப் பிரச்சினைகளையோ, உணர்வுகளையோ பேசுவதற்குப் பதிலாக வெறும் சிரிப்புக்காக மாத்திரமே பயன்படுத்தப் பட்டது பலவீனம்.

### பாத்திர வார்ப்புக்கள்

நாயகி அழகாக இருக்கிறார். நாயகனைவிடக் கூடுதலாகவே திரையை (போரடிக்காமல்) ஆக்கிரமிக்கிறார். பிரகாஷ்ராஜ் எப்போதும்போல நல்லவராகத் தோன்றி வில்லனாக மாறுகிறார். வனவாசி கதாபாத்திரத்தில் வேல்.ராமமூர்த்தி கச்சிதமாக மிளிர்கிறார். தம்பிராமையா, நகைச்சுவைக் காட்சிகளில் சிறப்பான பங்களிப்பை அளித்திருக்கிறார்.

### ஒளிப்பதிவு, இசை, படத்தொகுப்பு

வனம், நகரம் இரண்டையும் தன் சிறப்பான ஒளிப்பதிவால் பிரதிபலித்திருக்கிறார் திருநாவுக்கரசு. ஹாரிஸ் ஜெயராஜின் 50ஆவது படம். தனியாகச் சொல்ல எதுவும் இல்லை. அன்ரனியின் படத்தொகுப்புப் பருவாயில்லை. சாயிஷா மலையில் இருந்து கீழே தவறி விழுவது, இராணுவத்தினரோடு புலி சண்டையிடுவது போன்ற கிராபிக்ஸ் காட்சிகளில் தளர்வுகள் இருக்கத்தான் செய்கின்றன.

படத்தின் இரண்டாம்பாதி தொடங்கும்போதே பிரிந்த தன்னுடைய பழங்குடிகளோடு மீண்டும் ஜெயம்ரவி சேர்ந்துவிடுவார் என்று தெரிகிறது. அதை நோக்கிக் கனமான காட்சிகளைக் கட்டமைக்காமல் கடத்தாமல், சுற்றி வளைத்துக் கொண்டு போனது சற்று அயர்ச்சி தான்.

திரைக்கதையில் பழங்குடிகளின் உணர்வையும், வலியையும் இன்னும் கொஞ்சம் திணித்திருந்தால் வனமகனின் வசீகரம் கூடியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறிலாங்காப் படைகள்

## புகழ் உலகெங்கும் பரவச்செய்ய வேண்டும்

மனோஜ் குமாரசாமி

கேள்வி - "ஒரு நாட்டின் இராணுவம் எப்படி இருக்கவேண்டும்? அதன் வேலைதான் என்ன?"

பதில்: "இராணுவம் எண்டது ஒரு நாட்டின்ர இறைமையைப் பாதுகாக்கிறதுக்காகப் பலமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிற அரசவேலையாள் எண்டும் சொல்லலாம். அதுக்கு வேலை அரசையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கிறது மட்டும்தான். அது ஆயுதங்களைக் கொண்டிருக்கிற மாதிரிச் சில அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.... எப்பிடியிருந்தாலும் ஜனநாயக நாடென்றால் அது அரசுக்குக் கட்டுப்பட்டிருக்கும். அதோட அரச பொருளாதாரங்களைப் பாதுகாத்தல், அரச நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல், அவசர காலங்களில் சேவை புரிதல் எண்டும் இராணுவத்துக்கு வேலைகள் கனக்க இருக்கு..."

மேற்கண்ட கேள்விக்குச் சாதாரண குடிமகன் ஒருவரின் பதில் இவ்வாறே அமையும் ஆனால், இலங்கை இராணுவத்தை நன்குணர்ந்த ஒருவரோ அல்லது அதில் மேஜர் ஜெனரல் தரத்திலிருக்கும் ஒருவரோ இதே கேள்விக்கு எவ்வாறு பதில் வழங்குவர்.

பதில்- "இராணுவம் என்பதை அடக்குமுறைக்கும் பயன்படுத்தலாம். ஏன்...? நாம் ஹெய்ட்டியில் செய்ததைப்போல முறைகேடுகளுக்கும் பயன்படுத்தலாம். ஆயுதம் வைச்சிருந்தால் அதைப் பயன்படுத்தவேணும்... நம்மவர், பல்கலைக்கழக மாணவர்கள் ரெண்டு பேரில சூட்டுப் பயிற்சி எடுத்திருந்தது உங்களுக்குத் தெரியும்தானே...? மற்றது இளம்பெண்கள் எண்டால் இராணுவத்துக்குக் கொள்ளைப் பிரியம்தான். அந்த விசயத்தில இராணுவத்தின்மீது ஏதாச்சும் குறை, குற்றம் கண்டறிஞ்சால், உடனடியாக அதுகளில இருந்து இராணுவத்த விடுவிக்கவும் தெரியவேணும்..." இப்படியாகத்தான் இலங்கை மேஜர் ஜெனரல்கள் விளக்கமளித்தும் உள்ளனர்.

**உலகுக்குப் புரிந்தது உண்மை!**

இலங்கை இராணுவம் பற்றிய உள்நாட்டவர்களின் புரிதல்கள் அனைத்தும் 2009களில் முடிவடைந்த உள்நாட்டுப்போருடன் முழுமையடைந்திருந்தன. உள்நாட்டவர்களைப் பொறுத்தமட்டில் இலங்கை இராணுவம் என்பது பெண்களை முறைகேட்டுக்குட்படுத்தும், நிராயுத பாணிகளான இளைஞர்களை ஆயுதம் கொண்டு தாக்கிச் சாகடிக்கும், இன்னோரென்ன பல வழிகளில் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்குப் பயன்படும் ஆளும் வர்க்கத்தின் ஒரு ஆயுதக் குழுமம் என்றே தெரிந்து வைத்திருக்கின்றார்கள். அது உள்நாட்டில் இந்நாட்டு இராணுவம் நடந்துகொண்ட, நடந்துகொண்டிருக்கின்ற போக்குகளில் இருந்து அவர்களுக்குக் கிடைத்த அனுபவ அறிவு. உள்நாட்டவர்களின் இத்தகைய நிலையை உணராதும், பெரும் பாரதூரமாகக் கருதாதும் இருந்துவந்த பன்னாட்டினரும் பிற்காலங்களில் இந்த நாட்டு இராணுவத்தினரால் தமக்குக் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு இதுவரை காலமும் இவர்கள் விடயத்தில் தாம் காட்டிவந்த தயக்கங்களைத் தவிர்த்து இப்போது அவர்களும் இந்நாட்டு இராணுவத்தினரின் இழிநிலையைப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர். ஹெய்ட்டியில் ஐ.நாவின் அமைதிப்படையாக நிறுத்தப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் சிலரிலிருந்தே அந்த அனுபவம் அவர்களுக்கு முதல் முறையாக அளிக்கப்பட்டிருந்தது.

**கறையோடு நாடு திரும்பிய படைகள்!**

பாலியல் முறைகேடுகளுக்குச் சிறுவர், சிறுமியரை உட்படுத்தியமையைக் ஹெய்ட்டியில் அமைதிப் படையாக நிலைத்திருந்த இலங்கைப் படைவீரர்கள் மீது கண்டறியப்பட்டதிலேயே அவர்களுக்கும் அந்த அனுபவம் கிடைத்திருந்தது. இலங்கை இராணுவத்துக்கு இத்தகைய முறைகேடுகளில் ஈடுபடுவது ஒன்றும் புதுமையல்ல என்று உள்நாட்டவர் புகைந்து கொண்டாலும் வெளியுலகத்துக்கு அந்த உண்மை அப்பட்டமானது அதுவே முதல் முறையாக இருந்தது. 2007இல் ஹெய்ட்டி பிள்ளைகள் குழுவொன்று தம்மை முறைகேட்டுக்கு உட்படுத்தியதாக நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை அமைதிகாக்கும் பணியாளர்களை அடையாளம் கண்டிருந்தது. 3வருடங்களாகச் சிறுவர்களைக் கும்பலாக முறைகேட்டுக்கு ஈடுபட்டிருந்தியிருந்ததாகவும் சில ஊடகங்கள் கண்டறிந்து உண்மை வெளியிட்டன. ஹெய்ட்டியில் நிலை கொண்டிருந்த இலங்கைத் தளபதி ஒருவர் சிறுமி ஒருவருக்குத் தந்தையாகியதற்காக 45,243 அமெரிக்க டொலர்களைக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு ஐ.நா. அமைதிகாக்கும் திணைக்களத்திடமிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்ட நிலையில் அதற்கு இலங்கை இணங்கியிருந்தது என்றும் அந்தச் சிறப்பான நடவடிக்கைகளுக்காக இலங்கையை அண்மையில் ஐ.நா. பாராட்டியிருந்தது என்றும்கூடச் செய்திகள் வராமலில்லை. இந்தச் சம்பவங்கள் அனைத்தின் பிரதிபலிப்புக்களாகவுமே அங்கு நிலைப்பட்டிருந்த இலங்கை இராணுவம் நாட்டுக்குத்திருப்பியனுப்பட்டுமிருந்தது. அதன் பின்னரே உள்நாட்டுப் போர்க் குற்றவாளியான ஒரு மேஜர் ஜெனரலைக் கொண்டு அந்தக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுவெற்றியும்கண்டது.




**மரத்தால் விழுந்ததும் ஏறி மிதித்தது மாடு !**

மேன்மை மிகு இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் இராணுவத்தால் இழைக்கப்பட்டிருக்கின்ற மற்றுமொரு கறையாக இதுவும் வரலாற்றில் பேசப்படும். அதாவது இங்கு அகதியாகத் தஞ்சமடைந்து, நோய்வாய்ப்பட்டிருந்த மியன்மார் நாட்டு ரொகிஞ்சா இன இஸ்லாமியப் பெண் ஒருவரை முறைகேட்டுக்கு உட்படுத்தியமையே அது.

பௌத்தர்கள் நிறைந்து வாழும் அந்தத் தேசத்தின் சிறுபான்மையினரான குறித்த இஸ்லாமியர்கள் அங்கு அவர்களால் இழைக்கப்படும் இதே, சம வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களாக, அந்தத் தேசத்தில் வாழ முடியாத நிலையில் நாடோடிகளாக, அகதிகளாகத் தமது நாட்டிலிருந்து கடல்வழியே பல நாடுகளுக்கும் புலம்பெயரத் தொடங்கினர். அதன்படி அவர்களில் ஒரு குழு இந்தியாவைச் சென்றடைந்து தஞ்சமடைந்து கொண்டது.

அந்தக்குழு பின்னர் அவுஸ்திரேலியா செல்லும் நோக்குடன் சிறிது காலத்தில் அங்கிருந்து கடல்வழிப்பயணம் செய்ததில் இலங்கைக் கடற்படையின் கைக்குள் சிக்கிக் கொண்டது.

இலங்கைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்குரிய தடுப்பு முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த ரொஜின்ஹயா மக்களுக்குள்ளிருந்த இளம் பெண்ணொருவரையே பொலிஸ் அதிகாரி ஒருவர் பாலியல் முறைகெட்டுக்குள்ளாக்கியிருக்கிறார்.

**அகதியும் நோயாளியுமாகப் பாதிக்கப்பட்ட பெண்**

தலைநகர் கொழும்புக்கு வெளியேயுள்ள மீரிகான சட்டவிரோத அகதிகள் தடுப்பு முகாமில் நீதிமன்ற உத்தரவின் பேரில் 7பெண்கள் மற்றும் 16சிறுவர்கள் உள்ளிட்ட மியான்மர் நாட்டைச் சேர்ந்த 30 ரொஜின்ஹயா முஸ்லிம்களான அந்த அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 22வயதான பெண்ணொருவர் தனக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அரச மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை முடிந்து அழைத்துச் சென்ற சந்தர்ப்பத்திலேயே ஒரு பொலிஸ் அதிகாரியால் அந்தப் பெண் விடுதியொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, முறைகெட்டுக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றார்.

இந்த நாட்டுக்குள் தஞ்சமடைந்திருந்த அகதி, அதிலும் ஒரு நோயாளிக்கு நிகழ்ந்திருக்கும் இந்தக் கொடூரத்தைப் போலவே ஏராளம் பழிகளை இங்குள்ள படைகள் ஏலவே இந்த நாட்டுக்கு ஈட்டிக்கொடுத்திருக்கின்றன. இப்போதும் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்கள் மாறினாலும்...

(21 பக்கத் தொடர்ச்சி)

இடையில் நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு அவனது கல்வியைப் பாதிக்க அவனும் நானும் வன்னிக்கு நகர்ந்தோம். இறுதிக்கட்டப் போர் நடந்து கொண்டிருந்தது. காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கவெனப் புறப்பட்ட அவனை நான் தடுக்கவில்லை. என் மகன் குண்டுக்கு இரையாவான் என்று நான் கடுகளவும் நினைத்திருக்கவில்லை. அந்தப் பேரிடியைத் தனியாகவே நின்று சகித்துக் கொண்டேன். போர் முடிவடைந்த பின்னர் தடுப்பு முகாமிலிருந்து வெளியேறித் தனியாக இருந்து என்ர வாழ்க்கையை ஓட்ட விரும்பவில்லை. ஓய்வூதியம் எனது சீவியத்துக்குப் போதுமானதாக இருந்தபோதும் நான் தீர்க்கமாக யோசித்து ஒரு முடிவு எடுத்தேன். உறவினர் சிலர் அவளைத் தங்களுடன் வந்திருக்குமாறு அழைத்தபோதும் மறுத்து இந்த இல்லத்து வாழ்க்கையில் இணைஞ்சு கொண்டன்."

மங்கையின் சோகம் நிறைந்த கதையைக் கேட்ட மங்களம் அவளுக்காக வருத்தப்பட்டாள். அவளாகவே இசைந்து தனது கதையையும் கூற முற்பட்டாள்.

"அக்கா! என்ரை மனுசன் கடற்றொழில்தான் செய்தவர். ஒரு நாள் இரவு கடலுக்குப்போன மனுசன் விடிஞ்சு கன நேரமாகியும் வரயில்லை. பேந்துதான் செய்தி வந்தது. போட்டில ஒரு சடலம் சூட்டுக்காயங்களோட வந்து கரை ஒதுங்கியிருக்கெண்டு. நான் பதறித்துடிச்சுப் ஓடிப்போய்ப் பார்த்தால், அது என்ர மனுசன் தான். அண்டைக்கே நான் நடைப்பிணமாகியிட்டன். நண்டுஞ் சிண்டுமாய் ரெண்டு குழந்தைகளையும் வைச்சுக் கொண்டு அதுகளை நான் வளர்க்கப்பட்ட பாடு... அப்பப்பா... அது கொஞ்ச நஞ்சமில்ல. மூத்தவன் வளர்ந்து விருத்தெரிஞ்சதும் சுதந்திரமாய் தானே தன்ரை பாதையில போயிட்டான். போனவன் போனவன் தான். பொம்பிளைப்பிள்ளையை வளர்த்துப் படிக்க வைச்சு அவளை ஒரு ரீச்சர் ஆக்க நான் எவ்வளவு பாடுபட்டிருப்பன். அவள் தானே விரும்பி தன்னோட படிப்பிக்கிற ஒரு பெடியனைக் கலியாணம் முடிச்சாள். அவைக்கு மூன்று குழந்தைகள். நானும் அவையோடையே இருந்து அந்தப் பிள்ளைகள் மூன்று பேரையும் வளர்த்துவிட்டன். இப்ப பிள்ளைகள் பெரிய ஆக்களாகி விட்டினம். கடைக்குட்டி கவிதா இப்ப அஞ்சாம் வகுப்புப் படிக்கிறாள். அவள் தான் அம்மம்மா... அம்மம்மா... என்று என்னோட பிரியமாய் இருக்கிறவள்.

கதையைப் பாதியில் நிறுத்திவிட்டு மூக்கைச் சீறிவிட்டு வந்தாள், மங்களம்.

"பேந்து உங்களுக்கு என்னதான் குறை மங்களம்மா?" கதையின் மிகுதிப் பகுதியையும் கேட்டுவிட ஆவலாயிருந்தாள் மங்கையர்க்கரசி.

"இருந்தாப்போல எனக்கு ஒரு காய்ச்சல் வந்து என்னைப் படுக்கையில போட்டிட்டுது. என்னால ஒரு வேலையும் செய்ய முடியாமல்போச்சு. அப்பதான் என்ரை மகளின்ரை சுயரூபத்தை நான் கண்டன். அவள் குழந்தையாய் இருக்கேக்க தன்ரை பிஞ்சுக்காலால என்ரை நெஞ்சில உதைக்கிறவள். அப்பெல்லாம் நான் சந்தோசத்தில பூரிச்சுப்போவன். ஆனால்... இப்ப அவளின்ரை சுடுசொற்களை என்னால தாங்க முடியாமலிருக்குது"

"அப்பிடி என்னத்தைத்தான் சொன்னவள்?" மங்கை கேட்டாள்.

"இனியும் உன்னை வைச்சு என்னாலை பார்க்கேலாது. நீயே உன்ரை வழியைப் பார்த்துக் கொள்..." என்று வாய் கூசாமல் சொல்லிப்போட்டாள். நானும் மனமுடைஞ்சுபோய் வீட்டால வெளிக்கிட்டிட்டன்.

"மங்களம்மா! நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ. இப்ப என்ன....... நல்ல இடத்துக்குத்தானே வந்திருக்கிறியள். இனி நீங்கள் பழசுகளை மறந்திட்டு இங்கை இருக்கிறவையோட பேசிப் பழகுங்கோ. கொஞ்சக் காலத்தில கவலை தன்னால மறைஞ்சு போகும்"

இருவரும் எழுந்து தங்கள் தங்குமிடத்தை நோக்கி நடந்தனர். நாள்களும் நகர்ந்தன.

காலை. வழமைபோல் மங்கையர்க்கரசி மண்டபத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். சுவரில் தொங்கிய நாள்காட்டியில் திகதியைப் கிழிப்பது அவளது வழக்கம். கிழித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். இருபத்தி ஆறைக் காட்டியது நாள்காட்டி. அவளது சிந்தனை பின்னோக்கியது.

அவள் பெற்றெடுக்காத பிள்ளை. அவள் அப்போது மாதர் சங்கத் தலைவியாக இருந்தபோது தனது சிம்மக் குரலால் அம்மா! என்று அழைத்துக் கொண்டே அவளைத் தேடி வருவான். அப்படி அவன் வரும்போது அவனுக்கு உணவளித்துத்தான் அனுப்புவாள்.

"அம்மா கையால குழைச்சுத்தாங்கோ" என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டவன். குருதி உலர்ந்து இறுதி மூச்சை விட்டபோது அவன் பட்டவேதனை... அது சொல்லில் அடங்காதது.

மளமளவென்று தனது வேலைகளை முடித்துக் கொண்டு குளிக்கப்போனாள். அவளையும் விஞ்சி நின்ற நினைவுகளோடு குளியலை முடித்தாள். அவள் தன் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தபோது மணி ஒன்பதைத் தாண்டி விட்டிருந்தது.

தன் இதயத்தில் புதைத்து வைத்திருந்த அந்த உருவத்தை மனக்கண்முன் நிறுத்தினாள். நலிந்த உருவத்தின் தடித்த கண்ணாடிக்குள் ஒளித்திருந்த கண்களைத் துழாவ முயன்று தோற்றுப்போனாள். அந்தத் தோற்றத்தை மனதில் நிலை நிறுத்தியவாறு கையில் வைத்திருந்த பூக்களை மேசை மீது வைத்துப் பூசித்தாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த மணிக்கூட்டை நிமிர்ந்து பார்த்தவள். தனது மேசையின் இழுப்பறையினுள் வைத்திருந்த மெழுகுவர்த்தியை எடுத்தாள். நடுங்கும் கரங்களால் அதனை ஏற்றி மேசையின் மீது வைத்தவள், கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

எத்தனை நேரம்தான் அப்படியே இருந்தாளோ..... அவளுக் தெரியவில்லை. கண்விழித்தபோது ஏதோ அரவம் கேட்கே பின்னால் பார்வையைத் திருப்பினாள். பலர் அங்கு நின்று அஞ்சலித்துக் கொண்டிருந்தனர். காலங்கள் மாறலாம். வாழ் கையின் கோலங்கள் மாறலாம். உணர்வுகள் மட்டும் உறை அவள் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 478

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | | ■ |
| ■ | 11 | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | ■ | |
| | ■ | 17 | 18 | | ■ | 19 | |
| 20 | 21 | | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. அருச்சுணன் மகன்
5. எந்நேரமும்
7. ஒரு காட்டு மிருகம்
8. ஆண்டு
9. நினைவு தினம்
10. ஆறு
11. நித்தியம் / தினமும்
13. யாகத்தில் சமர்ப்பணம் செய்வது
15. மேலதிகமானது
16. உணவு வகைகளில் ஒன்று
17. கொடி
19. பாவம் செய்தவன்
20. எரித்தல் நிகழ்வு
22. அருமையான
23. அளவுக்கு அதிகம்
24. கருமம்

### மேலிருந்து கீழ்

1. ஏதிலி
2. ஒன்றின் சார்பாக அல்லது ஒருவருக்குப் பதிலாக வருபவர்.
3. மடக்கு
4. இளம் பெண்
5. சமய, கலாசார சம்பந்தமான நிகழ்வு
6. தாங்கள்
10. நமது
12. காட்சிக்குக் கிட்டுவது
13. விருப்பம்
14. பெறுமதியான செல்வம்
15. நற்பண்புடையவள்
16. காதணி
18. வெளிநாட்டுக்கு குடிவகை ஒன்று
19. பெரிய
21. மூன்றெழுத்துச் சொல்லில் கடைசி எழுத்தாக 'ர்' சேர்ந்தால் காந்தி அணிந்த ஆடை
22. சிங்கம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 476 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) பிரமாதம் (4) பாவி (6)தரி (7)காதல் (8)சாமர்த்தியம் (11)தலை (12)திடம் (14)குரல் (15)கண் (16)கடம் (17)காண (18) மனம் (19)படுக்கை (21) தும்பிக்கை (22)குதி

### மேலிருந்து கீழ்

(1)பிரசாதம் (2)மாதர் (3)தரித்திரம் (4)பாதம் (5)வில் (7)காயம் (9)மலை (10)திடல் (13) சாண் (14)குடம்பி (15)கணக்கு (16)கனம் (17)காடு (18) மது (19) பகை (20) கைதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.478 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (12.07.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 476 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சக்திவேல் மதிவதனி,
இலந்தைச்சாலை,
காரைநகர்.

**2 ஆம் பரிசு**
வே.சுபிதா,
உப தபாலகவளவு,
புளியம்பொக்கணை, பரந்தன்.

**3 ஆம் பரிசு**
வே.ரகுபதிசர்மா,
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்,
கண்ணகிபுரம், புங்குடுதீவு - 10

**4 ஆம் பரிசு**
திருமதி ச.பரஞ்சோதி,
இல. 15/18 A மரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

**5 ஆம் பரிசு**
கி.அட்ஷயன்,
சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

**பாராட்டுப் பெறுவோர்**

முகுந்தன் கோபிகா,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை.

S. தியாகேஸ்வரி,
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

யூ.ஷகினா பச்சேக்,
வங்காலை 01,
மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி இல.478இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.07.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 476 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவாரம் உங்களுக்கு எப்படி?

**02.07.2017 தொடக்கம் 08.07.2017 வரை**

## மேடம்

சூரியன், செவ்வாய், சுக்கிரன், கேது அளப்பரிய நன்மை வழங்குவர். பேச்சிலும், செயலிலும் புத்துணர்வு மேலோங்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகமுண்டாகும். பிள்ளைகளின் பிடிவாத செயல்களை மென்மையான அணுகுமுறையால் சரிசெய்வீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மனைவி கருத்து ஒற்றுமையுடன் செயல்படுவார். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் வளர்ச்சி காண்பீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பால் வருமானம் காண்பர். பெண்கள் குடும்ப தேவைக்கு தாராள பணம் செலவு செய்வர்.

## இடபம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. செல்வ வளம் அதிகரிக்கும். வீட்டில் பாதுகாப்பை பலப்படுத்துவது அவசியம். பிள்ளைகள் நற்குணங்களுடன் செயல்படுவர். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். உடல்நலம் திருப்தியளிக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழிலில் தடைகள் விலகுவதால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நற்பெயரும், சலுகையும் கிடைக்கும். பெண்கள் விரும்பிய ஆடம்பர பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

## கடகம்

சந்திரனால் நன்மை அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாட்டில் குளறுபடி உருவாகலாம். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனை குடும்ப ஒற்றுமைக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வா கத்தின் சட்டதிட்டங்களை மதித்து நடக்கவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க கூடாது. மாணவர்கள் படிப்பில் கூடுத்ல் கவனம் செலுத்தவும்.

## மிதுனம்

ராகு, சுக்கிரன், சனீஸ்வரர் வியத்தகு நற்பலன் தருவர். எதிர்பார்ப்பு நிறைவேறும். சமூகத்தில் மதிப்பு உயரும். தம்பி, தங்கையரின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். பிள்ளைகள் உற்சாக மனதுடன் செயல்படு வர். பூர்வீகச் சொத்தில் திடீர் வருமானம் வரும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி உங்கள் செயல்பாடு சிறக்க உதவிபுரிவார். குடும்பத்தின் தேவை குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டியை திறம்பட எதிர்கொள்வீர்கள். பணியாளர்கள் நவீன தொழில்நுட் பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள் கணவரின் அன்புக்குரியவராகத் திகழ்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## சிங்கம்

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. எதிர்கால வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்க யோகமுண்டு. பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. விருந்து, விழா என அடிக்கடி செல்வீர்கள். மனைவி உங்களின் அன்பை பெறும் விதத்தில் செயல்படுவார். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரம் நல்ல வளர்ச்சி பெறும். இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தர காத்திருக்கின்றனர். அன்றாட வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். உடன்பிறந்தர்களால் உதவி உண்டு. பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். சுபநிகழ்ச்சியில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவியின் உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடு வீர்கள். போட்டியாளர்கள் சொந்த சிரமங்களால் விலகு வர். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி மற்றும் சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் தரத்தேர்ச்சி காண்பர்.

## துலாம்

ராகு, சந்திரனால் நன்மை உண்டாகும். மனதில் உருவான குழப்பம் நண்பரின் ஆலோசனையால் நீங்கும். சமூக சேவையில் ஈடுபட்டு பாராட்டு காண்பீர்கள். வருமானம் உயர்வுக்கான புதிய வாய்ப்பு தேடி வரும். பிள்ளைகள் படிப்புடன் விளையாட்டில் ஆர்வம் கொள்வர். விஷப்பிராணிகளை விட்டு விலகுவது நல்லது. இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது அவசியம். மனைவியிடம் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை.

## தனுசு

சுக்கிரன், கேது, சந்திரன் வியத்தகு பலனை வழங்குவர். மனதில் இருந்த குழப்பம் மறை யும். அன்றாடப்பணிகள் எளிதில் நிறைவேறும். சுயநல எண்ணத்துடன் புகழ்ந்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். பூர்வீக சொத்தில் திடீர் செலவு ஏற்படலாம். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் செயல்பாட்டால் குடும்பத்தில் ஒற்றுமை உருவாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணி யாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். சலுகை ஓரளவே கிடைக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

## விருச்சிகம்

புதன், குரு, சுக்கிரன் சிறப்பான பலன் தருவர். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். மனதிலும், செயலிலும் உற்சாகம் நிறைந்திருக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோரின் அன்புக்குரியவராகத் திகழ்வர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். நண்பர்கள் தங்களின் நற்குணத்தைப் பாராட்டுவர். உறவினர் வருகையால் குடும்பத்தில் குதுாகலம் நிறைந்திருக்கும். தொழிலில் இடையூறு நீங்கி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் பின்பற்றுவது நல்லது. பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பிற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவர்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் சுப பலன்கள் தருவர். பணிகளில் பொறுப்பு உணர்ந்து செயல்படுவது நல்லது. தாய்வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். பிள்ளைகள் வளர்ச்சிப்பாதையில் வெற்றி நடை போடுவர். குடும்பத்தேவை குறைவின்றி நிறைவேறும். எதிரியால் ஏற்பட்ட தொல்லை மறையும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மங்கல நிகழ்ச்சியில் அடிக்கடி பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். எதிர்பார்த்த சலுகை வந்து சேரும். பெண்கள் குடும்ப நலன் சிறக்க பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மீனம்

புதன், குரு, ராகு அளப்பரிய நற்பலன் தருவர். சிறு பணியைக் கூட நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்று முன்னேறுவர். குடும்பத்தேவை தாராள பணச்செலவில் பூர்த்தியாகும். மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை உருவாகும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் பெருகும். பணியாளர்கள் பணியி டத்தில் சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்புடன், விளையாட்டிலும் ஆர்வம் காட்டுவர்.

## கும்பம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். சமூகத்தில் மதிப்பு உயரும். தாமதமான பணிகள் புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் கவனக்குறைவை இனிய அணுகு முறையால் சரி செய்யவும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது அவசியம். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படவும். பெண்கள் குடும்பத்தினருக்காக விட்டுக் கொடுக்கவும். மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலை ஏற்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் நடந்த ‘குருதிப் பெருக்கு’

ஸ்டோ ஸ்வாமி



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் குருதி வங்கிப் பிரிவு அல்லோலகல்லோலப்பட்டிருந்தது. தெற்கிலிருந்து வருகை தந்திருந்த பௌத்த குருமார் குழுவொன்று குருதிக்கொடை வழங்குவதற்காக அவ்விடம் குவிந்ததையடுத்தே இந்த நிலவரம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் வேறு யாருமல்லர். தெஹிவளை பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனாவை சேர்ந்த சுமார் 100 வரையான பிக்குகளே பேராசிரியர் மெதாகொட அபயதிஸ்ஸ தேரர் தலைமையில் ஊர்வனவாய் தடைபோட்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையிலுள்ள குருதி வங்கிக்கு படையெடுத்திருந்தனர். வடக்கில் குருதித் தட்டுப்பாடு நிலவுவதாக அறிந்தோம் என்றும் அதனையடுத்து குருதியின்றி அவலப்படும் தமது வடபுல சகோதர மக்களுக்கு இன நல்லிணக்க அடிப்படையில் குருதிக்கொடையளிக்க முன்வந்தோம் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

முன்னதாக கடந்த 13ம் திகதி, கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரியான டெய்லி மிரர், அன்றைய முன்பக்கத்தில், சமுதாய வேறுபாடுகள் காரணமாக வடக்கில் குருதித்தட்டுப்பாடு நிலவுவதாக தலைப்பிட்டு செய்தி ஒன்றினை வெளிப்படுத்தியிருந்தது. அந்தச்செய்தியில், வடக்கில் காணப்படும் சமுதாய வேறுபாடுகள் காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் குருதி மாற்றீட்டுத் தேவைகளுக்கு போதுமான குருதி கிடைப்பதில்லை என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்ததான அதே செய்தி குறித்த பத்திரிகைக்குரிய இணையத்தளத்திலும் பதிவேற்றப்பட்டிருந்தது. குறித்த செய்தியினால் விசனமடைந்த யாழ். வைத்தியசாலையின் பணிப்பாளர், அன்றே குறித்த பத்திரிகையைத் தொடர்பு கொண்டு மேற்படி செய்தியில் சமூக வேறுபாடுகள் தொடர்பில் தாம் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என்றும் தமது குருதிவங்கியில் குருதிப்பற்றாக்குறை நிலவவில்லை என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள செய்தியை அகற்றும்படியும் திருத்தத்தினை அடுத்தநாள் பத்திரிகையில் அதே இடத்தில் பிரசுரிக்கும்படியும் கேட்டிருந்தார். தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த இணையத்தள செய்தி நீக்கப்பட்டதோடு மறுநாள் 14ஆம் திகதி வெளியான பத்திரிகையில், வடக்கில் குருதிக்கு தட்டுப்பாடு கிடையாது என்னும் தலைப்போடு திருத்தம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த திருத்தத்தில் குருதிக்கொடைக்கும் சமுதாய வேறுபாடுகளிற்கும் தொடர்பிருப்பதாக குறிப்பிடும் பிறிதொரு கருத்தொன்றே பிரசுரமாகிருந்தது. இதனிடையே வைத்தியசாலை பணிப்பாளரை தொடர்புகொண்ட குறித்த செய்திக்குரிய ஊடகவியலாளர், நடந்தது தொடர்பில் தனது வருத்தத்தினையும் வெளிப்படுத்தியிருந்தார்.

கொழும்பை தளமாக கொண்ட மற்றொரு ஊடகமும் இதே சாரப்பட்ட செய்தி ஒன்றினை பதிவிட்டிருந்தது. அது, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய படையினர் குருதிக் கொடை செய்கின்றனர் எனத் தெரிவித்திருந்தது. கடந்த 10ஆம் திகதி பதிவேற்றம் செய்யப்பட்ட அந்தச் செய்தி, பொசன் முழுமதி நாளை அண்மித்த காலப்பகுதியில் இராணுவத்தினர், சுமார் 170 பைந்துகள் அளவுடைய் தான குருதியை வழங்கினர் என்றும் தெரிவித்திருந்தது. இந்த செய்திகளின் தொடர்ச்சியாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழில் இடம்பெற்ற பரபரப்பும் அமைந்திருந்தது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அவ்வப்போது குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவது உண்மைதான். ஆனாலும், போர்க்காலத்தில் நிலவியது போன்ற தீவிர தேவை தற்போதைய காலகட்டத்தில் எழுவது அரிது. சுகாதாரப் போஷணை மற்றும் உள்நாட்டு மருத்துவத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய குருதி மாற்று பிரயோக சேவைப்பிரிவின் வலையமைப்பில் இணைக்கப்பட்டுள்ள யாழ். குருதி வங்கி, குடாநாட்டில் தாமாக முன்வரும் குருதிக்கொடையாளிகளை கொண்டிருப்பதுடன் அவசியமேற்படுமிடத்து ஏனைய வ்வைத்தியசாலைகளிலிருந்து குருதிகளை பெறுவதற்கான வசதிகளையும் கொண்டிருக்கின்றது. குருதிக்கொடை வழங்கலை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை தூர இடங்களிலிருந்தும் முகாம்களை நடத்தி குருதியை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே தான் இருக்கிறன. அவ்வப்போது படையி னரும் இத்தகைய முயற்சிகளுக்கு தன்னார்வ அடிப்படையில் உதவி வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்த பிக்குகள் பங்கெடுத்த குருதிக் கொடை நிகழ்வும் படையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒன்றுதான். தெஹிவளைக்கு சமீபமாக நாரஹேன்பிட்டியில் தமது தலைமைக்காரியாலயத்தை கொண்டிருக்கும் தேசிய குருதி மாற்றுப் பிரயோகசேவை பிரிவு, நாட்டின் ஏனையபிரதானமருத்துவ மனைகளையும் தனது வலையமைப்பில் இணைத்துக் கொண்டிருக்கிறது.

> இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவிற்கு இனக்கலப்பு மற்றும் குருதிக்கலப்பு போன்ற பின்கதவு பொறிமுறைகளை பிரேரிப்ப தையும் நடைமுறைப்படுத்த முனைவதை தவிர்த்து, பொறுப்புக்கூறலுடன் கூடிய மனங்களின் கலப்பு பொறிமுறைக்கு தமது பெரும்பான்மை சமூகத்தினை தயார்படுத்துவதனை மஹாசங்கத்தினர் சவாலாக கொண்டு நிறைவேற்ற வேண்டும்.

குறித்த சேவைப்பிரிவின் நிர்வாக வினைத்திறனைக் கேலிக்குட்படுத்தும் வகையில், போலிச்செய்தி ஒன்றின் அடிப்படையில் தெற்கின் மகாசங்கத்தினர் வடக்கில் திரண்டமை பலரது புருவங்களையும் உயர்த்தியிருக்கிறது. கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து வெளியாகும் பல பத்திரிகைகளின் முதற்பக்க செய்தியாக இது அமைந்திருக்க, ஏரிக்கரை நிறுவனத்தின் ஆங்கில நாளிதழ் இந்த விடயத்தை கடந்த செவ்வாய்க்கிழமை தனது ஆசிரியர் தலைப்பாகவும் கையாண்டிருக்கிறது. அதிலும் மகாசங்கத்தினர் குழுமமாக முதன் முறையாக ஈடுபட்ட குருதிக்கொடையளிப்பாக இது அமையலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### தேறியது பதினாறே!

குஞ்சு குருமன் உட்பட நூறு வரையிலான பிக்குமார் யாழ். குருதிவைப்பகத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகை தந்திருந்த போதிலும் அதில் வெறும் பதினாறு பேர் மாத்திரமே குருதிக் கொடையளிக்கும் இயலுமையை கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. நூறு பிக்குமார் யாழ்ப்பாணத்துக்கு வந்து குருதி அளித்தனர் என பல ஊடகங்கள் தெரிவித்திருந்தாலும் வந்திருந்தோரில் சொற்ப உறுப்பினர்களே குருதிக்கொடையளித்திருந்தனர்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் நடத்தப்பட்ட என்.வீ. கியூ. பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த வடமாகாண ஆளுநர் கூரேயும் பிக்குகளின் குருதிக்கொடை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார். இன நல்லிணக்க முயற்சிகளுக்காக எடுக்கப்பட வேண்டிய பல செயற்பாடுகள் காத்திருக்க, போலிச் செய்தி ஒன்றின் அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த வெறும் பதினாறு பௌத்தகுருமார் குருதிக்கொடை முகாமில் பங்குகொண்டதை நல்லிணக்க நடவடிக்கையின் படிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

குருதிக்கொடையளிப்பு என்பது மெச்சத்தக்க வகையிலான நிகழ்வு என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஆனால், உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்றின் பின்புலத்தில், குருதிக்கு செயற்கைத் தட்டுப்பாட்டினை உருவாக்கி பின்பு அதற்குத் தீர்வாக உதவ முன்வந்ததாக காட்டிக்கொள்ள முனைந்த மகாசங்கத்தினர், கருத்தில் கொள்வதற்கு வேறு பல எளிய நல்லிணக்கச் செயல்கள் காத்திருக்கின்றன. தற்போதைய நிலையில் தேரர் ஞானசாரர் தலைமையிலான குழுவினரை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதுகூட நல்லிணக்கத்துக்கு அதிகம் வலுச்சேர்க்கவல்ல நடவடிக்கையாகும். இதைத்தவிர வடபுலத்தினரின் வாழ்வாதார நிலங்களை விடுவிப்பதில் இருந்து காணாமல் போனோருக்கு வகைசொல்லும் பொறுப்புக்கூறல் வரை பல விடயங்களுக்கு அரசுக்கு அழுத்தம் தர மகாசங்கத்தினருக்கு வல்லமை உண்டு. இத்தகைய பிரச்சினைகள் வழமையாக பத்திரிகையின் முன்பக்கங்களை மட்டுமன்றி முகப்புத்தலைப்புக்களி லும் இடம்பிடிக்கும் விடயங்களாகும்.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவிற்கு இனக்கலப்பு மற்றும் குருதிக்கலப்பு போன்ற பின்கதவுப் பொறிமுறைகளை பிரேரிப்பதையும், நடைமுறைப்படுத்தமுனைவதையும் தவிர்த்து, பொறுப்புக்கூறலுடன் கூடிய மனங்களின் கலப்பு பொறிமுறைக்கு தமது பெரும் பான்மை சமூகத்தினை தயார்படுத்துவதனை மகாசங்கத்தினர் சவாலாகக்கொண்டு நிறைவேற்ற வேண்டும். அது நிகழுமாயின், ஒளியாண்டுத் தூரத்தில் தென்படும் நல்லிணக்கம் அருகில் வருவதற்கான சாத்தியங்கள் பிரகாசமானதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனைவி எமது மொபைல வாங்கி ஏதாச்சும் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நிமிடங்கள்...**



**100 திகில் படம் பார்ப்பதற்குச் சமம்...**

**துரோகம்னா என்ன? பச்ச துரோகம்னா என்னடா?**



**மிதிவெடியில அரை முட்டை இருந்தா துரோகம். மிதிவெடியில முட்டையே இல்லைன்னா அது பச்ச துரோகம்...**

**தேனீர் கடையில் வேலை செய்தால் குழந்தை தொழிலாளர்ன்னு பிடிக்கிறாங்க...**



**சினிமாவில் நடித்தால் குழந்தை நட்சத்திரம்ன்னு கைதட்றாங்க இரண்டுமே பணத்துக்குதானே...!**

**இப்பெல்லாம் முடி வெட்ட தோனிச் சென்டா கடைக்குப் போறதில்லை!**



**தலைக்கு குளிச்சிட்டு துண்டால அமுத்தித் தேய்ச்சா அதுவா கொட்டிடுது!**



2000இல் மனைவி
வீட்டையும் கவனிக்கிறது இல்லை...
என்னையும் கவனிக்கிறது இல்லை...
புள்ள குட்டிகளையும் கவனிக்கிறது இல்லை...
எப்ப பாரு... வேல வேலதான்...



2017 இல் மனைவி
வீட்டையும் கவனிக்கிறது இல்ல...
என்னையும் கவனிக்கிறது இல்லை...
புள்ள குட்டிகளையும் கவனிக்கிறது இல்லை...
வேலை வெட்டியையும் கவனிக்கிறது இல்லை...
சுத்தி என்ன நடக்கின்றதையும் கவனிக்கிறது இல்லை...
எப்ப பாரு முகநூலே கதின்னு பயித்தியம் மாதிரி கிடக்கிறாங்க...



# நீங்க இன்னும் வளரனும் ரத்தோர்

தம்பி ராமையாவின் மகன் உமாபதி கதாநாயகனாக அறிமுகமாகியுள்ள 'அதாகபட்டது மகாஜனங்களே' படத்தில் நாயகியாக நடித்துள்ள ரேஷ்மா ரத்தோர் முன்னணி நடிகை போல் தற்போதே எண்ணிக்கொள்ள ஆரம்பித்துவிட்டாராம்.

பிரபல நகைச்சுவை நடிகரும், இயக்குநருமான தம்பி ராமையாவின் மகன் உமாபதி கதாநாயகனாக அறிமுகமாகியுள்ள படம் 'அதாகபட்டது மகாஜனங்களே'. இப்படத்தில் கருணாகரன், பாண்டியராஜன், மனோபாலா, யோக் ஜேப்பி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இன்பசேகர் இயக்கும் இப்படத்திற்கு டி.இமான் இசையமைத்திருக்கிறார்.

படத்தின் கதாநாயகியாக ரேஸ்மா ரத்தோர் என்பவர் நடித்துள்ளார். இவர் ஏற்கெனவே ஒருசில தெலுங்கு, மலையாள படங்களில் நடித்துள்ளார். தமிழில் அறிமுகமாகும் முதல் படம் இதுதான். இந்த நிலையில், முதல் படத்திலேயே முன்னணி நடிகைபோல் இவர் நடந்துகொண்டாராம்.

படப்பிடிப்பு தளத்தில் இயக்குநர் ஒரு காட்சிக்கு இந்த உடைதான் பொருத்தமாக இருக்கும், அதை உடுத்தி வாருங்கள் என்று நடிகையிடம் சொன்னால், பதிலுக்கு அவரோ, அந்த உடைகள் எல்லாம் அணியமுடியாது. எனக்கேற்றால் போல் உடையணிந்துதான் நடிப்பேன் என்று அடம்பிடிப்பாராம்.

தற்போது படம் முடிந்து படக்குழுவினர் அனைவரும் படத்தை விளம்பரப்படுத்தும் பணிகளில் தீவிரமாக களமிறங்கியுள்ள நிலையில், ரத்தோரை விளம்பரத்துக்கு அழைத்தபோது, அவர் முன்னணி நடிகைகளைப் போல் மறுத்துவிட்டாராம். இதனால் 'அதாகப்பட்டது மகாஜனங்களே' படக்குழு 'அதாகப்பட்டது ரத்தோர் நீங்க இன்னும் வளரனும்' என்று எச்சரிக்கை செய்துள்ளது என்றும் தமிழ் திரையுலகில் பேசப்படுகிறது.



**கோழியின் கிறுக்கல்**

நம்மை மூட்டைப் பூச்சியாய் நினைத்து நசுக்கி விடலாம் என நினைப்பவரை முட்டாள் என்று முடிவு கட்டி கடந்து விடுவதே புத்திசாலித்தனம்!

77 91



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும்.

**இடபம்**: மனசாட்சிப்படி நடந்து குடும்ப பெருமையை நிலைநாட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நேரும் குளறுபடியை உடனடியாக சரி செய்வது நல்லது. இலாபம் சுமார்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். எதிர் மனப்பாங்கு உள்ளவரிடம் விலகுவது நல்லது.

**கடகம்:** உங்களின் இரக்க குணம் அறிந்து சிலர் உதவிபெறுவர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினர் மத்தியில் பாராட்டு கிடைக்கும்.

**சிங்கம்:** நட்பு வட்டாரத்தால் தொந்தரவுக்கு ஆளாவீர்கள். சூழ்நிலை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும்.

**கன்னி:** மனதில் நேர்மை எண்ணம் மேலோங்கும். பிறருக்கு உதவி செய்ய முன்வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். இலாபம் சராசரி அளவில் இருக்கும்.

**விருச்சிகம்:** நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். இலாபம் உயரும்.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கில் கடன் வாங்க வேண்டாம்.

**கும்பம்:** குடும்ப பிரச்சினை குறித்து பிறரிடம் பேச வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மீனம்:** மனதில் தைரியம் குடியிருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 5 | |
| | | 8 | 9 | 6 | | | 2 | 4 |
| | 9 | | 7 | | | | 8 | |
| | | | | 1 | | | | 6 |
| | 3 | 5 | 6 | | | 2 | 1 | |
| 8 | | | | 3 | 2 | | | |
| | 2 | | | | 6 | | 9 | |
| 6 | | 9 | 2 | 4 | 8 | | | |
| | 8 | | | | | | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 6 | 8 |
| 6 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 7 |

மாளிகையோ
குடிசையோ
எங்கே
வாழ்கிறோம்
என்பதல்ல
வாழ்க்கை.
நாம்
எங்கே
சந்தோஷமாக
வாழ்கிறோம்
என்பதுதான்
வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா வசமாகும் கொழும்பு காணிகள்

கொழும்பு, ஜூலை 3 கொழும்பிலுள்ள முதன்மைக் காணிகள் பல வற்றை இந்தியாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு டீ.ஆர். விஜேராம மாவத்தை 56, 70 மற்றும் 126 என்ற இலக்கங்களின் கீழ் சதோச நிறுவனத்துக்குச் சொந்தமான 3 ஏக்கர் காணியை இந்தியாவின் ஜே ஹோட்டல் லிமிட்டட் சென்னை நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் காணிகளுக்கு மேலதிகமாக சதொச நிறுவனத்துக்கு சொந்தமான அதே வீதியில் அமைந்துள்ள இலக்கம் 40, 105 மற்றும் 109 என்ற இலக்கங்களில் உள்ள காணியை க்ரூடின் க்ரூப் கல்கத்தா இந்தியா என்ற நிறுவனத்துக்கு விற்பனை செய்ய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது. மேலும் 165 என்ற இலக்கத்தின் கீழ் உள்ள சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடம், பான்ஸ் பிரதேசத்தின் இலக்கம் 17 இன் கீழ் உள்ள காணி என்பவற்றையும் இந்திய நிறுவனத்திற்கு விற்பனை செய்யவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாகக் கொழும்பு மற்றும் ததாசன்ன பிரதேசத்தில் உள்ள பெரிய காணி ஒன்றை இந்திய நிறுவனம் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாகவும் குறித்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(த)


ஐரோப்பிய STUDENT விசா

*Medicine *Engineering *Business Management
* Language Studies * Hospitality & Tourism
*IT & many more...

- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI
No. 44, Vajira Road, Colombo - 04
email : eurounilk@gmail.com
Phone - 077 4796 483

கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி

கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இழைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.

அறிகுறிகள் { கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு



எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.

FAIR PHARMA (PVT) LTD

Hotline:
0777555600
0777708310
0777708330

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

யாழ்ப்பாணத்தில் கடந்த 7 வருடங்களாக லீசிங் துறையில் தன்னிகரற்ற சேவையினை வழங்கி வந்த எமது நிறுவனம்

ட்ரேட் பினான்ஸ் & இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி

தற்போது தங்க கடன் அடகு சேவை வசதியினை

திங்கட்கிழமை முதல் (03.07.2017)
வெகு விமர்சையாக ஆரம்பிக்கின்றோம்.

ஆகவே எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்களுடைய தங்க ஆபரணங்களுக்கு தேவைக்கேற்ப அதிகூடிய கொடுப்பனவு




TRADE FINANCE AND INVESTMENTS PLC
(Licensed by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Business Act No.42 of 2011)
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997 / 021 222 1898

வேலையாள்கள் தேவை
(சுரேஸ் மோட்டோர்ஸ் அன் இன்ஜினியறிங்)

☑ எழுதுநர் 3 (பெண்கள் - மோட்டார் உதிரிப்பாக அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
☑ மெக்கானிக் (முழுமையான அறிவு விரும்பத்தக்கது)
☑ பெயின்ரர்
☑ மெக்கானிக் பழக விரும்புபவர்கள் (தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

077 706 4110 நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

02.07.2017




பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கிருஷ்ணலிங்கம் கலையரசி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

விகிந்தன்

இன்று (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை ஆஸ்திரேலியாவில் வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா கிருஷ்ணலிங்கம் அம்மா கலையரசி, அக்கா - சுகிர்தா, அண்ணன் - மகிந்தன் ஆகியோருடன் இணைந்து அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் பெரியவளவு முருகனின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அம்மப்பா - சி.இராசரத்தினம்
மங்கள ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு

TERASAKI
Innovators in Protection Technology

உங்களின் கட்டிடங்களுக்கான மின் விநியோகக்கட்டமைப்பிற்கு ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய முழு பாதுகாப்பு.

TECS®

எம்.சீ.பி | டிரிப் சுவிட்ச் | ஐஸோலேட்டர்




MCB:
Rated Current - 2A- 125A
Short circuit level - 6kA /10kA
Number of Poles - 1P - 4P
Operating voltage - 230V - 400V
Tripping Class (curve) - B, C & D

RCCB:
Rated Current - 16A - 100A
Rated residual current - 30mA, 100mA, 300mA
Type: "AC" & "A"
Number of Pole: 2P & 4P
Rated Voltage: 2P - 230V/240V
4P - 400V/415V

ISOLATOR:
Rated Current - 25A - 100A
Number of Poles - 1P - 4P
Operating voltage - 230V/240V
400V/415V

ரூபா.370/=முதல்

CE KEMA ABS சான்றுகளுடன்

TemBreak 2

டெம்பிரேக் MCCB (ஸர்கிட் பிரேகர்)




நம்பிக்கையான செயல்திறன் மிகுந்த மின்சக்தி பாதுகாப்பிற்காக உலகெங்கும் அனுபவம் வாய்ந்த மின் பொறியியலாளர்களின் முதல்தர தெரிவு.
"டெரசாகி டெம்பிரேக்"

- ஒப்பீட்டளவில் குறைந்த பரிமாணங்களைக் கொண்டது.
- சகல பாதுகாப்பு அம்சங்களையும் கொண்டது.
- சர்வதேச தர நிர்ணயங்களுக்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளது.
- செயல்திறன் நம்பகத்தன்மையில் ஈடு இணையற்றது.

உங்கள் தெரிவுகளுக்காக எம்மிடம் 15A முதல் 1600A வரையிலான வெவ்வேறு மின் கோவுதிறன் கொண்ட அளவுகளில் கிடைக்கின்றது.
மேலும் எம்மிடம் டெரசாகி ACB களும் கிடைக்கின்றன

ரூபா5,400/=முதல்

20 வருடங்களுக்கு மேலாக டெரசாகி மின் பாதுகாப்பு உபகரணங்களுக்கான இலங்கையில் ஏக விநியோகத்தர்.

Rotax Limited

332, காலி வீதி, கொழும்பு 04
தொலை: +94 115 574000/112 556750
நகல்: +94 112 587286
மின்னஞ்சல்: rtx@rochegroup.lk
இணையம்: www.rotaxltd.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் விஜயதாஸவின் கருத்துகளை ஏற்கமுடியாது

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 3
"அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், பௌத்த விகாரைகள் விவகாரங்களில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, தொடர்ச்சியாகத் தெரிவித்து வரும் கருத்துகளை ஏற்க முடியாது. இந்தக் கருத்துகள் சிறுபான்மை மக்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும் நமது அரசில் இருந்து அந்நியப்படுத்துகின்றன."

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகள் விவகாரம் எனது அமைச்சின் கீழ் வருகின்றது. எனவே, அமைச்சருக்கு எந்த ஒரு அரச சார்பற்ற சமூக அமைப்பு தொடர்பில் முறைப்பாடு இருக்குமானால் அதை அவர் என்னிடம் தெரிவிக்கவேண்டும். எவராவது சட்டத்தை மீறி இருப்பார்களேயானால், அதை நான் சட்டப்படி கையாள்வேன். அதைவிடுத்து எனது வரையறைக்குள் நுழைந்து, அனைத்து அரசு சார்பற்ற நிறுவனங்களும், நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கும், தேசிய நலனுக்கும் ஊறுவிளைவிப்பதாகப் பொதுப்படையாகக் கூற வேண்டாம் என்றும், உண்மையில் சில மத அமைப்புகளும், அரசியல்வாதிகளும்தான் தேசிய ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்கிறார்கள் என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் கூறி வைக்கிறேன்.

பௌத்த விகாரைகள் விவகாரங்களில் அரசு தலையிட முடியாது என எப்படி அவர் கூற முடியும்? உண்மையில் இன்றைய அரசமைப்பில், பௌத்தத்துக்கு இருக்கும் முன்னுரிமை அப்படியே இருக்கப் போகின்றது. இது எனக்கும், விஜயதாஸ ராஜபக்ச உட்பட வழிகாட்டல் குழுவின் எல்லா அங்கத்தவர்களுக்கும் தெரியும். ஆனால், இது ஒரு குடியரசு. நாட்டின் அதியுயர் அதிகாரம் மக்களுக்கே இருக்கின்றது. அந்த மக்களே அரசையும், நாடாளுமன்றத்தையும் தெரிவு செய்கின்றார்கள். அரசமைப்பு பிரகாரம் அரசுக்கும், நாடாளுமன்றத்துக்கும் மேலே மதத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ள, ஈரான் போன்ற ஒரு நாடு அல்ல, இலங்கை.

உண்மையில் சட்டத்தைப் பௌத்த துறவிகள் மீறுவார்களேயானால், அவர்களுக்கு எதிராக இலங்கை வரலாற்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் பண்டாரநாயக்க ஒரு பிக்குவால் படுகொலை செய்யப்பட்டபோது, அந்தக் கொலைகாரனுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை இலங்கை அரசு எடுத்தது. 1971, 1989 காலகட்டங்களில் இலங்கை அரசு பயங்கரவாதமும், பௌத்த விகாரைகளுக்குள் நுழைந்தது. இவை வரலாற்று சான்றுகள். எனவே, புதிய வரலாறு தேவையில்லை. கடந்த காலங்களில் உள்நாட்டு சமூக அமைப்புகள் துரோகிகளாகவும், வெளிநாட்டுச் சமூக அமைப்புகள் எதிரிகளாகவும் சித்தரிக்கப்பட்டார்கள். அதை நான் பதவி ஏற்ற பிறகு மாற்றியுள்ளேன். இப்போது அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளும் நமது நாட்டை கட்டி எழுப்பும் பணியில் பங்காளிகள். இது தொடர்பான கண்டிப்பான அறிவுறுத்தல்களை, எனது அமைச்சின் கீழ் வரும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகப் பணிப்பாளர் நாயகத்துக்கு வழங்கியுள்ளேன்.

உண்மையில் தற்சமயம் நான் நாடு முழுக்கச் சமூக அமைப்புகளின் தேசிய, மாவட்ட, பிரதேச கட்டமைப்புக்களை உருவாக்கி வருகின்றேன். இதன்மூலம் இந்த அமைப்புகளுக்கு ஒவ்வொரு மாவட்டச் செயலகத்திலும், பிரதேச செயலகத்திலும் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் அதிகாரபூர்வமாக கலந்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுப்பதே என் நோக்கமாகும். இந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் மூலமாகத்தான் நாட்டின் நிதி செலவிடப்படும் பெரும்பாலான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இங்கே அரசு சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் இருக்கவேண்டும். உண்மையில் சில சமூக அமைப்புகள் கூட என் இந்த நோக்கத்தைத் தவறாக புரிந்துக்கொண்டார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகள் கடந்த காலங்களில் பரவலான பணிகளைச் செய்துள்ளன. கஷ்ட காலங்களில் அவர்களுடன் இணைந்து நான் செயற்பட்டுள்ளேன். 2005ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்த மிக பயங்கர களத்தில் நான், ரவிராஜ், லசந்த, விக்கிரமபாகு, சிறிதுங்க, பிரிட்டோ, நிமல்கா, பிரியாணி ஆகியோர் செயற்பட்டுள்ளோம்.

அப்போது பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகள்கூட பயந்து இருந்தனர். எனவே, என்னால், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளைப் புறந்தள்ள முடியாது - என்றார். (த)


## மரண அறிவித்தல்



**திருமதி செல்வராணி செல்வராஜா**
**(செல்வி ரீச்சர்)**
**(சங்கீத ஆசிரியை, யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)**

அளவெட்டி தெற்கு, பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி செல்வராஜா 30.06.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னபூரணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் - யோகம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், செல்வராஜாவின் அன்பு மனைவியும், வாரணன், வர்த்தனி ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற ரட்ணராஜா மற்றும் விக்னராஜா (கொழும்பு), காலஞ்சென்ற சிவராஜா மற்றும் இந்திராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற கமலாவதி மற்றும் மகேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேந்திரராஜன் (டென்மார்க்), ரவீந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**க.செல்வராஜா (கணவன்),**
**செ.வாரணன் (மகன்),**
**செ.வர்த்தனி (மகள்)**

**பெருமாக்கடவை,**
**அளவெட்டி.**

**0778446144**



# நீங்கா நினைவுகளில்

**இரண்டாம் ஆண்டு**
**அந்தோனிக்கம்மா மரியாம்பிள்ளை**
மண்மகிழ 09.06.1946
கை நெகிழ 02.07.2015



**14ஆம் ஆண்டு**



**7ஆம் ஆண்டு**
**E.L.S. மரியாம்பிள்ளை**
மண்மகிழ 14.05.1937
கை நெகிழ 11.07.2010



**மரியாம்பிள்ளை டெகாமிற் அமலராஜன்**
மண்மகிழ 11.02.1971
கை நெகிழ 27.12.2003

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய்
அன்பு மழை பொழிந்து நல்வழி காட்டியாய் வாழ்ந்து
பிரிவெனும் கடலில் மூழ்க வைத்தீரே உம் நினைவுகள் எம்மோடு என்றும்
கண்ணின் ஓரம் கண்ணீர் துளிகளாய் கசிய இன்றென நினைத்திடும் வேளையில்
ஈராண்டுகள் கடந்தனவாம் அம்மா ! அப்பா எனும் அன்பின் வடிவமே
உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடு
நீங்கள் இல்லா இவ்வுலகு என்றும் வெறுமையே !

எம் அன்புச் சோதரனே உன் அன்பான பேச்சும்
கனிவான தயவும் - உன் நற்குணங்களும் எம் கண்முன்னே
நீங்கள் இல்லாத எம் வாழ்வில் என்றும் நிறைவில்லை
உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக பரமன் தாழ் பணிகின்றோம்.

*உங்கள் பிரிவினால் என்றும் துயருடன்*
**பிள்ளைகள், மருமகன், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.**
இல.01, [illegible] தருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 00 4478 2388 6784/ 077 9922 481


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் பெண்கள் அமைப்பினரின் ஒழுங்கமைப்பில் பேர்லின் வாழ் தமிழ் மக்களின் பேராதரவில் நடைபெற்ற கலைமாருதம் 2017 நிகழ்வில் பெறப்பட்ட நிதியில் முதற்கட்டமாக போரால் பாதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த வறிய நிலையில் உள்ள 30 இக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 3 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலும் முள்ளிவாய்க்கால் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப் போடும் மேற்குறிப்பிட்ட நிகழ்வு நடைபெற்றது. (ஐ)





கொழும்பு மா நகர சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் இரண்டாம் கட்டமாக தார் இடப்பட்டு சீரமைக்கப்பட்ட கதிரேசன் சாலையை . தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் பார்வையிட்டார். (ஐ)







வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி அதிபர் திருமதி சூரிய யாழினி வீரசிங்கத்தின் மாணவியும் செல்வி கிருஷிகா ஞானவேலின் பரதநாட்டிய அரங்கேற்றம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்தில் மூத்த கலைஞர் ஆடல் ஆசான் வேல் ஆனந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ)





காங்கேசன்துறை சாரணர் மாவட்ட குருளைச் சாரணர் அறுவர் தலைவர்களுக்கான பயிற்சிப் பயிற்சிப் பட்டறைகள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றன. உதவி சாரணர் மாவட்ட ஆணையாளர் திருமதி பவானி கைலைநாதன் பயிற்சிகளை வழங்கினார். (ஐ-9)





திருகோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள ஞான பைரவ சுவாமி ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது. (ஐ-40)



உலக போதைப்பொருள் எதிர்ப்புத் தினமான யூன் 26ஆம் திகதி, [illegible] சம்மேளனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய "போதைப்பொருள் எதிர்ப்புப் பேரணி" நிகழ்வின் பதிவுகள் சில......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பம்பலபிட்டிய இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் திருவள்ளுவர் சிலை பிரதிஷ்டை நிகழ்வு அண்மையில் நடை பெற்றது. நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, சிறைசாலைகள் மறுசீரமைப்பு புணர்வாழ்வு மீள் குடியேற்றம் மற்றும் இந்து கலாச்சார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத்தலைவருமான வேலு சாமி இராதாகிருஸ்ணன், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து இந்தியாவில் இருந்து வருகை தந்த வி. ஜி.பி.சந்தோசம் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். (ஐ)





மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா அண்மையில் இடம் பெற்றது. இதன்போது ஆலய பிரதம குரு சிவ.ஸ்ரீ.சு.கு.விநாயக மூர்த்திக் குருக்கள் யாகம் வளர்த்து கிரியைகளை மேற்கொண்டார். (ஐ-46)





த கொம்பாரிசன் எல் .கே அமைப்பின் ஏற்பாட்டில் கூமாங்குளம் அஸ்திரம் நற்பணி மன்றத்தின் ஊடாக லண்டனைச் சேர்ந்த கோனேஸ்வரன் காவியாவின் எட்டாவது பிறந்த தினத்தை முன்னிட்டு கூமாங்குளம் அந்தோனியார் முன்பள்ளி மற்றும் கூமாங்குளம் அம்பாள் முன்பள்ளியைச் சேர்ந்த 27 மாணவர்களுக்கு கூமாங்குளம் அந்தோனியார் ஆலயமுன்பள்ளியில் வைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் கூமாங்குளத்தைச் சேர்ந்த சரவணமுத்து, மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன், முன்பள்ளிக் கட்டமைப்புத் தலைவரும் கொம்பாரிசன் அமைப்பைச் சேர்ந்த செயல்திட்ட அதிகாரி நா.சிறிதரன், அஸ்திரம் பொதுச் செயலாளர் நா. கிருஸ்ண மூர்த்தி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





நெடுங்கேணி சேனைப்பிலவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கான மதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் இணைப்பாளர் ச.ரூபன் , பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர் பெற்றோர்கள் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (ஐ-7)





அனலைதீவில் இயங்கும் 4 முன்பள்ளிகளுக்கு 64 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அப் பகுதியைச் சேர்ந்த த.நாராயணன் என்பவரின் அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்கள் அனலை சமூக நல மன்றத்தினர் அங்கு இயங்கும் அருணோதயா ஐயனார் ஸ்ரீபாலமுருகன் நாவலர் ஆகிய முன்பள்ளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-9)



முனைப்பு நிறுவனத்தினால் வாகரை கதிரவெளியைச் சேர்ந்த பெண் தலைமைதாங்கும் குடும்பமொன்றுக்கு ஆடு வழங்கி வைக்கப்பட்டது. உதவியினை முனைப்பு நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் மாணிக்கப்போடி சசிகுமார் மற்றும் உப தலைவர் வேந்திரன் ஆகியோர் பயனாளியின் இடத்துக்குச் சென்று நேரடியாக வழங்கினார். (ஐ-47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**



# சுதந்திரத்தையும் புரிந்துணர்வையும் தரும் ஆட்சியை உருவாக்குவோம்

## கூட்டிணைவான நம்பிக்கையின் வேண்டுதல்

யாழ். பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை ஆற்றிய உரை தொடர்பில் இக் கட்டுரை பேசுகின்றது. ஆக்கத்துக்கான தகவல்களை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வழங்கியுள்ளார்.

**தலைமை உரை**

யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை நிகழ்த்தும் போது:

"பேராயர் மல்கம் கருதினால் றஞ்சித் ஆண்டகையை அதிகார பூர்வமாக வரவேற்பதில் மகிழ்வடைகிறேன். என் சார்பிலும், எனது குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பிலும் தங்களை வரவேற்கிறேன்.

யாழ்ப்பாண மக்களிடம் இருந்தோ அல்லது தமிழ்பேசும் மக்களிடம் இருந்தோ இவர் வேற்று நிலைப்பட்டவர் அல்லர். தமிழ் மக்களின் பிரச்சினையில் மிகுந்த ஆர்வமுடையவராய் இருந்தவர். போர் நடந்த காலங்களில் வன்னி மண்ணை நாடி அவர் மேற்கொண்டதான பல பயணங்கள் இப்போதும் ஞாபகத்தில் உள்ளது. உரிய தரப்பினரைச் சந்தித்து, நாட்டில் இருந்ததான பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வினைக் கண்டுகொள்வதற்காக இவர் அரசுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளமை யாவரும் அறிந்த விடயங்களே" - என்றார்.

**தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு**

அதேபோன்று தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்தும் போது பல விடயங்களைச் சுட்டிக்காட்டிய அவர்,

"தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வினை ஏற்படுத்த தாங்கள் கடினமாக உழைப்பதை நன்கு அறிவோம். அரசமைப்பொன்று உருவாகும் வரை காத்திருக்காமல் ஏதோவொரு விடயத்தில் ஆரம்பித்து பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கிறீர்கள். மீள் குடியேற்றம் தொடர்பில் அரசதலைவரிடம் பரிந்துரைத்தமைக்கு விசேட நன்றிகளை தெரிவிக்க வேண்டும். மக்கள் வீடுகளுக்கு.இல்லை தங்களது பூர்வீகக் காணிகளுக்கு 26 ஆண்டுகளின் பின்னர் சென்றுள்ளனர். ஆனாலும் அவை மெதுவானதோர் செயற்பாடாகவே அமைந்துள்ளது. காணாமற் போனோர் விவகாரம், விதவைகளின் கவலைகள் மற்றும் அது சார்ந்த விடயங்களில் தாங்கள் தலையிட்டு அரச தலைவருடன் பேசிய தன்மைகள் பாராட்டத்தக்கது. நீங்கள் தொடர்ந்தும் அவரோடு தொடர்பில் இருப்பீர்கள் என நம்புகிறோம்.

விடுவிக்கப்படாது இராணுவத்திடம் இன்னமும் இருக்கும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். மக்களிடம் அவை திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். அரச தலைவருடனும் ஏனைய அரசியல் அதிகாரிகளுடனும் பேச்சுக்களை மேற்கொண்டு அல்லது அவர்களிடத்தே இந்த விடயங்கள் குறித்தான தாக்கத்தை ஏற்படுத்தி மீள் குடியேற்றம் தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை கொண்டு வாருங்கள்.

தங்கள் வருகைக்கு நன்றிகள். ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளீர்கள் என்பது எமக்கு தெரியும். வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான உறவுப் பாலம் அமைக்கும் பணியில் உள்ளவர் என்கின்ற வகையில் தங்களின் வருகை ஆர்வமூட்டுகிறது. இறையாசீர் தங்கள் மேல் நிறைவாய்ப் பொழியட்டும்" - என்றார்

**பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் உரை நிகழ்வு**

புனித பத்திரிசியார் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்த அதிபர் யெறோ செல்வநாயகம் அவர்களுக்கும், ஆயர் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

யாழ்ப்பாணம் நான் அடிக்கடி வருகை தந்த ஒரு இடம். ஆயர் குறிப்பிட்டது போலவே வடபகுதியின் குழப்பம் நிறைந்த சரித்திர நாள்களில் 30 ஆண்டு கால போரினால் நாட்டு மக்கள் குறிப்பாக, வடக்குக் கிழக்கு மக்கள் அனுபவித்த துன்பங்களின் பயணங்களிடை நாம் ஆற்றிய பொதுப் பணி பற்றி குறிப்பிட்ட விடயங்களை ஞாபகம் கொள்கிறேன்.

யாழ்ப்பாண ஆயர் இல்லத்தில் ஒரு நாள் நான் தங்கியிருந்த அனுபவம் அடிக்கடி ஞாபகத்துக்கு வரும் விடயமாக அமைந்துள்ளது. இரவு நான் தூக்கத்தில் இருக்கும் போது வெடிச்சத்தம் கேட்டது. அந்தச் சத்தங்கள் காலை 11மணி வரையும் நீடித்துக்கொண்டது. யாழ்ப்பாணத்திலும் அதனை சுற்றியுள்ளதான பிரதேசங்களிலும் இருந்த மக்களை அது பெருந் துன்பத்துக்கு உள்ளாக்கியது. சத்தங்களைக் கேட்டபோது தொடக்கத்திலே அவை பட்டாசு வெடிச்சத்தங்கள் என்றே நினைத்தேன். ஆனாலும் பின்னர் நான் கொழும்பில் இருக்கவில்லை யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறேன் என்பதையும், யாழ்ப்பாணத்தில் கொடிய போர் நிகழ்கிறது என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

நான் அன்று அனுபவித்த அந்த பயங்கரமான அனுபவம் யாழ்ப்பாண மக்கள் எப்போதும் வாழ்ந்து கொண்டுள்ள துன்ப வாழ்வை எனக்கு உணரவைத்தது. மேலும் இந்தச்சம்பவங்கள் சமாதானம் என்பது இலகுவில் மறந்து விடக்கூடிய விடயமல்ல என்பதனையும், சமாதானத்துக்காக நாம் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ள உதவியது. எனவே தான் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகையுடனும், ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடனும் இணைந்து பல விதமான முயற்சிகளில் ஈடுபட்டோம்.

**சமரச முயற்சிகள்**

போராட்டத்தில் ஈடுபட்ட தலைமைகளுடன் பல விதமான பேச்சுவார்த்தை முயற்சிகளில் ஈடுபட்டோம். அது ஒரு மிகப் பெரிய அனுபவம். 8 கிலோ மீற்றர்கள் பரந்துபட்ட கிளாலிக் கடலைக் கடப்பதற்கு சிலசமயம் உழவு இயந்திரங்கள் மூலமும் படகுகள் மூலமும் கடல் நீரில் நனைந்து இரவு முழுவதும் பயணம் செய்யவேண்டி இருந்தது. கிறிஸ்தவர்கள் என்பதால் நாம் இவற்றை எல்லாம் செய்தோம்.

கிறிஸ்தவ அழைப்பு எம்மை தேசிய கலாசார வேறுபாடுகளைக் கடந்து சகோதர சகோதரிகளாக வாழ அழைக்கிறது. இலங்கை ஒரு அழகிய நாடு. இந்த அழகை காண அதிக மக்கள் இங்கு வருகின்றனர்.

இந்த அழகு இலங்கையின் பன்முகத் தன்மையிலதான் உள்ளது. இங்கு இயற்கையை நீங்கள் நோக்கினால் அதன் அழகு அதன் ஒருமைத்துவத் தன்மையில் அல்லாது மாறாக அதன் பன்மைத்துவத்தில் உள்ளதை உணர்வீர்கள். அதேபோல இந்த மக்களின் பன்மைத்துவத் தன்மையானது எமது வாழ்வை நிறம் மிக்க இருப்பாக்கியுள்ளது. துர்அதிர்ஷ்ட விதமாக நாம் இந்த பன்மைத்துவத் தன்மையை ஏற்க மறுத்துள்ளோம். எமது முன்விரோத எண்ணங்களால் எமக்குள்ளேயே நாம் முடிவில்லாமல் சண்டை பிடித்துக் கொண்டிருந்துள்ளோம். ஒற்றுமையும் சமாதானமும் உள்ள இலங்கை குடி மக்களாக ஒருவரை ஒருவர் அன்பாக அணுகி அழகான அனுபவத்தை பெற்றிடாது அந்த சந்தர்ப்பங்களைத் தவற விட்டுள்ளோம்.

**தனிச்சிங்களச் சட்டம்**

வரலாற்றின் அடிப்படையில் எமது நாட்டின் ஒரு பகுதியினரை இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் முயற்சிகள் பல தருணங்களில் மேற்கொள்ளப்பட்டன. 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் அவ்வாறே கருதினர். இது மிகவும் பாரதூரமான விடயமாகும். சிங்களம் பெரும்பான்மை இன மக்களின் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டி இருந்தாலும் ஆட்சியில் இருந்தவர்கள் தமிழ் மொழியையும் தேசிய மொழியாக அங்கீகரித்திருக்க வேண்டும். இவ்வாறுதான் இனப்பிரிவுகளிடையே ஒற்றுமைக்கான பாலங்களை அமைக்கவேண்டும். ஆனாலும் அதுசார்ந்ததான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. இந்த செயல்நிலைகள் ஏரளமான துன்ப துயரங்களை மக்களுக்கு கொடுத்துவிட்டது என்பதுதான் உண்மையான விடயம்.

**முரண்பாடுகள் வேண்டாம்**

நாம் சமய நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் ஒருபோதுமே சண்டை பிடிப்பவர்களாக இருக்கமுடியாது. சமய ஸ்தாபகர்களும் வன்முறைகளையோ வெறுப்புணர்வுகளையோ போதிக்கவில்லை. நாம் அனைவரும் சமய உணர்வு கொண்டவர்களாக நலிலிணக்கப் பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும். நல்லிணக்கம், சமாதானம் பற்றியதான விடயங்கள் இன்று அதிகம் பேசப்படுகின்றன. புதிய அரசமைப்பொன்றை உருவாக்குதல், பிரச்சினைகளைத் தீர்த்தல் எனப்பல விடயங்கள் பேசப்படுகிறன. ஆனாலும் அவை அனைத்துமே மந்தகதியிலேயே நகர்கின்றன. பேச்சளவிலேயே உள்ளன. செயல் அளவில் எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த விடயங்கள் மக்கள் மனதில் விரக்தியை ஏற்படுத்தவல்லன. வட கிழக்கு மக்கள் தங்களது ஆட்சி உரித்துக்களை முடிவெடுக்கும் தேவைப்பாடுகளை கோரினார்கள். அதனை வெளிப்படுத்தினார்கள். அதுவே உண்மை. 13ஆவது திருத்தச்சட்டத்தில் இந்த விடயங்கள் அனுமதிக்கப்பட்ட போதும், மாகாண ரீதியில் அதிக அதிகாரம் கொடுப்பது பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் இவை ஏதும் நடைபெறவில்லை.

**புதிய அரசமைப்பு**

இந்த விடயங்கள் அப்படியே இருக்க மறு புறத்தில் புதிய அரசமைப்புக் குறித்த விடயங்கள் பேசப்படுகின்றன. எம்மிடம் இருப்பவற்றோடே பிரச்சனைக்கு தீர்வு காண முடியாவிட்டால் எம்மிடம் இல்லாதவற்றை பற்றி எப்படி தீர்வு காண முடியும். எனவே, எங்களுடைய அரசியல் தலைமைகள் நல்லிணக்கச் செயற்பாடுகளை ஆரம்பித்து அவற்றை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

வடபகுதி மற்றும் தென்பகுதி பாடசாலை மாணவர்களை ஒன்றிணைப்பது, அவர்களுக்கு கலாசாரங்களையும் மொழியையும் கற்பிப்பது என்பவற்றில் மாத்திரம் இந்தவிடயங்கள் தங்கியிருக்கவில்லை. புரிந்துகொள்ள வேண்டும்.

**புதிய அரசமைப்புக்கான எதிர்ப்பு**

இந்த நாட்டில் உள்ள பல்லின மக்களதும் பன்மைத்துவத் தன்மைகளை இனங்காண வேண்டும். அவை படிப்படியாக அரசியல் இனங்காணலாக மாற்றமுற வேண்டும். ஆளும் அதிகாரமாக மாற வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான ஆளும் அதிகாரமாக அமைய வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணாமல் புதிய அரசமைப்பினை கொண்டு வருவதென்பது சிக்கலானது. அது குறித்து எல்லா இடங்களில் இருந்தும் எதிர்ப்பே வலுவடைந்து வருகிறது. எனவே புதிய அரசமைப்புக் குறித்து பேசும் போது ஏற்கனவே எம்மிடம் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏன் செயற்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் முடியாது...? அதனடிப்படையிலாக முழு அதிகாரப் பரவலாக்கலையும் ஏன் கொடுக்க முடியாது...?

இனங்களுக்கிடையில் நம்பிக்கையை கட்டி எழுப்ப வேண்டும். படிப்படியாக சுதந்திரத்தையும், புரிந்துணர்வையும் கொண்டமைந்ததான ஆட்சியையும் உருவாக்கலாம். எம்மிடம் இல்லாதவற்றைப் பற்றி பேசாது இருப்பதை முதலில் நடைமுறைப்படுத்துவோம்.

ஆக, யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்து தமிழ் அரசியல் தலைமைத்துவங்களையும் ஒன்றிணைவோடு அழைக்கிறேன். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும் முதற்படியாக இனங்களுக்கிடையில் சமதானம் மற்றும் நம்பிக்கையை கட்டி எழுப்புவதில் இதய சுத்தியுடன் செயலாற்றுங்கள். நல்லிணக்கப் பணிகள் இதனோடு நின்றுவிட முடியாது. அவை மேலும் வரிவாக்கமடைய வேண்டும். மீள்குடியேற்றம். மக்களின் சொத்துக்களை கையளித்தல். அரசியல் கைதிகளை விடுவித்தல் எனப் பணிகள் நல்லிணக்கமுற அமைய வேண்டும். நாம் அனைவரும் இணைந்து கொண்டு செயல் முனைப்புடனான இன சமத்துவ செயல்நிலைகளை நிலைபெறச் செய்ய வேண்டும். இலங்கையை ஒற்றுமை மிகு நாடக நாம் மாற்றியமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஒற்றுமைக்கு உள்ளங்களிலும் மாற்றம் வேண்டும்

## முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2
இனங்களுக்கு இடையில் ஒற்று
மையை ஏற்படுத்தும்போது உள்
ளம், சிந்தனை, எண்ணம் என்ப
வற்றிலும் மாற்றங்கள் ஏற்பட
வேண்டும் என்று தேசிய ஒற்
றுமை மற்றும் நல்லிணக்கச் செய
லகத்தின் தலைவரும் முன்னாள்
அரச தலைவருமான சந்திரிகா
பண்டாரநாயக்க குமாரதுங்க தெரி
வித்துள்ளார்.
கொழும்பு பண்டாரநாயக்க பன்
னாட்டுக் கற்கை நிறுவகத்தில்
நேற்று முன் தினம் நடைபெற்ற
செயலமர்வில் கலந்துகொண்டு
உரையாற்றியபோதே அவர் இவ்
வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பாடசாலை மாணவர்களை இலக்
காகக் கொண்டு நல்லிணக்கச்
செயலகம் பல்வேறு நிகழ்ச்சிகளை
முன்னெடுக்கிறது. நல்லிணக்
கத்தைக் கட்டியெழுப்புவதில் அரசி
யல் தலைமைத்துவம் முக்கிய
மானதாகும். இதில் சிவில் அமைப்
புக்களுக்கும் பங்களிப்புக்களை
வழங்க முடியும். இனங்களுக்கு
இடையிலான ஒத்துழைப்பை
மேம்படுத்துவது அரசின் தேவை
யாகும். இதற்கான செயலணி
ஒன்று இயங்குகின்றது. நாட்டின்
பிரதான இரண்டு கட்சிகளும்
இணைந்து ஒரே இலக்குடன் பணி
யாற்றி அனைத்து இனத்தவர்களி
னதும் உரிமைகளைப் பாதுகாத்து
வருகின்றன - என்றார். (த)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## புலிகள்...

வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மகா
வித்தியாலயத்தில் நேற்று மெஹே
வர அரச தலைவர் மக்கள் சேவை
தேசிய வேலைத் திட்டத்தின் நடமா
டும் சேவை நடைபெற்றது. அந்த
நிகழ்வில் கலந்து கொண்டு உரை
யாற்றியபோதே அமைச்சர் இவ்
வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னொரு காலத்தில் தென்னி
லங்கையில் துப்பாக்கிச் சூட்டுக்களா
லும், வாள்வெட்டுக்களாலும் சிங்
கள மக்கள் சிலர் படுகொலை செய்
யப்பட்டனர். அவர்களை கொலை
செய்தது தமிழீழ விடுதலைப் புலி
கள் அல்ல.
சட்டவிரோத ஆயுதம் தாங்கிய சிங்
கள இளைஞர்களாலே அவர்கள்
கொல்லப்பட்டார்கள். அவ்வாறு
செயற்பட்ட இளைஞர்களின் சிலர்
உயிர் நீத்துள்ளனர். சிலர் தற்பொ
ழுது நாடாளுமன்ற உறுப்பினராக
இருக்கின்றனர்.
தமிழீழ விடுதலைப் புலிகளின்
அமைப்பில் இருந்து இயங்கியவர்
களில் பலர் உயிர் நீத்துள்ளனர்.
போரில் உயிர்நீத்த அனைத்து வீரர்
களும் கௌரவிக்கப்பட வேண்டும்
அவர்களுக்கு அஞ்சலி செலுத்து
வது தவறில்லை. மறுவாழ்வு
பெற்ற போராளிகள் நான் விடுத
லைப் புலிகள் அமைப்பில் உறுப்பி
னராக இருந்தேன் என்று கூறுவ
தற்கு அச்சப்படத்தேவை இல்லை.
அவ்வாறான அச்சத்தில் இருந்து விடு
பட்டு அவர்கள் சமூகத்துடன் ஒன்றி
ணைந்து வாழமுன்வர வேண்டும்.
வடக்கு, கிழக்கு மக்கள் திறமையா
னவர்கள். அவர்களில் அனேகமா
னவர்கள் துப்பாக்கியால் சுடக்கூடிய
பயிற்சி பெற்றுள்ளனர். உங்களால்
தற்பொழுதும் துப்பாக்கியை இயக்
கமுடியும். கண்ணிவெடி பிரதேசங்
களை இனங்கண்டு நீங்கள் விலத்
திச் செல்லக்கூடியவர்கள். இவ்வா
றான திறமையுள்ள வடக்கு, கிழக்கு
மக்கள் ஜனநாயக வழியில் ஒன்றி
ணைந்து இந்த நாட்டை அபிவிருத்
தியடையச் செய்ய முடியும் - என்
றார்.
(ற-7)

## இடைக்கால...

குழப்புகின்ற நோக்கத்தையுடைய
தாகத்தான் இருக்கவேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட
மைப்பின் நாடாளுமன்ற உறுப்பி
னரும், அந்தக் கட்சியின் பேச்சாள
ருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்
தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று முந்தி
னம் நடந்த நிகழ்வில் கருத்துத்
தெரிவித்திருந்த வடக்கு மாகாண
முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ
ரன், கொழும்பு 13ஆவது திருத்தச்
சட்டத்தையே தீர்வாகத் திணிக்க
நினைக்கின்றது என்றும், ஒற்றை
யாட்சிக்குள் அடக்கவே நினைப்ப
தாகவும் குறிப்பிட்டிருந்தார். அதனை
எதிர்ப்பதால்தான் தன்னை நீக்க
முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்
திருந்தார்.
இவ்வாறானதொரு பின்னணியி
லேயே, நாடாளுமன்ற உறுப்பினர்
எம்.ஏ.சுமந்திரன் மேற்படி
கருத்தை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எவருமே சொல்லாத 13ஆம் திருத்
தத்தைப் பற்றி முதலமைச்சர் திரும்
பத் திரும்ப ஏன் சொல்லிக் கொண்
டிருக்கின்றார் என்பது புரியவில்லை.
வழிநடத்தல் குழுவின் இடைக்
கால அறிக்கையில் 13ஆம் திருத்
தம் பற்றி ஒரு வரி கூட இல்லை.
கொடுக்கப்படுகின்ற அதிகாரங்கள்
அதி உச்ச அதிகாரப் பகிர்வாகவே
இருக்கும் என்று சொல்லப்பட்டுள்
ளது. வடக்கு முதலமைச்சர் இல்
லாத ஒன்றைப்பற்றி திரும்பத்
திரும்பச் சொல்லிக் கொண்டிருக்
கின்றார். வழிநடத்தல் குழுவின்
இடைக்கால அறிக்கையில் என்ன
இருக்கின்றது என்பதைத் தெரியாத
ஒருவர் ஏன் இப்படிச் சொல்கின்றார்
என்பது புரியவில்லை.
13ஆம் திருத்தத்தைப் பற்றிப் பேச
வேண்டிய தேவையே இல்லாத
போது, 13ஆம் திருத்தத்துக்குள்
தீர்வு வரப்போகின்றது என்றும்,
ஒற்றையாட்சிக்குள் தீர்வு வரப்போ
கின்றது என்றும், மக்களைப் பயம்
காட்டி மக்களைத் திசை திருப்பி,
தீர்வைக் குழப்புகின்ற நோக்கத்
தோடு சிலர் வெளிப்படையாகச்
செயற்படுகின்றனர்.
வழிநடத்தல் குழுவின் இடைக்
கால அறிக்கையை அரசு காலம்
தாழ்த்தாது வெளிக் கொண்டு வர
வேண்டும். இதனை பிரதான இரு
கட்சிகளிடத்திலும் கோரிக்கையாக
முன்வைக்கின்றோம். இடைக்கால
அறிக்கையாக இருந்தாலும்,
இதிலே மிகவும் முக்கியமான அடிப்
படைக் கோட்பாடுகள், இணக்கப்
பாடு எட்டப்பட்டுள்ளமை வெளிவ
ரும். அது வெளிவருவது அத்தியாவ
சியமானது. குறிப்பாகப் பல வித
மான சந்தேகங்களுக்கு உட்பட்டி
ருக்கின்ற தமிழ் மக்களுக்கு இது
வெளிச்சத்தைக் கொண்டு வரும்
என்று எதிர்பார்க்கின்றேன் - என்
றார்.
(த-5)

## ஹன்ரரில்...

வர்கள் ஏ-9 சாலையிலிருந்து
சுமார் 2 கிலோமீற்றர் தூரம் கிரா
மத்துக்குள் சென்று மிருசுவில்
தவசிகுளம் பகுதியில் சடலத்தை
வீசிவிட்டுச் சென்றுள்ளனர் எனக்
கூறப்படுகின்றது. இவ்வாறு வீசப்
பட்ட சடலம் யாருடையது என இது
வரை அடையாளம் காணப்பட
வில்லை.
குறித்த வாகனத்தின் நடமாட்டத்
தில் சந்தேகங்கொண்ட பிரதேச
வாசிகள் அந்த இடத்துக்குச் சென்று
பார்த்தபோதே அங்கு சடலம்
ஒன்று இருந்தமை தெரிய வந்தது.
இது குறித்து பொலிஸாருக்கு அறி
விக்கப்பட்டதை அடுத்து அவர்கள்
சடலத்தை மீட்டு வைத்தியசாலை
யில் சேர்ப்பித்தனர்.
(த-4,9,101)

## திருமலையில்...

கிழமை திருகோணமலையில்
ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்த
வுள்ளனர். கொழும்பில் கடந்த
வெள்ளிக்கிழமை நடத்திய செய்தி
யாளர் சந்திப்பில் இது தொடர்பாக
தகவல் வெளியிட்ட பொது எதிரணி
யின் நாடாளுமன்ற உறுப்பினர்
டலஸ் அழகப்பெரும, நாட்டின்
சொத்துக்களை விற்கும் அரசின்
முடிவை மீளாய்வு செய்வதற்கு அர
சுக்கு எதிரான சக்திகள் அனைத்
தும் அழுத்தம் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொண்டார்.
"சீனன் குடா எண்ணெய்க் குதங்க
ளுடன், திருகோணமலைத் துறை
முகம் மற்றும் அதனைச்
சுற்றியுள்ள நிலங்களையும், இந்தி
யன் ஓயில் நிறுவனத்துக்கு விற்ப
தற்கு அரசு திட்டமிட்டுள்ளது. தற்
போதைய அரசின் செயற்பாடுக
ளால் பாதிக்கப்பட்ட அனைவரும்
இந்த நடவடிக்கையைத் தடுத்து
நிறுத்த ஒன்றிணைய வேண்டும்"
என்றும் அவர் அழைப்பு விடுத்
தார்.
(த)

## மரியாயின் சேனை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்ப்பாண மறை மாவட்ட
கத்தோலிக்க திருச்சபையின்
பத்திச் சபைகளின் ஒன்றான
மரியாயின் சேனையின்
சேவைச் சிறப்புக் கான "அம்மா
உந்தன் சேனையிலே" என்னும்
இறுவட்டு வெளி யீட்டு விழா
26ஆம் திகதி திங்கட் கிழமை
காலை யாழ். திருமறைக்
கலாமன்ற கலைத் தூது
மண்டபத்தில் இடம்பெற்றது.
சபையின் ஆன்ம இயக்குநர்
அருட் பணி ம.றெஜி இராஜேஸ்வ
ரன் அடிகளாரின் ஒழுங்கமைப்
பில் மரிய கருணை நாயகம்
தலைமை யில் சிறப்பாக
நடைபெற்றது. தலைமை
விருந்தினராக யாழ்ப்பாண
மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின்
ஞானப்பிரகாசம்
ஆண்டகையும், சிறப்பு
விருந்தினராக குரு முதல்வர்
அருட்திரு பி.ஜெ. ஜெபரட்ணம்
அடிகளாரும் கலந்து கொண்டது
டன்,
இறுவட்டின் முதற் பிரதியை
ஆயர் வெளியிட்டு வைக்க
முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர் சொலமன்
சூ.சிறில் பெற்றுக்கொண்டார்.
இறுவட்டின் ஒழுங்கமைப்பு,
தயாரிப்பாளர் அருட்திருப்பணி
றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளாரை
யும் அவர் அணிசேர் கலைஞர்க
ளையும் ஆயர் பாராட்டி கௌர
வித்தார். (த-17)



நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் நேற்று இடம்பெற்றது. பக்தர்கள் பொங்கல் மடை பரவி வழிபாட்டில் ஈடுபட்டனர். (த-17)

## பருத்தித்துறையில் மணவாளக்கோலம்

வடமராட்சி, ஜூலை 2
பருத்தித்துறை வியாபாரிமூலை
அருள்மிகு பத்திரகாளி அம்பாள்
சமேத ஆதி வீரபத்திர சுவாமி
கோயில் மணவாளக் கோல
உற்சவம் நாளை திங்கட்கிழமை
நடைபெறவுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு வீரபத்திர
சுவாமிக்கும் பரிவார
மூர்த்திகளுக்கும் 108
சங்காபிசேகம் இடம்பெற்று
மணவாளக் கோல உற்சவம் இடம்
பெறும். (4,173)

# மாகாண சபைத் தேர்தலில் சுமந்திரன் வென்று காட்டட்டும்

## சுரேஸ்பிரேமச்சந்திரன் சவால்

யாழ்ப்பாணம், ஜூலை 2
நாடாளுமன்ற உறுப்பினராகப்
பதவி வகிக்கும் சுமந்திரன், முடிந்
தால் தனது பதவியைத் துறந்து
விட்டு மாகாண சபைத் தேர்தலில்
அல்லது வேறு ஏதாவது தேர்தலில்
போட்டியிட்டு வெற்றிபெற்றுக்காட்
டட்டும் பார்ப்போம்!
இவ்வாறு சவால் விடுத்துள்ளார்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி
னர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.
யாழ்ப்பாணத்தில் அண்மையில்
இடம்பெற்ற ஊர்வலத்தின்போது
வடக்கு மாகாண முதலமைச்சரின்
வீட்டுக்கு முன்பாக பலர் ஒன்றுகூடி
முதலமைச்சரைச் சந்தித்தனர்.
"அந்த வீதி ஒடுக்கமானது. அதில்
நூறு பேரிருந்தாலும் பெரும் சனக்
கூட்டம் போன்றே தென்படும். அத
னைக் கண்டு தனக்கு மக்கள் சக்தி
யிருக்கிறது என்று முதலமைச்சர்
நினைக்க வேண்டாம். அவ்வாறு
நினைப்பாராக இருந்தால் மாகாண
சபையைக் கலைத்து விட்டுத் தேர்
தலை நடத்திப் பார்க்கட்டும் என்று
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.
ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்"
என்று கூறப்பட்டது. அது தொடர்
பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊட
கங்களுக்கு மேலும் தெரிவித்த
தாவது,
"சில மாதங்களுக்கு முன்னர்
யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பி
லும் எழுக தமிழ்ப் பேரணி இடம்
பெற்றது. அதில் எத்தனை ஆயிரம்
மக்கள் கலந்து கொண்டனர் என்
பது சுமந்திரனுக்குத் தெரியும்.
அண்மையில் நடந்த முதலமைச்
சருக்கு ஆதரவான போராட்டம்
சுமந்திரனை மிரட்டியுள்ளது. அத
னால்தான் வடக்கு மாகாண முதல
மைச்சர் தனது பதவியைத் துறக்க
வேண்டும், வடக்கு மாகாண சபை
யைக் கலைத்து விட்டு அடுத்த
தேர்தல் நடத்த வேண்டும் என்
றெல்லாம் சுமந்திரன் கூறுகிறார்.
முடிந்தால், சுமந்திரனே தனது பத
வியைத் துறந்துவிட்டு மாகாண
சபைத் தேர்தலில் அல்லது வேறு
தேர்தலில் போட்டியிட்டு வெற்றி
கொள்ளட்டும் பார்ப்போம்! அவ்
வாறு சுமந்திரன் வெற்றியடைந்த
பின்னர் இவ்வாறு குறிப்பிட்டால்
அவர் சொல்வதில் ஒரு அர்த்தமி
ருக்கும். வடக்கு மாகாண மக்க
ளின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற
முதலமைச்சருக்கு எதிராகச் சவால்
விடுவது அர்த்தமற்ற, சிறுபிள்ளைத்
தனமான செயல்" என்று சுரேஸ்
மேலும் தெரிவித்தார். (4,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

Nesco Tea House இன் யாழ்ப்பாணக் கிளைக்கு விற்பனையாளர் (Sales Girls) உடனடியாகத் தேவை.

1) தகைமை - சாதாரணதரம் சித்தி O/L
- 2 வருடம் அனுபவம்.

சிறந்த சம்பளங்களும் சலுகைகளும் வழங்கப்படும்.

**தொடர்பு - info@nesco.ch**
**077 188 0046, 081 247 6103**

## தொழில்வாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்திய சாலைக்குப் பின்வரும் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*** மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர் (Assistant MLT)**

இத்துறையில் அனுபவம் இருக்க வேண்டும். தகுதி அனுபவத்துக்கிணங்க சம்பளம் பேசித் தீர்க்கப்படும். விண்ணப்பங்கள் 12.07.2017 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரில் வரவேற்பாளர்களிடம் கையளிக்க முடியும்.

**மனிதவள முகாமையாளர்,**
**நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை.**
No.342, பலாலி வீதி.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

Tel.No- 021 221 9988 Extension No - 324,
Mobile No - 077 773 2892
Email - nchjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### நடராசா சற்குணராசா (சூரன்மாமா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.11.1945 | 01.07.2017 |

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சற்குணராசா நேற்று (01.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற தியாகராசா - கமலம் தம்பதியரின் அன்புமருமகனும் மனோன்மணிதேவி, துரைராசசிங்கம் காலஞ் சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலேஸ்வரியின் அன்புக்கணவரும் சிவபாக்கியம், திருநாவுக்கரசு காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் உமாதர்சினி(ஜேர்மனி), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), ரூபதர்சினி (பிரான்ஸ்), யனோசினி (லண்டன்) காலஞ்சென்ற ருசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகலிங்கம், நந்தகுமாரி, முருகதாஸ், கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரித்திகர், நிவேதிகா, பிரவின், ரக்ஷ்கா, றதுசா, ரதுசன், பிரியசகி, பிரேம்ஷா, அக்ஷியா, சங்கவி, சங்கரி, காசினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 446 8329**

## பெண் வேலைஆள்கள் தேவை

பெண் வேலைஆள்கள் தேவை. (மாலை கட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னிடம்)
தொடர்பு - 076 553 5462
021 492 8622

## வேலைவாய்ப்பு

சமையலுக்கு உதவியாளர் தேவை. (ஆண் மற்றும் பெண்) தொடர்புகளுக்கு
**077 7412713, 077 3200727**

## வாடகைக்கு வீடு தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.
0772984757, 0774739053

## ROOMS AVAILABLE

At Potpathy road near to Medical faculty. Only for University Students.
Contact No: **077 770 2530**

## வேலைவாய்ப்பு

சுவடி நிறுவனத்தின் பசுமைப்பண்ணை மற்றும் அதனோடு இணைந்த அலுவலகத்தில் பணியாற்ற 35 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு - 076 838 4466
077 809 6226

## சிறி குமரன் ரெக்ஸ்



SK
அசத்தலான ஆடித்தள்ளுபடி
சிறிகுமரன் ரெக்ஸின் மாபெரும் ஆடித்தள்ளுபடி தட்டாதெருச் சந்தியில்...
**நாளை (03.07.2017)**
**திங்கட்கிழமை தொடக்கம்**
இந்தியாவிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துரக ஆடைகளும்
விசேட தள்ளுபடி விலையில்...
விசேடமாக Office ware சாறிகள்
மிககுறைந்த விலைகளில்
ஆடித்தள்ளுபடியில் ஓர் ஜாலியான ஷொப்பிங்
**சிறி குமரன் ரெக்ஸ்**
770.K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 221 6845

## வாடகைக்கு

எந்த விதமான வியாபாரம் செய்யக்கூடிய இரண்டு பெரிய கடைகள், முன்பகுதியில் கார் தரிப்பு வசதி உண்டு.
தொடர்பு - 076 785 1067

## வேலையாள் தேவை

சிறிய கணக்கு வேலைகள் செய்வதற்கு A/L படித்த (Ms office) Computer தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
நல்லூர், திருநெல்வேலி பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 071 861 7918
தொடர்பு நேரம் - 9.00 - 5.00

## உடனடி வேலைவாய்ப்பு

சுன்னாகம் திருமதி J.கனகராசன்..எரி பொருள் நிரப்பு நிலையத்தில் பம்பர்மார் (Pumper) இருவருக்கு வெற்றிடங்கள் உள்ளன. சுன்னாகத்தைச்சேர்ந்தவர்கள் விரும்பத்தகக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை எ.பொ.நிலையத்தில் ஒப்படைக்கவும்.
**0213213557, 077 646 3716**

## நல்லூரான் திருமண சேவை

எம்மிடம் சகலருக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு, அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் ஆண், பெண் குறிப்புக்கள் தாராளமாக உள்ளன. இன்றே அழையுங்கள். அல்லது 117, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் வாருங்கள்.
**077 553 4437**
(இன்றும் நாளையும் பதிவு செய்பவர்களுக்கு சலுகைக் கட்டணம் 500/- மட்டுமே)

## தேவை

இணுவிலில் பிரபல்யமான புடைவைக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்) (CS 1507) (14)
**021 300 1155/ 077 470 5401**

## வேலையாள் தேவை

பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிக்கும் வாகனத்திற்கு (Distribution Van) பொருள்களை இறக்குவதற்கு வேலை யாள்கள் தேவை. திருநெல்வேலி, அச்சுவேலி பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை : 20 - 30
தொடர்பு - 071 861 7918
தொடர்பு நேரம் - 9.00 - 5.00

## மலையாள மாந்திரீக சக்தி

ஸ்ரீ ராம ஜெயம்

**வெளிநாட்டவர்களுக்கு ஈர்ப்புச் சக்தி மந்திரம்**
நான் மட்டுமே இலங்கையில் மலையாள மாந்திரீகம் செய்வது உண்மை. இது உறுதி.



**24 மணித்தியாலத்தில் அபூர்வ உட்சாட்டத்தில் வெற்றி**

வெளிநாட்டவர்களுக்கென கணவன், மனைவி பிணக்கு, காதல் கைக்கூட, தாம்பத்திய வாழ்வு நீடிக்க, மலட்டுத் தன்மையை போக்க, தொழிலில் குபேர செல்வமடைய, குடிபோதையை முழுமையாக நிறுத்த, கடன் தீர இவைகளுக்கு அதிவிஷேட அற்புத நரசிம்ம வசிய இயந்திரத்தால் சகல எண்ணங்களும் 24 மணித்தியாலத்தில் தீரும்.

**காமதேவ மோகினி உட்சாட்டத்தால் கணவன், மனைவி பிணக்கு 24 மணித்தியாலத்தில் தீரும்**



ஜோதிட மாந்திரீக தத்துவ ஞானி,
சொல்லின் செல்வன்,
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல,
ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து
**REV, P.K. சாமி (J.D.G.A.N)JP**

**WILLPOWER**
**நம்பிக்கை! நாணயம்! செல்வாக்கு!**

**வாழ்வில் பிரச்சினையா?**
23 அபூர்வ சக்தி கொண்ட தெய்வீக ஆருடங்கள்

**இது என் சாதனைக்கு ஒரு எடுத்துக்காட்டு. நம்பி வாருங்கள் நன்மை அடையலாம்.**

ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு அருள் சக்தியே! இங்கு அருள் பாலிக்கும் இந்த அபூர்வ அருள் சக்தி கொண்டு எமது ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பிரசன்னமாயிருக்கும் அருள் சித்த சிலைகள் ஸ்ரீ துர்க்கா தேவி, இந்தியாவில் நர்மதா நதியில் கண்டெடுக்கப்பட்ட சுயம்புலிங்கம், காலபைரவர், நரசிம்மர், விஷ்ணு, ராஜராஜேஸ்வரி, காயத்ரி, கிருஸ்ணபரமாத்மா, வெங்கடாசலபதி, அஸ்டலக்ஷ்மி, பத்ரகாளி, தட்சணாமூர்த்தி, ஸ்ரீ ஆஞ்சநேயர், முருகப்பெருமான், ஆறுமுகன், நவக்கிரக நாயகி, ஸ்ரீ துர்க்கை அம்மன், வீரமாகாளி, ராக்கம்மாகாளி, சரஸ்வதி, மும்மூர்த்திகள், கருப்பண்ணசாமி, ராகவேந்தர் என அனைத்து தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கணவன் மனைவி பிணக்கு, காதல் தோல்வி, கல்யாணத்தடைக்கு 03 நாளில் வெற்றி, சூனியக் கோளாறு, இரவில் பயந்தெழுதல், காதலன், காதலி ஓடிப்போனோர் தேடி வர, வெளிநாட்டவர்களுக்கு அதிவிஷேட மாந்திரிக உட்சட்டங்கள் அனுப்பி 03 நாளில் பலன் பெறலாம். ஒருவருக்கு நடக்கும் பிரச்சினையை அவரின் பிறந்த திகதி, மாதத்தை மட்டும் கூறினால் மை வெளிச்சம் மூலம் முழுமையாக பார்வையிட்டு அதற்கு தக்கவாறு பரிகாரம் வழங்கப்படும், கொடுக்கும் பணத்திற்கு ரசீத் வழங்கப்படும். 53 வருட சேவையில் 49 வருட வீரகேசரியில் விளம்பரங்கள் செய்வது நான் மட்டும் தான். குடிபோதை, தலையில் முடி உதிர்வது இன்னும் அனைவரது அவரவர் பிரச்சினைகளுக்கு தீர்வு உண்டு. நம்பி வாருங்கள்.

**கல்வி ஞானம் பெற**
12 மாதத்திற்கு முன் பரிகாரம் செய்தால் பலன் நிச்சயம்

சரஸ்வதி கடாட்சம் பெற கடைசி வைர காத்திருக்காமல் பாடம் தொடங்கும் முன் இவ அச்சிரத்தை O/L, A/L பரீட்சை வரும் வரை கழுத்தில் அனிந்திருந்தால் கல்வித் தெழிவு பெறலாம்.பாடம் தொடங்கும் போது அச்சம் தனிந்தால் 12 மாதத்தில் நிச்சயம் வெற்றி.

வெளிநாட்டவர்களுக்கு 24 மணிநேர தொலைத்தொடர்பு வசதி உண்டு.
Whatsapp மற்றும் Viber
வசதி உண்டு இலக்கம் -0777588405
Landline - 0112 322 189

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை
இங்கு தீய வேலைகளுக்கு பரிகாரம் உண்டு

**கண்ணாடி ஏக்கில் மந்திரம்...**
**பணத் தட்டுப்பாடில்லாமல் இருக்க?**

மூன்று வகை அதிஷ்டம் :- விண்ணுலக அதிஷ்டம், மண்ணுலக அதிஷ்டம், மனித இன அதிஷ்டம்

வாஸ்துபடி வீடுகட்ட, திடீர் கல்யாணம் கைக்கூட, அதிஷ்ட நேரமுடன் சத்திர சிகிச்சை செய்து பிரசவம் செய்து கொள்ள, அதிஷ்டக் குழந்தை பெற்றுக்கொள்ள, வீடு வாங்க கட்ட, திருமணம் நடக்க, கல்யாணம் திடீர் நிட்சயிக்க, கல்வி ஞானம் பெற அனைத்திற்கும் இவ்வுலகில் எண் ஞானம் உதவி புரிகிறது.

**என் இராசி என்ன தெரியுமா மற்றவர்களுக்கு உதவும் இராசி**



**ஆண்டவன் அனுக்கிரக்கத்தால் நோய் நொடியின்றி, உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் மனிதர்களிடம் இருந்து விலகி நாமே நமது அதிஷ்டமான வாழ்வை அமைத்துக் கொள்ளலாம்.**

புதிய வீடுகட்டும் போது அல்லது குடிபுகும் போது, வீட்டிற்கு பூமி பூஜை போடும் போது பெரிய குபேர சிலை 1, ஐந்து inch வலம்புரி சங்கு 1, நவரத்தின கல் 1 செட், வீட்டு மனைக்காவல், பொற்காசு 21, குபேர இயந்திரம், அரகஜா, முத்து சிப்பி இவை அனைத்தும் வழங்கப்படும். இவை வைத்தால் திடீர் குபேர வாழ்வு பெற்று அன்றன்றாடம் பணத்தட்டுப்பாடு இல்லாமல் வாழலாம்.
காலம் காலமாக வாழ்வில் வெற்றி பெற எண் ஜாதக அடிப்படையில் அதிஷ்டமான பெயரை ஜோதிட வல்லுனரிடம் வைத்தக் கொண்டால் வாழ்வில் சகல சௌபாக்கியமும் பெற்று நிம்மதி அதிஷ்டத்துடன் தொடர்ந்து வாழலாம்
● இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
**காண்ட அடிப்படையில் ஜாதகம்கணித்தக் கொடுக்கப்படும்**

**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் மலையாள மாந்திரீக உச்சாடபீடம்**

Management - P.K.Samy Associate (Pvt) Ltd - தலைமை காரியாலயம் - கொழும்பு
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
T.P: 011 2342463, 011 2342464, 011 2470615 | Fax: 011 2344831 | Email : drpksamy23@gmail.com

கிளைக்காரியாளயம் - நுவரெலியா
33,கண்டி ரோட், தினச்சந்தை கட்டிடம், நுவரெலியா.
J.ராம் - 0778431761, 0522223093

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு



மானிப்பாய் றோட், ஓட்டுமடம் பிரதான வீதியில் மேல்மாடி வீடு. கார் Parking, Attach Bathroom களுடன் வீடு வாடகைக்கு உண்டு. Office Company கள் விரும்பத்தக்கது.

தொடர்பு - 076 4305 877

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல்

இளைஞர் யுவதிகளே சர்வதேச ரீதியாக இயங்கிவரும் எமது நிறுவனத்தில் நிர்வாக பிரிவிற்கு (Management Administration) 15 வெற்றிடங்களுக்கான நேர்முக தேர்வு ஆரம்பமாகியுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு நேர்முக தேர்வு நேரத்தை உறுதிபடுத்திகொள்ளுங்கள்.

தகைமை

A\L 2 பாடசித்தி(குறைந்தது) O\L 6 பாடசித்தி(குறைந்தது)

வயதெல்லை 18 - 30

முன் அனுபவம் அவசியமில்லை. பயிற்சியுடன் வேலைவாய்ப்பு.

இறுதி திகதி - 10.07.2017

077 700 9820(Jaffna), 077 009 5294(Mannar), 076 572 7243 (Kilinochchi)

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 670

சீட்டிழுப்பு திகதி 01.07.2017 சனிக்கிழமை

U 08 14 26 60

சுப்பர் ஜக்பொட் ரூ. 50,716, 508/= வெல்லப்படவில்லை

02 15 19 24

ஊதா நிற டிக்கட்டுகள் 03.07.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2897 திகதி 01.07.2017

21 38 65 74 N 33 69, 286,167/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 19 32 36 73

நீல நிற டிக்கட்டுக்கள் 03.07.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824

SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 53

சீட்டிழுப்பு திகதி 01.07.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 32 43 59 64 சுப்பர் இலக்கம் 06 அதிர்ஷ்ட மாதம் மே

ரூ. 13,354,050/= ரூ. 3,409,535/= ரூ. 1,175,300/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 16 26 35 45

06.07.2017 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

www.dlb.lk


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவியும் சங்கீத பாட ஆசிரியராக பதின்நான்கு வருடங்களாக கடமையாற்றி வந்த

**அமரர் செல்வராணி செல்வராசா**

(சங்கீத பாட ஆசிரியர்)

அவர்கள் கடந்த 30.06.2017 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்று வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/அரு. ஊரதயக் கல்லூரி, அளவெட்டி.


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு மிக அண்மையில் 1 1/2 பரப்பில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்படும்) - 076 697 2287

## வாடகைக்கு உண்டு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் கடை வாடகைக்குண்டு. - 077 659 7084

## தேவை

அச்சகத்துக்கு வடிவமைப்பாளர்கள் தேவை. பகுதி நேரமாகவோ (5.00 p.m. - 9.30 p.m.) முழு நேரமாகவோ பணிபுரியலாம். - 077 165 9845

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 1 3/4 பரப்பு 2ஆம் காணியும் நாவற்குழியில் A9 வீதியில் 25 அடி பாதையுடன் 8 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. (இரண்டாம் காணி) - 076 697 2287

## vacancy

நான்கு வருடங்களாக சிறந்த முறையில் சேவை ஆற்றிவரும் எமது ஆலோசனை நிறுவனத்திற்கு SECRETARY (Female) தேவை.

**தகைமைகள் :**

- அலுவலகத்தினை சிறந்த முறையில் நிர்வாகிக்க கூடிய ஆற்றல்
- A/L சித்தி (வர்த்தகப்பிரிவு விரும்பத்தக்கது)
- ஆங்கிலத்தில் சரளமாகக் பேசக்கூடியவர்கள் (சிங்களப் பேச்சாற்றல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)
- அடிப்படைக் கணினிஅறிவு (Ms office, Photoshop, Internet, E-mail)
- நீண்ட நேரம் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடியவர்கள்
- வயதெல்லை 18 - 28
- சம்பளத்திட்டம் 25000/= + Commissions + Mobile sim
- முன்னனுபவம் அவசியமில்லை. தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும்.
- ஒரு வருட கால ஒப்பந்தம் (நீடித்துக்கொள்ளலாம்)

தகுதியுடையவர்கள் உங்கள் மேம்படுத்தப்பட்ட சுயவிவரக் கோவையுடன் 03.07.2017 அல்லது 04.07.2017 காலை 11 மணிக்கு நேரில் வரவும்

WINSTAR VISA CONSULTANTS
106, Post Box Juction, Palaly Road, Thirunelvely.
www.winstarjaffna.com

TIES

STUDY IN CANADA

"Study in Canada... Step up in Life"

PROGRAMS OFFERED
INFORMATION TECHNOLOGY
BUSINESS ADMINISTRATION
HOTEL MANAGEMENT

ST.CLAIR COLLEGE, Canada

ESL OPTIONS
Scholarship Available
Work Permit after Graduation
PR options Available

ST.CLAIR COLLEGE, WINDSOR, ONTARIO

Spot Interview on 1st, 2nd & 3rd July 2017

PATHWAY PROGRAM AVAILABLE
SCHOLARSHIP OPPORTUNITY AVAILABLE
AUTHORIZED COUNSELLOR NOT AGENT



Students of ICGE currently studying in Canada commenced in March 2017

TIES, 273, Main Street, Northern Province, Jaffna, Srilanka

JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!

admission@THIGUVI.com | www.thiguvi.com | (+94) 021 454 8464 021 221 7400


## காணாமற்...

நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் அது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோரின் உறவினர்களைப் பொறுத்தவரை தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை உள்ளது. அந்த உரிமையை யாரும் மறுக்க முடியாது. காணாமற்போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து கூறவேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.. காணாமற்போனோரைக் கண்டறிவதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்கி அதனூடாக உண்மையைக் கண்டறியவேண்டியது அரசின் கடமை. அதனைத் தட்டிக்கழிக்க முடியாது. உண்மையைக் கண்டறிய முடியுமா, முடியாதா என்பது வேறுகதை. ஆனால் அதற்கான முயற்சியை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நான் இதுவரை முழுமையாக ஆராயவில்லை. எவ்வாறிருப்பினும் காணாமற்போனோர் விவகாரத்தில் அரசு விரைவாகச் செயற்படவேண்டியது அவசியமாகும். இந்த விவகாரத்தில் பன்னாட்டு நிபுணர்களின் தொழிற்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் கண்காணிப்பாளர்களும் இருக்கலாம். எமது ஆணைக்குழு ஆயிரக்கணக்கான எழுத்துமூல முறைப்பாடுகளைக் காணாமற்போனோர் தொடர்பில் பெற்றுக்கொண்டது. அத்துடன் சுமார் 6000 பாதிக்கப்பட்ட மக்களை நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடினோம். அதன் பின்னர் அந்த ஆணைக்குழுவானது ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது . அந்த விசாரணைக்குழு பாதிக்கப்பட்டோரைச் சந்தித்துத் தகவல்களைப் பெற்றுக்கொண்டது. இந்தச் செயற்பாடு ஒரு தொடர் நடவடிக்கையாக அமைந்தது. இவ்வாறான நிலையில் எமது ஆணைக்குழுவின் கால எல்லை முடிவுக்கு வந்தது. அதனால் எமது செயற்பாடுகளைத் தொடரமுடியாமல் போனது.

எனினும் ஒருசில விடயங்களை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். அதாவது தமது அன்புக்குரியவர்கள் காணாமற்போன நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு முதலில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஐந்து இலட்சம் ரூபா பணத்தை வழங்கவேண்டும். இந்த விடயத்தில் தாமதம் இருக்கக்கூடாது. அதனூடாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும். அதேபோன்று வீடுகள் இல்லாமல் இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். காணாமற்போனவர்களின் உறவினர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டிருப்பின் அவை விரைவாக மீளளிக்கப்படவேண்டும். இது தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (த)


## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள SMART KINGS (PVT)LTD நிறுவனத்துக்கு அனுபவமுள்ள

* **Heavy Vehicle Driver (AD LICENCE)**

தேவை. சுயவிவரக்கோவையுடன் அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

SMART KINGS (PVT)LTD
12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். - 021 454 6699


## ANNUAL GENERAL MEETING

JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION

The above meeting will be held on 08.07.2017 Saturday at 9.00 a.m. in the OTTLEY HALL to Felicitate the Jubilarians.

Your presence is very much appreciated.

Those who wish to participate in the lunch.

Please contact - 077 438 6508

K.SELVARAJAH
HONY SECRETARY


## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

சூராவத்தை சுன்னாகத்தில் 3 அறைகளுடன் 1450 சதுரஅடி அளவுள்ள வீடு 2 பரப்புக்காணியுடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு - 021 224 0507, 071 832 1142

## வேலையாள் தேவை

மானிப்பாயில் இயங்கும் உணவகத்துக்கு சப்பிளயர், சமையல் ஆள் தேவை. நேரில் வரவும்.

**குமார் உணவகம், மானிப்பாய்.**

தொடர்பு - 077 076 1973


## படிப்பகம் புத்தகக்கடை மற்றும் நூலகம் இடம்மாற்றம்

ஸ்ரான்லி றோட், ஆரியகுளத்தடியில் இயங்கிய மேற்படி நிறுவனம் இல.52, பலாலி வீதி, திருநெல்வேலி (சம்பத் பாங்க் அருகில்) இல் 01.07.2017 முதல் இயங்குகின்றது.

021 205 2240

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டாட்சி (சமஷ்டி) என்றால் இரண்டு முக்கிய அம்சம் இருக்க வேண்டும். மாகாணங்களுக்கு கொடுக்கப்படுகின்ற அதிகாரங்கள் தொடர்பில் மத்தி அதிகாரம் செலுத்தக்கூடாது. இரண்டாவது அம்சம், மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் மாகாணத்தின் அனுமதி இல்லாமல் மீளப் பெறமுடியாது. இந்த இரண்டு அம்சங்களும் இருந்தால் அது கூட்டாட்சிதான். அதற்காகக் கூட்டாட்சி என்ற பெயர்ப் பலகை போடவேண்டியதில்லை.
ஒற்றை ஆட்சி என்கின்ற தமிழ்ச் சொல் ஆட்சி முறைமையைக் குறிக்கின்ற காரணத்தினாலே அது பொருத்தமற்ற சொல். அதை உபயோகிக்க முடியாது என்ற எங்களின் நிலைப்பாட்டுக்கு வழிநடத்தல் குழுவில் இணங்கியிருக்கின்றார்கள். யுனிற்றரி என்கின்றது ஆங்கிலச் சொல். அதற்குச் சட்டவியாக்கியானம் இருக்கின்றது. அதுவும் ஆட்சி முறையைக் குறிக்கின்றதாக இதுவரை வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. அதனையும் பாவிக்க முடியாது என்ற எமது நிலைப்பாட்டுக்கு இணங்கியிருக்கின்றார்கள். ஆனால் ஏக்கிய என்ற சிங்களச் சொல், ஆட்சிமுறையைக் குறிப்பது அல்ல. அது ஒரு அல்லது ஒன்றுபட்ட என்பதை மட்டும்தான் குறிக்கின்றது. ஆனால் அந்தச் சொல்லும், இதுநாள் வரையில் இலங்கை அரசமைப்புச் சட்டத்திலே ஒற்றை ஆட்சிக்கான பயன்படுத்தப்பட்டு வந்த காரணத்தினாலே, வரைவிலக்கணத்துடன் சேர்த்துத்தான் அந்தச் சொல் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கும் இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே ஒரு மாற்று வழியாகச் சொல்லப்பட்டுள்ள விடயம் என்னவென்றால், ஏக்கிய ராஜ்ஜிய/ஒருமித்த நாடு இந்தச் சொற்றொடரை மூன்று மொழிகளிலும் உபயோகித்து, அந்தச் சொற்றொடருக்கு வரைவிலக்கணத்தையும் அரசமைப்புச் சட்டத்திலேயே எழுதுவது. அது ஆட்சிமுறைமையை குறிப்பதாக அல்லாமல் ஒரு பிளவுபட முடியாத பிரிக்கப்பட முடியாத நாடு என்பதைத்தான் குறிக்கும் என்பதையும் எழுதிவைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி முதன் முறையாக இதற்கு இணங்கியுள்ளது.

**வடக்கு - கிழக்கு இணைப்பு**

அதிகாரப் பகிர்வின் அடிப்படை அலகு மாகாணம். அனைவரும் அதற்கு இணங்கியுள்ளனர். அதனோடு சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கும் கிழக்கும் இணைந்த ஓரலகாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் என்று எழுதப்பட்டிருக்கும். இறுதியிலே எப்படியாக அமையும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு மாகாணமும் இணங்கினால்தான் மாகாணங்கள் இணையக் கூடிய சாத்தியம் இருக்கின்றது.
உடனடியாகச் சாத்தியமில்லை என்ற எனது தனிப்பட்ட கருத்தை நான் வெளிப்படையாகவே சொல்லி வந்திருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடும் எனது தனிப்பட்ட நிலைப்பாடும் வடக்கு கிழக்கு இணைந்ததாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அந்த இணைப்பு உடனடியாக வருவதற்கு சாத்தியமில்லை என்று நான் தனிப்பட்ட முறையில் சொல்வதற்குக் காரணம், இரண்டு மாகாணங்களும் இணங்கினால்தான் அந்த இணைப்பு சாத்தியமாகும். தற்போதைக்கு கிழக்கிலே வாழும் முஸ்லிம் மக்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பதுதான் என்னால் அனுமானிக்கக் கூடிய விடயமாக இருக்கின்றது. எப்போதும் அப்படி இருக்கும் என்றில்லை. நிலமை மாறும். அவர்கள் ஆதரவு தெரிவிக்கும் வகையில், அவர்களுடனான எங்களின் உறவு மறுசீரமைக்கப்படவேண்டும்.

**கூட்டமைப்பு மாத்திரம்தான் வலியுறுத்தியுள்ளது**

வடக்கு கிழக்கு இணைப்பைக் கூட்டமைப்பு கைவிட்டுவிட்டதாக அமைச்சரும், வழிநடத்தல் குழுவின் உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளாரே என்று கேள்வி எழுப்பியதற்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், அவர் அடிக்கடி சில கருத்துக்களைச் சொல்லி வருகின்றார். சிலவேளைகளில் வழிநடத்தல் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு மாறாக கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அதனை நான் வெளிப்படையாகவே கேட்டும் இருக்கின்றேன். கேட்கின்றபோது சொல்லுகின்றார். எழுத்தில் அப்படித்தான் இருக்கின்றது. நீங்கள் சொல்வது சரி. ஆனால் அவர்களுடைய (சிங்களத் தலைவர்களின்) மனதில் என்ன இருக்கின்றது என்பது எனக்குத்தான் தெரியும். அப்படியாகச் சிங்களத் தலைவர்களின் மனதில் என்ன இருக்கின்றது என்பதைக் கண்டறியும் ஒரு திறமை வைத்திருக்கும் ஒருவர் சொல்லும் கருத்துக்கு நான் எப்படி பதில் சொல்லுவது.
இடைக்கால அறிக்கை வரைவில், அதிகாரப் பகிர்வு அலகு மாகாணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வடக்கு கிழக்கு இணைந்ததாக இருக்கவேண்டும் என்றும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை வைத்துக் கொண்டு கூட்டமைப்பு வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டுவிட்டது என்று கூறுவதிலே என்ன உண்மைத் தன்மை இருக்கின்றது என்பது விளங்கவில்லை.
தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வானதாகத்தான் புதிய அரசமைப்புச் சட்டம் வரும். எங்கள் மக்களின் அடிப்படை ஒன்றியதான அரசமைப்பு சட்டம் உருவாகாது என்ற தீர்க்கமான நிலைப்பாடு வருகின்றபோது அரசுக்கு ஆதரவு கொடுக்க மாட்டோம். அதற்கு மாற்றான நிலைப்பாடு எடுப்போம். ஆனால் இப்போது அப்படியான நிலைப்பாடு இல்லை என்றார். (த-5)

## கூட்டமைப்பினது...

இருந்து விரட்டிவிடப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிலர் சதிகள் சறுக்கியதும் சவால்களில் ஈடுபட முன்வந்துள்ளார்கள்' என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பொதுவெளியில் கருத்துத் தெரிவித்திருந்தார்.
இவ்வாறானதொரு பின்னணியில், வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தொடரவேண்டும் என்று விரும்புகின்றீர்களா இல்லையா என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்குப் பதிலளித்த அவர், வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் தொடரவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராகத்தான் தொடரவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான ஒருவராக அவர் முதலமைச்சராக இருக்க முடியாது. இப்போதும் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவில்தான் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு முதலமைச்சராக இருக்கின்றார். இது அவருக்கும் தெரியும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டால் அவர் முதல்வராக இருக்க முடியாது.
முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கஜன் இராமநாதன் அவருக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மனோ கணேசன் அவருக்கு ஆதரவு தெரிவித்தார். ஈ.பி.டி.பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா அவருக்கு ஆதரவு தெரிவித்தார். இவர்கள் எல்லாம் அவருக்கு ஆதரவாக இருக்கின்றபோது, தென்னிலங்கைச் சக்திகளுடன் சேர்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் தன்னை அகற்ற முற்படுவதாக முதலமைச்சர் எந்த அடிப்படையில் கூறுகின்றார் என்பது தெரியவில்லை - என்றார். (த-5)

## சிவராம்...

சுயவிவரக் கோவை அனுப்பிய உறுப்பினர்களில் ஒருவருக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் அந்த உறுப்பினருக்கு அமைச்சுப் பதவியை வழங்க முடியாமல் இருப்பதாக அவர் அதில் தெரிவித்துள்ளார். அதற்கு முதலமைச்சர் கூறியுள்ள காரணம், ஊடகவியலாளர் சிவராம் கொலையில் உங்களுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதால் கருதப்படுவதால் அமைச்சுப் பதவியை வழங்க முடியாமல் இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.
இதனையடுத்து இந்த விடயம் பெரும் பரபரப்பாகியுள்ளது. கொலைச் சந்தேக நபர் ஒருவர் மாகாணசபை உறுப்பினராக இருப்பதும், அவர் முதலமைச்சர் அணியிலேயே இருந்து கொண்டு முதலமைச்சருக்கு ஆதரவு வழங்குவதும். அ[illegible] அதனை அறிந்த பின்னரும், முன்னாள் நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன், அந்த உறுப்பினரின் தயவையும் வைத்துக் கொண்டு முதலமைச்சராக இருப்பதும் அரசியல் நோக்கர்களால் விநோதமான செயற்பாடாக நோக்கப்படுகின்றது. (த-5-101)

## சு.கவை...

டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.
சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முடிவடையவுள்ளதால், அரசில் இருந்து இவர்கள் விலக தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.
அரசில் இருந்து விலகிய பின்னர் அவர்கள் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறும் வரை சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாடாளுமன்றத்தில் இயங்கப் போவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (த)

## தமிழருக்கான...

சமவுடமைவாதிகளாகத் தம்மைக் கருதுகின்றவர்கள் தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கத் தயாராக இல்லை. இவர்களுடன் கைகோர்த்துச் செயற்பட எத்தனிக்கும் தமிழ்த் தேசியச் சக்திகள் இவ்விடயத்தில் தமிழ் மக்களுக்கு என்ன பதிலைக் கூறப்போகிறார்கள். எனவே பேரினவாத சக்திகள் மீண்டும் அரசியல் அரங்கில் நுழைய முற்படும் இந்த வேளையில் அவர்களை விரட்டும் செயற்பாடுகளே எமது பிரதான இலக்காக இருக்கவேண்டும். இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.
கம்பகாவில், அந்தக் கட்சியின் மையக் குழு உறுப்பினர் கேமச்சந்திர சூரியாராச்சியின் நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வை முன்னெடுக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தென்னிலங்கையில் ஏதோ வித்தில் வன்முறைகளுக்கு தூபமிடும் முயற்சிகள் கச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு வரலாற்றில் பல உதாரணங்கள் உள்ளன.
இந்த நாட்டில் காலனித்துவ ஆதரவுக்கு எதிராகத் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு ஆதரவாகப் பொதுவுடமைவாதிகளே போராடி வந்தனர். காலப்போக்கில் இத்தகைய சக்திகள் தமது நிலைப்பாடுகளில் இருந்து விலகியதால் மக்களும் அவர்களை விலகிச் சென்றனர்.
இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி புதிய அரசமைப்புச் சம்பந்தப்பட்ட குழுநிலை விவாதங்களில் ஒரு கருத்தையும் வெளியே வந்து வேறொரு கருத்தையும் கூறுகின்ற நிலமை காணப்படுகின்றது. இந்த விடயத்தில் அரசுக்குள்ளேயே காட்டிக் கொடுப்புச் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன. இதனால் கூட்டு அரசைப் பதவிக்குக் கொண்டு வந்த சக்திகளுக்குப் பெரிய சவால் ஏற்பட்டுள்ளது.
முதலாளித்துவ சக்திகள் சில சமயங்களில் எமக்குச் சாதகமான பாதையில் பயணிக்க முயலும். அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் எமது நிலைப்பாடுகளுக்கும் பெரிய வேறுபாடுகள் உள்ளன. ஆனால் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு ஜனநாயகக் கட்டமைப்பில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் பேரினவாத சக்திகளின் சவால்களை முறியடிக்க வேண்டிய சூழ்நிலை. இவை காரணமாக தாராளவாதச் சக்திகளுடன் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்படுகின்றது. இதற்காகப் பொதுவுடைமைக் கொள்கைகளை நாம் காட்டிக்கொடுத்துவிட்டோம் என்ற வரட்டு சூத்திர வாதத்தைப் பற்றி நாம் கவலை கொள்ளத்தேவையில்லை - என்றார். (த-5)

## வீதியையும்...

பாவனைக்கு விடுவிக்க வேண்டும். மயிலிட்டித்துறை விடுவிக்கப்பட்டதன் உச்சபட்சப் பயனை இதனூடாகவே பெற்றுக்கொள்ள முடியும் என்று பருத்தித்துறையில் வசிக்கும் மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.
27 ஆண்டுகளின் பின்னர் மயிலிட்டித்துறை நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படுகின்றது. மயிலிட்டியைச் சேர்ந்த மக்களில் பலர் இடம்பெயர்ந்து பருத்தித்துறையிலேயே தங்கியுள்ளனர். இவர்கள் விடுவிக்கப்படும் மயிலிட்டிக்கு வருவதாக இருந்தால் சுமார் 50 கிலோ மீற்றர் தூரம் சுற்றுப் பாதையினூடாகவே வரக் கூடிய நிலை தற்போது உள்ளது. பருத்தித்துறை பொன்னாலை வீதியில், பாதுகாப்புத் தரப்பினர் தம் வசம் வைத்துள்ள 3 கிலோ மீற்றர் வீதியை விடுவித்தால், அந்த மக்களின் பயணத் தூரம் 10 கிலோ மீற்றரிலும் குறைவாகவே இருக்கும்.
இதன் காரணமாக, மயிலிட்டித்துறையை விடுவிக்கும் பாதுகாப்புத் தரப்பினர் அதனோடு சேர்ந்து மேற்படி வீதியையும் முழுமையாக மக்கள் பாவனைக்கு ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதேவேளை நாளைய ஆரம்ப நிகழ்வில், மயிலிட்டித்துறையிலிருந்து மக்களின் படகுகள் கடலுக்குச் செல்லவுள்ளன. இதற்காக பருத்தித்துறையில் உள்ள மயிலிட்டித்துறையைச் சேர்ந்த மக்களின் படகுகள், மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. (த-5-101)

## இராணுவத்...

இடையிலான இழுபறியினாலேயே, புதிய இராணுவத் தளபதி நியமனத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இராணுவத் தளபதி ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள போதிலும், புதிய இராணுவத் தளபதியாக எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இரண்டு பதவிகளிலும் அவரே தொடர்கிறார்.
இந்த நிலையில், புதிய இராணுவத் தளபதி நியமனம் வரும் நாளை திங்கட்கிழமை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரச தலைவர் செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அதேவேளை இராணுவத் தளபதி பதவிக்கு, மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோருக்கு இடையில், மும்முனைப் போட்டி காணப்படுகிறது. இவர்கள் மூவருக்கும் இடையில் கடும் போட்டி ஆரம்பித்துள்ளது.
இவர்களில் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இராணுவத் தலைமை அதிகாரியாகவும், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தொண்டர் படைகளின் தளபதியாகவும், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மேற்குப் படைகளின் தலைமையகத் தளபதியாகவும் பதவியில் உள்ளனர்.
மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை இராணுவத் தளபதியாக நியமிக்குமாறு அமைச்சர்கள் பலரும், அரச தலைவருக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.
அதேவேளை, பௌத்த பிக்குகள் பலரும், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்.
இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையிலான இழுபறிகளினால் தான், இராணுவத் தளபதி நியமனத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த)

## அரச...

னான்டோ நியமிக்கப்படவுள்ளார்.
2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிறிலங்கா அதிபராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதில் இருந்து அவரது செயலராக பி.பி.அபயக்கோன் பதவி வகித்து வந்தார். அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக நேற்று முன் தினம் பதவியை விட்டு விலகினார்.
இதையடுத்தே, அரச தலைவரின் செயலராக ஒஸ்ரின் பெர்னான்டோ நியமிக்கப்படவுள்ளார்.
அடுத்த மூன்று நாள்களுக்குள் தாம் அரச தலைவரின் செயலராகப் பதவியேற்கவுள்ளதாக ஒஸ்ரின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.
ஒஸ்ரின் பெர்னான்டோ, அரச தலைவரின் சிறப்பு ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சகலரும்...

தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெல்லி வைற்றிங் தெரிவித்துள்ளார்.
150 ஆவது கனேடியத் தின நிகழ்வுகளை முன்னிட்டு வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
மத, இன, பால் நிலை அல்லது மொழி அடிப்படையில் இலங்கையில் எவரும் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் மிக நீண்ட கால உறவுகள் நீடித்து வருவதாகவும் அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**அன்ரனிஸ் வி.கழக
கால்பந்துத் தொடர்**

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் ஜோன் கில்லறி ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்ணொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னா கண்டல் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதிதாசன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வித்தியா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.க.
கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இன்று இரவு 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மைக்கல் வி.க.
கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கலைமதியின்
கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(ம-23-108-422)



# ஊரெழு றோயல் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 2
கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது.
ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் கஜந்தன் றோயலின் சார்பாக முதல் கோலைப் பதிவு செய்தார். 21ஆவது நிமிடத்தில் கஜகோபன் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று றோயலின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்றது.

(ம-108)

# கொக்குவில் இந்து. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை மோதியது.
முதலாவது கால் பாதியில் 24:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்து முன்னிலை வகித்தது. இரண்டாவது கால் பாதியும் 26:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துவின் வசமானது. முதல் பாதியின் முடிவில் 50:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்து முன்னிலை வகித்தது.
தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முடிவில் 91:60 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிக மிக இலகுவாக வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

(ம-23)

## சென். ஜோன்ஸ் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குமித்தேயில் 20 வயது ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. மட்டுமல்லாமல் வெள்ளி, வெண்கலம் என ஏனைய பதக்கங்களும் சென். ஜோன்ஸுக்கே கிடைத்தது.
நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. எஸ்.எழிலன் தங்கப் பதக்கத்தையும், எஸ்.கிருபவன் வெள்ளிப் பதக்கத்தையும், எஸ். தனுசன், கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த என்.ரஜீபன் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)



# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியன்.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது.
முதலாவது செற்றில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:20 என்ற புள்ளிகள் அடிப் படையில் தனதாக்கியது. இரண்டாவது செற்றை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது.
இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மூன்றாமிடத்தை கோப்பாய் மகா வித்தியாலய அணி பெற்றது.

(ம-422)

# கிளிநொச்சி இந்து வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான குமித்தேயில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ். அமுதன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.
நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த எஸ். அமுதன் தங்கப் பதக்கத்தையும், முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தை பிரதி நிதித்துவம் செய்த ஜே.சங்கீதன், வெள்ளிப் பதக்கத்தையும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.சுதன் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த என். ரஜீபன் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸிக்கு திருமணம்

பிரபல நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்ஸி தனது சிறுவயது தோழி அண்டோனல்லா ரோகு சோவை நேற்றுமுன்தினம் திருமணம் செய் தார்.

உலகப் புகழ்பெற்ற வீரரான மெஸ்ஸி தனது ஆரம்பகாலத் தோழியான அண்டோனல்லா ரோகுசோவை திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தார். ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் வசித்து வரும் மெஸ்ஸி தம்பதியினருக்கு தியாகோ, மேடியோ என்ற இரு மகன்கள் உள்ளனர்.

இந்த நிலையில் மெஸ்ஸி அண்டோனல்லா ரோகுசோ இரு வரும் மெஸ்ஸியின் சொந்த ஊரான ரொசாரியோவில் நேற்று முன்தினம் திருமணம் செய்துகொண்டனர். இந்த திருமண வைபவத்துக்காக மெஸ்ஸியின் சொந்த ஊரான ரொசாறியோவே விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்த நூற் றாண்டின் சிறந்த திருமணம் இது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)



# தொடரைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இந்திய அணி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை கிட்டத்தட்ட உறுதி செய்தது இந்திய அணி.

முதலிரு ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவி டப்பட்டது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. மூன்றா வது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றால் 2:0 என்று முன்னிலை பெறு வதுடன் அடுத்த ஆட்டங்களின் முடிவு எவ்வாறு அமைந்தா லும் கிண்ணம் அந்த அணியிடம் இருந்து எடுத்துக்கொள் ளப்படாத நிலை ஏற்படும். தீவுகள் வெற்றிபெற்றால் தொடர் 1:1 என்ற நிலை ஏற்படும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் களத்தடுப் பைத் தீர்மானித்தது. மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து தொடர்ந்து அடித்து நொறுக்கி வந்த தவான் இந்த ஆட்டத்தில் வெறும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லியால் முடிந்தது 11 ஓட்டங்களே. ரகானே, யுவராஜ் இருவரும் இணைந்து ஓரளவு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்திய அணி 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிஸ்குவின் சுழலில் சிக்கினார் யுவராஜ். ரகானே அளவுக்கதிகமாக நிதானித்தார். அவர் 112 பந்துகளில் 72 ஓட்டங்களை மட்டுமே எடுத்து ஆட்ட மிழந்தார். டோனி, கேதர் யாதவ் இருவரும் கடைசிக் கட்டத்தில் அடித்தாடினார்கள். 66 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் டோனி. முடிவில் 251 ஓட் டங்களைக் குவித்தது இந்தியா. டோனி 78 ஓட்டங் களுடனும் யாதவ் 40 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 2 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கு இருவ ரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் கள மிறங்கிற மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்ப வீரர் லூயிஸ், யாதவ் வீசிய மிகச் சிறந்த உட்திரும்பல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இந்தத் தொடரில் மிகச் சிறந்த பந்துவீச்சு என்று இது வர்ணிக்கப்பட்டது. கோப்பை வீழ்த்தினார் பாண்டியா. அஸ்வினின் பந்துவீச்சு எழுச்சி கண்டது. அவர் கோல்டர், நேர்ஸ், கம்மின்ஸ் மூவரையும் பவிலியனுக்கு அனுப்பினார். முடிவில் 158 ஓட்டங்களுக்கு சுருண்டு 93 ஓட்டங்களால் தோல்வியடைந்தது மேற்கிந்தியத் தீவுகள்.

பந்துவீச்சில் அஸ்வின், குல்தீப் யாதவ் இருவரும் தலா 3 இலக்குகளை யும், பாண்டியா 2 இலக்குகளையும், கேதர் யாதவ், உமேஸ் யாதவ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் 79 பந்துகளில் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைக் குவித்து, கோல்டரை ஸ்டம்பிங் மூலம் வெளியேற்றி இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த டோனி ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் 79 பந்துகளில் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைக் குவித்து, கோல்டரை ஸ்டம்பிங் மூலம் வெளியேற்றி இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த டோனி ஆட்டநாய கனாகத் தெரிவானார்.

# இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன நிர்வாகக் குழுவில் தமிழர் இருவர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கை கால்பந்தாடச் சம்மேளனத்தின் அதிஉயர் நிறைவேற்றுக் குழுவில் நிர்வாக பிரதிப் பொதுச் செயலாளராகப் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் பொதுச் செயலாளர் ஏ. அருளானந்தசோதி தெரிவு செய்யப்பட்டுள் ளார். பிரதித் தலைவராக மன்னார் கால்பந் தாட்ட லீக் தலைவர் ஏ.டேவிட் சன் தெரிவுசெய்யப்பட்டார்.





2017 தொடக்கம் 2021ஆம் ஆண்டுக்கான இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத் தின் அதிஉயர்நிறைவேற்றுக் குழுத் தெரிவு கொழும்பு விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இலங்கை யில் உள்ள 63 லீக்கிலிருந்து 3 உறுப்பினர்கள் பிரதிநிதித்து வம் செய்து இந்தத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக அநுர டீ சில்வா, பிரதித் தலைவர்களாக பத்ம சிறி முனசிங்க, ஞானப்பிரகா சம் அன்ரனி டேவிட், பாரூக், உபாலி கேவகே ஆகியோரும், பொதுச் செய லாளராக யு.எல்.ஜஸ்வர், பொருளாளராக ரெனி பெர்னாண்டோ, நிர்வாக பிரதிப் பொதுச் செயலாளராக ஏ. அருளானந்தசோதி, தொழில்நுட்ப பிரதிப் பொதுச் செயலாளராக ஜெயக்குமார் டி சில்வா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பிரதித் தலைவராக மன் னார் கால்பந்தாட்ட லீக் தலைவர் ஏ.டேவிட் சன் தெரிவுசெய்ப்பட்டார். (ம-422)



# சமாளிக்குமா போர்த்துக்கல்

ரஷ்யாவில் நடைபெற்று வரும் எட்டு அணிகள் பங்கேற்கும் பிபா கிண்ணத்துக்கான கால்பந்தாட் டத் தொடரின் மூன்றாம் இடத்துக் கான ஆட்டத்தில் போர்த்துக்கல் மற்றும் மெக்சிக்கோ அணிகள் இன்று மோதவுள்ளன. இன்றைய ஆட்டத்தை தனது தலைவரான ரொனால்டோ இல்லாமல் எதிர் கொள்கிறது போர்த்துக்கல்.

ரொனால்டோவுக்கு அமெரிக்கா வில் உள்ள வாடகைத் தாயின் மூலம் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. இதனால் குழந் தைகளைப் பார்ப்பதற்காக ரொனால்டோவுக்கு இன்றைய ஆட்டத்தில் இருந்து விடுப்பு வழங் கப்பட்டுள்ளது. எனவே பலம் வாய்ந்த மெக்சிக்கோவை தனது தலைவர் இல்லாமல் எதிர்கொள் கிறது போர்த்துக்கல். ரொனால் டோவுக்கு அடுத்த படியாக பெப்பி, நானி உள்ளிட்ட வீரர்கள் போர்த் துக்கலின் அரணாக இன்று செயற்படுவார்கள். எனினும் அவர்களால் மெக்சிக்கோவைச் சமாளிக்க இயலுமா என்றால் அது சந்தேகமே. (ம)

# டோனி முக்கிய அடைவு

பன்னாட்டு கிரிக்கெட் தொடரில் ஒருநாள் ஆட்டங்களில் ஒட்டுமொத்தமாக அதிக ஓட்டங்க ளைக் குவித்த நான்காவது இந்திய வீரர் என்ற அடைவை எட்டினார் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடை பெற்ற 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 78 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 15 ஓட்டங்களை எடுத் திருந்தபோது ஒருநாள் ஆட்டங்க ளில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் நான்காவது இடத்துக்கு முன்னேறினார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் அசாருதீனை பின்னுக்குதள்ளியே இந்த மைல் கல்லை எட்டியுள்ள டோனி தற் போது வரை மொத்தம் 9 ஆயிரத்து 442 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்தப் பட்டியலில் சச்சின் 18 ஆயிரத்து 426 ஓட்டங்களுடன் முதலிடத்திலும், கங்குலி 11 ஆயிரத்து 363 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும், ராவிட் 10ஆயிரத்து 889 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரைவான வியாபாரத்திற்கு வியப்பான இலாபம் !**

விரைவாக விற்பனையாகும் பொருள். 3 மடங்கு இலாபத்தையும் பெற்றுத் தரும்

**ஜூஸ் பக்கெட் மெசின்**




பொப்கோர்ன் மெசின்

டீ,கோப்பி மெசின்



தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No 16, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03

max adz

**IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**Week days - 03.07.2017 or Week ends - 09.07.2017**

- ✓ யாழ்.மண்ணில் IELTS கற்கைநெறி வழிகாட்டலில் கடந்த 7 வருடங்களுக்கு மேல் முன்னிலை.
- ✓ உங்கள் அதி உயர் "Band" இற்கு நாங்கள் உத்தரவாதம்.
- ✓ ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட கற்றல் ஒழுங்குகள்.
- ✓ IELTS மாதிரி வினாத்தாள்களில் உயர் பெறுபேறு அடையும் வரை கற்றல் வசதிகள்.
- ✓ மாணவர்கள் நேர வசதிக்கு ஏற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.
- ✓ Listening, Reading, Writing Speaking என்பன தனிப்பட்ட ரீதியில் கற்பிக்கப்படும்.
- ✓ ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 8 - 10 மாணவர் வரை மட்டுமே உள்வாங்கப்படுவர்.

மேலதிக விவரங்கள் மற்றும் பதிவுகளுக்கு:- **076 419 0327**

Address : London metropolitan College
No.136,Palaly Road,
Parameswara junction, Jaffna.

Ph. Number : 021 753 8395

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- ➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- ➢ அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- ➢ யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

**ஆரம்பம்** - சில தினங்களில்

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**Bus For Hire**




29 Seats, Full Air Conditionel.
TV, DVT System
Adjustable seats இலவச Wifi

தொடர்பு :- **Jaffna Rent a Car**

பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

**077 488 2888, 077 969 6691**

## பதிலடி கொடுக்குமா இலங்கை அணி

இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தில் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

**மணமகள் தேவை**

யாழ் கிறிஸ்தவ (R.C) கௌரவ குடும்பம் 1986. பட்டதாரி அரச உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 349 6085**

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் றோட்டில் 200 மீற்றர் தூரத்தில் இருக்கும் சந்தியில் கிறசருக்குப் போகும் வீதியில் K.K.S றோட்டின் வடக்கு மூலையில் இருக்கும் 3 பரப்பு (4குழி) காணி விற்பனைக்குண்டு.

**க.தம்பிராசா**
**குமகுடை, பன்னாலை, தெல்லிப்பழை.**
**077 638 4352**

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் மத்திய சந்தைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

**076 311 0929**

**பணிப்பெண் தேவை**

வடமராட்சியில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.

**077 374 5284**

**விற்பனையாளர் தேவை**

முதற்தர பாதணி விற்பனையாளரின் யாழ். கிளைக்கு விற்பனையாளர் தேவை.

**077 232 7058**

**வேலையாள்கள் தேவை**

☑ **முகாமையாளர் (Manager)**

கணினி அறிவும், நன்கு ஆங்கிலம் பேசக் கூடியவராகவும் Hotal Management Course படித்தவராகவும் இருப்பவர் விரும்பத்தக்கது.

☑ **சமையல் வேலை தெரிந்தவர்கள்**

றொட்டி, மசாலாதோசை, பிறைட்றைஸ்

**075 073 4022**

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

(நம்பர் 1 நாகலிங்கம் ஓய்வுநிலை சாரதி - இ.போ.ச கிளிநொச்சி)



**மண்ணின் மடியில்**
**07.07.1937**

**இறைவனடியில்**
**30.06.2017**

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், கல்வயல் சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நாகலிங்கம் 30.06.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், உருக்குமணிதேவியின் பாசமிகு கணவரும் ஆறுமுகம், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,ஜெயந்தி(ஜெயந்திரன் கனடா), பாப்பா(இந்திராதேவி சுவிஸ்), சித்திரா(ஜெயஸ்ரீ சுவிஸ்), பாமா(ஜெயமதி லண்டன்), சங்கர்(ஜெயகாந்தன் சுவிஸ்), உதயன்(ஜெயதீபன் லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,நவஜா(கனடா), சிவா(சிவனேஸ் சுவிஸ்), பவான்(சரவணபவானந்தன் சுவிஸ்), மாதவன்(லண்டன்), மானா(பாமினி சுவிஸ்), சோபா(யாழினி - லண்டன், தாதிய அலுவலர், யாழ். போதனா வைத்தியசாலை 2001 - 2009) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேகா(ஷர்மி), ரவிலக்ஸன் றபேசா (சுவிஸ்), ஜெசிந்தன், ஜெனார்த்தன், ஜெரோஷன்(கனடா), சிந்துஷன், அருஷன்(சுவிஸ்), மதுமிதா, மதுஷன், அகரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஷஹீரா, ரிஷானி, ஷிரன்(சுவிஸ்) ஆகியோரின் செல்லப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கற்பகம், மாணிக்கம் மற்றும் சின்னம்மா காலஞ்சென்றவர்களான மனோன்மணி, தர்மலிங்கம் மற்றும் கணேசபிள்ளை, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பத்மாவதி, காலஞ்சென்றவர்களான வேதநாயகம், பரிமளகாந்தி மற்றும் வரதராஜா, ஸ்ரீரஞ்சன்(சாரதி - நகரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2017) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முதலாம் கட்டை,**
**கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**மனைவி - 077 171 0270**
**பாப்பா - (மகள்) 077 524 4227**
**ஜெயந்தி (மகன்) [illegible]**
**[illegible] - (மைத்துனர்) 077 431 3926**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.